உ

சிவமயம்.

ஊற்றுமலை சமஸ்தானம்

ம-ா-ா-ஸ்ரீ ஜமீன்தாரவர்கள்

ஹிருதயாலய மருதப்பத் தேவரவர்களின்

முன்னோர்களில்

ம-ா-ா-ஸ்ரீ

மருதப்பத் தேவரவர்கள்

பேரில்

# மதனவிஸ்தாரமாலையும்,

# திருவருட்பாமாலையும்,

ம-ா-ா-ஸ்ரீ

நவநீதகிருஷ்ணத் தேவரவர்கள்

பேரில்

# வனசவிடுதாதும்.

இவை

சீ. நவநீதகிருஷ்ணபிள்ளை

விருப்பத்தின்படி

ஷை சமஸ்தானம் வித்துவான்

புளியங்குடி-முத்துவீரக் கவிராயரால்

பார்வையிடப்பட்டு

ச. சுப்பிரமணிய பிள்ளையால்

தமது

சிந்தாமணியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை.

1884.

GNANA MUNIVAR LIBRARY
சிவஞானமுனிவர் நூல்நிலையம்
திருநெல்வேலி
TINNEVELLY

உ

ஸ்ரீராமஜெயம்.

கடிகைமுத்துப்புலவராலியற்றப்பட்ட

# மதனவித்தாரமாலை.

காப்பு.

பூமருவும் வாழ்வு பொருந்துமரு தப்பனுக்கு
மாமதன வித்தார மாலைசொல — நாமகிழத்
தாங்கயமா ரூந்தலைமு னாலுகரஞ் சத்திகொண்ட
காங்கயனும் பிள்ளையார் காப்பு.

## நூல்.

நீர்பூத்தவேலை யுடுத்தநிலமடந்தை
தார்பூத்தமொய்ம்பு தழீஇக்கொள்ளச் — சீர்பூத்த
தண்கமலைகண்களினுந் தானமங்கைபாணியினும்
வெண்கமலைநாவினிலும் வீற்றிருக்கக் — கொண்கனென்றே
மற்றத்திருமகளிர் சூழமருங்குடைவாட்
கொற்றத்திருமான் குடிகொள்ள — வுற்றிருந்தோன்
சீவலவன்முன்னோன் றிருவேங்கடநாதன்
ஆவலுறுமைந்தன்மரு தப்பனெங்கோன் — பூவுலகில்
ஆதரவுசெய்வனென்றே யாசைகொண்டுபின்றொடரு
மாதர்தமைவருத்து மன்மதனே — காதறந்து
மாயாப்பிரவஞ்சம் வளர்க்குநீகண்ணனுக்குச்
சேயாய்த்துவாரகையிற் செல்லுநாட் — டாயான

கோவியர்க்குநெற்றிக் குறுவேர்வரும்பினுன்கை
யேவினுக்குளாகாதா ரில்லையே னேவடுத்துப்
போரொன்றுசீறிப் புறப்பட்டாற்புண்ணியவா
றொன்றும்பாரா யதுகண்டோம் பார்தந்த
வேதன்மனைவிதனை மெல்விரலுக்குள்ளொளித்தான்
மாதவனுந்தன்மனையை மார்பின்வைத்தா னீதலாற்
சங்கரனுமாதைத் தணந்தொருநாண்மோனமதாய்த்
தூங்கவடவானிழலிற் றோன்றுதலு மங்கும்போய்
இக்குவளைத்தம்புதொடுத் தெய்தாயதுநுதலிற்
கக்குமனற்பிறக்கக் காயமாய்த் தைக்குமந்தக்
கொப்புளமாம்புண்ணைக் குளக்கனென்றுசொல்வதன்றி
வெப்பமுடன்போரினுன்னை வென்றானே வப்படியே
வென்றலவனெடுத்த வேடந்தவறும
னின்றனேகாமமுற்று நீத்தானே மன்றல்புரிந்
தாதிக்குஞ்செய்யுமுன்னை யஞ்சியன்றோபார்வதிக்குப்
பாதிச்சரீரம் பகுந்தளித்தான் பூதலத்தின்
மக்கட்பரப்பை வகுத்ததுதான்வேதாவோ
தக்கநெடுமாலோ சதாசிவனோ முக்கணனுஞ்
சீதரனும்வேதாவுஞ் சிட்டித்தாரானாலுங்
காதல்விளைத்தாண்பெண் கலவாமன் மேதினியின்
மைந்தர்பிறப்பதுண்டோ மாரனேநீபுரியு
மந்தவிளையாட்டென் றறியோமோ முந்தப்
பறப்பனவாயூர்வனவாய்ப் பைந்தருவாயுன்றாற்
பிறப்பனவுமுண்டே பெரியோர் சிறப்புரைக்கில்
அந்தவலாரி யறியாநகுடனொரு
கந்தனிவர்களென்றுங் காட்டாரோ சுந்தரமாய்
விண்ணெல்லாந்தான்புரந்த வேந்தனுக்குமெய்நிறைந்த
கண்ணெல்லாநீபொருத காயமன்றோ பண்ணவர்தாம்

உன்வரவைக்கண்டா லொளிக்கவன்றோகண்ணிமையார்
பொன்வரையைவிட்டுப் புறம்போகார் மன்மதனே
எங்கேயிருந்தாலுமென்னகலைக்கோட்டுமுனி
சங்கேதமுன்னைத்தடுத்ததோ மங்கையர்மேல்
ஆவலுறக்கோசிகன்மே லம்புதொட்டாய்சூரனுமாய்த்
தேவசபைகண்டான் றிலோத்தமைக்காய் மேவுமந்தச்
சூதறியாச்சுந்தோப சுந்தருயிர்மாய்த்ததுவு
மாதவனேயுன்கை வனசமே காதன்மிக
ஆகியதானவருக் காரமுதநீக்கினது
மோகினியாநீபிடித்த முல்லையே மோகப்
பிரமனொருசிரசைப் பிச்செறிந்துபோட்ட
தரனல்லவுன்கை யசோகே யரியரனே
காதல்கொடுத்தேதாரு காவனத்துமாமுனிவர்
மாதவந்தீர்த்தாரதுவுன் மாம்பூவே யீதல்லான்
மாலதிகமாந்தூண்டு மாமுனியைத்தானெரித்தா
னீலமுகிலோவுனது நீலமே ஞாலத்திற்
றிக்குவிஜயஞ் செலுத்திவந்தராவணனு
மிக்குடையபோரிலுன்னை வென்றானோ விக்குத்
தொடுஞ்சாபநீவளைக்கத் தோற்றொருத்திவாயா
லிடுஞ்சாபமேற்கொண் டிருந்தான் கடுங்கோப
மாராவுன்கைக்கணையான் மாமோகங்கொண்டவனை
யாராலுஞ்சொல்லி யடக்குவதோ போராலே
தைவருமுன்னம்பாலே தம்பிதமையனெனு
மைவருமோர்மாதை யதுபவித்தார் மெய்வரம்பு
காமியருக்குண்டோநின் கைக்கணையால்ராதையெனு
மாமிதனக்காசைகொண்டான் மாயோனு மாமப்

பிரமன்றிலோத்தமையைப் பிள்ளையென்றுபார்த்தோ
சரதவகைசெய்யத் தொடர்ந்தான் குருவான
பொன்மனைவிதன்னைப் புணர்ந்தான்மதிக்கடவுண்
மன்மதனேயுன்மகிமை மட்டுண்டோ வுன்மலைவா
லீசன்றுரோணன் மனைவியல்குற்கேக்கமுற்றுத்
தூசுகளைந்தையமிடச் சொன்னானே பூசலா
லுன்னியவுனம்புக் குடைந்துமாலாயர்குலக்
கன்னியர்தஞ்சேலை கவர்ந்தானே யின்னங்
குருகுலவேந்தன்பரவர் கொம்பனையைச்சேர்ந்தான்
முருகன்குறத்திநல மொய்த்தா னுருவிலியுன்
பேரம்புதைத்தாற் பெருமைகுலம்பார்ப்பதுண்டோ
வீரம்பெருநெருப்புக் கில்லையே மாரனே
மாதுவிரும்பு மணவாளனைத்தனக்குத்
தூதுவிடுத்தான் சுரர்பதிதா னேதுசெய்வான்
மங்கைதமயந்தி மறுக்கநளன்வடிவாய்ச்
சங்கையுறச்சென்றானுன் சண்டைக்காய்த் துங்கமல
ரம்பாலரம்பையருக் காசைகொண்டோர்வேள்விசெய்து
வெம்பாதபுங்கவராய் மேவுவார் தெம்பாக
வெந்தவிதங்கினைத்தா யென்றாலுமூவுலகு
மந்தவிதநடக்கு மங்கசனே வந்தவர்க்குத்
தானேசுகந்தரலாற் சங்கரனென்றார்சிவனை
யானேறியின்ப மருள்வனென்றே யூனே
யுலர்ந்துதவசா லொடுங்கிப்புலனும்
புலர்ந்துசிறைக்கோலம் போல் வலைந்தோர்கள்
இம்மையிலேபட்டசள மெல்லாங்கண்டோமினிமேற்
செம்மையுடனென்னசுகந் தேடுவரோ அம்மம்மா
காமாவுனைப்பணியுங் காமுகரைக்கண்டோமே
யாமாமலர்ப்பா யமளியின்மேற் றாமே

சயனசுகம்பெறுவார் சார்ந்தபுலனைந்தும்
பயனுறவேயின்பம் பலிக்க மயலகலப்
பக்கந்தனிலிருந்து பாவையர்கைமேற்கொடுக்கச்
சொர்க்கம்பெறுவார் சுகம்பெறுவார் மிக்க
விதவையொருபார்ப்பனியுன் வெங்கணையினாலே
யதமமிகுங்காமி யாகி மதமாய்க்
கொலைபுரிந்துங்கட்குடித்துங் கோத்திரத்தார்தள்ள
நிலைபிரிந்துந்தன்னுருவ நீத்தும் புலைமகளாய்த்
தீமையேசெய்துஞ் சிவலோகஞ்சார்ந்ததினாற்
காமமேமோக்கமெனக் கண்டோமே காமக்
கவனமுறுசித்திராங்கி காதலின்பப்பேறு
தவறினசாரங்க தரனை மவனை
யறுத்தனர்கைகாலையென்று லங்கசனேயுன்னை
மறுத்தவருக்கிவ்விதம் வாராதோ குறித்துரைக்கில்
இல்லறமேநல்லறமா மேற்றபொருண்மைந்தனொன்று
சொல்லவருவதுமுன் சூக்ஷியே நல்ல
வரிசியுந்தண்ணீரு மனலும்வெவ்வேறானா
லுருசியுடன்சோறுவ துண்டோ பரிசித்துப்
பாகந்தரச்சமைக்கும் பான்மைபோனீங்காமற்
போகங்கொடுத்துப் பொருத்துவா யாகையினா
லென்னதொழில்செய்து மெடாதவித்தைதானெடுத்துங்
கன்னமிட்டுநாட்டிற் களவாண்டு மின்னிலத்தோர்
தன்மனைவிமக்களுக்குத் தக்கபொருட்டேடுவது
மன்மதனேநீபுரிந்த மாயமன்றோ நன்மையாய்
முன்னாட்டுப்பேய்க்கூட்டு முன்னேபூசாரியெடுத்
தின்னாட்டுக்கென்று லொளிப்பானே யின்னாட்டி

னுன்பூசைக்கென்று லுடையவரைவிற்பார்கள்
வன்பூசைச்சைசவர் மதவேளே    யன்பாலே
காமனைகாவிகட்டுங் கள்ளருறங்காமனடிச்
சாயமிருந்துன்பதத்தைச் சந்திப்பார்    நேமமிகு
பத்தியுடன்கோவில்புகும் பத்தர்செய்தியத்தனையுஞ்
சித்திரமன்றேவெளியிற் செப்பவோ    வத்தனுக்குச்
செங்கைகுவிப்பார் திரும்பிநின்றுதேவடியார்
கொங்கைதனைப்பார்ப்பார் குறிப்பாக    வங்கவர்கள்
நேமிக்குஞ்சிந்தை நினைவுமடவார்மேலே
சாமிக்குக்கும்பிடல்லோ தக்கினது    காமியர்கள்
பற்றுடனேயாலயத்தைப் பத்துவிசையெட்டுவிசை
சுற்றுவதுமாதர்வரச் சுற்றுவதே    கற்றறிந்தால்
ஈசனுக்காய்க்கோவிலுக்கு ளேன்போறூர்காமாவுன்
பூசனுக்காய்க்கோவிலுக்குப் போவாரோ    நேசமிகுஞ்
சித்தசனேயுன்னுடைய சேனையெனுமாதர்வடி
வத்தனையுமுன்கோல மல்லவோ    வத்தகைய
வுன்கணையாம்பார்வை யுருட்டிவிழிக்கையிலே
வன்கணராம்வாவிபரும் வாடாரோ    நன்குடனே
குல்லச்சலவைகட்டிக் கொண்டைத்தலையசைத்து
மெல்லநடந்திருகை வீசியே    செல்லயிலே
முன்கையிற்சந்தனத்தை மூக்காலேமோந்துகொண்டு
தன்கையிலாழி தனைத்திருத்திப்    பொன்குலவு
காதுக்கடுக்கனிலே கையைவைத்துப்பூசியச
வாதைத்துடைத்து மணம்பார்த்து    வீதியிலே
தூர்த்தர்வருவார்களவர் தூரநின்றுபார்க்கையிலே
வார்த்தைசொல்லாரிந்த மடவார்கள்    பார்த்து
நெளித்திரவிக்கை நெகிழ்த்துமுலைச்சேலை
யளித்துமனைக்கே யகல்வார்    வளித்தேரில்

ஏறியசீமான்விளையாட் டென்னசொல்வேன்காமுகர்மேற்
சீறிமலர்ப்பாணமெல்லாஞ் சிந்துவா யாறுவரோ
காமனையும்போர்க்குவரக் காட்டினேனைழையிலக்
காமனையிற்சென்றாளே கன்னெஞ்சி சோமன்
வருந்திவலையானபணி வாட்டுமினிநெஞ்சே
வருந்திவலைபுகுந்த மான்போற் றிருந்தியே
செவ்விதழைப்பானவளைச் சீறடிதொட்டாலுஞ்
செவ்விதழைப்பானமுறச் செய்தோமோ கவ்வையிஞன்
மட்டுப்படுத்தி மலர்க்குழலைப்போகாமன்
மட்டுப்படுத்தி மறித்தோமோ விட்டுவிட்டோம்
என்றுபுலம்பியவர்க் கின்பம்வரத்தூதனுப்பி
யென்றுபுகும்வேளையங்கே யெய்தியே நன்றுடனே
கைக்கணையுநீயுங் கடக்கநிற்கக்காரிகைகொங்
கைக்கணையுமின்பநலங் காண்பாரோ மிக்குடனே
துப்பாரிதழுஞ் சுருளுமொன்றாய்த்தந்துசுவைத்
துப்பாரொன்பார்மலருஞ் சூட்டுவார் மெய்ப்பாகத்
துத்தாமடித்த சுருளிலேபாதிகடித்
துத்தாவென்றேதிரும்பச் சொல்லுவார் துய்த்தாற்
கசக்குமென்றிராமற் கதுப்பைச்சுவைத்துக்
கசக்குமென்றுநீவுமுலைக் காம்பை வசப்படுத்தி
யாடவாவென்னை யலக்கழிப்பதென்னொருமுத்
தாடவாவென்பா ரவசரமாக் கூடக்
கடிதடத்துக்குள்ளே கரிகரஞ்செய்தாலுங்
கடிதடக்கக்கூடுதில்லைக் காமம் விடுவிடடா
கைச்சரசலீலையிலே காமசலம்போகுதையோ
கைச்சரசமாகுதென்பார் கைநெரிப்பார் இச்சைகொண்ட
காசலைக்குமேலாங் கலவிச்சரிபோகங்
காசலைக்குமாமுலையார் காட்டுவா ராசை

வரத்துடைக்குட்சேர்த்து மதனசலராசி
வரத்துடைக்கச்சற்றே மயங்கி யுறைப்பதிலே
சங்கையும்பாராமற் றனரேகையுநெரிந்த
சங்கையும்பார்ப்பாரடித்துத் தள்ளுவார் சிங்கார
வெத்தனையோலீலைசெய்தா னெங்கேயுங்காணாத
வெத்தனையேன்கூடினே னென்றுசொல்வா ரத்தனையும்
உன்னுன்முடிந்ததென்று னுன்மாயமாரறிவார்
மின்னாரையுமயக்கும் வில்வேளே யுன்னாலைக்
கொக்கோகமாற்கமுடன் கூடுமிளைஞோர்மீதி
லக்கோகமாமுலையா ராசைகொள்ள மிக்காய்
இருவருக்குங்காமமய லேற்றுமிந்தவித்தை
யுருவிவிக்கல்லான்மற்றோர்க் குண்டோ செருவில்
அடலேறுமுன்பகழிக் காற்றுதிளைஞோர்
மடலேறுவது வழக்கா விடமுடைய
சோலையிலேமாதர்தமைத் தோன்றிவரக்கண்டிளைஞோர்
மாலைவிளைத்து மனமயங்கிக் கோலத்தால்
விண்ணரம்பையோதுடையு மெல்லரம்பையோமருட்டுங்
கண்ணரம்பையோமென் கடிதடந்தான் பெண்ணரசி
செங்கமலையோமுலையுஞ் செம்பொன்மலையோவுடலுந்
தங்கமலையோகுழலாய்ச் சாதித்தார் மங்கைநல்லார்
மேனகையோபைந்தளவ மேனகையோவானைதனக்
கானகையேமாதரடித் துடைகண் மானனையார்
எந்தவரையோகடலோ வேற்றவரைதோள்கள்வளை
யுந்தவரையோபுருவ மொப்பென்பா ரிந்தமின்னார்
மாதரையோபொன்னுலகோமாதரையாரொன்றறியோம்
போதரையோவெல்லப் புறப்பட்டா ரோதென்று

வன்மனங்காயக்க வலைகொண்டிருப்பதென்ன
வன்மனங்காயக்கவலை மாற்றாயோ                    நன்மைச்

சரசமருளுந் தயவுசெய்தான்மார
சரசமருளுந் தவியேன்                    மருவு

மிரும்பாகருத்து மிளகாதோவாரு
மிரும்பாகருத்துமென்று மேலச்சேர                    விரும்பாத

வாதேவரம்பாய் மறையநிற்பதென்னகிட்ட
வாதேவரம்பாய் மயங்கினேன்                    ேனதெனவே

காலையவன்பிடிப்பக் கன்னியுதைத்தேகமயல்
வேலையமிழ்ந்தி விதிர்ப்பெய்தி                    நீலவிழி

மாதுதனைக்காணுமன் மாமடலேதெய்வமென்று
போதுபுகுமுன் புறப்பட்டுக்                    காதலாய்ப்

பெண்ணைவெட்டிச்சாய்த்தொருவன் பெண்ணாசையான்மடலைப்
பண்ணையமைத்த பரியாக்கி                    வண்ணச்

சடைமுடித்துவெண்ணீறு சாத்தியெருக்கின்பூத்
தொடையலெனமார்பிற் சூட்டி                    மடன்மாக்

கருக்கிமுதுகினிந்தக் காமுகன்போயேறி
யிருக்கவிலை னோ ரிழுக்கச்                    செருக்குடனே

பேரம்பலத்திலவள் பேருரைத்துநிற்பதுமுன்
கூரம்புதைத்த குணமன்றோ                    போரம்பு

சூரியனைநட்பாய்த் துணைக்கொண்டபங்கயமும்
பாரிதனைத்தேர்பறித்த பைந்தளவும்                    வாரிதனிற்

சூரனைக்காட்டிக்கொடுத்த சூதமுந்தங்கோயிலென்றே
வாரம்வைத்தோரைக்குறைக்கும் வன்மரமுங்                    கூரிரவிற்

கள்ளரைப்போலேயெழுந்து கண்மலர்ந்துமாதருயிர்
கொள்ளமுளைத்த குவலயமு                    முள்ளபடி

சீயத்தின்வெவ்வாயுந் தீங்கிலாத்தாபதர்தங்
காயத்தைவாட்டுங் கடுங்கனலு மாயமாம்
வெய்யகொடும்பாவமும்போல் வெங்கணையுமைந்துருவா
வையமெடுத்த தறியோமோ வையகத்தைச்
சூழுமதயானையைநீ தூண்டினுற்பல்வகையாய்
வாழுறுயிரெல்லா மயங்குமே யேழுலகுந்
தொட்டகடுந்நேரசையிற் றெல்லுலகெல்லாமசையு
நட்டமரமு நடுங்குமே கட்டளையாய்
மேவியவுன்கைப்பிடித்த வின்னுறெறுவித்ததென்றூற்
பூவிலுங்கண்ணீரொழுந்து பொங்குமே கூவியே
சீரெல்லாங்கொண்டகுயிற் சின்னமதிருங்காலம்
பாரெல்லாம்வேனிற் பரக்குமே பேரோசை
சேருங்கருங்காளந் திண்பனைமேற்கூப்பிடுநாட்
காருங்குடித்தபுனற் கக்காதோ போரடரு
நேமியெனுமுன்முரச நின்றதிர்ந்துவந்திடுங்காற்
பூமியெல்லாமொன்றாய்ப் புதையாதோ காமனே
யுன்படையுநீயுமல்லா லும்பருலகும்புவியும்
வன்படையுங்கொற்ற மறுத்துண்டோ வன்பகைசெய்
பொல்லாச்சிலைமாரா பொன்போலிருந்தவருக்
கெல்லாப்பகையுமுன்னு லெய்துமே வல்லாளா
வாலிக்குத்தம்பி மனையாண்மேலாசைவந்து
பாலிக்கநீயே படையெடுத்தாய் வாலியெனும்
அண்ணனைச்சுக்ரீப னமர்க்களத்திலாவிகொள்ள
வெண்ணமுறநீகணைதொட் டெய்தாயே மண்ணுலகிற்
றம்பியுடனண்ணனுக்குச் சண்டைவரப்பண்ணுவது
வெம்பியவுன்கைக்கணையாம் வில்வேளே வம்பலவே
யென்னசிநேக மிருந்தாலுங்காமாவுன்
சன்னதம்வந்தாலுடனே சண்டையாம் பின்னையுமோ

ஆச்சரியமாகவுனக் காளானார்க்கச்சமுண்டோ
கூச்சமுண்டோயேதேன் குறையுண்டோ பேச்சுண்டோ

மூப்பிளமையுண்டோ முறையுண்டோபெண்களுடன்
மாப்பிளைமாரைப்பிணைக்கு மன்மதனே தாப்பெனவே

கைகொடுத்தநாயகனைக் கைநெகிழ்ந்துமற்றொருவன்
மெய்கொடுத்தவின்பமின்னார் வேண்டுவது மைகொடுத்த

கண்ணார்மயங்கியொரு காமுகனைக்கண்டுதொடர்ந்
தெண்ணமற்பற்றி யிழப்பதுவும் பெண்ணவார்

இன்பம்பொருளா யிருந்தபொருளுங்கொடுத்துத்
துன்பமடைந்துசிலர் தூங்குவதும் பின்பொருவன்

தேனார்மொழியாளைத் தேடிமழைக்காரிருட்டி,
லானாலும்வேற்றூ ரடைவதுவுந் தானாக

ஓடியொருவ னொருவன்மனையாளைக்
கூடியுயிரைக் கொடுப்பதுவும் நாடியே

தன்மனையாளேங்கத் தனக்கொருவன்மற்றொருத்த
னன்மனையைத்தேடி நடப்பதுவு மன்மதமனே

எல்லாமுன்மாயமென்பா ரென்னசைநாயகனை
யல்லாமலென்னை யடாவாயோ சொல்லக்கே

ளுன்கணையாமைந்தி லொருமுல்லைநான்புனைந்தால்
வன்கணையாநாலுமெய்ய மாட்டாயே நன்காய்

நிலைப்பார்க்குமச்சமாய் நீண்டவுருவத்தாற்
றலைக்கூர்மஞ்சார்தோற்றந் தன்னான் மலைப்பில்லாக்

கானவராகத்துருவங் காண்பதினாற்செய்யமுடி
வானவரைக்காக்கும் வளத்தினா லானை

முருகனரசிங்கத் திடத்தான்முனிசேர்
மருவியவாமனங்கூர் வாழ்வால் அருமையுறுஞ்

சீராமராமரா மந்திரமேசேருமரி
பேராவனநிறையப் பெற்றதினாற் காராரு
நற்கண்ணனாக வருந்ததியைநாடுதலாற்
கற்கிவருமாறுநலங் காட்டுதலா னற்குறிப்பாற்
பையரவினின்றசையும் பான்மையானீங்காமற்
றுய்யநிறத்தைதவனஞ் சுற்றுதலா லையமின்றிச்
சந்தனத்தைப்பாதவனைத் தாங்குதலான்மாயனைப்போல்
வந்தபொதிய மலையினான் சந்ததமு
மெய்துலங்குகங்கை விடாதமைத்தலாற்குளக்கண்
ணெய்துதலாலம்பலம்வந் தேறுதலா னெய்தின்றி
மேவுமலைவளைக்கு மேன்மையான்மெய்க்கோலந்
தாவுமரவந் தரித்தலான் மேவிநிறை
யாமதியுமாரமுஞ்சேர்த் தக்கோடுந்தாங்குதலாற்
காமனையுஞ்சாய்த்துக் கலக்குதலா னுமறியக்
கானங்கடந்தவிசை காதுறலாலாலமுறும்
பானந்தனக்கூட்டம் பற்றுதலா னனிலமுந்
தன்மயமேயாக்குதலாற் சங்கரனைப்போலெழுந்து
நன்மைதருசித்ரா நதியினான் தன்மையாய்
மீறியசங்கேகயத்தின் மீதேறியூர்வதினா
லாறுதானங்கோட்ட மாவதினாற் சீறுசினம்
போற்றியகாலாலடரும் பூங்கொடிவாசந்தரலா
னாற்றிசைக்கும்வேலை நடத்தலாற் றோற்றிய
கண்ணிருவகையாய்க் காவிரண்டுமேவுதலா
லெண்ணவினங்குடிசே ரில்லத்தாற் பண்ணுகுந்
தேடுந்தமிழ்விளங்கச் செவ்வேளைப்போலெவரு
நாடுந்தமிழ்ப்பாண்டி நாட்டினான் றேடரிய
மசாமபுலவர்கூடுதலாற் சூழ்கோட்டையேந்துதலா
னற்புவிக்குமேலாய் நகுதலா லற்புதமாம்

பொன்னாற்பணத்தாற் பொருந்துதலா லாரவந்
தன்னாற்பொறைமிகுக்குந் தன்மையினா லெந்நாளுஞ்
சீரையகலாத் திருமாலருள்புரியும்
வீரையடுத்த வியப்பினாற் பாருலகில்
வேற்றுமலையில்லாத மேருமலைபோலுயர்ந்த
ஆற்றுமலைத்தென்கிருவை யூரினான் சாற்றுங்கால்
மேலாரத்தோடசைத்து வீசுதலால்வாய்நெகிழ்ந்து
காலாற்றுவண்டுவிழுங் கட்டளையான் மாலாமேல
மின்னார்வருட மிகுந்தளித்தலாலுலகந்
தன்னாரமென்றுபெயர் சாற்றுதலா லெந்நாளுந்
காரையடுத்தரும்பு காரணத்தாற்பெய்யுமழைத்
தாரைநிகர்த்தமுல்லைத் தாரினான் சீரறிந்து
கையாலடித்தெழுப்பக் கந்துகமாய்ச்சுற்றிவரும்
வையாளிகொண்டுகன வட்டமாய்ப் பொய்யாமற்
கோபம்வரச்சீறுதலாற் கோரமாய்மிக்கபிர
தாபமுறக்குதித்துத் தாக்கியே சோபமின்றி
வெம்புரவிதேர்முகத்தில் வீக்கியொருபங்குகுறை
யும்புரவியென்றதனை யொன்றுதல்போல் அம்பரத்திற்
றேயுங்கதிரோன் சுடர்த்தேரையுமசைத்துப்
பாயுங்கவனப் பரியினான் றேயமிகு
தூயவெள்ளத்தானத் துதிக்கையானம்பரைக்
காயவெயிலேறுங் கடுப்பினாற் பாயொளியாற்
கண்டகஞ்சமாமணிவாய் விண்டுகலித்திடலான்
மண்டருங்கோடின்னி வருதலாற் றண்டத்
துடக்கியதாலவட்டஞ் சுற்றுதலாற்றிக்கை
யடக்கிரணமுட்டு மடலாற் றிடப்படவே
கந்தடவுமாறுகொண்ட காக்ஷியாற்கன்னலையுஞ்
சிந்தவெழுந்த திறத்தினான் முந்தவே

காலைதிமிர்ந்துவரும் காரணத்தாற்செவ்வான
மாலைமறைக்கும் வனப்பினால் ஞாலத்திற்
றோராருங்கண்டுகண்டு சேவித்தலானமதி
வாராதடர்ந்து வருதலாற் தீராத
வெப்பத்தாலோடும் விசையினாற்சூரியனை
யொப்பத்தானெங்கு முலாவியே அப்படியேழ்
மண்டலங்குலுங்கவந்து மந்தரம்பிளந்தெறிந்து
கொண்டலும்பிசைந்தணைந்த கொம்புகொண்டு மிண்டிமிண்டி
அண்டமுந்தகர்ந்துகங்கை யங்குமிங்குநின்றலம்ப [ண்டு
மொண்டுமொண்டுசிந்தைநீண்டு முண்டுகொண்ட சண்டைகொ
வீரதண்டையோசையண்ட மேன்முழங்கவீறுகொண்டு
பாரமஞ்சுமேலிருந்த பாகெறிந்து கோரமிஞ்சி
மேனிதந்தசாயைகண்டு வேறுதந்தியாகுமென்று
தானடர்ந்துகோடுகொண்டு சாடிமங்குல் போனிமிர்ந்து
கட்டுபட்டநெற்றிதொட்ட சைத்துளைபுனற்பெருக்கி
வட்டமிட்டசக்ரவெற்பு மட்டுமுட்டி யொட்டிவைத்த
சொக்கணிப்படைச்செருக்கர் கொத்தளத்தெயிற்பரப்பை
மத்தகத்திலெற்றுமுக்ர வாரணத்தான் சித்தத்
தருடத்துசங்காழி யானைநிகராகக்
கருடத்துசங்காமர் காட்ட அருகினிலே
மாலப்பிறைக்கவிண்ணைத் தாங்குமலைதடியாங்
கோலப்பிறைசேர் கொடியினான் சாலவே
சூரியனார்மேனி துணுக்கெறக்கட்டிளமை
நாரியர்க்கும்வாலியர்க்கு நாணேற மேருவைப்போ
லாரக்கனக மமைக்குமளகையர்கோன்
பாரக்கருகூலம பார்த்தேங்க வீரமிகு
வென்றிமணங்கொடையான் மேன்மேலுமாறுமன்
முன்றிலதிர்மூன்று முரசினை னென்றும்

நிரம்புபுகழ்வீரைநவ நீதகிருஷ்ணஸ்வாமி
வரம்புரிதாளாணை வழுத்திப் பரஞ்சோதி
மெய்க்குருவினாணைதலை மேற்புனைந்துதன்னாணை
திக்குமுழுதுஞ் செலுத்தினோன் தக்கவர்க்கு
மும்மையினுநன்மைதரு மும்மூலைத்தடாதகையா
மம்மைதவஞ்செய்யு மருமையாற் செம்மைதருங்
கொண்டையங்கோட்டைவள நாட்டுக்குலமரைப்
பண்டையினுமும்மடங்காய்ப் பார்புகழ வுண்டாக்கு
ஞாலங்களுக்கதிப னாட்டுமருதப்பனெங்கோ
னாலங்குளத்தி லரசிருந்தோன் சீலச்
சகலகலைநிபுணன் சக்ரபரிபால
னகிலபுயதர வலாரி புகலு
மனுவளவராசேந்திரன் மற்புயவிலாசன்
றனுவிசையன்சத்யவரிச் சந்த்ரன் றனிவான்
முகடுகிடுகிடென மூதண்டமாடச்
சகடையத்தாக்குஞ் சரண னிகலும்
அரசர்குலதிலக னக்னசுக்ரீபன்
வரகுணராம வசீர னிருபர்பிரான்
சீவலவமாறனென்ற தென்னாட்டுராயனிசைப்
பாவலவன்கல்விப் பழக்கத்தான் மேவியே
சத்திபடைக்குந்தமொடுந் தானவெடியோடுநடந்
தத்திமுகநாலுகையு மாய்ப்பொருந்தி மெய்த்தவளக்
கோட்டையுங்கொண்டு குறுகாரையுமுடித்து
வேட்டைவரக்கொற்றமலை மேலெழுதி நாட்டிற்
கயத்தானனத்தானைக் காய்ந்தவரைப்போலச்
செயத்தானடத்துபடைச் சேனை வயப்போரில்
ஏவினாற்பின்வாங்கா தேற்றால்விடாதமரிற்
றூவினாற்சற்றுந் தறுகாது கூவிசையங்

கொண்டபரித்திரளுங் குஞ்சரமுங்காலாளு
மண்டலர்மேற்சீறி யடல்விளைக்கக் கண்டுவந்து
மாற்றொதிர்த்து மலைந்தசெருக்களத்தி
லாற்றமலோடு மவர்போக வேற்றானை
வாளறுத்து வேலறுத்து வாயறுத்துநாவறுத்து
நீள்விரற்கைதானறுத்து நேருநித்த தாளறுத்து
வீழமத்தயானைபட்டு வீழவுக்ரராசர்பட்டு
வீழமற்றவாசியற்று மேறுணித்து வீழ்வெட்டி
ஓரிபிய்க்குநீள்பிணத்தை ஓடிமட்டைவாரமுட்டு
சோரிரத்தவாறெடுத்த சேனையொத்த நீரினுச்குள்
ஆடுபத்ரகாளிநிர்த்த மாடவெட்டிலேசரிக்கி
யோடுசெத்ருராசர்தப்பி யூரடுக்க ஓடிமுற்றும்
வாதுமெத்தவேயுரைத்த வாயடைத்துமேனடுக்க
வீதியிற்குளோடிமுற்ற மீதினிற்கு மாதருக்குக்
கைக்கரணங்காட்டிக் கடலேறப்போர்துரந்து
மிக்கரணக்கொளுவில் வீற்றிருந்தோன் அக்ரமராய்
வஞ்சிக்குமாற்றார் மலையேறக்கப்பமிட
வஞ்சிக்குச்சீட்டு வழங்கினோன் அஞ்சிவரு
வங்கநாட்டைத்திறையை வாங்கிவணங்காதபல்ல
வங்கநாட்டைத்தனதாய் வைக்கின்றோன் சிங்களத்தார்
ஆங்கேகயத்திறைதந் தஞ்சலிப்பவஞ்சாதா
ராங்கேகயத்தாரை யாட்கொண்டோ னீங்காக்
கடாரத்திறைவர்வந்து காத்திருந்துசெம்பொற்
கடாரத்திறையளக்கக் கண்டோன் விடாதிருந்த
வல்லமணாநாழிகையில் வாங்கிமருவாரொடுத்த
வல்லமணாயெல்லாம் வலிதொலைத்தோன் கொல்லத்தார்
சேரவந்திராசித் திறையளப்பத்தன்னடிக்கீழ்ச்
சேரவந்திராசர் தினம்வணங்கப் பாரனைத்துங்

கொற்றக்கவிகை நிழற்றக்குலவுதிசை
முற்றப்புரந்த முனைவேந்தன் உற்று
மதியமைச்சர்மன்னவரு மைந்தருமுன்னெய்த
நிதியுந்திருவு நிரம்பத் துதிகூர்ந்து
பாப்பனைத்தாமோதரவப் பண்ணவருஞ்சங்கமுமே
காப்பதுமவாழ்வுங் கவினெய்த நீப்பரிதாய்
ஓங்குதும்பெரியவரை மேற்கொண்டுலகமிசை
தாங்குங்கடல்போற் சமுகத்தான் பாங்காய்க்
கரும்பைமிதித்தாடல்செய்தோன் கன்னியர்மேற்போர்க்குக்
கரும்பைவளைத்தெய்யாத காமன் விரும்பு
சிவிகைவளநாடுதந்து செந்தமிழைக்கொண்டோன்
சிவிகைமுறைபோலரசு செய்தோன் புவிபுரக்கத்
தென்னவனைப்போலுதித்த சீவலதிபதியைத்
தன்னருமையாற்சிறிய தந்தையென்போ னின்னிலத்தில்
நேசமனுநீதநவ நீதகிருஷ்ணதீரனையும்
ராசபலபத்திரவி ராமனையும் பேசுங்காற்
காமன்றிருவேங் கடநாதனைப்பெருமாள்
சோமனையுந்தம்பித் துணைவனென்போன் பூமருவு
செம்பதுமைகேள்வன் சிவகுருநாதன்புவிக்கோர்
தம்பமெனுங்கட்டாரிச் சாளுவனைக் கும்பனைப்போற்
செந்தமிழையெல்லாந் தெளிந்துநமைப்புரக்க
வந்தருளுஞ்சின்னு மகீபதியைச் சந்ததமும்
வெஞ்சமருக்கஞ்சாத வீரப்பனைக்கொடைக்கு
மஞ்சனையபண்டார மன்னவனை யஞ்சலார்
வன்பகையைச்சீறும்விக்ர மார்க்கன்ரெகுநாதனையு
மின்பமிகுமாதுலர்க ளென்றுரைப்போன் தன்பலத்தால்
இன்னிலத்தில்வாழும்ரா சென்றவரசேந்திரனையுந்
தன்னிகரில்லாப்பெரிய சாமியையுஞ் சொன்னமனு

நீதிமான்சிவலவ னேசமருகோனெனவா
மூதிநாராயணவொய் யாரனையு மோதும்
புலவமகிபனையும் பொன்போனினைக்கும்
நலமைத்துனராய் நவில்வோன் குலதிலகன்
எங்கள்திருவேங்கடநா தேந்த்ரன்வரபாலனுயர்
சங்கதரன்போலிசையைத் தாங்கினேன் கொங்கு
தளைத்தகுழற்சானகிக்காய்ச் சாபமெடுத்தேற்றி
வளைத்தமருதப்ப வசீரன் கிளைத்த
திருவும்வளமுஞ் செறிந்தகிளுவை
மருவுமருதப்ப வசீரன் செருவில்
விரைந்தவளைதடியை மேருவரைமீதில்
வரைந்தமருதப்ப வசீரன் திருந்தப்
பழுத்துவிளைந்தரச பாகத்தமிழை
வழுத்துமருதப்ப வசீரன் முழுத்த
நிசகுணபயோததிக்கு நேராமிருது
வசனமருதப்ப வசீரன் றிசையில்
நினைந்தபடிசமர நீக்கிவெற்றிவாகை
வனைந்தமருதப்ப வசீரன் மனந்தெளிந்த
வாரப்புலியா மருதப்பராஜசிங்கம்
பாரப்புயவரைமேற் பாரிருத்திச் சேருந்
திசையனைத்துமொன்றாகச் செங்கோன்மைசெய்து
விசையமனுநீதி விளக்கி யிசையச்
சிவந்தமலர்த்தாளையொன்னார் சென்னிமிசைச்சூட்டி
யுவந்திருக்குநாளி லொருநா ணிவந்த
பவனியெழுச்சி பணித்தனனுமென்ன
அவனியரச ரறியப் புவிமுழுது
மோரிடத்தில்வந்ததுபோ லும்பருலகனைத்தும்
பாரிடத்தில்வந்து படிந்தனபோற் சீரடுத்த

மங்கலக்கோலம் வளையுமறுகுதொறுந்
துங்கமௌலிமன்னர் சூழ்ந்திருக்க எங்கள்பிரான்
சங்குமுரசுஞ் சயனத்துயிலெழுப்பக்
கொங்குமலர்ப்பஞ்சணைமேற் கொண்டெழுந்து பங்கயத்தின்
பூமடந்தைநீண்டப் புகழ்மடந்தைகைகொடுக்கப்
பாமடந்தைநாவிற் பயிற்பெய்தக் கோமனையின்
முன்றிற்புறத்து முதுமஞ்சனச்சாலை
யொன்றிற்புகுந்தாங்கு வந்திருந்து துன்று
வடவருவிச்சித்ரநதி மஞ்சனநீராடிப்
புடவையினுலீரம் புலர்த்தி யடைவாய்ச்
சிலதருபசாரஞ் செய்துகொடுக்குஞ்
சலவைபலவுந் தரித்து விலைமதியா
வச்சிரமும்பச்சை மரகதமும்வாளுரக
ருச்சிமணியும்பெரிய வொண்டிமுத்தும் வைச்சிலகு
துங்கக்குழைக்கடுக்கன் சோதிதரத்தரித்துத்
தங்கச்சரப்பணியுந் தாங்கியே சங்கும்
பதக்கமணிந்து பருமுத்துமாலை
யதற்கிசையக்கொத்தா யணிந்து நிதிக்கடவு
ளிச்சைபெறக்கைவனச மேற்கமலப்பாசடைபோற்
பச்சைக்கடகப் பணிவிக்கி யுச்சிதமா
யாழிவிரலி லணிந்துகலையூர்தியுடன்
வாழிதருவாளை மருங்கசைத்துச் சூழதிபர்
ஏத்துபரஞ்சோதிமுனி யென்றகுருமந்திரத்தாற்
சாத்தும்விபூதி தனைத்தரித்துக் காத்தருளுந்
தெய்வச்செபூஞ்சுடரைச் செங்கட்கரும்புயலை
ஐவர்க்குதவு மருமருந்தைக் கைவிரலாற்
சொற்பயிற்றிவேயைத் துவர்வாயில்வைத்தூதி
நற்பசுவின்முன்னே நடந்தானை வெற்பெடுத்துத்

தாங்குநவநீதகிருஷ்ணசாமியைத்தென்வீரைநக
ரோங்கும்பெருமாளையுளத்திருத்தி யாங்கெழுந்து
கோபவுக்ரவீரபத்ர கோலவச்ரதேகமெய்ப்ர
தாபசுப்ரதீபரண சங்கிராமன் கோபப்
பரமண்டலீகர் படையெடுத்தசேனைச்
சிரமண்டைமூளை சிதறக் கரதலத்தின்
வெற்றிவடிவாளெடுத்த வீரவிக்ரமார்க்கனென்றுஞ்
சுற்றியிருக்குமன்ன சுற்றத்தான் உற்றறியும்
புத்திக்குயூகி பொறுமைக்குப்பூமிபுக
ழெத்திக்குங்கொண்டாடு மெங்கள்பிரான் முத்தமிழைச்
சிந்தைகுடிவைத்ததுரை சீவலராசேந்த்ரசிறு
தந்தைமனமகிழத் தானடந்து சந்ததமும்
பொன்னடனஞ்செய்யப் பொருந்துமணிமண்டபத்தின்
மன்னர்புடைசூழ வந்திருந்து உன்னுமத
வாரணத்தைக்கொண்டு வருகிறெனக்கூறுதலும்
பாரமதயானைப் பாகர்சென்று தூரத்
திடிக்கும்பயஞ்செனிப்ப வெண்ணலர்கற்கோட்டை
யிடிக்குமபிறைக்கோட்டி யானை யடுத்துத்
தடவுதயபானுரதத் தட்டினுங்கைநீட்டித்
தடவுங்கரடமத தந்தி யடையலரை
அங்கங்கொடுக்குதலா லாலம்போலேதிரண்ட
அங்கங்குலவு மரசுவா சங்கிலியாற்
பூட்டுநிகளங்களைந்து பொற்சிலம்புபூட்டியிரு
கோட்டுமணிக்கிம்புரிப்பூண் கொண்டேற்றிக் காட்டுநிறத்
தங்கக்கசட்டிற் றயங்கிரத்னத்தாலமுத்துந்
துங்கத்துவிசைச் சுவசேருத்தி வெங்கரடம்
ஊறுமதவருவி யோடுமலைபோலெழுந்து
சீறுங்கடுங்கோபச் சிந்துரத்தைக் கூறரிய

வாறுவர்கள்கொண்டுவந்து மண்டபத்தின்முன்னிறுத்தத்
தாதுகமழ்முல்லைத் தடமார்ப னீதிபெறுஞ்
செங்கோன்மையூற்றுமலைத் தென்னாட்டுராயனெனு
மெங்கோன்பிடிபடியா யேறினான் சங்கோலஞ்
செய்யப்பலமுரசுஞ் சின்னமும்பேரிகையுஞ்
சையத்தையுந்துளக்கிச் சத்தமிடத் துய்ய
குடையுங்கொடியுங் குலவமறுமன்னர்
படையுங்களிறுங் பணிய விடையிடையே
எள்ளிடமும்நீங்காம லெம்மருங்குஞ்சூழ்ந்தகுழாந்
தள்ளிநடக்குஞ் சமையத்தில் வள்ளமுலை
மின்னாரனைவோரு மெய்க்கோலஞ்செய்வமென்றே
பொன்னாபரணம் பொருத்துவார் முன்னாகக்
கொந்தளகபந்தியின்மேற் கோலமலர்சூட்டுவார்
கொந்தளவோலை குழைக்கணிவார் சிந்துரத்தைத்
தீட்டிச்சவாதுத் திலகமிட்டுச்கண்வாளைத்
தீட்டிக்கருமைத் திறங்காட்டிப் பூட்டி
யணிவடமுங்கண்டிகையு மாரமும்பூண்கொங்கை
யணிவடமேருவின் மேலாடத் தணியாச்
சரியாவனமுலைமேற் சாந்துபுழுகப்பிச்
சரியாவனகரத்திற் றங்கிப் பரிவுதரும்
பொற்பாடகக்கொடிபோற் பூவைநல்லார்கால்களுக்குப்
பொற்பாடகஞ்சிலம்பு பூட்டியே விற்போற்
புருவம்வளையவிழிப் போரம்புமேற்றித்
தெருவினடந்துமுன்னே சென்று வருசேனை
யீட்டித்தரங்க மடுக்கவெடுத்தவராற்
கூட்டமிட்டவேலைமிசை கொண்டுவரக் காட்டுஞ்
சிலவாளைமுன்னெறுக்கிச் செல்கயத்தினூடே
பலவாம்பரியனந்தம் பாயச் சிலையேந்து

வாரிக்குழலோடங் கோடிவருவார்பொருந்தக்
காரியக்கத்தரணி கண்ணிரம்பச் சேரும்

பனிக்கடல்போற்காணும் பவனிக்குழாத்திற்
றொனித்தமதவணாமேற் றோன்றிக் கனத்த

தடக்கருடனீடுசங்கு சக்கரஞ்சேர்வாளுந்
திடப்படநாகஞ்சுமந்த சீருந் தடுப்பரிய

பொன்னுலவுமார்பிடமும் பூமணந்தபொற்புயமு
மின்னுமரகதம்போன் மெய்யழகு மன்னவனை

மாலாகக்கண்டார் மடந்தையருங்கையெடுத்தார்
மாலாகநானும் வணங்கினேன் மேலாகக்

கையெடுத்துவெள்வளைகள் காப்பாருடுத்ததுகில்
பையநெகிழ்ந்ததனைப் பார்ப்பார்க ளையகோ

கோசிகனுங்காக்கமுறக் கூடநடந்தாய்வனைந்த
கோசிகனுங்காக்கவந்து கூடாயோ மாசிலாக்

கன்னங்கைபார்த்ததிருக் கண்ணாலேயாங்களிரு
கன்னங்கைசேர்க்கில்வந்து காண்பாயோ பொன்னுடனே

கங்கைத்துறையில்வந்து காத்துநின்றாயாம்போன
கங்கைத்துறையில்வந்து காப்பாயோ வங்கருளாற்

சித்திரகூடத்தில்வந்து சேர்ந்தனையேயாமிருக்குஞ்
சித்திரகூடத்தில்வந்து சேராயோ வுத்தமிக்காய்

மானங்கோடாமலுன்னி வைத்தபதமெங்களுக்கு
மானங்கோடாமலிங்கே வாராதோ வானரத்தின்

கோவாலிபாற்றலறக் கோபித்தாயெங்களிரு
கோவாலியாற்றல் குறியாயோ நீவிரும்பி

வாரிக்கணைபுரிந்தாய் மாரனெமக்கெதிராய்
வாரிக்கணைசொரிதன் மாற்றாயோ பேரணியை

யுந்தவிராக்கதப்போ ருந்தொலைத்தாய்வேள்பகழி
யுந்தவிராக்கதப்போ ருந்தொலைப்பா யந்நாட்
கோவியருக்கன்புவந்து கூடினையேமன்மதனைக்
கோவியருக்கன்புகுந்தாற் கூடாயோ மேவியபே
ரம்பலக்கண்மற்றொருத்திக் கன்புசெய்தாயெங்களைவேள்
அம்பலக்கண்செய்வ தறியாயோ வெம்போரில்
ஆதவனைநேமியினு லன்றமைத்தாயாசைகுறி
யாதவனைவெப்ப மடக்காயோ சீதரன்போல்
வந்ததுரையே மருதப்பாவுன்கருத்து
வந்ததுரையெனவே வாய்நெகிழ்ந்தா ரந்தமின்னார்
ஆனனத்தைநோக்கி யருள்புரிந்தானென்முலையும்
பானல்விழித்துடிப்பும் பார்த்தானே நானுந்
துளவமலரல்லவிவன் றூளிவிட்டமாலை
துளவமலவொன்றுசொன்னேன் சற்றே யுளமகிழ்ந்து
பாராழிமுற்றும் பரித்தமருதப்பனென்ற
வோராழிமன்ன னுலாப்போந்தான் றேராழி
யொன்றுனுலக முலாவருவான்மேற்கடலிற்
சென்றான்மடவாருஞ் சென்றார்கள் நின்றேன்
மனதுபரதவித்து மையலினாற்சோர்ந்தேன்
கனதனத்தின்மேற்பசப்புக் கண்டேன் வினவியே
பாங்கியர்களோடிவந்து பார்த்தாரிதேதெனவே
யேங்கியெடுத்தார்மனையி லேகினே னோங்கியபொற்
செப்புத்தனத்தின்முத்தஞ் சேரப்பொரியுமிந்த
வெப்புக்குபசாந்தி வேணுமென்றே செப்பக்
குளிரிவிரித்ததின்மேற் கொண்டுவந்துபோட்டார்
குளிரிதில்லையென் றெழுந்துகொண்டேன் றெளிபனிநீர்
தூவியமைத்தாரதுவுஞ் சூடென்றேன்பின்னுமன்னத்
தூவியமளியின்மேற் றாக்கிவைத்தார் யாவுமெண்ணேன்

குப்பால்விழுந்தேன் கொடுங்கையின்மேற்சேர்த்தொருசங்
குப்பால்கொடுத்தார்நான் கொப்புளித்தே    னப்படியே
யாசையென்றுகண்டுமொரு தப்பரணைசிங்கமுல்லை
வாசமலர்வாங்கிவர வேண்டி    நேசமிகு
மங்கையருக்தூதுசென்றோர் மன்மதனேநீயும்வந்தாய்
செங்கைவளையுந்துகிலுஞ் சென்றிடுமே    யங்கெழுந்த
தானைமடவார்குயிலுந் தாரைநிசிவேழமம்பு
தானைமலர்பேரி சமுத்திரமாம்    யானிருந்த
இக்குச்சிலைமலைபோ லெண்ணிப்படைநடத்தி
யிக்குச்சிலைவளைத்தா யெய்யவந்தாய்    தக்க
வனங்காமுற்றங்கருந்தே னார்மலர்வெப்பாச்சே
யனங்காமுற்றங்கருந்தே னையோ    சினந்துபொரு
மாராவிலைக்கிலையோ மற்றொருவர்நின்களிறு
மாராவிலைக்கிலையோ வாழ்வேனே    போராடுஞ்
சித்தசனவசையுந் தென்றல்குளிர்ந்தென்னுடனே
சித்தசனவசையுந் தீராதே    வித்தனையும்
அங்கசனதந்திரஞ்செய் காட்டியவுன்கூத்தலவோ
வங்கசனதந்திரமா லானேனே    யிங்குனையே
காமாவாவென்றழைக்குங் கார்க்குயிலைக்கூட்டமிடுங்
காமாவாவென்றனிமை கண்டிரங்குஞ்    சோமனையே
கவ்வையிலுட்கொள்ளாமற் கக்கிவிட்டபாம்பையுமென்
கவ்வையிலுட்கொண்டழைத்தாற் காணுமோ    இவ்வையா
மாமுனிவானீள்கடலை வாரியுண்ணத்தென்பொதிய
மாமுனிவாவென்றால் வருவானோ    வாம
வுருவிலியாகவந்தா யுன்கணையாலென்னை
யுருவிலியாக வுடைத்தாய்    செருவிளைக்கில்
உன்கண்ணெதிரோயென் னுள்ளங்களிகூர
நன்கறிந்தமின்னார் நயங்கூர்ந்து    தென்குலவு

தென்னாட்டுராயரண சிங்கமருதப்பதுங்கன்
பொன்னாட்டுமார்பிற் புனைமாலை யின்னாட்
கொடுப்பவுடன்வாங்கிக் கொண்டுவந்தாருன்னைத்
தடுப்பதுவுமிந்தத் தளவே விடுத்துரைக்கில்
ஆடவர்க்குமின்னார்க்கு மாசைவரச்செய்வதுமுன்
னாடவிறலன்றோ வனங்கனே கூடியின்பங்
காட்டுதமையந்திதனைக் காட்டில்விட்டுப்போனநளன்
மீட்டுவரத்தூது விட்டாயே நாட்டிற்
ஜனகிசிறைநீக்கினனுந் தாசரதியென்போன்
மனதுதனினீபுகுந்த வாறே வினவிலுனை
யங்கசனுஞ்சித்தசனு மாமென்பதார்கருத்துந்
துங்கவுடலுங்கலந்து தோன்றியன்றோ வெங்கள்துரைத்
தென்னன்மருதப்பரண சிங்கமெனுமூற்றுமலை
மன்னனெனைமருவி வாழ்வுதர நன்னயங்கூர்
என்மனதுமெங்கோ னிதயமுநீங்காதிருந்து
மன்மதனேவாழி மகிழ்ந்து
வாழிதிருவேங் கடநாதன்மைந்தனென்றும்
வாழிகினாவை மருதப்பன் வாழியவன்
எந்நாளுந்தங்கிளைசூழின்பமெய்தியூற்றுமலைத்
தென்னாடும்வாழி செழித்து

மதனவித்தாரமாலை முற்றிற்று.

உ

கன்றாப்பூர்க்கவிராய ரியற்றிய

# திருவருட்பாமாலை.

பொன்னுமணியும் பொருந்துமருதப்பனுக்கு
மன்னுந்திருவருட்பா மாலைசொல்ல—மின்னுலவு
சங்குசக்கரத்தான் றனிமருகன்றந்திமுகத்
தங்குசக்கரத்தான்காப் பாம்.

## நூல்

மணிகொண்டபொன்மதிலு மாளிகையுஞ்சூழக்
கணிகொண்டராசைக் கனியே பணிகொண்ட
புற்றிடமும்வெள்ளிப் பொருப்பிடமும்பொய்தீர்ந்த
மற்றிடமும்வாழு மறைமுதலே சொற்றெரிந்த
பாவுடையானேவும் பழம்பொருளேபைங்கிளிநே
ராவுடையாளைப்புணரு மாதியே காவிடத்திற்
பொன்னகமுநெடிய புன்னகமுமிரண்டு
பன்னகமும்படைத்த பானுவே யென்னாளும்
நாகசுனையி னனைவார்வினையகற்றி
மாகமுறவைக்கு மகேசனே சாகரத்தி
னுண்மருந்துகொண்மினென வும்பருக்கு மிம்பருக்கு
மண்மருந்துநல்கும் வயித்தியனே தண்மலிந்த
பாதிமதிச்சடையும் பைம்பொற்கிரீடமும்பொற்
றாதவிழ்ந்தகொன்றையும்பூந் தண்டுளவுஞ் சோதிதருஞ்
சங்கக்குழையுந் தனிமகரகுண்டலமுஞ்
செங்கைப்பணிலமொடு தீமழுவுந் தங்குமணிக்

கண்டிகையும்பாம்புங் கௌத்துவமும்பொன்னணியும்
புண்டரிகவீருரியும் பொற்றுகிலுங் கண்டுகண்டு
காரோறுவானிற் கவினிந்திரசாப
நேரோநிமிர்ந்தெழுந்து நின்றதென்ன வாராத
விச்சைதரும்பவள மேன்மலையும்பொன்மலையும்
பச்சைமலையுமுருப் பட்டதென்ன வச்சுதனோர்
பாகமுறலாற் பசுமையொடுசெம்மையிரண்
டாகமுறுஞ்சங்கரநா ராயணனே யோகமுறும்
பொங்கரவஞ்சூழ்ந்திறைஞ்சப் புற்றினிடத்தேயெழுந்த
சங்கரநாராயணனே சம்புவே யெங்கள்குல
தெய்வமெயெவ்வுயிர்க்குந் தீராவினைதீர்க்குஞ்
சைவமேசீராசைச் சங்கரனே பொய்வினையேன்
ஆறுவிடாற் றழைத்தாற்றிருச்செவிக்கங்
கேறுதோவென்றெதிர்நின் றேத்தினே னூறுருங்
கற்றைச்சடையான் கணனுதரிலொருவன்
மற்றைச்சிவன்போல் வடிவாகிப் பொற்றொடையார்
செக்கர்ச்சடையுந் திருநீறுங்கண்டிகையுந்
தொக்கபுயனுன்காய்த் தோன்றியே மிக்க
மூன்றையிட்டவனொன் முன்னுனையாயென்ன
இறையிட்டமாய்நின் றிசைத்தான் றிறையிட்டுப்
பூவேந்தர்போற்றும் புலமைக்கரசான
பாவேந்தர்போற்றும் பலகலையும் நாவேந்து
குன்றாப்புகழான் குவலயமெலாமகிழுங்
கன்றாப்பூர்வாழுங் கவிராச னென்றுதிரு
நாமம்படைத்துடையோ னொனென்றேனத்தனையுந்
தாமம்படைத்தவர்முன் சாற்றவே காமனுடல்
தீயழலாச்செற்றோன் றிருச்செவிகேட்டுக்குழைந்து
கூயவனையிங்கே கொணர்தியெனத் தாயனையான்

ஏவாமுனம்வந் தெனைவாவென்வழைத்துத்
தேவாதிதேவன் றிருக்கொலுவின் மேவும்

அயனொடுமாலிந்திர னு மண்டர்முனிவோருஞ்
சயசயவென்றேத்துஞ் சபையின் முயலும்

நெருக்கொதுக்கிச்சன்னிதியி னேரேநிறுத்த
உருக்கியருட்பாடல் செயலுற்றேன் பொருக்கெனவே

வீழ்ந்தேனெழுந்தேன் விழிநீர்பொழியவடி
தாழ்ந்தேனருளிற் றலைப்பட்டே னாழ்ந்தபணி

பூண்டவனேபோற்றிமண்ணிற் புண்ணியனேபோற்றியென்னை
ஆண்டவனேபோற்றியென வாலித்தே னீண்டசடை

ஆவுடையாள்பங்கா வருட்பார்வைகாட்டியெனைக்
காவுடையாயென்றுகண்ணீர் காட்டினேன் றேவர்க்

கொருவானவனிரங்கி யுன்வரவேதென்று
திருவாய்மலர்ந்தருளிச் செய்தான் பொருவரிய

சோறுடிழந்து தொலையாவிடருழந்து
காறுமலையுங் கடலும்போய் வீணர்தமை

மன்றுசிலைக்காமா மாருக்கொடையாளா
கன்றேவென்றேத்திக் கவிபாடி யென்றும்

வாயுந்தழும்ப மனந்தழும்பவுள்ளங்கா
றேயுந்தனையுந் திரிந்தலுத்துக் காயுங்

கடுங்கலியைமாற்றவொரு கல்வியறிவாரை
யடும்புவியிற்காணு ததனாற் குடும்பமுடன்

சித்திரப்பூவீழுஞ் சிறையளிபோலுள்ளுடைந்து
வத்திரத்துக்கூணிலுக்கும் வாயிழந்து நித்திரைக்கோர்

வீடுமின்றிநெல்லு விதையுமின்றியோருழவு
மாடுமின்றியன்னசுற்ற வாழ்வுமின்றி நாடுமின்றி

வாகனங்களின்றி மணிப்பூடணங்களின்றி
யோகமென்றபாக்கியத்தி லொன்றுமின்றி வேகமுறு

நல்குரவாமென்னுமொரு நச்சரவின்வாயினிற்பட்
டொல்குமொருதேரையென வுள்ளுடைந்து பல்குமுயிர்
எல்லாம்படைத்தளிக்கு மெம்பிரான்றஞ்சமினி
அல்லாதொன்றில்லையென வாய்ந்தறிந்து பொல்லாமை
ஆறாததுன்ப மறிக்கையிடவந்தேனின்
றோர்விண்ணப்பமென வேத்தினேன் பேறான
பூதியணிசோதிசற்றே புன்முறுவல்காட்டியென்ன
சேதிசொல்லவந்தாய் சிறுபிள்ளாய் மேதினியில்
ஆற்றுப்பெருக்கி லமிழ்ந்தோனையக்கரையி
லேற்றிநமைவிடுமென் றெண்ணுதல்போற் றேற்றமில்லா
திங்குளைக்குநின்குறைநா மெண்ணிநினைந்தோமினிநீ
நங்குறைகேளென்று நவிலலுற்றார் பங்கமில்லா
நூலாடைகொண்டுடுக்க நுண்பொருளில்லாதுபுலித்
தோலாடைகொண்டரையிற் சுற்றினோ மேலான
வாகனங்களின்றி மறுகிடையிலேகிடந்த
ஏகரியமாற்காளை யேறினோ மோகவெரு
தொன்றினுடனேகூட வொற்றையின்றிமைத்துனனைப்
பன்றியுருவாக்கியன்று பாருழுதோஞ் சென்றிருக்க
மற்றிடமுமின்றி மனையுங்கிடையாமற்
புற்றிடத்திற்போந்துகுடி புக்கிருந்தோங் கற்றறிந்து
மிச்சைபடித்து மிடுவார்முகம்பார்த்துப்
பிச்சையெடுத்துப் பிழைக்கின்றோம் பிச்சையையும்
வீட்டிவிருந்துண்ணவொரு வெண்கலமில்லாதுதலை
யோட்டிலிரந்துண்டோமீ துண்மைகாண் கூட்டியெடுத்
தேவுடையாரிட்ட விருநாழிநெல்லையுநம்
மாவுடையாளுக்கென் றளந்துவிட்டோம் மாவுடைக்கு
அந்தவிருநாழிநெற்கொண் டாற்றுமோபிள்ளைகளின்
மூத்தவொருவன் முழுவயிறன் பிந்தும்

ஒருவன் கடம்ப னொருவர்சொல்லுங்கேளான்
சொருவன்றகப்பன் சுவாமி பெருகுடனே
வெண்ணையுண்டும்பாலையுண்டு மெத்தவுண்ணக்கிட்டாமன்
மண்ணையுண்டானங்கவனென் மைத்துனன்காணுண்ணவொண்
சேடமேதேனும்பசித்தாற் றின்னாததில்லையென [ணாச்
வேடனெச்சிலூனை விரும்பினோங் கூடலிலே
பிட்டுக்குவேண்டிப் பெருங்கூலியாளாய்மண்
கொட்டிச்சுமந்து குறைபட்டோங் கட்டும்
விறகெடுத்தும்புல்லெடுத்தும் வேலைகிடையாமற்
பிறகெடுத்தகோலமிது பிள்ளாய் உறவாகச்
சேர்வாதபித்த சிலேட்டுமத்தினுற்றிடுநோய்க்
காரும்வைத்தியரு ராயினோம் நேராகக்
காட்டுமருந்துங் கடைமருந்துங்கைமருந்து
நாட்டுமருந்துந்தேடி நாந்திரியோம் வாட்டமறக்
கண்டிதமாய்ச்செய்யுங் கவியறியோம்புற்றுமண்ணென்
றுண்டதனையாங்கே யுவந்தெடுத்தே யுண்டை
அரைத்தரைத்துக்கைசலிப்ப தாவுடைக்குவேலை
யுரைத்தொழுக்கவேலை நமக்குண்டே யுரைத்துணநாம்
மண்ணைக்கொடுக்கினுங்கை வாசியுண்டென்பாரதனாற்
புண்ணைப்புரைகளையும் போக்குவிப்போம் உண்ணவும்வே
றாதியமில்லாதா வுடையாளுநாமுமறப்
பாதியுடம்பானோம் பசுமைகாண் மேதினியில்
இப்படிநஞ்செய்திகளென் றெண்ணமெலம்மிடத்தி
லெப்படிநீவந்தா யெனவுரைத்தார் முப்படிக்குந்
தோற்றிவித்துங்காத்துந் துடைத்துந்தொழின்மூன்று
மாற்றிவிக்குமற்புதமே யையனே நாற்றிசைக்கும்
நின்னையன்றிவேறு நினைவுண்டோபாலகருக்
கன்னையன்றிவேறோ ரறிவுண்டோ முன்னமே

பண்டிதனுமென்றீர் பசிப்பிணிக்குநீரெனக்கோ
ருண்டைமருந்தேனு முதவீர்    துண்டப்
பிறைமுடித்தவேணிப் பிரானேயடியேன்
குறைமுடிப்பீரென்றுபற்றிக் கொண்டேன்    றுறைபடித்த

வண்மைத்தமிழ்ப்புலவா வாராயினியுனக்கோ
ருண்மைத்திரமொன் றுரைசெய்வோந்    திண்மை
வறுமைப்பிணிக்கு மருந்தொன்றுகண்டோஞ்
சிறுமைப்படாததனைச் செய்வா    யுறுதியினாற்

சொல்லுந்திரமுந் துணிந்துநினைந்தாலதுவே
வெல்லும்பலனை விரும்பாதே    யெல்லையில்லா
மெய்த்தொண்டர்நந்தமக்கு வேண்டியபேருண்டதிலு
முத்தமனன்னூலி னொழுக்கத்தான்    சுத்தன்

ஒருவனுண்டுகண்டதவ னூருமிசைப்பேருஞ்
சொருவமடையாளஞ் சொல்லக்கேள்    பெருகுதமிழ்க்
கற்றோர்க்கருள்வான் கனன்றோர்க்கிடியேறு
மற்றோர்க்குச்சாந்தகுண மார்க்கண்ட    னூற்றறந்

குருத்துவருமன்ன ருரநதுணித்துவாகை
பரித்தரணவீர பத்ரன்    றரித்த
சிலையால்விசையன் றிறலினால்வீமன்
மலைபோற்றிராணிவிக்ர மார்க்க    னிலைதவறா

நீதிக்குச்சோழ னிதிக்குக்குபேரன்மிக்க
வாதிக்கவாழ்வுக் கமரர்கோ    னோதை
வருதமிழ்க்குக்கும்பன் வாத்தியத்தினந்தி
பரதத்தினில்வழுதி பார்மே    லுரவும்

அறிவுக்குச்சேட னருள்கொடைக்குக்கன்னன்
பொறுமைக்குப்பூமிநல்ல புண்யன்    பிறிதிலவாய்
வாய்க்குமெழிற்குவேள் வாய்மைக்கரிச்சந்த்ர
னாக்கினையிற்சுக்கிரீ பன்னதுலன்    பாக்கியவான்

பத்தியிற்கண்ணப்பன் பரிக்குநகுலன்மன
வுந்திக்குப்போச னுதாரவா னெத்திசைக்கும்
பூண்டபுகழான் புருடோத்தமன்சிவத்தப்
பாண்டியனுக்குக்கருத்தப் பாண்டியனாங் கூண்டபடைக்
கொண்டையங்கோட்டைக்கதிபன் கொற்றக்குடைநிழற்கீழ்
மண்டலமெலாம்புரக்கு மானபரன் தெண்டிரைக்குள்
நாற்றிசைப்பூமிக்குநடு நாயகம்போலத்துலங்கு
மூற்றுமலைக்கதிபமே னோர்வேந்தன் சாற்றுந்
திரகுணராமனெனுந் தென்னாட்டுராய
வரகுணராம வசீரன் சரதமுறும்
ஞானவான்வீரா நவநீதகிருஷ்ணருக்கு
வானமுறத்தூவி வளைகோயி ருனமைத்துத்
தாங்குபுகழாற்சுந் தரபாண்டியபுரத்து
ராங்குபிரமாலயஞ்செய் யன்பினன் பாங்காய்
நமக்குமறைக்கட்டளைந டாத்தினனென்றொண்டர்
தமக்குமுரிய சகாயன் அமர்க்குள்
அடையலரைச்சீறும்பொரு ராமாவதாரன்
மடலவிழுமுல்லையணி மார்பன் வடமேருக்
கோட்டினிற்செண்டுங்கயலுங் கூர்ந்தவனைகடியுங்
கீட்டுமபிராம செயதுங்க னாட்டிற்
றிருடக்கொடியவரைச் சீறனுமடாலுங்
கருடக்கொடியுமுயர் கண்ணன் செருவின்
மருவாரைவென்றுவென்று வாகையணிவா
னரியனற்சேனை யணியான் றெரிதமிழை
நாட்டுவான்றென்பாண்டி நாட்டான்கவிவாணர்
வாட்டமுடிப்பான் மணிமுடியா னாட்டைப்
பரிப்பான்கவனப் பரியானென்னனை
யரிப்பானெவர்க்கு மரியா னிரப்போர்க்குத்

தங்கந்தருவான் றயங்குமுல்லையந்தாரான்
பொங்குதமிழ்க்கற்றூன் புயக்கல்லா ணங்குதுட்டர்
வீறுபரிகரிப்பான் வெங்கரியான்தென்னர்குல
மாறனவன்விக்ர மார்க்கனே கூறரிய
பொன்னாட்டுவேந்தனெனப் பூவுலகெல்லாம்புரக்குந்
தென்னாட்டுராயதுரைச் சீவலவன் முன்னோன்
றருமத்தாற்பெற்றெடுத்த சந்ததிமாரீசன்
மருமத்தோரம்புதொட்ட வள்ளல் தருவாருஞ்
செங்கைவடப்பிள்ளை சிதம்பரநாதன்செயமா
தங்கனிராசநா ராயணமால் கொங்கலருந்
தாமன்வடமலைவேள் சங்கரமூர்த்திக்குரிசில்
வீமனையபெல வீரப்ப னமிவனை
மெய்த்துணையாய்க்கொண்டமுகில் வெள்ளைமருதப்பனைவா
ளுய்த்தமழைக்கையா னுடையானை மெய்த்த
அரியவனைராசைமரு தப்பனைப்பண்பாகந்
தெரியச்சிதம்பரத்தைச் சிந்தைக் குரியவைவர்
தூதுவனுங்கந்த சுவாமியையும்பார்புகழ
மாதுலனாகப்படைத்த மன்னர்கோன் மோதினர்மேற்
சீறிந்திரத்தலைவ தீரனையெட்டுத்திசைக்கு
மீறுபுகழ்க்குற்றால வேளையிசை கூறும்
வடக்காத்தான்பூலியைமா மால்சாளுவனைத்
திடத்தமருதப்பனைச்செம் பொன்னா ளிடத்துக்
குரியசரவணையை யோங்குபுலவ
னரியவனையரசை யஞ்சாத் தரியலரை
வென்றதிறற்சங்கரனை வேந்தனுடையானை
மன்றன்முல்லைத்தாரழகு மன்னவனைத் துன்றுபுகழ்ச்
சீவலவனைத்திறல்சேர் சிங்கமிருளப்பனையு
மாவலுறுமைத்துனரொன் றுங்குறைப்போன் காவலைய

கையான்றிருவேங் கடநாதனைக்கமலச்
செய்யாள்சேர்சீவலவ சிங்கேற்றை யொய்யார
மாலானதிரு மலைக்கொழுந்தைச்சீவலவ
கோலாகலனைக் குவலயத்தின் மேலான
மைந்தனெனப்பெற்ற மருதப்பராசேந்த்ர
சந்த்ரகுலதிலக சன்மார்க்க னிந்த்ர
தருவாய்க்கிளைகள்சத்த சாகரம்போற்சூழ
மருவுமருதப்ப வசீர னிருபரொடு
தேசமன்னர்போற்றிச் செயசெயவெனக்கொலுச்சிங்
காசனத்தில்வீற்றிருப்பா னவ்வேளை பேசுதமிழ்
வாணீசென்றிந்த வாறுரைத்தானின்கவியைக்
காணுமென்றோதிக் கடாட்சித்தான் பூணுக
மேந்துசடையானை யெம்பெருமானைச்சிவனைச்
சாந்தமதிகங்கை தரித்தானை யாய்ந்தசிவ
சங்கரனைராசைத் தனிப்பொருளையாவுடையாள்
பங்கரனைத்தெண்டனிட்டன் பாகவே யங்கருளிச்
செய்தபடிக்குன் றிருக்கொலுவின்முன்வந்தேன்
வெய்யகலியிருட்போய் விட்டதே யையனே
ஆசுமதுரஞ்சித்ர வித்தாரமுமாகப்
பேசுதமிழ்க்கும்பா பிரபலா வீசுகலைத்
தண்மதிநேர்கொற்றத் தனிக்கவிகையொன்றிலிந்த
மண்ணுலகெலாம்புரக்கு மன்னவா கொண்மூவுடன்
மூதண்டகூட முகடிடியநாணெறிந்த
கோதண்டராம குணசீலா வோது
பரதகவிபாடி பராக்கிரமசாலி
சரசவனுராகசுர தாணீ பராசர்
சிங்களரீழர் தெலுங்கர்கருநாடர்
வங்களர்சீனர் மலையாளர் வங்கநாட்

டாதியர்குச்சிலிய ரங்கர்மராடர்சீர்ச்
சேதியர்சோனகர் சேகதரு    மேதினியிற்
கப்பங்குவித்துக் கனகமுடிதாழ்ப்ப
வொப்பஞ்செலுத்தியர சோங்கியவா    செப்பரிதா
மேவுமகஞ்சேர மிகவுமறம்பெற்றதனாற்
றேவர்குழாநெருங்குஞ் செய்கையாற்    றூவில்
பெருவாலிபத்திலுயர் பெட்பினாலென்று
முருவசிகரஞ்சே ருவப்பாற்    பிரபுவாய்
மானமுறுதலினால் வச்சிரமெய்தாங்குகையா
லானநிதியஞ்சுகமு மார்வதினால்    வானமரும்
பொன்னாடினஞ்சேர் பொலிவினாலேயுயர்ந்த
வின்னாட்டின்மேவியதெய் வேந்திரா    முன்னாங்
குறிக்காறருந்தேர் குணமதியமைச்சுஞ்
சிறக்குங்கிளைமேற் செழிக்க    வுறுக்கினால்
அஞ்சலருங்கைக்குவச மாய்க்கடற்பேரி
மிஞ்சமுழங்க வியப்புற்றுச்    செஞ்சொற்
றிருவேங்கடநாதன் சேயாகுகையால்
மருவியசொரூப மதனா    தெரியு
மனத்தொகைமேலாகி மானிடத்தோர்க்கன்பாய்க்
கனத்தருமைகாட்டுங் களிப்பால்    வனத்தார்பாற்
பொன்னாட்டியமிலங்கும் பொற்பினாற்கானவழி
மின்னாள்கரம்பிடிக்கும் வேட்கையாற்    றுன்னுவான்
மீறிவருங்கார்த்திகைத்தாய் மிக்கதனங்கொண்டவர்க்கு
மாறுதலைபெற் றருள்வதாற்    கூறும்
பரமனருளுவந்து பார்த்தனாநீயென்னத்
தருமந்திரம்பெற்ற தாலே    யருட்கந்தா
ஆர்க்கும்படியளந்தே யாழிவளைபூண்டதனாற்
றீர்க்கமுடனூற்றுமலை சேர்வதனாற்    பார்க்க

மருக்கஞ்சநான்முகத்தார் வந்தேத்துவதாற்
றிருப்பெருகுமார்பச் செயலாற் பெருத்தவனை
வானவரைக்காக்கும் வண்புகழாற்சீதரா
வானகிளுவைவகக ராதிபா மீனவா
தென்னாட்டுராயதுரைச் சீவலவராசேந்த்ரா
மன்னாவிற்பன்னா மருதப்பா கன்னா
திருமருவுபட்டாபி டேகாதிபத்ய
துருவமருதப்ப சுவாமீ யிருகால்
வளைத்தசிலைவாங்கி மராமரமேழுந்
துளைத்தமருதப்ப சுவாமீ திளைத்துக்
கடுத்தலையால்மோதுங் கடல்சுவறவாளி
தொடுத்தமருதப்ப சுவாமீ யடுத்துத்
தணிப்பரியகோபந் தருதாடகைமே
றுணித்தமருதப்ப சுவாமீ பணிப்பை
திகைக்கவிடங்கக்கத் தேவிமார்கெஞ்சத்
துகைக்குமருதப்ப சுவாமீ பகைப்பாய்ப்
பரிந்தவிலங்கேசன் பதைபதைக்கவாளி
சொரிந்தமருதப்ப சுவாமீ தெரிந்து
கரந்தளையையுண்டாயர் கன்னியர்மேலன்பு
சுரந்தமருதப்ப சுவாமீ நிரந்து
குமுகுமெனுங்கன்மழைக்காய்க் குன்றெடுத்தேகாத்த
சுமுகமருதப்ப சுவாமீ சமுகா
நிருபரடிபரவு நித்தியகல்யாண
சொருபமருதப்ப சுவாமீ மருவா
ரவசமுறத்தாக்கு மனுமகருடத்
துவசமருதப்ப சுவாமீ தவமா
ரனகாவபையா வதுலாவழிவா
சனகாபரவு தமிழா கனகா

விதுராவமரில் விசையாகுலவு
சதுராங்கரில் சமுகா    துதிசே
ரகளங்கதுங்க வபங்கசுகந்த
நிகளங்களைந்த வுடநேரார்    துகளாகச்
சீறிநடவுபத சிந்துராபஞ்சகதி
யீறுதுரங்க விபூஷணா    வேறனையச்
சங்கிராமகெம்பீரா சாதராபூதரா
துங்கசெயவுத்தண்ட தோர்த்தண்டா    சிங்காரர்
மட்டார்மூலைத்தாமா வாணர்தமதுசொன்னக்
கொட்டாரமேகருணைக் குன்றமே    சிட்டர்மகிழ்
கத்தாவிரும்பிக் கவிமாலைகொண்டெனக்குச்
சத்தாங்கமுங்கொடுத்த தாருவே    சித்தசனைக்
காய்ந்தநுதற்கண்ணனைக் கங்கைதரித்தானை
யாய்ந்தசதுர்வேதத் தரும்பொருளை    வாய்ந்தயன்மால்
சாற்றியின்னந்தேடரிய சங்கரனைக்கண்டுதினம்
போற்றுமருதப்ப பூபாலா    நாற்றிசைக்கு
முன்னம்புகழாளா வுன்கிளையோடென்னாளு
மன்னிமிகவாழி மகிழ்ந்து

திருவருட்பாமாலை முற்றும்.

உ

கன்றாப்பூர்க்கவிராய ரியற்றிய

# வனசவிடு தூது.

பூமன்னுங்கீர்த்தி பொருந்துநவநீதகிருட்ண
சோமன்வனசவிடு தூதுக்கே—மாமன்னுங்
கும்பவளவாரணவுங் கொங்கையுமைமங்கைதரு
கம்பவளவாரணமே காப்பு.

## நூல்.

சீர்பூத்தநீராழிச் செம்பொற்றுகிற்புவிமான்
தார்பூத்ததிண்புயமேற் சார்ந்திலங்க வேர்பூத்த
பூமான்றயிரியமான் போர்விசையமான்கொடைமா
னாமான்சந்தானமா னற்கருணை மாமான்
உரமுமுளமு மொளிர்வாளிடையுங்
கரமுநாவும்வயிறுங் கண்ணுந் திரமான
தானமெனமேவித் தழைத்தோங்கவாழ்பிரபல
மானபரன்கீர்த்தி மகராசன் கானலருஞ்
செண்டையங்கோட்டைப்பொருவி சித்ரமூலையார்மதனன்
கொண்டையங்கோட்டைக் குலதீபன் மண்டலிகர்
தெண்டனிடவந்த செழுங்கமலபாதனெழு
மண்டலமெலாம்புகழு மார்க்கண்டன் கொண்டலெனுந்
தென்னாட்டிராயதுரைச் சீவலவராசேந்த்ர
கன்னாவுதாரனருள் கண்மணியா மென்னவே

வந்தநவநீதகிருட்ண மன்னன்மலர்முகம்போற்
சந்ததமுமேமலர்பூந் தாமரையே கந்தடரச்
சீர்மருவுமுண்டகமே சேர்துதிக்கைபெற்றதனும்
பார்புகழுமைங்கரனேர் பங்கயமே பேர்பெறவே
வேலைமிசையோங்கி மிகவளிசேர்ந்தேயுயர்ந்த
மாவிரவிநாடிவளர் வண்குகனே கோலமிக
வானம்பொருந்த வளக்கயமேலோங்குதலான்
மேனகையேசேர்ந்தருடெய் வேந்திரனே யீனமகல்
தண்ணம்பருகனலஞ் சார்ந்தமர்ந்துமாதவத்தின்
கண்ணலரவந்த கதாக்கினியே திண்ணமா
யென்றுமேபாசக் கரமிசையவோங்குமட
றுன்றியதான்மிக்காய்த் துதிதருமா வன்றியே
முன்னரவாகனமே லோங்குமுறைமையினு
மின்னிலம்போற்றுமிருத ரேசனே மன்னியே
ஆழுங்கடலு ளமர்ந்துமகரஞ்சேர்ந்து
வாழுங்கருணை வருணனே தாழ்வில்லா
வட்டதிக்குள்ளோரு மமர்ந்துதொழிலியற்ற
வட்டமிட்டுலாவிவரும் வாயுவே யிட்டமிகப்
பொன்னைவைத்தேயெந்நாளும் புட்பகமானத்தேகும்
தன்னிகரில்லாததன பதியே மன்னும்
பொடியணிந்துபாசடையும் பூண்டுகடுக்கொண்ட
வடிவுடையீசான மகேசா வடைவுடனே
தண்டகமமைத்துநன்னூற் சங்கமிசைந்தேயோங்க
வண்டமிழ்தேர்தந்தகும்ப மாமுனியே மண்டலத்திற்
சேதகமேவைத்துத் திகழும்பொகுட்டுடைத்துப்
போதவனமேவும் புணரியே மோதத்
தளங்கொண்டுமட்டுடைத்துத் தாரணியிலோங்கி
வளங்கொண்டமர்ந்தருள் கோமானே துளவணிமால்

கைகண்முகமுரம்வாய் காலுந்திநின்வண்ணச்
செய்கையெனப்போர்புனைந்து சென்மித்துந் தையலெனு
மிந்திரையைச்சேர்ந்துமண தின்புறவேமார்பில்வைத்தா
னந்தலில்லாதுன்மீது நாட்டமே சந்ததமும்

பண்டரனார்பொன்னடியைப் பாதாம்புயமெனவே
மண்டலமெலாம்புகலும் வண்மைதனைக் கண்டுகண்டு
வேதனுடன்வாதாடி வெண்பன்றிரூபமுற்றே
மாதனையையெல்லாம் வலிதிடந்தான் சாதகமாய்
வேலையதுவெனவே வேலைகடைந்ததுவு
மாலையமாய்நீயிருக்கு மத்தலமென் றேலமன
துள்ளுறவேயெண்ணியன்பா யோங்குபுகழ்சேர்ந்தவுனை
மெள்ளவசஞ்செய்ய வேணுமென்றே பள்ள

நடுக்கடலுளொந்தெந்த நாளுமறிவோடும்
படுத்துறங்குகின்றதெண்ணிப் பார்க்கி லடுத்தடுத்துன்
னாலேயுனைக்கவர வாரும்வருவாரெனவுன்
மேலேயிருக்கும் விருப்பன்றோ சேலாயுட்
டேடியுங்காணா திருக்குஞ் செய்கையறிந்தும்பர்மிசை
யோடியுதித்தா னுபேந்திரனென நாடியே
என்றுமுனைக்காணாதா லேயுமலர்வாவிமிசை
சென்றுவண்டுரூபமுற்றே தேடுகின்றான் துன்றுதிரத்

துங்கநெடுமால்செய்கை சொன்னேனுன்மேல்விருப்பாற்
சங்கமணிக்குழைவேய் சங்கரனும் அங்குமிகு
முன்னிடத்தினுற்பவித்த லாற்சேர்ந்துமையவட்குத்
தன்னுடலிற்பாதிசரி யாயளித்தான் பின்னும்
அரவமுயர்வானத் தம்புலிவெண்கங்கை
சிரசமிசைபுனையுஞ் செய்கை யுரைசெயுங்கால்
வாய்ந்தேநிரைநிரையாய் வைத்துவைத்துப்பார்க்கிலது
வேய்ந்தவரவிந்தமென்பே ரெய்தல்கண்டே யாய்ந்திடவே

உன்னுமந்தன்னிலெழுத் தொன்றுகுறைந்தாலுமது
நன்னகரீகமுள்ள நாமமென்றே முன்னோர்
உரையையுணர்ந்தமறை யுத்தமர்கொண்டாட
மரையைமலர்க்கரத்தில் வைத்தான் வரையா
தனனுருவமாகியன லாடியனலேந்தி
யனலேவிழியா யமைத்துங் கனவிறகு
பொன்முடிமேல்வைத்ததுவும் பூதலத்துளோர்புகழு
முன்முளரிநாம வுவப்பன்றோ நன்மைதரும்
புண்டரிகமென்னும் பெயர்புனைதலாற்புலித்தோல்
கொண்டனன்றனுள்ளமகிழ் கூரவே விண்டுவுமோ
ரம்புயப்பூவென்னவுமே யன்றிரத்தக்கண்சாத்தப்
பம்புதிகிரிப்படையைப் பாலித்தார் நம்பியுன்னால்த்
துன்றுகாட்டானையொன்று தூய்பூசைசெய்தவினு
லென்றுமயிராபதமா யெய்தவைத்தார் அன்றிக்
கனகசபைரத்ன சபைகருணைமேவு
மனகரசதசபை யாரு மனதுமகிழ்
சித்ரசபைதாம்ப்ரசபை யென்றுசெய்துசிந்தையுட
னித்தநித்தஞ்செய்யுமன நேயமெல்லாந் துத்தியமாங்
கஞ்சமென்றுன்பேர்புனையுங் கைத்தாளக்கானரச
புஞ்சமதைக்கேட்கும் பொருட்டன்றோ எஞ்சவில்லாச்
சேதுத்தலமகலாச் செய்கையுமேபார்க்கிலுன்றன்
மீதுற்றகாதல் விளைவன்றோ ஈதலால்
ஏனுஞ்சராசரங்க ளெல்லாம்படைத்தருளி
நாலுமுகமேவிவளர் நாயகனுஞ் சாலவே
அம்புயத்திலுற்பவித்து மம்புயப்பொற்றார்தரித்து
மம்புயனென்றேபே ரணிந்தணிந்துஞ் சொம்புபெறும்
உன்மேல்விருப்பதனு லுன்னிடத்திலோங்கிவளர்
மின்மேல்மனங்கருதி மேவிமறைச் சொன்மேவு

துய்யசதுர்வேதந் துதித்துயருநன்றாவிற்
றையலினைவைத்திருந்தான் சந்ததமு மெய்யதன்றி
இந்திரனுநீடுசெல்வ மெய்தியும்பரேசனென
வைந்தருவினீழ லமர்ந்தோங்கிச் சந்த
அயிராணிதோள்சேர்ந் தமரரெல்லாம்போற்ற
அயிராபதநடவி யன்பாய்ச் செயிர்தீர்ந்த
பொற்படியைநாளும் புரந்துயர்ச்சிபெற்றதெல்லாம்
பற்பநிதியாமுனைச்சேர் பாக்கியமே மற்கடனுட்
சேனுருவங்கொண்டலைந்து தேடியுனைக்காணாத
தானுருகுகாத லறுமுகனும் வேலதனாற்
றுன்னியநீரெல்லாஞ் சுவற்றியுமேகாணாதா
வின்னமலைவா யிருக்கின்றான் பின்னையுமோ
உற்றபுண்டரீகமென வோதலாற்றும்பியுருப்
பெற்றலவோகற்றான் பிரணவமே மற்றுமே
புண்டரிகமென்னும் புலிக்கால்படைத்தவினாற்
பண்டுலகிலோர்முனிதான் பல்காலும் அண்டர்
வரிசையுடன்போற்ற மகேசநடன
தெரிசனமேகண்டிருந்த செய்கை பரிவுடனே
ஏற்றரியபுண்டரிக மென்னலாலோராளை
தோற்றரியதிக்கைச் சுமந்ததே ஆற்றன்மிகப்
பொற்புடைநின்பேர்பூண் புலித்துவசம்பெற்றன்றோ
மற்புவியாண்டானோர் வளவனே அற்புதமாம்
நின்னாலர்ச்சித்த நெறியாற்கராப்பகைதீர்ந்
தன்னட்கதிபடைத்த தாமபமே தன்னாலே
அன்றரன்மலர்ப்பதத்தி லன்பாயோர்ஞெண்டருளே
துன்றவுன்னையர்ச்சித்த சூழ்ச்சியா லென்றென்றுந்
தேடியுமாற்கெட்டாத சென்னியிடமேகுடியாய்
நாடியிருந்தின்பசுக நாட்டியதே பீடுபெற

மூவர்முதலாய முப்பத்துமுக்கோடி
தேவர்முனிவோர் சிறந்தோர்க ளியாவர்களும்
பொற்பார்தவம்புரிந்து பூசனைசெய்பேறுபெறல்
பற்பாசனத்தின் பதிவன்றோ வுற்பனமாம்
ஆறாதாரத்தி னமர்ந்ததேவாலயமும்
பேறானபூங்கமல பீடமன்றோ வீறான
மந்திரமெல்லாங்கமல வட்டத்துள்ளேபதிந்த
வெந்திரத்துமிட்டசித்தி யெய்தியதே சுந்தரஞ்சேர்
பாத்தன்சுயோதனன்றன் பாரதப்போர்வென்றதுவு
மேத்துபற்பயூகம்வளர்த் தேயன்றோ தோத்திரமாய்
மாணிக்கத்துக்கு மறுவுண்டோவென்றேதா
னாணித்தரமா யறைகுவதும் பேணித்
தவுத்தியஞ்சேர்மாமணியிற் றானதிகமென்னக்
கவுத்துவரத்தினத்தைக் கண்ணன் பவித்திரமாய்ப்
பூண்பதுவுமுன்பேர் புனைபத்மராகமென
மாண்புபெறவந்த மகத்துவமே சேண்பரவு
காரூர்சிகரக் கமலாலயமெனலா
லாரூர்பிறக்கமுத்தி யானதே சீரூருந்
தேனேய்பொற்றாமரையே சேரலாற்றென்மதுரை
தானேபிறக்கமுத்தி தங்கியதே வானேசால்
அண்ணாமலையைநினைந் தார்க்குடனேமுத்தியென்று
பண்ணாரும்வேதம் பயின்றதெல்லாம் அண்ணல்
முளரியெனுமுன்பேர் மொழியுமழலின்
வளமைமிகுரூபமுற்ற மாண்பே யுளமாய்த்
தெரிசிக்குமுத்தி சிதம்பரமாமென்றே
வரிசையுடனேயுரைக்கும் வாய்மை பரிவுடனே
புண்டரிகபுரமென் றுன்பேர்புனைதலினா
லண்டர்புகழ்த்தலமிக் காச்சுதே பண்டுமே

மாசில்கமலமமர் வண்கங்கைசேர்தலினாற்
காசியிறக்கமுத்தி காட்டியதே தேசிலகு
பூவதெனவுன்பேர் புனைதலாற்பூமியென
வாவலுடன்வந்தே யவதரித்து மேவு
கடலதனைநீதோன்றுங் காரணத்தாலன்றோ
புடவையெனப்பார்மகளும் போர்த்தாள் திடமாகச்
செஞ்சக்கலைக்யான தேசிகராமென்றேத்தப்
பஞ்சலக்ஷணந்தோர்ந்த பண்புடையோர் மிஞ்சத்
தசப்பொருத்தந்தன்னில்முன்பு சார்மங்கலமா
நிசப்பொருத்தந்தன்னைவைத்த நீர்மை யிசைக்குங்கா
லோகைதரும்பூவென் றுரைக்குமுன்பேர்மங்கல்ச்சொல்
வாகைபெறத்தோன்று மகிமையே கோகனகப்
பேரெழுத்திலோரெழுத்துப் போர்த்திடினும்பேர்கனக
மீரெழுத்துப்போர்த்திடினு மோர்வரையாஞ் சீரெழுத்து
மூன்றெழுத்துப்போர்த்திடினு மொய்த்தநீராமுன்பேர்
தோன்றெழுத்தெல்லாமேற் சுபவெழுத்தென் றூன்ற
கனகமயவாடைகொண்டான் கண்ணனெற்றிக்கண்ணன்
கனகசபைகொண்டாடிக் கைவிற் கனகவரை
கொண்டான்மலையைக் குறித்துக்குடியிருந்து
கொண்டார்சிவன்மால் குகன்முதலோர் கொண்டலுடன்
பூதலத்தைத்தாங்கியபொற் பூதரமாய்ப்பூச்சக்ர
பூதரமாயட்டகுல பூதரமா யோதுமுன்பேர்
நன்னீர்தலைசுமந்தா னரிபாகன்றிருமான்
முன்னீர்த்துயின்றான் முருகவேள் சொன்னீர்மை
போற்றுஞ்சரவணப்பூம் பொய்கைதனிலேவளர்ந்து
மாற்றுறுவேலையலை வாயுகந்தான் தோற்றங்
கமலமென்றுன்பேர்படைத்த காரணத்தாலன்றோ
வமலநதியாய்வேலை யாகி விமல

அரியரப்பிரமாதியர்க ளாறுகாலத்து
முரியவபிடேக மூவந்துங் கிரியைமிகுந்
தானமுதற்றற்பணமுஞ் சந்தியாவந்தனமு
ஞானமிகச்செய்துகதி நண்ணியது மானதனால்
நீரின்றமையா தொழுக்கெனின்யார்யார்க்கும்
வாரினின்றமையா தொழுக்கென்று பேர்பெரிய
வள்ளுவனார்முன்புதெய்வ வாக்கால்வளமைபெற
விள்ளுவதுநின்னும மேன்மையே எள்ளலின்றித்
தாரணியோர்கொண்டாடத் தானேயுயர்ச்சிபெற்ற
வேரணிசெம்பொன்னு மிரசதமுஞ் சீரணியும்
உன்றன்பெயர்புனையு முள்ளத்தாலோகையுட
னன்றுமுதலின்றளவு மம்புவியிற் சென்றுசென்று
தன்னுடலெல்லாமிளைத்துத் தட்டுண்டுதானுலைவாய்
மின்னியவெண்சாம்பர் மெய்பூசிப் பன்னுசிகை
அக்கினியினுப்ப ணடங்கியடைவாயிருந்து
மிக்கவுடல்கருக மெய்யன்பாய் நெக்குநெக்கா
வுள்ளுடைந்துநெஞ்ச முருகியுருகிக்கசிந்து
துள்ளுகரங்குவித்துச் சொற்பகரா தெள்ளலின்றி
மேலாந்தவம்புரிந்து மேவுகளங்கமற்றுக்
கோலாகலமாங் குவலயத்தின் பாலாய
ஆதிக்கமன்ன ரனுதினமுங்கையெடுப்பச்
சோதிக்கமலமெனத் தோன்றியே போத
அடைக்காய்தாம்பூல மணிபணிபொன்னுடை
கொடைக்காரணத்துதவுங் கோவே திடப்பெரிய
பார்க்குளுனக்குப் பகையாய்வந்துற்றதினு
லூர்க்குளலைபட் டுடல்கோடித் தீர்க்கமா
யெந்தவுலகு மெருவிட்டெறிந்திடவே
சந்தமுந்தேய்ந்திடைந்தான் சந்திரனே சிந்தையுற

ஆதிமுதலுன்னை யனுசரித்ததாலிரவி
சோதிவலக்கண்ணாகத் தோன்றியே மேதினியி
லந்தணரோயாதி யறிஞோர்சிவார்ச்சனைக்கு
முந்தியபூசை முறைமுடித்துச் சந்தியந்தி
நாடியருக்கியங்க ணல்கித்தொழுதேத்த
நீடியமேன்மை நிலைபெற்றான் தேடியே
நேசமுடனின்மணியா னீடுசெபம்பண்ணியன்றோ
பேசுமறையோர்கள்கதி பெற்றதே மாசில்லா
வுன்னுடையநன்னூலா லோங்குசிவாலயத்தில்
மன்னுந்திருவிளக்கு வைத்தார்க்குத் துன்னு
சரியைகிரியாயோகத் தன்னிலைக்குமேலா
யுரிதாமெஞ்ஞானமு முண்டாமே வரிசையினு
லோர்விளக்குவைக்கிலதற் கோராயிரம்விளக்குச்
சார்புறவேவைத்தபலன் றானுறுமே பேர்சேர்
உருவிலியாங்காலானை யோர்புருடனென்ன
விருபுவனத்தோர்வணங்கி யேத்த விருதுநல்கிக்
கையம்பாய்நீநின்று காமநலங்காட்டி
வையம்படைத்த மகிமையோய் மெய்யாய்த்
திரமுறவேதிட்டிக்குந் தெய்வநீயல்லாற்
பிரமனெனப்பேசல் பிசகே வரமா
ருனக்குப்புதல்வனென வுற்றதாலன்றோன்
றனக்குப்படைக்கவந்த தன்மை நினைக்குங்காற்
யாங்குபெறவெல்லாம் படைத்தருளவ்வேதனுக்குன்
றாங்குதலையல்லாற் றரிப்புண்டோ வோங்கியே
மன்னுலகமெல்லா மகிழ்ச்சிபெறவேசிறந்த
வுன்னுடையமாமுகம்வா டும்பொழுதே யன்னியமாய்ப்
பார்க்குளுயிரெல்லாம் பதைத்துமயங்கவிருள்
போர்க்குமந்தகாரமாய்ப் போய்விடுமே யோர்க்குலவு

செய்யவுனதுமுகஞ் சீர்பெறச்சற்றேமலர்ந்தால்
வையகமேலாய்த்துலங்கி வாழுமே பொய்யலவே
மல்லாருந்திண்புவன வைப்பில்வளர்மன்னுயிர்க
ளெல்லாம்பகற்றுயிலில் லாதிருந்தே யல்லான
காரிலகுபேரிரவிற் கண்படையேகொள்வதெல்லாஞ்
சீரிலகுநீபுரியுஞ் செய்கையே பேரிலகும்
அட்டலட்சிமிக்குமிக்கா மாலயநீயாமென்றால்
மட்டதுண்டோவுன்றன் மகத்துவமே யட்டமின்னி
லோர்திருச்சேர்ந்தோர்கள்வளர்ந் தோங்குபிரபலத்தைப்
பார்தனிலேயென்றும் பகரரிதே யோர்குலவ
வென்றுமளிசேர்ந் திருப்போனேயெக்காலு
மன்றலறாதோங்கு மணவாளா துன்றுமடற்
பூவேந்தேயெப்போதும் போற்றவருமதிக
மாவேந்தராசனமாம் வண்மையோய் தாவேந்தா
மட்டமர்ந்தோங்கு வளமையோய்சந்ததமுஞ்
சிட்டர்பரிபாலனமே செய்துயர்ந்த அட்டமின்சேர்
துங்கவகளங்க துருவநவநீதகிருஷ்ண
மங்களராசன்பவனி வந்ததுமோ ரிங்கிதஞ்சேர்
மங்கையையான்கண்டதுவு மால்படைத்துநின்றதுவும்
பங்கையமேயுண்மை பகரக்கேள் அங்கமுற
வாரமானுகமட லம்புலியுங்கங்கையொடு
சாரவறுகுந் தயங்கவே சேரத்
தடவித்துருமமணி சால்குடிலமேசேர்ந்
திடமார்திரிக ணிசைந்து கடியார்
பரசுமிளமானும் பகர்துடியுந்தாங்கு
கரமார்கடுக்கந் தரமும் விரவவே
கோடுதிகழுங் குழையும்பொருந்தியே
காடரியபஞ்சான னம்படைத்துப் பீடுடைய

காமனையுமேயுடைத்த காட்சியாற்சங்கரனோர்
வாமமிகும்பொதிய மாமலையான் பூமகிழ
வாண்டலைமேலாயுயர்த்தே யாறுதலையாமெனலா
னீண்டகயமுன்று நிலைமையா னீண்டவே
வந்தனைவோரும்படிநல் வண்மைதருமந்திரமா
மந்தாங்கமுற்று மறிந்ததாற் கந்தத்
திடவாரணந்தாங்குந் தீரமதுதோன்
றிடமாமைமேலோங் கியல்பா லடரவே
யாரமயிலை நடவியடர்திகிரி
வேரலையச்சூரலைய வேலையுந்தி யேருலவும்
வள்ளியுடன்மிருந்தே வானைமருவியதால்
விள்ளரியவோதிமஞ்சேர் மேன்மையாற் றுள்ளவரு
சேலுருவங்காட்டுஞ் செயற்கையாற்செவ்வேனோர்
மாலுறவேவந்தவையை மாநதியான் சாலப்
பொருந்துங்கமண்டலமே போற்றிடக்கைக்கொண்டு
திருந்துதிருக்கோகனகஞ் சேர்ந்து பொருந்துபுகழ்ச்
சாலவுமாமால் தருதலாற்சீலமறை
நாலுமுகமு நவிலலா லேலவே
மேன்மையுடனெண்டிக்கு மேவித்துதிபெறலா
னான்முகனேர்சொல்பாண்டி நாட்டினான் பான்மைமிகும்
பூவுலகத்தும்மதிக பொற்புவனமேயோங்கத்
தாவிலருட்புலவர் சார்தலால் மாவளஞ்சேர்
மிக்கதருமந்தார மென்மணிசங்கும்பெறலாற்
றக்கமருப்பங்கயமாத் தானுறலான் முக்கியஞ்சேர்
தேசகலாமானவெயில் சேர்ந்தரம்பைசூழுதலால்
வாசவனேராங்கிணுவை மாநகரான் நேசமா
யெந்நாளுநந்தவன மேயவரிதாங்குதலான்
மின்னார்மாமால்படர.மேவியதாற் பன்னரு

மாவிரும்பராக மணியுறவேவைத்தலாற்
றுவின்மகரந் தவழ்தலால் மேவியே
சீரிசையவம்புயமே சேர்ந்துபுங்கம்பெற்றதனால்
வாரிநிகர்தண்டளவ மாலையான் பேரினால
குற்றிடுதிகாந்தமெல்லா மோர்கணத்துலாவியே
சுற்றுச்சக்கரங்கென்னச் சுழன்றெழுந்து வெற்றியே
நீறுபணிப்பைநடுங்க மிக்குரத்தால்வெற்புடைத்துச்
சீறுதலாற்கோடையாய்ச் சென்றுசென்று கூறரிய
பாரமருவார்சமரிற் பாய்ந்துகொலைசெய்வதினாற்
கூரமருந்தாருடைத்த குந்தமாய்த் தீர
வமர்வேலைமேற்கொண் டடர்ந்துவட்டமேறிச்
சமர்தாவுகிள்ளையாய்ச் சாலக் குமுறு
மிடல்வாரணந்தனையே வீட்டியுளைசேர்ந்தே
யடல்மேவுதுங்க வரியாய்த் திடமேவு
பந்தெறிந்ததென்றெழுந்து பம்பரஞ்சுழன்றதென்று
மந்தரங்குலுங்கநின் றசைந்துயர்ந்து மந்தமிஞ்சு
தண்டைமென்சிலம்புசெஞ்ச தங்கையுங்குலுங்கவந்து
மண்டலங்குலுங்கமண்டி மண்டிநின்று மிண்டுகொண்டு
செஞ்சியும்பதுங்கநின்று திந்திதந்ததொந்தியென்று
கொஞ்சிமந்தரங்கடந்து கொண்டலஞ்ச வெஞ்சமரிற்
பஞ்சகதிகொண்டுலவிப் பாய்ந்திரத்னப்பண்ணைமத்தே
மிஞ்சுமடல்சேர்கவன வெம்பரியா னெஞ்சவே
யெண்ணார்கற்கோட்டை யிடித்துவளைத்தமரார்
திண்ணாகமத்திபல வேசிதற வண்ணியே
புட்கரத்தாலெற்றிப் பொருதாரையேயுடைத்துக்
கட்கனலமைத்தெழு கடற்குடித்து முட்கவருஞ்
சேர்தடியால்வீசித் திகழ்வெங்கடம்பெருக்கிக்
கார்தனையொப்பாகக் கனம்படைத்துப் பார்புகழ

வட்டமிட்டசக்கரக்கு வட்டினைக்குமைத்துளப்பி
யட்டதிக்கின்வெற்பிடித் தடித்துடைத்து மொட்டியொட்டி
மெட்டுவைத்தடுத்தெதிர்த்த மிக்கசத்துருக்களிட்ட
வொட்டுவிட்டிடத்துரத்தி யுக்ரமிக்க துட்டமொய்த்த
மக்களைக்கடற்கவிழ்த்து மச்சருச்சியைக்குமைத்து
மிக்கதிக்கயத்தையத்தி வெட்கவெற்றி மொய்க்குமுக்கிய
திட்குலத்தருக்களைச் சிதைத்துமத்தனைப்பொருப்பை
மட்கலத்திருக்குறத்து வைத்தெழுப்பி விட்புலத்தி
னஞ்சியும்பரும்பதுங்க யண்டகங்கையங்குறிஞ்சி
மஞ்சிமொண்டுகொண்டெறிந்து வந்தெதிர்ந்து விஞ்சைவண்டி
யொன்றிசைந்தசைந்தெழுந் துயர்ந்தடர்ந்திடுந்துரங்க
நின்றிரங்கவெம்பதங்க னெஞ்சுணங்க வென்றிதங்கு
சிந்தையுங்கறங்கியுந்து திங்களுஞ்சுழன்றொதுங்க
வந்தரங்களுங்கிடந் தலைந்துலம்ப நொந்து
திடுதிடெனவவனிபல திசையகடுபடிறெனவு
மடமடெனவுடைபடவும் வளியினுடல் படபடென
நடுதறியையிடறிவிற னமனுநிலைகுலையநிழன்
முடுகுமிடலரவின்மணி முடிநெறென வடர்க்கனம்
அவிருமுடுவதுபொரிக ளதெனநிலமுதிரவிரு
செவியசைவுகொடுமதிக திறல்பெருகப் புவிநடவிக்
கட்டும்பதவீர கண்டாமணியொலிக்கக்
கொட்டுமதகெம்பீர குஞ்சரத்தான் கிட்டரிய
விற்கொடிக்குச்சாபமென வீட்டிப்புலிக்கொடியைப்
புற்கொடியதாக்கியே புன்மைசெய்து நிற்கக்
கயலிற்கொடியதனைக் காசினியோர்நாளு
மயிலையதென மச்சம்வைத்துச் செயமாக
வண்டர்பரவ வடலேமிகப்பொருந்தி
மண்டலமேலோங்கு மகிமைபெற்றுத் திண்டிறல்சேர்

வான்றடவிமானம் வழங்கிவருசந்திரனோர்
தோன்றும்வளரித்துவசத் தான் — ஏன்றுலகின்
மாதருக்கும்வாலிபர்க்கு மன்றல்வளர்ந்தேறக்
காதமராரஞ்சிக் கடலேற — வாதுலர்கட்
குற்றவறுமை குடிபோய்ச்செல்வம்பெருக
முற்றமுழங்குமணி மும்முரசான் — வெற்றிபெற
வற்றனவரீதர்பொற்றா ளாணைகொண்டுதன்னாணை
நாற்றிசைக்குஞ்செல்ல நடாத்தினோ — னேற்றமிக
மீண்டுபுரியண்டலர் வெகுண்டமர்தொடங்கவிறல்
கொண்டுமிருசெங்கையில கும்படைக — டுண்டுபட
மண்டுபுகையண்டமு மறைந்திடவெழும்பவதிர்
துண்டுவெடியுண்டைக டெறிந்துவிழ — மண்டியெதிர்
தண்டுபரமண்டலிகர் தங்கண்மணிமண்டையிள
வுண்டுமுடிபந்தென வுடைந்துருள — விண்டகழல்
கந்துகடகர்ந்துவிரல் கண்டம்விழியங்கமிடை
தொந்திவயிறின்குடர் சுருண்டுமத — தந்திகத
வெம்பரிமடிந்துநிணம் வெண்டசைசரிந்துலவ
வம்புபுரியுங்கழுதும் வஞ்சநரி — யும்பெருகு
கங்கமுநறுந்தசை கனிந்துடனருந்தரண
துங்கசெயமங்கைமகிழ் துன்றநட — னங்குலவ
வந்தரமடந்தையர கங்களிதுளங்கரவி
சிந்தையுநடுங்கவொரு சிங்கமென — வந்தமர்வெல்
மந்தரநிகர்ந்திட வளர்ந்ததடதுங்கபுய
சுந்தரபுரந்தர துரந்தரிகன் — சிந்தைவைத்துச்
சீராசையாவுடைய தேவிபுணர்புன்னைவனத்
தாரார்சடைப்பரனுக் கன்புமிகப் — பேராது
மிக்கானபூசனைநெய் வேத்யமறைக்கட்டளையு
மெக்காலமுந்தவறாதே நடத்தித் — திக்கோர்

வணங்குமுருக்கு மணிசத்யபாமை
யணங்குபுணரின்ப வழகர் குணங்கண்மிகச்
சாலுநவநீதகிருஷ்ண சாமியுளமகிழ
மேலுமுயர்புதுவை வீதனில் ஞாலமகிழ்
காலணைகுளங்கழனி கன்னல்கதலிநதி
மாலணைபூந்தாழைமகிழ் மாப்பலவார் கோலமலர்ச்
சோலைகளுநந்தவனச் சூழல்களுநீள்யாக
சாலைகளுமாதவர்கூடாபரமும் பால்பழந்தேன்
சட்டரசவர்க்கவகை சாருமன்னசத்திரமுந்
திட்டமிகவேதகுலஞ் சேர்மனையு மட்டில்லா
மாடமுமாடரங்கு மாளிகையுமாமறுகு
நீடவளர்தெற்றி நெடுந்தெருவு நாடியே
யண்டர்பணிகோபுரமு மாலயமுமத்தமணி
மண்டபமுமுன்முகப்பு மண்டபமும் விண்டடவ
வோங்குதிருமதிலு முன்னதஞ்சேர்தூவிகளுந்
தாங்குகெருடதுசத் தம்பமுநற் பாங்குபெறு
வாகனந்தேரத்ன மணிச்சிவிகைவெண்கவரி
சேககல்பொன்னுபரணஞ் செம்பொன்னு லாகச்
சுருட்டிகவிகை சுருள்விசிறிதூபந்
திருப்படிக்கங்கண்ணுடி தீபம் விருப்பத்
திருமஞ்சனக்குடமுஞ்சேர்சோடசமாம்
வரிசையுபசார மவியக் கருதி
வருடவிழாமேலான மாதவிழாப்பார்க்கு
ளருமைசெய்யுநித்தவிழா வார்வம் பெருகுமறைக்
கட்டளைமெய்ப்பூசையறு காலமுமாறுநவ
சட்டமுறச்செய்தமைத்த சக்ரதரன் கட்டழகார்
சந்திரவதனவல தாரபிரதாபதரு
விந்திரன்புவிபுரந்த வெங்கோமான் முந்தவருள்

தண்புயலைநேர்சொலவு தாரன்றடவிகட
திண்புயவிசாலசிரோ ரத்னம் பண்பு
பெருகுநிதியோங்கு பிரபலகுபேர
கெருவிதமனேல கிரீடி யுரமாய்க்
கடகடெனகீடு கடல்சுவறவாளி
தடதடெனவேவு தயாளு நிடதர்
வடகர்கருநாடர் மகதர்வடதேசர்
குடகர்பணிராச குடாரி மிடலார்
கதகவனராசர் கடற்றுருவியோட
மதகயநடாவும் வலாரி யதிக
சரசகுணசாலி சகலகலைவாணர்
பரசுமவுதாரகர பாரி திரமார்
சதுரனமுத சரசலளித
மதுரமிருது வசனன் அதிக
விகடகுடில மிடலகபட
சகடமிடறு சரணன் நிகரில்
குடகர்கெவுடர் குருதர்துளுவர்
வடகர்குசலர் மகதர் நிடதர்
அடிகள்வருடி யதிகமணிகள்
கொடிகள்படைகள் குடைகள் பிடிகள்
இவுளிசிவிகை யிலகுகவரி
மௌலிபணிகை வளைகள் நவநிதியம்
பந்திபந்தியாகப் படைத்தேகனதிறைகள்
தந்துதினம்போற்றுஞ் சமுகத்தான் சுந்தரஞ்சேர்
சங்கமணிசெங்கைச் சலாக்யன்கவிதாப்ர
சங்கமணிமௌலித் தராதிபதி புங்கவிறற்
சிங்கமருவார்சமரைச் சின்னபின்னஞ்செய்தரண
சிங்கமருவார்தருவார் தேவேந்த்ரன் பொங்கு

தருமதுரகதரோபந் தன்மிகுமேன்மை
தருமதுரவாசக சங்க்ராமன் செருவில்த்
திருந்தலாைக்கண்டதுண்டஞ் செய்துயர்ந்தகீர்த்தித்
திருந்தலாைச்சூடும்வச்சிர தேகன் பொருந்தவே
அஞ்சக்கரனை யனுதினமும்போற்றிவள
ரஞ்சக்கரகர குஞலமுகில் கிஞ்சுகவாய்
யம்புயமாதுங்கருணை யாகநித்தமேவிவள
ரம்புயமாதுங்கவ களங்கன் சொம்புபெறு
மம்பரத்தைநேரும்விழி யாச்சியர்கள்போற்றவன்ன
ளம்பரத்தைநல்கு மபிராமன் பம்புபுகழ்க்
கோமானுதார கொடைக்குமுணன்பார்புரந்த
கோமானமுதகுணக் குன்றம் மாமார்பன்
பூமண்டலீகர்நித்யம் போற்றும்பதயுகள
மாமண்டலாதிபத்ய மார்க்கண்டன் கோமளஞ்சேர்
துங்கவுக்ரகோப துரந்தரிகாதுத்யப்ர
சங்கசுப்ரதீப தனஞ்செயா புங்கமன
தீரசுத்தவீர செயதரவசீரரண
வீரபத்திரராசவி தரணிகா பாரச்
சகலகலாலட்சணிக சத்குணகெம்பீரா
சுகலளிதலீலா சுகந்தா மகிமைபெறு
சித்ரசுபுத்ரவி சித்ராசெகமுழுதோர்
சத்ரமுயர்த்தகன தாட்டீகா நத்திலகு
கஞ்சக்கராபோர்க்க தக்கராமாயவட
ரஞ்சக்கராநலறி வாகரா மிஞ்சுபுய
மந்தராவென்றெடுத்து வாழ்த்தியுயர்மாகதர்கள்
சந்ததமும்போற்று சகவேந்தன் பைந்தமிழ்தேர்
தென்னன்மருதப்பசெய தென்னாட்டுராயபுகழ்
மன்னனெனுமேற்று மலைக்கதிபன் துன்னவே

செப்பமுறநாளுந் திகழ்சங்கரன்றுணையா
மொப்பமுலகிற்செலுத்து முத்துங்க ளிப்புவிக்குட்
சுந்தரஞ்சேர்சத்குருவாய்த் தோன்றுபரஞ்சோதிமுனி
மந்த்ரவுபதேச மறவாதான் தந்திரமாய்ச்
சந்ததமும்புலவர் தாந்துருவசீடரண
நந்தலிலாதோங்கு நலத்தினால் முந்தவே
சேருங்கருணைத் திரிமூர்த்திகள்பதமுஞ்
சீருமகஞ்சேருந் தன்மையா லேருறவே
வாய்மையிலங்குத்தரமே லானவளம்படைத்தே
சேய்மைபொருந்தத் திகழ்தலா லேய்தரவே
அங்காருசனமே யதிகமெனச்சால
மங்காத்துதிசேரு மாட்சியா லிங்கார்வந்
தோன்றவேவாய்ப்பாகச் சொல்லமுதநல்குதலா
லான்றதமிழ்ப்பாரதமே யார்தலினா லேன்ற
தாணிதுலங்கவெயில் சார்தருபொற்கோட்டை
மருவருவியூற்று மலை வாய்ப்பாற் பெரியமகா
மேருவின்மேல்வாழ்வு விளங்குதுருவனெனப்
பாருலகம்போற்றும் பரந்தாமன் ஆருமகிழ்
முத்தமிழ்தேர்கும்பன் முழுதுநலமையருமை
வைத்தபிமானித்தருளு மாநிதியங் கத்தனென
அட்டதிசைபோற்று மகளூங்கன்றுட்டரிடி
கிட்டார்பரிபாலனதே வேந்த்ரனுயர் கட்டழகன்
மன்னர்பணிரத்ன மகுடமகராச
தென்னன்மருதப்ப தீரனையுங் கன்னனெனத்
தாரணிகொண்டாடபெஞ்ச தாருவெதிரடையார்
போரணிதீர்த்தாள்செய் புயவீர சூரனை
சிங்கமெனவந்ததுரைச் சீவலராசேந்த்ரபிர
சங்கனையுமைந்தனொன்ற சக்ரதரன் துங்கமிகு

தென்னன்வடகரையா திக்கம்புரந்தசெய
மன்னனெனவந்த மகுடபதி பன்னுபுகழ்ப்
பூமன்வலங்கைப் புலிச்செம்புலிப்பாண்டிய
சோமன்பெரிய சுவாமியபி ராமனையும்
போசனெனும்பாயும் புலிக்குற்றாலேந்த்ரதன்ம
நேசநவநீதகிருஷ்ண நீதனையும் பாசம்
பெருகமகிழருமைப் பேரனென்றகோமா
னருமைவலங்கைப்புலிக் காத்தப்ப குரிசிலையுந்
தன்மன்சிவகுருநாதச் சாழுவசெயவில்
மன்மதன்கட்டாரி மகிபனையும் பொன்மருவு
பாத்தனெனும்ராசகோ பாலனையும்பார்முழுது
மேத்துமருகனெனவே மகிழ்மால் தோத்திரஞ்சேர்
போதன்மதியாப் புலிரகுநாதேந்திரனருள்
நீதனழகப்ப நிதிபதியை மாதிரஞ்சேர்
தெள்ளுமதுரத்தமிழைத் தேருநவநீதகிருஷ்ண
வெள்ளையகுனால விதரணனை வள்ளலெனு
முத்துக்குமாரு முகிலைப்புவனபிர
சித்தமருதகுட்டி சீதரனை மெய்த்தயற்ப
நாபனெனுமதுர நாயகத்தைமுக்யகுல
தீபனெனுமுத்து வசீகரனை மாபிரபல
கல்வித்திருவேங் கடனாதனைக்கருணைச்
செல்வமிகுமைத்துனராய்ச் சிந்தைமெய்த்தோன் மல்விசய
சிங்கம்வெளியப்பனைநற் செட்டியுடையாரரசைத்
துங்கமிகுமெய்த்துணைவ னென்றோன் புங்கமிகு
தாரணிமெய்த்தசிவ தாண்டவசத்குணனைத்
தீரசிவகுருநா தேந்திரனை மாரனெனு
முத்தரசுவேளை முகில்பெரியசாமியைப்பார்
வைத்தபுகழ்ச்சிவலரா மன்றனையே சித்தமிசை

மைந்தனொனுமுறை வழாதுமகிழ்ந்தபிரான்
சுந்தரகுனுல துரந்தரிகன் சந்தக்
கெசபதிரத்தின கிரீடபதிவெற்றித்
துசபதிமேலாம சுபதி இசைசேர்
சுகபதிநராதிபதி சொன்னபதிராச
செகபதிதென்னுட் டாதிபதி மகபதியாஞ்
சீவலவராசேந்த்ரன் செல்வத்தவத்துதித்த
காவலவனீடுசிலைக் காண்டீப னுவலுறச்
சாந்தநெறிவேள்வி தனைக்காக்கவோர்முனிபின்
போந்தநவநீதகிஷ்ண பூபால னேந்துதிரை
யீட்டுகடல்வாலிமரா வேழ்துகளாகப்பகழி
பூட்டுநவநீதகிஷ்ண பூபாலன் வாட்டமில்லாப்
பஞ்சவர்சகாயனெனப் பார்புகழுவந்தகுண
புஞ்சநவநீதகிஷ்ண பூபாலன் வெஞ்சமரில்
நீண்டலங்கைக்கோன்மௌலி நீறுபடவெல்வாகை
பூண்டநவநீதகிஷ்ண பூபால னீண்டலையா
லார்த்தகடல்சூழுவனியெல்லாந்தான்புகழாற்
போர்த்தநவநீதகிஷ்ண பூபாலன் சீர்த்திமிக
வேற்றும்புவனவிந்த்ர னென்னத்திகாந்தமெல்லாம்
போற்றுநவநீதகிஷ்ண பூபால னூற்றுமலை
திண்ணியசெல்வக்கிருவை செய்தவத்தால்வந்துதித்த
புண்யநவநீதகிஷ்ண பூபால னெண்ணமிகு
துத்யதுரைசீவலவ துங்கனுதவுவர
புத்ரநவநீதகிஷ்ண பூபால னித்தம்
வளர்செல்வமோடுலகில் வாழ்போதொருநாட்
கிளர்பவனியென்னக் கிளத்த வொளிர்தரங்க
வாரியெனவே மறுகுதொறும்வீர
பேரியதிர்ந்து பிறங்கவே மூரிநெடு

மாடமமைப்பார் வயங்குமணிச்சிகர
கூடமொடுமேடைக் குழாமமைப்பார் நீடவே
பொன்னங்கொடிநிறுத்திப் பொற்றோரணநிரைகள்
துன்னுதெருவீதி தொறுநிரைப்பார் மின்னனையார்
சந்தமுலையிற் சவாதணிவார்பொட்டிடுவார்
கொந்தலருமாலை குழற்கணிவார் சந்தமொடு
வாடைப்பொடியணிவார் வாள்விழியின்மையணிவார்
வேடிக்கையாய்வெளியில் மேவுவார் பாடியே
சாடைத்தொழில்புரிவார் சன்னைசெய்வார்மெய்ப்பிலுக்கா
யோடித்திரிவா ருலாவுவார் நீடுசெங்க
கோதையேதென்பருலா வேலையிதோவென்றுமலர்க்
கோதையருண்டாட்டோடு கூறுங்காற் சீதத்
திசைவறியிந்திரவி தென்வடக்காறுனு
முறைதவறுவாய்மை யுடையோன் பரசுமனு
நீதவழுநெவ நீதகிஷ்ணராசேந்த்ர
பூதரகுலை புகழ்ப்பாண்டியன் சீதபுண்ய
மஞ்சனனீராடி வளர்பொற்றுகில்புனைந்து
செஞ்சவேர்பொன்முகப்பிற் சேர்ந்திருந்து மிஞ்சுகுரு
கூறியபஞ்சாட்சரமுட் கொண்டிருத்திமெய்யன்பு
மீறியனுட்டான விதிமுறையே தேறியவி
பூதியணிந்துசந்தப் பொட்டுமேற்பொட்டுமிரு
காதினவரத்னக் கடுக்கனிட்டுக் கோதில்
வயிரமுருகணிந்து வாகுவலயம்
வெயில்சேர்மணிக்கடகம் வேய்ந்து செயிர்தீர்
பதக்கமுத்துமாலையணி பத்திபெறச்சேர்த்தித்
துதித்தகணையாழிவிரற் சூட்டி மதித்திடவே
பொற்சரிகைப்பாகுகட்டிப் பொற்றுராய்சேர்த்திடையில்
விற்சுரிகைவாள்சேர வேவீக்கி மெற்பிரபை

_ாரச்சகடோ லமைத்துமருப்பதனிற்
பாரமணிக்கிம்புரிபண் பாய்ப்பூட்டி வீரமிகு
கண்டாமணியொலிக்கக் கட்டியேயேழுயர்ந்த
தண்டாதபோர்வெல்மத தந்திதனைக் கொண்டுவந்து
பாகர்முன்பாயேநிறுத்தப் பார்த்துப்பிடிபடியாய்
வாகமரவேறி மறுகினிடை யேகலேதேர்
வாணரிசையேத்தெடுப்ப மாகதர்கள்போற்றிசெய்ய
யாணர்மடவார்பாடி யாடிவரப் பூண்மகுட
வேந்தர்தொழுவாலத்தி மின்னார்கள்வந்தெடுப்பக்
காந்திமதியக்கவிகை தானிழற்ற வேந்து
புலிக்கொடியும்விற்கொடியும் போற்றுமனுமக்
கெலிக்கொடியுமிக்காங் கெருட வொலிக்கொடிமா
மீனக்கொடிவெற்றி வெள்ளைக்கொடியுமுயர்
வானமுகடு மறைத்துலவ மேன்மைசெறி
பஞ்சவன்னப்பாவாடை பின்னும்வெள்ளைப்பாவாடை
மிஞ்சுமஞ்சட்பாவாடை வீசிவர எஞ்சலின்றிக்
கூறுசகசம்புக் குடையும்பலவன்ன
மீறுகுடையுடன்வெள் ளைக்குடையு மாறிலா
வெள்ளைச்சுருட்டிபல வெற்றிச்சுருட்டிகளுந்
துள்ளுகதிர்போற் றுலங்கிவர வள்ளுலவு
பேரிகைமல்லாரி பெருமுரசுவீராண
பூரிகையெக்காளம் புகழ்ச்சின்னம் வாரிலகு
பல்லியங்களார்ப்பப் பணிலமுடன்கொம்பிரட்ட
வில்லியங்கும்வெள்ளி வெடிக்காரர் சல்லிகட்டும்
விற்காரர்வாட்காரர் வேற்காரர்சூழ்ந்துவர
மற்கவனவாம்பரிகை மாச்சூழ நற்கவிஞோர்
கல்வியருமையறி கங்காகுலத்துதித்த
செல்வப்பிரதாப திராணிபர னல்வளஞ்சேர்

ஆரூர்சடையானை யர்ச்சித்தனுதினமும்
மாருதவாழ்வுபெற்ற மார்க்கண்டன் கூறுண்மை

புத்தியிலப்பாசிசெகம் போற்றம்பலவாண
துத்தியப்பிரதானி சுகிர்தகுணன் மெய்த்தவஞ்சேர்

பாலனுமையொரு பாகபதிமந்திரியோர்
கோலமணித்தண்டிகைமேற் கொண்டுவர மேலுமே

முத்தமிழோர்தங்குடியை முற்றும்புரந்தருமை
வைத்துநிலைநிறுத்து மானபர னித்தஞ்

செகராசராசர் செவிபிடித்தேயாட்டு
நிகரோயில்மந்த்ர நிபுணன் மகிமைபெறு

மீசுரமூர்த்திமுகி லின்பச்சுதனெனவே
தேசமெல்லாமெய்த்த திடயூகி வாசவன்போ

லோங்குமதிமந்த்ரி யுமையொருபாகநிதி
தாங்குமணிப்பல்லக்கிற் றானும்வரப் பூங்குவளைத்

தாமன்மதுரத் தமிழறிபண்டாரவன
சோமனெனவந்த துரந்தரனும் வாம

நதிகுலதீபன்பெரிய நாயகவில்வேளுந்
துதிராசகாரியங்கள் சொல்ல நிதியான

காராளமேருக் கணக்கர்சிகாமணியா
மாராசகோபால மாமதனும் பேரான

சங்கரானந்த தருமமனோகரனுந்
துங்கவெற்றிவாம்பரிமேற் றோன்றிவர மங்களஞ்சேர்

செல்வனடைக்கலவ சீகரனுமேபரியிற்
சொல்லிரவிபோலுந் துலங்கிவர நல்வளஞ்சேர்

காரியக்காரருடன் காண்ராயசகாரர்
வீரியஞ்சேர்வாம்பரியின் மீதுவரப் பாரீக்க

வீரியத்திராணியுடன் மேவிவருமொண்டடியார்
சீரிசையவூழியமுஞ் சேர்ந்துவர வாரியெனச்

சேனைபுடைசூழத் திகாந்தமெல்லாம்போற்றமத
யானைப்பிடரிலிந்த்ர னுமென்னத் தானுதித்தே
மெல்லநடவும்பவனி வேளைதனில்வந்தீண்டும்
வல்லமுலையார் வணங்கியே சொல்லரிய
செய்யவெழில்பார்த்துருகிச் சிந்தைதனின்மிகுந்த
மையல்பெருகி வழுத்துவார் துய்ய
கொடிச்சேலைவைத்துயர்த்த கோமானிடைப்பொற்
கொடிச்சேலைதாழ்ந்ததென கூறாய் துடித்திளைந்தே
யந்தரங்கமோதி யடருதையாநீயெனக்கோ
ரந்தரங்கமோதி யருளாயோ வந்தெதிர்ந்து
சூதாமுலையதுதான் றுன்றிவிம்மவைத்ததென்ன
சூதாமுலையணிந்தே தொயாயோ போதான
ஆசுகந்தந்தங்கவிடை யாரிலக்காயேவினன்வே
ளாசுகந்தந்தங்கவிடை வாற்றாயோ நேசமுட
னத்தவளவளையுண் டாய்நீயணிகளுடை
யத்தவளவளைதந் தாதரிப்பாய் நத்தியே
செவ்வாய்க்குழலணங்கைச் சேர்த்தவனீயிவ்வுலகிற்
செவ்வாய்க்குழலணங்கைச் சேராயோ வொவ்வாத
வந்தமருமாலை வருத்துமிரங்கியென்பால்
வந்தமருமாலை வழங்குவாய் செந்தீ
யுருக்குத்தரமோ வுயர்மதிநீகூடி
யுருக்குத்தரமோது ளன்பாய்ப் பெருக்கு
முடலம்பசந்துருவ வோங்குமதவே
ளடலம்பசந்துருவு தையோ திடதயவார்
கோனிரங்காதார்புரப்பார் கூறய்யாவென்றுமின்னார்
தானிரங்காயென்னுஞ் சமையத்திற் கானரதி
சோதரியாமென்னுஞ் சுரதரசமோகினியா
மாதரசைக்கண்டேன் மனதறிந்தாள் சூதடரு

மாதர்விழியான் மருட்டினுள்கண்டயர்ந்து
காதலெனுமாசைக் கடலாழ்ந்தேன் போதமரும்
பொன்னிணையாமென்னப் புகலுமெழில்சிறந்த
கன்னியுருவமெல்லாங் கண்டுவந்தேன் மன்னுலகிற்
பூவார்குழலின் பொலிவுகண்டேபுந்திகெட்டுப்
பாவார்குழல்போற் பரதவித்தேன் மாவிதுநேர்
வாணுதலைக்கண்டவுடன் வாடமனத்துமயல்
பூணுதலையென்ன புகலுவேன் காணும்
விழிவேலைக்கண்டு மெலிந்திடைந்தேகாதற்
சுழிவேலைக்குள்ளாய்ச் சுழன்றேன் பழியாக்
குழைக்காதுகண்டவுடன் கோடிமனம்வாடிக்
கழைக்காதுமாரனெய்யக் கண்டேன் தழைத்தரசக்
கொவ்வைதரமென்றவிதழ்க் குல்லைகண்டபோதுமனங்
கவ்வைதரநின்று கரைகின்றேன் செவ்விதழ்சேர்
தந்தத்தளவு தனைக்காண்முன்வேள்கணையா
யுந்தத்தளவுக்கு ளுட்பட்டேன் விந்த
வதனமதிகண்டு மனமயர்ந்தேன்மிக்காம்
விதனமதினுனு மெலிந்தேன் இதமிகுந்த
கண்டவலம்புரியைக் கண்டவுடன்காதன்மன
முண்டவலம்புரிந்து வந்தேனே விண்டனைய
வள்ளமுலைகண்டு மதிமருண்டுதள்ளாடி
யுள்ளமுலைவா யுடைந்தேனே மெள்ளவே
வஞ்சியிடைகண்டு மயங்கிமதனனம்பா
லஞ்சியிடைவா யயர்ந்தேனே மிஞ்சுமணி
மேகலையைக்காணுமுன்னே வெங்கானல்கண்டலைந்த
மாகலைபோற்சுற்றியலம் வந்தேனே மோகக்
கடிதடங்காணுமுன்னே காதன்மயரு
னெடிதடங்காதோவெனவு ணேர்ந்தேன் பிடிநடைசேர்

செம்பாதகஞ்சந் தெரிசித்தேனப்போது
வெம்பாதகனும் விறல்வேடன் வம்பாரும்
பூஞ்சல்லிகட்டிப் பொருமதனப்போரதனாற்
சாஞ்சல்யமாகமனந் தட்டழிந்து வாஞ்சை
மறுகுதொறுஞ்சற்று மனதுநினைவின்றி
மறுகிமின்னாள்பின்றொடர்ந்து வந்தே கெறுவிதஞ்சேர்
மின்னொன்றேனங்கு மேவுமடமாதர்
கன்னாவுதாரன் கருணைநிதி துன்னுங்
கடக்குஞ்சரம்புரந்தோன் கார்நிருதனங்கங்
கடக்குஞ்சரந்தெரிந்த கையான் துடிக்குந்
தரியலரைவெஞ்சமரிற் சாடியேவெற்றி
தரியலரைத்தாங்கு சலாக்யன் விரைசேர்
வளவாரணமுலையார் மாமோகன்மாத
வளவாரணமுடைய வள்ளல் வளமை
மகரமணிகடலோர் வாளியாற்றூர்த்த
மகரமணிகன்னைசல மார்பன் மிகவே
கருதரசமொழுகு கல்வியழைந்த
விருதரசனொன்னார் விகாதன் தரியார்
குருதிகமழ்வேலான் குவலயமேலோங்கு
பரிதிநவநீதகிஷ்ண பாண்டிய குரிசில்
மனமகிழவோங்கி வளர்சமுகந்தன்னிற்
றினமுநடனவிதஞ் செய்யுங் கனமார்
சுரதரசமோகினியா மென்றுசொன்னார்சொன்முன்
தரணியெல்லாங்கண்டுமகிழ் தாங்கப் பரவு
மணிமறுகுதோறு மருளுமுலாப்போந்து
மணிமண்டபம்புகுந்தான் மன்ன னணியிழைதா
னெங்கோன்பவனியொடு மேகினாண்மான்மிகுந்தே
யங்கோர்பானானு மயர்ந்திருந்தேன் குங்குமஞ்சேர்

கொங்கைக்குடத்தின் குலுக்குமிறுமாப்புஞ்
செங்கைவளைக்கிலுக்குஞ் சித்திரமுங் — கொங்கைமிசை
யுத்தரியமும்பட் டிடையுந்துவளிடையும்
பத்திபெறுசெவ்வாயும் பாக்கொதுக்குங் — குத்திரஞ்செய்
கோலவிழிமருட்டுங் கூறுந்தொழிற்பகட்டும்
பாலனையசெஞ்சொற் பயில்சுருட்டுஞ் — சாலு
நடைவிதமுமிங்கிதமு நாகரிகமுந்
தொடைசேர்பூங்கோதைச் சொருக்கும். — வடிவமைந்த
வுல்லாசமாக வொருகையசைத்துலவு
சல்லாபசிங்கார சம்பிரமமு — முல்லைநகைத்
துய்யமந்தகாசநிலாத் தோற்றமுமாசோபிதஞ்சேர்
செய்யவெயர்நுதலார் சிந்துரமு — மையலருள்
காயக்கமுஞ்சுரத காருடமுமாரிசமு
மாயக்கபடநய வங்கணமு — நேயமுமாய்
வேந்தனவநீதகிஷ்ண வேள்புவனிமீதுவந்து
போந்தகமலமலர்ப் பொன்னனைய — சாந்தமுலை
மாதைவரக்கண்டேன் மனதுமகிழ்சிறந்தே
கோதையேதெய்வக் குலக்கொழுந்தே — பேதமிலாத்
தேனேமின்னார்கள்குல தீபமேதேவர்பணி
மானேகனியே மரகதமே — பானேர்சொற்
பெண்ணரசே பிடிநடையேபெற்றுலவு
தண்ணாரமுதே சருக்கரையே — விண்ணணா
வஞ்சியேதோகை மயிலேயிளங்குயிலே
வெஞ்சிலைவேள்போற்றவரு மின்னுருவே — யஞ்சொலுனைக்
கிஞ்சுகமேநேர்ந்தவிதழ்க் கெம்பீரவோதிமமே
யஞ்சுகமேதெய்வ வரம்பையே — கொஞ்சு
பரதவிதம்புரியும் பாவையேமீறு
சுரதவிநோதனோர் துரையே — யிரதியே

நின்றடப்பங்கட்டி நினதுபதம்வருடி
யென்றும்பணிவிடைசெய் வேனெனைநீ நன்றியுடன்
காத்தருளியென்றன்மனக் காதறவிர்க்கவருள்
பார்த்திரங்காயுன்மீது பாரமே யார்த்தமே
யுன்னையல்லாலென்றனக்கே யோர்துணையுமில்லைமுற்று
மென்னையருள்சத்தியமு மீதன்றே மின்னே
தணவாதருள்சும்மா தானிருந்தாலிந்தக்
கணமேயுயிர்பதைக்குங் கண்டாய் குணமாய்
மருள்கொடுமிவண்ணம் வருந்துதல்கண்டின்ன
மருள்புரியாதென்ன வணங்கே தெருளார்
மனதுள்ளுருகா வயிரமோசற்று
மெனதுமொழிகேட்க விலையோ கனக
மனையமின்னேநின்றயவுக் காகாதென்றே
யினையபலவெல்லா மிரந்தே னனைகுழலார்
முல்லையரும்பு முகிழ்திறப்பமைக்குவளை
யல்லிதிறந்தே யருள்வீச மெல்ல
வருகுவந்தாளனு மடுத்தவளைச்சேர்ந்தே
யிருமடியிலென்ன விருத்தி மருவி
யுளமுவகைபெறமனது மொருமைபடமுருகுகமழ்
களபமுயர்புழுகுபொடி கலவையலர் தளவமலர்
தருவினறுமலர்திகழ்நெய் தகரமதுவணியும்விரை
கருதரியசயனமிசை கமகமென விருகைமடி
சுருள்பிளவுநறையொழுகு துவரினிதழ்கனியமுது
பருகிநலசரசவித பழமொழிக ளுருகுநய
பதமுறைமையசைநடன பரதமதனெறியின்வகை
சதனபதமசையமத சனதமெழ விதவிதமாய்ச்
சீரிலகுநீள்கைகொடு தேகமுழுதேதடவி
யேரிலகுமாமுதுகு மேதடவி யாருமிதழ்

வாயிரசதேநல்மகிழ் வாயருளவேபருகி
நேயமொடுநானதிக நீயதிக மாயசய
தாதிபலகூறுகர ணாதிபலசாரியொடு
தீதிலிடசாரிபல வேதிருகு போதிலகு
வங்கணாநயம்பரசு வந்தனைசுகம்பெருகு
மிங்கிதவிதங்கண்மன தின்புவகை பொங்கமொடு
கெஞ்சிவெகுநண்புகள் கிளர்ந்துகைநகம்பதிய
மிஞ்சுதொழில்கொஞ்சிட மிகுஞ்சரச விஞ்சைபல
தந்திரநலங்கலவி சம்பிரமநடந்தசம
யந்தனிலிணங்கியும ணைந்திடட வந்துமென
மார்புகண்புருரமுந்தி வாய்களங்கபோலமுன்பு
நேர்படுங்கைமூலமெங்கு நீவிமென்று சீர்துலங்கு
காடைவண்டுகோழிகொஞ்சு காகளம்புறாவனங்கள்
சாடைகொண்டுகூவிரங்க ரூன்மூளங்க நீடுகின்ற
பாடகங்கள்சூழ்சதங்கை பாதகண்டைநூபுரங்கள்
சூடகங்கையாடவண்டு சூழலங்க லாடமண்டு
தடனவிந்தைபலமுழங்க தருணமின்பமுலைமுகந்து
கடிதடங்கணைகிழமிஞ்சு கரிகரஞ்செய் திடவடர்ந்து
புலவிபொங்கியுடன்மகிழ்ந்து புளகரும்பிமலர்செறிந்த
தலையவிழ்ந்துகலைகுலைந்து சரியவங்க முலைவுகொண்டு
வெயர்வெழும்பவிடையொசிந்து மெலியவம்பொனணிகலன்க
டெயலவிந்தமுலையெனுஞ்சொ றுணைகுலுங்க வயர்வுதங்கி
யத்திதழ்வெளுப்பவிழி யத்திகள்சிவப்பரச
மொய்த்தசொன்மிகக்குழற முத்தமென வத்தமுத
பொற்றுளியிறைத்துவளர் பொற்கடலெனப்பெருக
வுற்றவுபரித்தொழிலி னுட்கனிய நற்கலவி
யேகசித்தமாயிதத்தி லேநடத்தவேணுமென்றன்
பாகவிட்டமீறவே வனேகமெல்லாம் வாகுடனே

செய்யநினைமுன்னங்கே செல்வோர்பகரரவம்
வெய்யவெடிபோற்செவியில் வீழ்ந்ததே செய்யபத
மாரவொலிதண்டைசிலம் பாருமொலியன்றிபிறோர்
பாரவொலியேதெனவே பார்க்குமுன்னே யேரிலகு
பெண்மணிபோலின்பரசப் பேரமுதநல்குதற்கென்
கண்மணிபோல்வந்தவரைக் காணேனே திண்மதன
பூசலையேதான்விளைத்துப் போகநிலைகாட்டவென்முன்
காசலையாய்வந்தவரைக் காணேனே யாசையினு
லேதமுறுகின்ற வெளியேன்மால்தீர்க்கவெண்ணிக்
காதலுடன்வந்தவரைக் காணேனே யாதரவாய்க்
கண்டருகுலாவியென்றன் காமவிடாய்தீரவிதழ்க்
கண்டருளவந்தவரைக் காணேனே மண்டு
பசிக்குளுடைந்தவர்முன் பாலனமும்வந்தே
புசிக்கலபியாதயர்வார் போல விசைக்கும்
பனையேறிப்பாளைதொடாப் பாவியேபோல
நினைவழிந்துநானெழுந்து நின்றேனே யினையவெல்லா
மெண்ணியிடைந்தேனே யின்னமுருவெளியி
னண்ணிவந்துமேசேவை நல்காரோ வண்ணமுறுந்
தண்டைசிலம்பு சதங்கைகலிரொனவே
விண்டலம்பவந்தணைந்து மேவாரோ செண்டனைய
குன்றமுலைமார்பணைத்துக் கொஞ்சிச்சுகம்வருத்தி
மன்றலுறக்கூடி மருவாரோ வென்றிரங்கி
யெண்ணுதவெண்ணமெல்லா மெண்ணியெண்ணியென்றனெஞ்சம்
புண்ணுகும்வண்ணம் புலம்பினேன் றண்ணு
ரரவிந்தமேநெஞ் சயர்ந்துமான்மீறு
தரவிந்தமேருமுலை யாள்வாய்ப் பிரசமிகு
மம்போருகமே யாமேமதனல
ரம்போருகமேயோ ரல்லதுதான் கொம்பார்

முளரியேவேள்போர் முருக்குதேகாய
முளரியேநானென் மொழிவேன் றளமருவு
பங்கயமேவன்னிப் படலையேசீதமதிப்
பங்கயமேவும்மிடையாள் பான்மையறீ றொங்குமகிழ்
தாமரையேமாமோகந் தாக்கவனங்கொடிதே
தாமரையேகோமயிலைத் தானுதவாய் பூமகிழு
மங்கமலமேமதுவே ளம்பாலசைந்திடைந்தே
னங்கமலமேவாவ நீர்த்தருள்வாய் செங்கிரண
வம்புயமேநீயுமந்த வாயிலைழையைக்கூட்டிவந்தெ
னம்புயமேசேரவைத்தா லாகாதோ தம்பமில்லைக்
கோகநகமேமதவேள் கோவுருவநானுமிலக்
கோகனகமேநகையைக் கூட்டிவிப்பாய் வாகமருங்
கஞ்சமேநீயுமந்தக் காரிகைமுன்றூதுசொல்வாய்
தஞ்சமுனையல்லாது தானிலையே மிஞ்சவே
துன்னவக்கிராங்கமென்றே சொல்லப்பிரிதல்செய்யு
மன்னையதுதூதுரைக்க லாகாதே மன்னுசிறை
பெற்றமயிலைப் பிணிமுகமென்பார்கிளியே
லுற்றதொருதத்தை யுரைத்ததென்பார் பெற்றிடுமுன்
றுணைவிட்டுமேபிரிந்து சார்கொடியதானதென்றே
யாயகுயிலை யறைவாரோ யேயவே
பண்டுமுதற்சிறையே பட்டதென்பார்சாரிகையை
வண்டுமறுகாலாக மன்னுமென்பார் விண்டமுகி
லிங்கணலர்தூற்றுமென்பா ரென்றுமிளந்தென்ற
லங்கமில்லானுக்கிரத மானதென்பார் பொங்குசகி
பெண்பாலேயாதலாற் பேதமையென்பாரெனுளம்
பண்பாமாலாகப் பதைக்குமே யெண்பாரீர்
பாரிசாதம்மெனலாற் பாரிசாதந்தானுஞ்
சீரிசையுந்தூதுசென்றாற் செவ்வாமோ பேரிலகு

சண்பகத்திற்சற்றுமளி தங்காதேதண்குவளை
மண்புகலும்வன்னீல மானதே பண்பின்
மனங்கருதியாருமிரு வாட்சியதனை
யனங்கமெனச்சொல்லுவதா லாகா கனங்குலவு
தாரணியும்பிச்சியென்ப தாலதாகாத்தாழை
யாரமடற்றூங்கி யலைந்ததே பாருண்மற்
றெவ்வலருந்தூதுக் கிசையாதேபாரிலமா
ரவ்வலருன்பேர்க்குடிய தாமன்றே செவ்விபெறு
மூன்றனக்கேபூவெனும்பே ருண்டல்லாலெந்தமலர்
தன்றனக்கும்பூவெனும்பேர் தானிலையே நன்றியுடன்
பூவுக்கருங்கலம்பொற் றாமரையேயென்றுதிரு
நாவுக்கரசர் நவின்றனரோ யாவதாற்
றாதுசென்றெனுள்ளமயல் சொல்லுவதற்குன்னையலான்
மூதுலகிலார்துணைசொன் முண்டகமே கோதகலுஞ்
சீரிலகுன்வாய்திறந்தாற் செந்தேனொழுகியிந்தப்
பாரிலளிவந்து பரந்தெழுமே யாரு
மிதயகமலமுநீ யென்பதாலுன்சொல்
லதையெவருமேகடவா ரன்பாய்த் துதிமடவாள்
கைகால்வதனமுலை கண்ணுமுன்றன்கோலமதான்
மெய்காணுன்றன்சொல் விரும்பியே தையல்
தன்றருள்கூர்ந்தென்னைத் தழுவுவாள்சென்று
வனசமேதூதுரைத்து வா.

## வெண்பா.

தென்னாட்டுராயதுரைச் சிங்கநவநீதகிருஷ்ண
பொன்னாட்டுமோர்பன் புரந்தரன்போ - லென்னாளும்

வாழிபுகழுற்று மலேவாழிமைந்தருடன்
வாழிகிளேவாழி மகிழ்ந்து.

வனசவிடுதூது முற்றிற்று.

சுவாமி நவநீதகிருஷ்ணர் துணை.

# பிழை திருத்தம்.

திரு

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩௫ | ௧௫ | மாய்க்கடற்பேரி | மாயக்கடற்பேரி |

## வனசவிடுதூது.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௯௨ | ௰௭ | மகேசநடன | மகேசணடன |
| ௯௩ | ௯ | பாருண்மற் | பாருண்மற்ற |
| ,, | ௭ | றெவ்வலருந் | வெவ்வலருந் |

உ

சிவமயம்.

ஊற்றுமலை சமஸ்தானம்

ம-ா-ா-ஸ்ரீ ஜமீன்தாரவர்கள்

## ஹிருதயாலய மருதப்பத்தேவரவர்கள்

பேரிற்

பலவித்துவான்களியற்றிய

# தனிப்பாடற்றிரட்டு.

இஃது

சீ. நவநீதகிருஷ்ண பிள்ளை

விருப்பத்தின்படி

ஷை சமஸ்தானம் வித்துவான்

புளியங்குடி-முத்துவீரக் கவிராயராற்

பார்வையிடப்பட்டு

ச. சுப்பிரமணிய பிள்ளையால்

தமது

சிந்தாமணி யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை.

1884.

சிவமயம்.

# தனிப்பாடற்றிரட்டு.

## திருச்செந்தூர்

## குஞ்சிபாரதிகளியற்றியது.

### கழிநெடில்விருத்தம்.

ஏற்றுமலைமருவலர்கண் முடியிடறும்பரிநகுலா
யென்போல்வாரைத்
தேற்றுமலையாதளிக்குங் கொடையுடையாய்புகழுடையாய்
திகழும்பொன்னைத்
தூற்றுமலையெறிதடங்கள் சூழ்ந்தழியாவளங்களுற்
சொர்க்கம்போலா
மூற்றுமலையரசுபுரி யிருதயாலயசுமுகா
வுசிதமாமே.

கருங்கலையொப்பாமனத்துக் கசடர்கண்மேற்செந்தமிழிற்
கவிசொற்றன்னோர்
மருங்கலையாவண்ணமெமர் குழுவையெலாம்புரக்கும்வள்ளால்
வலைகடம்மை
நெருங்கலையாலெறிதடஞ்சூழ் வீரைநகர்க்கதிபனெனும்
நிபுணசொல்லு
மருங்கலையெல்லாமுணர்ந்த விருதயாலயமகிபா
வரசரேறே. ௨

படபடெனக்கலங்கிமொழி பகராதேவுலுத்தர்களைப்
பாடிடாதே
வடவையெனக்கலிவரினு மயங்காதேதியங்காதே
மனமேகேண்மோ
குடமூலையார்மகிழ்மதனும் வீரைநகர்ராசபுரி
கோமான்மிக்க
திடமுறுநமிதயால யேந்திரனைச்சேர்வரிசை
செய்குவானே.

ஆசிரியவிருத்தம்.

பொன்னமர்புயாநிபுணகுணபோசமகராச
புரவலர்கள்புகழ்நேசனே
பொங்கமுறுசங்கநிதிதங்கிவளர்செங்கையாய்
புத்தமுதமொத்தமொழியாற்
பன்னுதமிழ்நாவலரொலாந்துதித்திடவரும்
பாக்யமகலாதசோமா
பார்த்திபாவெங்களிதயாலயகுபேரனே
பகருவேனென்றுகேண்மோ
மன்னும்பதஞ்சடையிலாதகோசிகம்வாவு
மானதனைமருவாக்கலை
வாரொடுந்தோலிட்டிறுக்கியேகையான்
மடக்கியடியாவுடுக்கை
கன்னமதமில்லாதநாகம்வெம்போர்செயக்
கதியதில்லாததானை
கம்மியர்கள்பண்ணுதவாபரணமும்பொனுங்
கருணையாற்றந்தருள்வையே.

புனல்வேலி

## வரதராஜபாரதிகள்

இயற்றியது.

### கட்டளை.

வேலக்கந்தரளம்நகையாமங்கை
வெண்மலர்க்கணையேவிடவுன்றனை
யேலக்கந்தரமெண்ணிநைந்தேதுடி
யிடையினம்பரஞ்சோர்ந்துளம்வாடியே
பாலக்கந்தரராரமுதென்றனள்
பண்பினோடணைவாயணைவாய்தரு
நீலக்கந்தரநேர்கொடைவள்ளலே
நேசனேயிதயாலயசாமியே. ௫.

### கலித்துறை.

தீதனங்கச்சினங் கூவிடத்தென்றல் சினந்துலவ
வோதனங்கச்சிடை யம்பரநீங்க வொளிருமென்றன்
மாதனங்கச்சி வளவேனுந்துய்த்திலள் வந்தணைதா
யாதனங்கச்சிப் பரிவாணர்க்கியித யாலயனே. ௬.

### கழிநெடில்விருத்தம்.

அரக்கம்பந்தஞ்சேரு மிதழ்விழியாமென்னங்கை
யம்மைமாரன்
இரக்கம்பச்சாத்தாப மிவ்வளவேனுங்கருதா
தெய்யநொந்தாள்
வரக்கம்பக்குஞ்சரத்தாய் நாவல்லோர்மதுரகவி
மகிழ்ந்துகேட்டுச்
சிரக்கம்பஞ்செய்துநிதி யருளுமிதயாலயனே
சேருவாயே. ௭.

அஞ்சமானந்தமூறு நன்னடையாங்கும்பமூலை
யலர்ந்தநல்ல
கஞ்சமானனமான விம்மங்கையெழிறனக்குக்
கமலையைக்கொஞ்
சஞ்சமானஞ்சொலலா மாதலினுற்சேர்ந்தருள்வாய்
சரத்தாலன்று
வஞ்சமானடர்த்தரகு வீரவிதயாலயனே
மன்னரேறே. அ.

---

புனல்வேலி

# இராமசுவாமிபாரதிகள்

இயற்றியது.

## கட்டளை.

மூத்தராதரம் பன்னிதம்பம்மெனு
முற்றிழைக்குன்றன் மோகநற்றுயரோ
வெத்தராதர வாவதுவேறில்லை
யீதுநிச்சயந் தானணைவாய்கன
கத்தராதர நேர்ந்திடுந்திண்புயா
காருத்தாங்நிதங் கற்றவர்சொல்லுக
வித்தராதரந் தேர்ந்துதியாகஞ்செய்
வீரனேயித யாலயவேந்தனே. க.

## கழிநெடில்விருத்தம்.

கந்தருவந்தனையில்லா மனையினிகரியலணங்கு
கணக்கிலாமோ
கந்தருவந்தனையம்பா ணினைநினைந்துவாடுகிறாள்
கண்பார்த்தாண்மே

கந்தருவந்தனை புரியுங் கொடையாயொன்னார் கடஞ்சி
கரந்துண்டாகக்
கந்தருவந்தனை நடத்துந் துங்கவிதயாலயசிங்
காரமாலே. ௰.

வளமளவிலாவாரா மத்தனங்கன்போதுகொய்து
வரவேபார்த்தே
யுளமளறினிறுத்தினகம் பம்போலச்சலிக்கின்றா
ளோதுமங்குல்
குளமளகஞ்சொல்லெனுமா தரசியிவடந்தசப்ர
கூடந்தன்னின்
மளமளவென்றுவந்துவந்தாள் வீரையிதயாலயபூ
மன்னரேறே. ௰௧.

கரத்துவளைக்கோதண்ட முடையவனுக்கினைமறந்து
காமனைந்தப்
புரத்துவளைக்கோரச்ச மின்றிவரக்கண்டுநொந்த
பூவைக்கூற
தரத்துவளைக்கோமளத்தே னருந்தமனமிரங்கிமஞ்சந்
தனிலேசேர்வாய்
வரத்துவளைக்கோபால னிகரிருதயாலயபூ
மன்னரேறே. ௰௨.

ஈரமதிகமலையணிந் திலங்குகுழைமான்வதன
மிடைக்குக்கொங்கைப்
பாரமதிகமலையவெங் காலூர்ந்துவருமாரன்
படையாற்செந்தேன்
சீரமதிகமலையவேப் பஞ்சாறென்பாடந்தாற்
கிரியாற்பாரா
வாரமதிகமலையண்ணா னிகரிருதயாலயநீ
மருவுவாயே. ௰௩.

சித்திரவன்னந்தனை நேர் மானேநீமயங்காமற்
சிவனையேநே
சித்திரவன்னந்தரங்க முடனருள்செய்வானுனக்குத்
திகிரியேவீ
சித்திரவன்னம்மீனை யடர்த்தவிதயாலயனுன்
றிறத்தினிற்பே
சித்திரவன்னத்துமுலை பிடித்துமஞ்சமீதிருந்து
சேரத்தானே ௰சு.

பாத்திரங்கண்டுவிரிநிறத் தண்ணலினையுதங்கண்டம்
பரமனுண்ட
பாத்திரங்கண்டுடியிடைமின் னட்குன்மேலதிமோகம்
பரிந்தாள்கற்றோர்
பாத்திரங்கண்டுதிகர்கவி சத்குணனன்னடைசேர்ந்தோர்
பழிப்பில்லாச்சத்
பாத்திரங்கண்டுதியாகம் புரியிருதயாலயசம்
பன்னமாலே. ௰ரு.

தாமூர்த்திகைக்குளிலே யிவளுக்கித்தில்லாமற்
சாற்றிடுங்கா
தாமூர்த்தியாய்க்கொண்டோன் மனையின்பேர்முகமரம்பைச்
சாயலின்சுக்
தாமூர்த்திகனங்குழலாங் கனியையணைந்தருண்மதுரை
தன்னில்வாழ்சுந்
தாமூர்த்தியருளோங்கி வளரிருதயாலயசத்
குணசிங்கேறே. ௰௬.

கானவளவாசுகவே டனைமாலையிற்கண்ட
கனிக்கிம்மட்டுத்
தானவளவாவென்று சொலவருமாநெருங்கிவரத்
தான்சமீப

மானவளவாவென்ன செய்வனுன்றன்மீதிருக்கு
மன்பால்வந்தாண்
மானவளவாவீரை யாளிருதயாலயனே
மருவுவாயே. ௰௭.

பிரசவசனத்துமது கரநாணையிழுத்தம்பைப்
பெரியவாரி
முரசவசனத்துமினு சிகைமடவாண்மீதெய்யேன்
முல்லையீந்தான்
பரசவசனத்துக்கோர் குறைவின்றிநாவலரைப்
பாதுகாக்குஞ்
சரசவசனத்துரையாம் வீரையிதயாலயவு
தாரமாலே. ௰௮.

சரமரக்காம்பல்விழிவாய் மாதுசிரோமணிமாலை
தனின்மாலின்ம
கரமரக்காசகிப்பேனு பொரிமிலென்றுளவள்வடித்த
க்கண்ணீரோவா
யிரமரக்காலிருக்குமப்பா நின்விரகத்தாற்சித்த
மிரங்கியாட்டா
வரமரக்காவுயர்வீரை யென்னிருதயாலயனே
வரிசைமாலே. ௰௯.

மதியாரம்பத்திலிந்தப் படிக்கிலையென்றேறுதினண்மின்
மதனவேள்சங்
கதியாரம்பத்திரியா வரமதர்க்குட்பதறிமனங்
கலங்கினுள்சேர்
பதியாரம்பத்தின்முடி மீதணிந்தவீசர்மலர்ப்
பதத்திற்போற்றித்
துதியாரம்பத்தியுடன் செய்தணியுமருதப்ப
துங்கமாலே. ௨௰.

மதுவரைக்கும்பாவினிய பாலந்தப்படிக்கருந்த
வைத்தாற்காலை
யிதுவரைக்கும்பாவிமதன் போராட்டமினியுங்க
ளின்போராட்ட
மதுவரைக்கும்பாவிசைக்கு மடங்காதென்றுண்மயலா
லரிவையாள்வாய்
முதுவரைக்கும்பாவிசயா கிருவையிதயாலயசு
முகபூமானே. உக.

வன்னமதிலாவணிய முகனிருதயாலயவேண்
மாலைதந்தான்
சொன்னமதிலாவிடிற்பார் மதப்பயலேமுலையரும்பைத்
தொடுக்கவந்தா
யென்னமதிலாந்தலணி மேடையினிலோடிப்போ
வில்லையென்றாற்
கன்னமதிலாளுக்கோ ரடியடிக்கப்பற்போய்ப்போக்
கவாயாவாயே. உஉ.

தராதரங்கண்டுவந்தமையுங் கொங்கைமொழியாளனங்க
சரத்தாற்சிதந்
தராதரங்கண்டுவந்தடிக்கக் குயில்படிக்கவுயிர்துடிக்கத்
தயங்கினாள்வந்
தராதரங்கண்டுவந்தனக்கு நித்திரையென்றதுவியந்தாள்
சாமீகல்வித்
தராதரங்கண்டுவந்தருளு மெங்களிதயாலயசுந்
தரபூமானே. உங

களத்தனத்திற்படுபயலங் கசனையோவென்மாது
கலங்கவிம்மு
குளத்தனத்திலக்கியமாய்ச் சரமாரிபொழியமயங்
குமலைக்கும்பா

உளத்தனத்திவலையேனு மருந்தவெணாமிலையவளுக்
குவந்தாளையா
வளத்தனத்திற்குபேரனிக ரும்மிருதயாலயனே
மன்னரேறே. உச.

கமலக்கந்தரக்குழலா ணின்விரகஞ்சகியாமற்
கலங்கியென்னை
விமலக்கந்தரமானை நிகரிருதயாலயன்முன்
விரைவினிற்போய்
அமலக்கந்தரங்கையைப் பிடித்துநலவார்த்தைசொல்லி
யானாலும்வேள்
பமலக்கந்தரமியமா ளிகையென்றேயழையென்றாள்
பரிந்தாள்கோவே. உரு.

விரும்பவனிமுழுதுமகி ழெங்களிதயாலயவேள்
வியன்சாரட்டில்
வரும்பவனிகண்டுமயல் கொண்டருகேநிற்கவெற்க
வன்றார்தந்தான்
கரும்பவ்வனியாயமினி நடவாதுன்போர்க்கடையைக்
கட்டேர்ப்பாதை
திரும்பவனினைவேகி னையாதேபிழைக்குமதி
செப்பினேனே. உசா.

கண்டசரமசரமெலாங் கேட்டுருகப்படிப்பாடங்
கநயமான
கண்டசரமதுகுலுங்க நடம்புரிவாளவடிரண்டோர்
மாதங்கன்னி
கண்டசரதனமதன்கை வாளியவன்பெயர்முகமாங்
காவலாசொற்
கண்டசரசமொனவந்தா ளென்னிருதயாலயனே
கலவிசெய்யே. உஎ.

கந்தரத்தாநத்தவிலை யாரமணிலுதிரவளைக்
கவுடனேசல்
அந்தரத்தாநத்தவிலை யாரமணிமூன்றிரவி
லடித்தும்பால
னந்தரத்தாநத்தவிலை யாரமணியங்கொளரு
ணல்குவிளைச்
சுந்தரத்தாநத்தவிலை யாரமணிமருதப்பா
சுகிக்கத்தானே. உஅ.

பாயசமானலதுவிர கந்தீர்க்குமென்பண்மதன்
பகையையென்னப்
பாயசமானகரிலுனை யல்லாமலாருரைப்பார்
பகரொன்றுரு
பாயசமானஞ்சொலலா மிவளழுகுக்கிரதியையப்
பத்திரோடு
பாயசமானதைவெறுத்தாள் விளையிதயாலயனே
பரிந்துசேரே. உகூ.

அட்டிக்கட்டுத்தரவை யன்றியொருவரையும்விடே
லகத்திலென்ற
தட்டிக்கட்டுப்பாடெத் தனைபுரிந்தும்வாயிலினைத்
தாண்டிமாரன்
தொட்டிக்கட்டுப்பாவுள் வரைக்கும்வந்தென்மானையெதிர்த்
துறுக்கிப்பூவை
விட்டிக்கட்டுப்புரிந்தா ணிருதயாலயனே
விரைவாய்த்தானே. நய.

கன்னியின்கண்சத்தியமே கவின்குமரன்சத்தியமே
கந்தான்கூந்தல்
சின்னவிடையந்தரமே செண்டுமுலையந்தரமே
தேகம்பார்க்கிற்

சொன்னநடைபிடியனமே துய்த்திலளோர்பிடியனமே
சுகமாய்ச்சேர்வாய்
மன்னவரைநேர்புயனே யென்னிருதயாலயனே
மதிவல்லோனே. ௩௧.

நந்தங்கந்தரமிடறு திமதுவிழியாளிந்த
நங்கையின்னங்
கந்தங்கந்தரமுரைக்கின் மேனகையுங்கால்வாசி
காணுமின்னுன்
சொந்தங்கந்தரமானை நிகரிருதயாலயவுத்
துங்கனேநீ
வந்தங்கந்தரங்கநிறை வேறமஞ்சமீதுவந்து
மருவுவாயே. ௩௨.

சக்குந்தங்கச்சினுத லும்மானும்பிறையுனிகர்
தையலெட்டுத்
திக்குந்தங்கச்சியினை யேபலமாய்நடத்தனங்கன்
றேவிதங்கச்
சிக்குந்தங்கச்சியிவள் ரூபமதிலீலையதிற்
றெரியாதில்லை
மிக்குந்தங்கச்சிவிகை யூரிருதயாலயனே
மேவுவாயே, ௩௩.

## கலித்துறை.

துரையானவெங்க ளிதையாலயவள்ளல் தொல்வரைவாழ்
அரைகான்முக்காலுக்குன் பேரோமொழியென் றமைத்தனனுன்
இரையாமனன்குழல் வண்டேவிரும்பின ளென்றுசொல்வாய்
வரையாருந்திண்புய னெங்கோன்றன்காதில் வரும்படிக்கே. ௩௪.

சீராருமெங்க ளிதயாலயவள்ளல் தென்வரைவாழ்
காராரும்பூங்குழல் கண்கட்குத்தோற்றுக் கயலினங்கள்

வாராருமுத்தியிற் காதலைவாய்ந்துளம் வைகலுமே
யாராருங்காண வனவாசமாகி யலைகின்றதே. ௩௫.

---

## வேம்பத்தூர்.

# பிச்சுபாரதிகள்

இயற்றியது.

கழிநெடில்விருத்தம்.

## நடுவெழுத்தலங்காரம்.

தச்சனொருநாடெக்குத் தனைநுகப்புச்
சானகியூர்முத்தனைப்பூ சனையோர்மந்திரி
யிச்சைகொளும்வாத்தியமென் றிவைபினைப்ப
ணைனக்களித்துமற்றவிரு பாலுமுண்சேர்
அச்சமறக்கல்லடையார் மான்கள்பூவை
யாகவிருதலத்தினின்மா லணிமுன்னாக
மச்சர்குருதாதிமன்னர் திறைவைத்தேத்து
மனவவிதையாலயபூ மானீதானே. ௩௬.

## பிரிதிநாமங்கள்.

தபதி - மாறுடு - பார்வை - வசுதை - மத்தி - மிதுலை - சிப்பி
சபரி - பட்டி - தடாரி - இவைகளாம்.

---

## வேம்பத்தூர்.
# சர்க்கரைபாரதிகள்
இயற்றியது.
## கழிநெடில்விருத்தம்.

வண்டாைக்கும்பிடமதுவார் வனசமுறைபவளைநிகர்
வடிவினுளவ்
வண்டாைக்கும்பிடமனத்தைச் செய்யுமிருதனமென்னு
மலையாலேது
வண்டாைக்கும்பிடர்த்தலைக்குந் துகின்மலர்சோர்ந்திடநின்றாள்
மருவாரான
வண்டாைக்கும்பிடவணக்கு மருதப்பேந்திரவிவளை
மருவுவாயே. ௧௭.

வனதனமாதந்தமா வடுக்கடுக்கட்கார்நிகர்
வாசக்கூந்தல்யவ்
வனதனமாதன்தாக மல்லாமலனங்கசர
வலையிற்சிக்கு
வனதனமாதவன்போல மதிகாயவாடி
வருந்தினள்சேர்வாய்ப்பு
வனதனமாதனதமரு தப்பேந்திரவின்றவளை
மகிழ்வாய்த்தானே. ௧௮.

---

## வீரகேரளம்புதூர்
# சுப்பிரமணியசாஸ்திரிகள்
இயற்றியது.
## கழிநெடில்விருத்தம்.

மகரடக்கயக்கட்டா ரிரதற்குப்பிதாகனக வத்திரன்கா
மகரடக்கயக்கட்டா ரியனுநிசாசரரைவென்ற மாதவன்வா

மகரடக்கயக்கட்டா ரியனமருதப்பவெதிர் வசுதைநூறு
மகரடக்கயக்கட்டா ரியையுனக்குவழங்கினன்பூ மகிழ்த்தானே.

## கலித்துறை.

சந்தனஞ்சம்பங்கி சம்பகஞ்சாதியுஞ் சார்ந்திடில்வ
சந்தனஞ்சம்பங்கி தங்கொண்டமானினி தானதிக
சந்தனஞ்சம்பங்கி ரீவஞ்சடைகொண்ட சம்புவெனுஞ்
சந்தனஞ்சம்பங்கி யாதாமருதப்ப தாரருளே. ௩௯.

கமலஞ்சமத்தி தனமாகுழனடை கண்கனிவே
கமலஞ்சமத்திர மதன்போரில்வாடிக் கலங்கினண்மா
கமலஞ்சமத்திருக் காள்கமலைக்கவின் காதலபா
கமலஞ்சமத்திக் கவிக்கீம்ருதப்ப காத்தருளே. ௪௰.

கவனங்கனம்பக நையத்தொடுக்கநங் கன்னிகைதுங்
கவனங்கனம்பக வன்மதிமாலையுங் காண்கிலம்புங்
கவனங்கனம்பகங் காதரவென்றனள் காத்தருள்வாய்
கவனங்கனம்பகர் வோர்க்கீமருதப்ப காவலனே. ௪௧.

தரங்கவிகங்க மணிசோலைமாலையுஞ் சார்ந்திடின்மா
தரங்கவிகங்கதத் தாள்வேள்கணைதொடச் சக்கரசந்
தரங்கவிகங்களி தந்தருணீயெனுந் தாரருள்வாய்
தரங்கவிகங்கண மீயுமருதப்ப தாட்டிகனே. ௪௨.

கனகமலைத்தவ னங்குழன்மென்னடைக் கன்னிபுள்வா
கனகமலைத்தவ னந்தனன்போராக் கடக்கவொளிர்
கனகமலைத்தவ ரோயினநோக்கெனுங் காமுனரக்
கனகமலைத்தவச் செய்மால்மருதப்ப காவலனே. ௪௩.

பாகனராகவ சந்தப்பயோதரப் பாவையன்னுண்
மோகனராகவ சந்தமுங்கேட்டிள மோகித்துப்புள்
வாகனராகவ சந்ததங்காவெனும் வந்தணைவாய்
மாகனராகவ சந்தணர்க்கீமரு தப்பமன்னே. ௪௪.

மாலையிலம்பகஞ்சூடாமடந்தைமதன்கணைகொள்
காலையிலம்பகஞ்சேதாகியேவுறக்கங்கையிலைச்
சோலையிலம்பகவன்னருணீயெனுஞ்சொக்கணைக்கி
வேலையிலம்பகல்செய்மால்மருதப்பமேவுவையே. ௪௫.

இணக்கமலர்முடியாளெழில்வேல்கணையாலிடைந்து
திணக்கமலர்முடித்தார்பெயர்கொண்டுதினமுநைந்தாள்
வணக்கமலர்முடியாரருள்சேர்மருதப்பன்மணம்
மணக்கமலர்முடிப்பாரோபுவிவளர்மாந்தர்களே. ௪௬.

பதங்கவனக்கவிழ்சோலையும்நோக்கப்பதறியுள
மதங்கவனக்கவினுள்வேல்கணையுறவானுயர்தே
சுதங்கவனக்கவிலொப்பானவன்பனைச்சொல்லுவெனும்
நிதங்கவனக்கவிக்கீவாய்மருதப்பநீயருளே. ௪௭.

கனக்காதரங்கவினஞ்சத்துக்காவதுபோற்கவலு
மெனக்காதரங்கவிராவமுமேபகையேவரக்கர்
சினக்காதரங்கவிநோதாவருளேனுஞ்செல்வியைச்சேர்
தனக்காதரங்கவிக்கீயுமருதப்பதாட்டிகனே. ௪௮.

---

வீரகேரளம்புதூர்

## கிருஷ்ணயங்காரவர்கள்

இயற்றியது.

### கலித்துறை.

மாதனங்கந்துகமின்னிடையாண்மதனைவன்சும்
மாதனங்கந்துளையாகமலர்க்கணைதொட்டெய்யப்பூ
மாதனங்கந்துதைவாரிக்கரளமனமென்றனண்
மாதனங்கந்துடிக்கையீசர்காசமருதப்பனே. ௫௧.

தடங்கடங்கொங்கைவிழிமொழிசந்தந்தழைக்குமுடல்
விடங்கடங்கம்மெனுமின்னாள்விரும்பினள்சேர்விரிந்த
விடங்கடங்காவினளந்தாரைப்போற்றியெதிர்சமரந்
தொடங்கடங்காரைவெலுமருதப்பதுரைச்சிங்கமே. ௫௨.

தங்கச்சிலம்புதரியாண்மதன்சரந்தைக்கத்தனத்
தங்கச்சிலம்புவிழிநின்றுதிர்த்துத்தியணிந்த்
தங்கச்சிலம்புகமாட்டாளணிந்தருடாசர்க்கருள்
தங்கச்சிலம்புவில்லானைப்பணிமருதப்பமன்னே. ௫௩.

அங்கஞ்சம்பாதமுகிள்கொங்கைசெங்கையங்காந்தணடை
பொங்கஞ்சம்பாசிக்குழலாள்சிலையிற்பொருமதன்கை
தங்கஞ்சம்பாலடிபட்டேதயங்கினள்தாரருணற்
சங்கஞ்சம்பாஷணையாய்க்கொண்மருதப்பதாட்டிகனே. ௫௰.

---

புலிக்குளம் ஜமீன்தார்

## முத்துக்குமாருத்தேவரவர்கள்

இயற்றியது.

### கலித்துறை.

துவளவனைக்குமிக்கன்பொரமாதுளஞ்சோர்ந்துவருந்
துவளவனைக்கடைக்கண்பார்த்தருள்சிறிதுந்தெவிட்டா
துவளவனைக்குமுன்னுயர்தம்மில்லந்தொறுந்திகழ்மூ
துவளவனைக்கரத்தாய்மருதப்பதுரைமணியே. ௫௧.

முக்குறுணிக்கரிப்பின்றேன்றல்பாலன்முலையுழிச்செம்
முக்குறுணிக்கிணையெங்கட்செய்யான்முன்முரணினர்தோ
முக்குறுணிர்கிட்டமேலோனில்யாம்பெறமுன்னுதிரா
முக்குறுணிக்கேதனமருதப்பமுழுமன்னனே. ௫௨.

குன்றூர்ப்

## பழநியப்பமுதலியாரவர்கள் குமாரர்

# குமாரசுவாமிமுதலியாரவர்கள்

இயற்றியது.

கழிநெடில்விருத்தம்.

கணக்கஞ்சங்கரநிகருங் கருங்குழல்கண்டங்கணுறு
கணிகைமாத
ரிணக்கஞ்சங்கரமனையா ரியல்பௌரீத்தில்லறமே
யேற்றெந்நாளும்
வணக்கஞ்சங்கரன்றாளின் வைத்துமகிழ்பவகனகம்
வழங்குந்திவ்ய
மணக்கஞ்சங்கரமெனக்கொண் மருதப்பபூபதியே
மன்னரேறே. ௫௩.

பொதியமலைக்குறுமுனிவன் புகன்றதமிழமுதமெனப்
போற்றும்வீரைப்
பதியமலையாதநிற விருதயாலயசுகுண
பாண்டியாவித்
ததியமலையருள்பெறுநின் சமுகதரிசனம்பெறுநற்
றகைமைதந்த
துதியமலைவாயுகந்த குகன்கருணைதனையெனென்று
சொல்லுவேனே. ௫௪.

---

வெள்ளகால்

## வெ. அ. பழநியப்பமுதலியாரவர்கள் குமாரர்

# சுப்பிரமணியமுதலியாரவர்கள்

இயற்றியது.

### கலித்துறை.

பொன்பாவையாரம் புயவிதயாலய பூமனெனு
மின்பாவைவேல்விழி மாறுர்மதன வினியகவிக்
கன்பாவையென்று பலராலுங்கேள்வியுற் ருனந்தித்தென்
றன்பாவையார்வத்துன் மேற்புனைந்தேனற் றயைபுரியே. ருரு.

காவீனையம்பதி நெஞ்சத்தராயெனைக் கைவிடல்பாங்
காவீனையம்பதி ஞன்மதனெய்யக் கருநிறநீங்
காவீனையம்பதி கத்தொளிசெய்யக் கலங்கினன்பூங்
காவீனையம்பதி யாளிதயாலய காவலரே. ருசு.

மாதருமஞ்சனந் தீட்டியகூரிய வாள்விழிசும்
மாதருமஞ்சன மாமுலைமேனிதம் வார்த்தனள்பூ
மாதருமஞ்சன கைத்தலநீயி வளையணைந்தான்
மாதருமஞ்சனம் போற்றிதயாலய மாதவனே. ருஎ.

தத்தையனைய மொழியும்பன்முத்தமுந் தங்குகுமு
தத்தையனையர் செரித்தமுதூட்டினுந் தாமரைப்பா
தத்தையனைய முடனிறையும்மருந் தாருநனிமித்
தத்தையனைய லறமோவணையித யாலயனே. ருஅ.

### வெண்பா.

பாமாலைபூண்டபுய பாரவிதயாலயநீ
மாமாலைநீக்கி மருவாநாட் — பூமா

தருமஞ்சனம்பெய்வான் ருமமுலைமேற்கண்
வருமஞ்சனம்பெய்வாண் மான். ௫௯

கனகமுலைவாட்டுகளக் காரிகையார்தேமற்
கனகமுலைத்தேருறுகொங் கைக்கோ - கனகமுலை
மன்னிரவிக்கையகலா மற்பொருந்தியும்மலரா
தென்னிருதயாலயகோ வே. ௬௰

## கழிநெடில்விருத்தம்.

நேற்றுமலையும்படிமன் மதனம்புங்காரிருளு
நிலவுந்தென்றற்
காற்றுமலைகடலுமெனைப் படுத்தியசங்கடமெவராற்
கணித்துக்கூறற்
பாற்றுமலையமலைமுனி நிகரிருதயாலயபூ
பாலனுனை
ஆற்றுமலைமன்னவன்பான் மின்னரசேயென்னிலைமை
யோதுவாயே. ௬௧

கந்தனவனளினமல ரம்புமதனெய்யவுன்மேற் காமுற்றம்பொற்
பந்தனவனமுலைபசந் தனமேனிமெலிந்ததுதீம் பால்பழங்க
சந்தனவனத்தையினிப் பேசுவதெனிம்மானைத் தழுவிச்சேர்வாய்
நந்தனவனம்புடைசூழ் விளையிதயாலயமன் னவர்கோமானே. ௬௨

பரமானந்தனையனைநன் கூட்டுகினுமருந்தாதுன்
பாற்சுகித்த
பரமானந்தக்கலவி நினைந்துருகும்பாவையைக்காப்
பாற்றலுன்றன்
பரமானந்தவமுயிருக் கணியெனக்கொள்விளையர்தம்
பதியேபொன்னம்
பரமானந்தனைநிகருந் திரவிதயாலயவிற்
பன்னவேளே. ௬௩

துரும்பவனிதையலர்தாய் பொன்றிரணமெனத்துறந்தோர்
துதிக்கமுத்தி
தரும்பவனிதையமகலா மையினிதயாலயகாமன்
தரித்தோனேற்று
வரும்பவனிதையனுறும் வம்புமுலைமாதுகண்டு
மையலேமிக்
கரும்பவனிதையொல்லா மலர்தூற்றவாடியிருந்
தயர்கின்றாளே. ௬௪.

சுகந்தந்தாவளமான விடமென்னவாழ்குழன்மா
துபரிபேசுஞ்
சுகந்தந்தாவளமானள் விருளாம்வேளான்மெலிந்தா
ளெரிதழ்க்கிஞ்
சுகந்தந்தாவளமான மயலாழிக்கோடமிவள்
சோகந்தீரச்
சுகந்தந்தாவளமானல் கின்சொலிதயாலயவுத்
துங்கமாலே. ௬௫.

நகரும்பாலனந்தனைய னையருட்டநகராம
னுவனும்வேளம்
புகரும்பாலனந்தனைய னையவெய்யமெலிந்தாளைப்
புணர்ந்துசெய்வாய்
பகரும்பாலனந்தனைய னையமாறுனக்களிப்பாள்
பயாணிமேலோங்
குகரும்பாலனந்தனைய னையவிதயாலயவுசித
குணபூமானே. ௬௬.

கனகவளமருந்தனமே னேக்குமுலையின்சொலெனுங்
கனியனம்பாக்
கனகவளமருந்தனமே யெனினுமருந்தாதயலார்
கௌவையான்மி

கனகவளமருந்தனமே னியின்மதனம்புறுத்தனையுங்
கலந்தாள்கைக்கோ
கனகவளமருந்தனமேய்வினாயிதயாலயசிங்
காரமாலே. கூஎ.

இவனிதையாலயமருமிக் கெனவுன்மோகத்துனைவ
தென்னென்றியான்சாற்
றுவனிதையாலயமருளுற் றிவெல்வயினுருணர்ந்தலர்தூற்
றுகிறாரந்தோ
வவனிதையாலயமருவா ரமவெனுநீயிவளையினி
தணைந்தாளாத
தெவனிதையாலயமருதப் பேந்திரசிங்காரரச
விசைவல்லோனே. கூஅ.

உகந்தவசந்தவிருதையா லயமருதப்பாதவமா
ருவரியாக்கொள்
சுகந்தவசந்தவிருதயா லயமருதப்பாதவமாந்
துயரோலென்றே
னகந்தவசந்தவிருதயா லயமருதப்பாதவமாங்
கணைச்செய்தோய்மா
சிகந்தவசந்தவிருதையா லயமருதப்பாதவமா
திணைச்சேர்வாயே. கூகூ.

மேதகவினையகடா வெவற்றினுக்குமேதகவாம்
விடைகொடுத்தஞ்
சாதகவினையகருக் கருள்புரியுஞ்சாதகவி
தயாலயாகைப்
போதகவினையகரா தியர்பதஞ்சேர்போதகநூ
புரமணிந்த
பாதகவினையகன்னி தனையணைந்தாற்பாதகமோ
பகர்ந்திடாயே. எ0.

கைக்கிளையாலலர்மேன்மங் கைக்கிளையாளென்னுமொரு
காரிகைசேக்
கைக்கிளையாவனவுந்தொ கைக்கிளையாவையும்பிரிந்துங்
களித்துவாழ்தன்
கைக்கிளையாங்ககற்றினள்சேர் கைக்கிளையாள்கலந்தணைந்து
கமழ்கொங்கைக்கோங்
கைக்கிளையாவாளைகமு கைக்கிளையாத்தாங்கிமுவை
காக்குங்கோவே. ௭௧.

தனந்தனின்மன்மதன்கணைப்போ தனந்தனிதம்வந்துவந்து
தைக்கவேவி
தனந்தனிச்சையளவாகத் தனந்தனியாய்மிகப்புலம்பித்
தவிக்குமென்சந்
தனந்தனியைக்கலந்தவணத் தனந்தனிகழ்ந்திடச்செயிரு
தயாலயாபோ
தனந்தனினமறிந்திலா தனந்தனிமுதலைப்பணிவி
தரணமாலே. ௭௨.

இணைமுறுமுத்தமவிழ்க ணீலமலரேய்ப்ப
விருதோண்மாணிக்கங்கம் பொருவவிழைபுரளும்
வனமுலைகளரும்புட்ப ராகமணமுளவேன்
மற்றவைநேராகவிடை வயங்குகொடிமான
வனமிவர்கோமேதகச்செய் மின்னுநூன்மயலா
லலர்தூற்றிக்குரவயிடூ ரியம்பலுக்கஞ்சாதுன்
றனைமருவச்சிரத்தையுற்று ளின்பவளநிரம்பச்
சையோகஞ்செய்யிருத யாலயவுத்தமனே. ௭௩.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ம | | | | | |
| | | | | மா | ன் | ய | | | | |
| | | | ச் | சொ | ணி | ச் | ச | | | |
| | | ய் | மெ | ண் | ரு | பா | ன் | த | | |
| | ப | ன் | ணி | ரு | ந | யா | ள | வ | த் | |
| ம் | ஞ | நா | ங் | மெ | யா | ன் | ய | டி | ண் | பா |
| | ப | ன் | ை | னு | ல | கு | பு | க | ழ் | |
| | | ன் | தா | த் | ய | பு | ர் | நே | | |
| | | | வ | ன் | பூ | த | ர | | | |
| | | | | த | மா | ரு | | | | |
| | | | | | ன் | | | | | |

பொ ை

இ
ர த ப
ந் த சி த் தி
ர வெ ண்
பா. ௭௬.

## சொக்கம்பட்டிச்

# செம்புலிப்பெரியசாமித்தேவர்

## இயற்றியது.

### கழிநெடில்விருத்தம்.

படிக்கும்பாவைரசத்தைக்கண்டனங்கனைதொடவும்பற்றாதேதப்
படிக்கும்பாராழியுடன்றிங்கண்மாருதஞ்சாடப்பாங்கிமாரோர்
படிக்கும்பாநிறையப்பாலருந்திடவாவெனிற்கண்ணுறப்பாராள்சே[ர்வாய்
படிக்கும்பாவலர்க்குமதிபாமருதப்பேந்திரசம்பன்னமாலே. ௭௫.

குப்பாலைவைத்தேவை விடவனங்கன்குமரிகண்டு
குறுகிவாடிக்
குப்பாலைவிழுந்தவளைத் தாயெடுத்துமார்பணைத்துக்
கொஞ்சியோர்சங்
குப்பாலைகொடுத்தாலுங் குமட்டுகின்றாணின்மாலை
கொடுத்துச்சேர்திக்
குப்பாலுளோர்கடுதி யெங்களிதயாலயசு
குணபூமானே. ௭௬.

பொருதனங்கச்சிலையாலே கனியுருண்டுபுரண்டெழுந்து
பொற்பந்தான
யிருதனங்கச்சிலையாக விம்மிநொந்தசந்துமிக
யிளைத்தேயுண்ணக்
கருதனங்கச்சிலைவெறுத்துக் கலைபுனையாளணைமகுட
கம்பத்தான
நிருதனங்கச்சிலைவகிர்ந்த மாலருள்சேர்மருதப்ப
நிருபரேறே. ௭௭.

தித்திக்குமரியதர மதுரகனிபாலனையுஞ் செலுத்தவிக்கிச்
சுத்திக்குமரியதரங் கத்துரும்பாசச்சுழன்று சதாதநின்னை
நத்திக்குமரிபதரங் குழல்விழிசோர்ந்தாடுயிலா ணன்மையுள்ள
புத்திக்குமரியதரம் பருகியணைமருதப்ப புனிதமாலே. எஎ.

ஊனந்தாவிரிராமா னங்கனநியுல்லாசத் துடனேயெய்யக்
கானந்தாவிரிராமா மதிகுழற்கண்முகச்சாலிக் கனிக்குந்தாயர்
கூனந்தாவிரிராமா பொற்கலைசேர்தனியெதிர்கை குவித்தேவைகுந்
தானந்தாவிரிராமா வென்வணங்குமருதப்ப சரசமாலே. எஅ.

சூதத்தந்தாதிரைவா ரிக்கிணையாந்தனமேனி துணைக்கட்டேவி
மாதத்தந்தாதிடனே யெனவருளுமாதேவன் மன்றிலன்று
தாதத்தந்தாதிமியென் றுடுமரன்மேன்முருக தாசமொற்றைப்
பாதத்தந்தாதிசொல்ல மகிழுமிதயாலயவிற் பன்னகோவே. எகூ.

அந்தவளையுண்டவன்சேய் சரந்தொடமாதனம்வெறுத்தே
யணிகளோடுஞ்
சந்தவளையுங்கலையுஞ் சோருதினிச்சகியேநான்
சகியேனென்று
நொந்தவளைச்சப்பிரமஞ்சத் தினிலிருத்தியிதட்டேனை
நுகர்வாய்பன்ன
கந்தவளைமேசைதனி லொத்திடச்செய்மருதப்ப
கலைவல்லோனே. அய.

விருப்புக்கும்பாவிற்பால் கொடுத்தாலும்வெறுத்தருந்தாள்
விற்கைவேட
னருப்புக்கும்பாலெய்தா னதிறற்கரவளைக
ளனைத்துஞ்சோர்ந்த
திருப்புக்கும்பான்மதிக்குந் தென்றலுக்குமன்றிலுக்குந்
திகைத்தாள்சேர்தென்
பொருப்புக்கும்பாகுமுறை வீரையிதயாலயவற்
புதபூமானே. அக.

கந்தனத்தானந்தாதா ராசுகந்தொட்டிடமெலிந்த
கன்னிமன்றில்
நந்தனத்தானந்தாதா வெனநடஞ்செய்வோற்பணிந்து
தளர்ந்தாள்சேர
னந்தனத்தானந்தாதா மனைவதனுவெனநாரா
யணற்றுதிப்போய்
வந்தனத்தானந்தாதா வென்போற்குவழங்குமரு
தப்பவேந்தே. அஉ.

பாவாசிக்குவலையபத் தர்க்கனுகாவணங்கிருபை பண்ணுமாற்கன்
பாவாசிக்குயர்நகுலா நயசுகுணதிகழ்குமுண பாகமான
பாவாசிக்கும்புலவோர்க் கருளுமிதையாலயவிற் பன்னுதென்னு
பாவாசிக்குக்கிரகஞ் சமைந்ததுந்தனுத்தரவுப் படிக்குத்தானே.

தருவரங்கத்தரினுலே ரதிபெறவும்மதன்கணைகள் சாடக்கூர்மை
மருவரங்கத்தரிகைநிக ரானநயனஞ்செவிமான் மயலானாள்சேர்
பொருவரங்கத்தரிவடிவேல் பிடித்தசலசக்கரத்தர் புனிதமான
திருவரங்கத்தரிபதத்தை வணங்கிருதயாலயசு சீலமாலே. அச.

பந்தனங்காமாவரிந கிலனடைகுந்தளநயனம்
பனுவன்மின்னு
மிந்தனங்காமாவரியைக் கருப்புவிலிற்பூட்டியென
திடத்திலேயி
குந்தனங்காமாவரிதாய்த் தொடிற்சகியேனெனப்பயந்து
கூறினள்சேர்
வந்தனங்காமாவரிபாற் செயுமிருதயாலயபூ
மன்னரேறே. அரு.

திருவனந்தமேர்குயங்கந் தரமாதைமதன்வருத்தத்
தினமுந்தாய்வந்
திருவனந்தங்கனியுடனே பாயசமுமருந்தெனிலாய்
தினமென்றாள்சேர்

திருவனந்தலதிபூசை பெற்றகிருஷ்ணமூர்த்தியதந்
திரமாய்ப்போற்றித்
திருவனந்தம்மடியார்க்கு வழங்கிருதயாலயசிங்
காரமாலே. அசு.

## கட்டளை.

பொங்கராவரியாந்தனநேத்திரப்
பூவைதன்னிடம்வந்தேயுருவில
னங்கராவரிவாளியினற்றெட
நாளுமாருதஞ்சாடவிவைவொடு
துங்கராவரிச்சந்திரன்காயமெய்
சோர்ந்ததாலின்றுசேர்ந்தணைவாய்சிவ
சங்கராவரிமாதவனேயெனச்
சாற்றிப்போற்றிதயாலயபாண்டியனே. அஎ.

பந்தனத்தைநிகர்தனநன்னடைப்
பாவைமீததிவேகமதாய்மதன்
வந்தனத்தைவெறுக்கத்தொட்டான்கணை
மாலைநீதந்துவந்துவந்தாளையா
வந்தனத்தைத்தளியில்வைத்துக்கையி
லள்ளியந்தணர்வாழ்கச்சொரிந்துவேற்
கந்தனத்தையைச்சேர்ந்தவனைப்பணி
காண்டிபாவிதயாலயபாண்டியனே. அஅ.

## கலித்துறை.

சாரங்கநேர்விழியாளனங்கன்சரஞ்சாடவன்ன
சாரங்கலமதில்வார்த்துமுன்னேவந்துதாயருப
சாரங்கள்செய்துதந்தாலுமுண்ணாளணைசந்ததமுஞ்
சாரங்கவிஞைக்காவிதயாலயதாட்டிகனே. அகூ.

பந்தனமாமுலைநன்னடையாண்முனிப்பாவிமதன்
வந்தனமாவெறுக்கத்தொடுத்தான்கணைமாலையரு
ளந்தனமாடைமிகுந்தனம்வாணர்க்கருள்சுமுகா
கந்தனமானடிபோற்றிதயாலயகாவலனே. கூ௰.

கருணாலயத்துதிக்கைமாவைக்காத்தவன்கார்மெய்க்கும்ப
கருணாலயத்துறச்செய்வனென்றேவென்றகாகுத்தனேர்
கருணாலயத்துறைதன்மருகாகலைநற்றுணருங்
கருணாலயத்துங்கனேயிதயாலயகாண்டிபனே. கூக.

சினத்துவசந்தனறுஞ்சூதங்கைமிசைசேர்த்தடர்ந்த
தனத்துவசந்தப்பொருப்பினிற்கோடிதரந்தொடச்சு
கனத்துவசனமின்னாளையர்ந்தாளணைகண்டுதுதி
சனத்துவசந்தையைசெய்யிதயாலயதாட்டிகனே. கூஉ.

கலிங்கங்கணையெனச்செய்திடுந்தாமரைக்கண்ணனைச்சொக்
கலிங்கந்தனைமறவாமலெந்நாளுங்கரங்குவிப்போய்
கலிங்கந்தகர்வளவாவிதயாலயகாண்டிபனே
கலிங்கங்கரவனைசோர்ந்தாளிவளைக்கலந்தணையே. கூங.

இருக்கும்படித்துத்துதிக்குஞ்சரோசவிணைப்பதன்ற
யிருக்கும்படிக்குமங்காந்தோனருள்பெற்றெழில்மெய்வெளுத்
திருக்கும்படிவக்கலையாண்மன்வாணிருங்கலிப்ப
யிருக்கும்படிக்கருள்செய்யிதயாலயவிந்திரனே. கூச.

வாசந்தனத்தையணியெனிற்றீயெனுமங்கைவிசு
வாசந்தனத்தைக்கிலையென்செய்வாளணைவாகுதென்ன
வாசந்தனத்தையணிபாணியற்கன்பவாணர்கட்கு
வாசந்தனத்தையருளிதயாலயமன்னவனே. கூரு.

## கழிநெடில்விருத்தம்.

நன்னைக்கும்பிட்டு வந்திக்குமருள்சிவனை யனத்தால்வெந்தோன்
மின்னைக்கும்பிட்டு வந்திக்குவளைத்தனன்சேர் வீரைவாழு

மன்னுறைக்கும்பிட்டு வந்திக்குவிளக்கரிநேர் மணிமார்பார்மா
லன்னுறைக்கும்பிட்டு வந்திக்குமருதப்ப வரசரோறே. கசு.

## வெண்பா.

வாகனங்க ளத்தானை வேலனம்மா னுக்குவெள்ளை
வாகனங்க ளத்தானை மாவரிசை—யாகவைத்து
வந்தனஞ்செய் தேத்துமித யாலயமன் னுயிவண்மேல்
வந்தனஞ்செய் தானணைகு வாய். கஎ.

சுரும்பனம்பால் பார்வைநடை சொற்றேர்கை மார்பிற்
கரும்பனம்பா லெய்தனன்சேர் காமுற்—றரும்பிரச
மாலதிகந் தம்புழுகார் மார்பிருத யாலயமால்
பாலதிக நட்புறும்பூ பா. கஅ.

பணியாரந் தேங்குழல்பாற் பாயசமும் வேண்டாள்
பணியாரந் தேங்குழல்பாற் பாய்கண்—ணிணைதுயிலாள்
சந்துமகிழ் முல்லை தரிக்குமித யாலயனே
வந்துமகிழ் வித்தருளு வாய். கக.

மாதனமே கச்சுமிலை மாரன்கணை விடுக்க
மாதனமே கச்சுமிலை யேமறந்தாள்—போதனையா
வீரையனைப் போற்றிருத யாலயவேந் தாகொடையிற்
காரையனை யோயணைந்து கா. ௩௦.

மாதுவத னங்கண்டு மாமகனு மேவிடுக்க
மாதுவதனம்புடைத்து மையல்கொண்டாள்—சீதரனார்
தந்தானை யாவலுறுஞ் சாமியித யாலயனே
தந்தானை யாதளவத் தார். ௩க.

கண்டுபயந் தேனங் கசனம்பா லும்மருந்தேன்
கண்டுபயந் தேனங் கசனம்பால்—வண்டுபுனை
மாலையதி நேமமொடு வாழ்த்திருத யாலயபூ
மாலையதி நேரமருள் வாய். ௩உ.

பாலனந்தன் மேற்கவிதைபாடும் புலவீர்காள்
பாலனந்தன் வாயருந்திப் பாரினுய்வீர்—மேலனந்த
சித்திரமா வின்றளியிற் செய்தருணம் மன்னனே
சித்திரமி னல்குவனற் சீர். ஙங.

---

முகலூர்

# இராமசாமிக்குருக்களய்யாவவர்கள்

இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

இருதையாலயனிகார மிடையுடையாளாய்வெகுநா
ளில்லையானத்
திருதையாலயன்வரினு மிசையாளுன்பான்மயலுற்
றேங்கினள்யா
னிருதையாலயமிலேநீ தொடைபெறுதற்கென்றுவந்தே
னீவாயன்பா
யிருதையாலயமதனை சொன்னட்டுந்தென்னட்டுக்
கிறைவரோறே. ஙச.

மங்கைகரங்கரும்புருவம் வணக்கியவிற்கரும்புருவ
மன்னும்பூநே
ரங்கமுலைகோங்கரும்பா மல்குலிவட்கோங்கரும்பாம்
பமிர்தங்கொண்ட
செங்கனிவாயாதுடனே சேரினிவாயாதிவள்போற்
றெவ்வர்போற்றத்
துங்கமிருந்தெவ்வுலகும் புகழிதயாலயமதனை
சுமுகமாலே. ஙரு.

அருந்தவளப்போதகத்தா னமிசையையிப்பூவிலுற்ற
வஞிபாயார்க்கும்
பொருந்தவளப்போதகத்தா னெனப்புகழ்விற்பன்னவிப்
பொன்னுள்காற்றல்
வருந்தவளப்போதகத்தான் மாரன்விட்டாலென்செய்வனி
மானுளுள்ளந்
திருந்தவளப்போதகத்தா திடவிதயாலயமதனை
சேருவாயே. ௱௬.

தலைக்கும்பாவிண் ணுலகந் தனக்கும்பாதலக்குமுயர்
தலமாந்தென்ம
துலைக்கும்பாவிடேகமதிற் றுறைசையிற்சற்குருதமிழாற்
றுலங்கும்பூபா
லலைக்கும்பாவிருக்கவுலைத்துன் றனைமெச்சியதையென்னென்
றறைகுவேன்றென்
வலைக்கும்பாவிவேகமுய ரிருதயாலயமதனை
மன்னரேறே. ௱எ.

கலங்கலைக்காதலுடன் றேற்றுவித்தான்மாற்றுதல்போற்
கலியைமாற்றக்
கலங்கலைக்காதவழி யுறுவீலைப்பதிமார்க்கங்
கண்டாய்பின்னீங்
கலங்கலைக்காதலுட னேவுமதன்போலுதித்தோன்
கனிவாய்ச்செம்பொற்
கலங்கலைக்காதசந்துக் கருளிதையாலயன்றருவான்
கனகந்தானே. ௱அ.

## ஆசிரியவிருத்தம்.

திருமாலைநிகரொன்ன மனுநீதியரசுபுரி
திடவிருதயாலயேந்த்ர
சிம்மாசனாதிபா வரியைப்பணிந்ததாற்
செய்யுளணியாய்க்கொள்வதா

லருமையுறுதோகையான் மருவுதலினாலய
மருந்துகைக்கோட்டையுறலா *
லாதியகலக்கணக் குடனும்பொருந்தலா
லய்யவிண்டுமிநாடலால் *
மருவுறுஞ்சூட்டுக் கதிர்க்கண்பொருந்தலால்
வான்மருவுதன்மையதனால் *
வளமுறநத்தங்குஞ் சிதப்பதந்தருதலான்
மகிமைமகொடுவளர்தலாலுங் *
கருணையுறுகயிலாய பதிபோற்றுலங்கியிக்
காசினியெலாம்புரக்குங் *
கனமருவுசெஞ்சாலி நிறைவீழிநகரில்வரு
காவலாநீவாழ்கவே. ௱கூ.

---

முகவூர்

# அருணாசலக்கவிராயர்

இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

தனமரங்கமழுங்குதலில்லாதவன
சக்கணியெய்தவனுமன்ம
தனமரங்கமழுங்குயில்போல்வாளிவட்கு
மெலியவருத்தஞ்செய்யுஞ்சந்
தனமரங்கமழுங்குளிர்காவுயர்வீழி
நகரினிதயாலயாவி
தனமரங்கமழுங்குவிழிகுழல்பதமா
மெனுமடமான்சகியாள்பாரே. ௱ய.

பூச்சரசங்கஞ்சிதறி மன்மதனும்வந்திரவிற்
பொரும்போர்செய்ய
லாச்சரசங்கம்பலவும் பொருந்துமிதயாலயவே
ளணைமேலேகீங்
காச்சரசங்கனியமுதே யென்றுசெய்துமுத்தமிட்டுக்
கலந்துமுன்ன
மேச்சரசங்கனியுமித வசனமெல்லாமின்றறிந்தே
னென்செய்வேனே. ௧௰௧.

பெருக்குமரியாதியினு லுயரிதையாலயனெனுங்கு
பேராவெங்க
டிருக்குமரியாதியிலுன் பவனிகண்டுதெரிசித்தாள்
சேர்வானேர்யா
வருக்குமரியாதியர்க்கு மெட்டாதவன்சடைமா
மதிகாயாம
லிருக்குமரியாதினிமே லிவளுடம்புமுண்மையுட
னியம்பினேமே. ௧௰௨.

கரும்பனையன்றிரவிலவன் முரசையுங்கோபஞ்செயுமென்
கன்னிக்கிந்தப்
பெரும்பனையன்றிலும்பகையா மிருதையாலயனீ
பிரிந்தாலென்று
விரும்பனையன்றியம்புமொழி கேட்டிருந்தும்வராதிருக்கும்
விதமென்னேநெஞ்
சிரும்பனையன்றினையளவு மிரங்காயென்னதினிவந்
திடுவாய்நீயே. ௧௰௩.

நேற்றுமலைவாயிருந்து வருந்தியதென்னென்றுரைப்பே
னிகழுந்தென்றற்
காற்றுமலைவாரிதியும் பகையாகமதன்சரஞ்செய்
கவலையெல்லா

மாற்றுமலைவாகுவெனும் புயத்திறங்கொண்டடையலரை
மடங்கவென்ற
ஆற்றுமலைவாழிருதை யாலயசிங்காரமன்ன
வுதாரமாலே. ௧௰௪.

சுரும்புலவமாமணஞ்செய் குழலார்வேளென்றுபழஞ்
சோற்றுக்கேனும்
விரும்புலவணமுந்தாரா வுலுத்தர்தமைப்பாடுதற்கு
விடாதென்போலும்
பெரும்புலவமாரையெலாம் புரந்தருள்வாயடையலரைப்
பிறங்குஞ்செய்ய
மரும்புலவமானமுறக் கௌவச்செயிதையாலயமா
மன்னரேறே. ௧௰௫.

மருதையாலயகலா மலர்ப்பொழில்சூழ்வீரைநகர்
மன்னர்மன்ன
விருதையாலயன்பவனி கண்டுமயல்கொண்டுகலை
யிடையிற்சோர
வருதையாலயமனுவு முருநிருநீயிதையவன்பால்
வழுத்தியுண்மை
கருதையாலயமனுகா தருளென்யானழைத்துவரக்
காணலாமே. ௧௰௬.

---

முகவூர்
# மீனாக்ஷிசுந்தரக்கவிராயர்
இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

திகம்பரவிமலையமலை யாதரபுராதனவண் சிரசிலேப
திகம்பரவிமலையமலை யாதரவாவுண்டவசெய் சேடன்பார

திகம்பரவிமலையமலை யாதனமாங்குறுமுனிவன் றிசைக்கக்கற்ற
திகம்பரவிமலையமலை யாதவிதயாலயவேள் செழிக்கத்தானே. ௧௰௭

முத்தமிழைத்தனகழுங்கம் மணைபயிலும்பேதைவந்தாள்
முகத்திலேவை
முத்தமிழைத்தனயகள பத்தையெடுத்தணிமயலை
மூட்டுகோவை
முத்தமிழைத்தனமிரண்டுஞ் சுவைசுவைசம்போகசுக
முயற்சைசெய்வாய்
முத்தமிழைத்தனதுபுக ழாக்குமிதயாலயமா
முக்யமாலே. ௧௰௮

பிரமரம்பயிலுங்குணமாப் படைத்ததிலென்பலன்மகட்குப்
பில்குதேனும்
பிரமரம்பயிலுங்கிளைவை வாழிதயாலயகருணைப்
பிரபுகீதம்
பிரமரம்பயிலுங்கோதை தராமையினாலிருமுலைமேற்
பிறங்கநீண்ட
பிரமரம்பயிலுந்திகைக்கும் விழிசுழலமயலுமிகப்
பெருக்கத்தானே. ௧௰௯

கனகலகத்துரங்கமொடு கணைதொடுத்துக்கனியைமய்க்
கஞ்செய்தானோ
கனகலகத்துரங்கசிவ வெனத்தாயர்புலம்புவர்சங்
கமஞ்செய்வண்மைக்
கனகலகத்துரங்கழியக் கடவுகதிர்வேலவணங்
காரைச்சீறுங்
கனகலகத்துரங்கதுரந் தரவிதயாலயகருணை
கரபூமானே. ௨௰

ஆனனங்கந்தரங்ககன மதிபணிலந்தமுலை
யளகமோவும்
யானனங்கந்தரங்ககனஞ் சுலவுவிழிநிகரொன்மகட்
கந்தோநின்று
லானனங்கந்தரங்ககனங் குழையருஞ்சொல்விடத்துணிந்தா
ரணைவாயேறும்
ஆனனங்கந்தரங்ககன மாலிவரைத்தொழுமிதயா
லயபூமானே. கஉக.

கலவிமயக்கனிகழவுங் காலமன்றுசிற்றிலிடைக்
கறிசோறாகக்
கலவிமயக்கனியிவளுன் பவனிகண்டுகொண்டபலன்
கைக்கொண்டாள
கலவிமயக்கனிகரம்பங் கசன்றொடுக்கக்கலங்கினள்சேர்
கருணைகோலா
கலவிமயக்கனிசுதனைத் தொழுமிதயாலயகருணு
கரபூமானே. கஉஉ.

கண்டுவண்டுநிகர்மதுர மொழிவிழிமாதுன்பவனி காதல்கொண்டு
கண்டுவண்டுகரநழுவ வுடைநெகிழவணைவிரித்த காமனம்பின்
கண்டுவண்டுமதிமயங்கு மிவளையணைபுராணமிலக் கணமோடேநி
கண்டுவண்டுதிகள்பெருக வுணரிருதயாலயசிங் காரமர்லே. கஉரு.

கனகவடக்கயவனெனுங் கலசமதப்பாவிவந்து கனிமேற்சீறிக்
கனகவடக்கயமுலையிற்பலதளவக்கணைதொடுத்தான் காற்றின்மாம
கனகவடக்கயமெடுத்த விசையபராசர்தொடை கமழுந்தாட்கோ
கனகவடக்கயனெனுங்கு பேர்விதயாலயசெய் கலவிதானே. கஉச.

சினத்தங்கப்பம்பரகே ருந்தனத்துத்தெரிவையெதிர்
சென்றுகாமன்
சினத்தங்கப்பம்பரங்கு முறத்தொடுக்கத்தயங்குவள்சேர்
தேர்முன்றனை

சினத்தங்கப்பம்பரமன் னவர்தரச்செங்கோலரசு
செலுத்திவண்கா
சினத்தங்கப்பம்பரனைத் தொழுமிருதயாலயமற்
செயசிம்மேறே. கஉரு.

வனிக்குமரியதரமுறு மாதுமயலாகியிடை மாதணைக்க
வனிக்குமரியதரமையச் சேதுபுரிகடற்றுணிக்கு வாடிக்கண்டும்
இனிக்குமரியதரமுஞ்சீ னியுங்கரும்புமிகக்கசக்கு தென்றனையா
இனிக்குமரியதரமுண்டு புணரிருதயாலயதே வேந்த்ரகோவே.

துரந்தராகவனவிசேர் கரனுணவாங்கண்ணியுனை
சொலிற்றேன்பான்ம
துரந்தராகவனமத னிரக்கமின்றிவாட்டுவன்பொற்
றொடியென்செய்வாள்
புரந்தராகவனவிசைப் பரிநகுலாகினுவைநகர்ப்
புரவலாபார்
புரந்தராகவனனின வேளிதயாலயமகிபா
புணருவாயே. கஉஎ.

திருக்கவனப்பரிநடத்து மிருதயாலயமகிபா
சேரீராறு
திருக்கவனப்பரிமனைநேர் மதியைவளர்த்தாரதுவே
செந்தீயாங்க
திருக்கவனப்பரிகலங்க னுறச்சகியாண்மெய்யினில்வாள்
தீட்டிமாரன்
திருக்கவனப்பரிதாங்குங் கொங்கைமங்கைசெங்கைவளை
சிந்தினளே. கஉஅ.

தனத்தியாகந்தரமா லெனுமிருதயாலயசீ தரனேமன்ம
தனத்தியாகந்தரமா வெனுமணக்கும்பூங்குழற்கஞ்சத்தைநேர்வை
தனத்தியாகந்தரமா முலைதனும்பமெலிந்தனண்மா தருமமேநித்
தனத்தியாகந்தரமா புரிந்தீன்றமகண்மயற்சஞ் சலந்தீர்ப்பாயே.

மாதானஞ்செய்யனம்பொன் புரியிருதயாலயகோ
மானையுஞ்ச
மாதானஞ்செய்யனம்மோ திமமகன்றதினிச்சகியே
வந்துகோல்சும்
மாதானஞ்செய்யமதப் பையல்வரிற்பிடியடிபின்
மலைதான்பெற்ற
மாதானஞ்செய்யவுடம் பரையானேன்முன்செலுத்தி
வழுத்துவாயே. ௬௯௰.

தனக்கலப்பையுறப்புரிந்தோன் சுதனுறுகேதனவிசய
சங்க்ராமாசந்
தனக்கலப்பையாலுழுஞ்செய்க் கிளுவையிதயாலயமா
தவனேமாது
தனக்கலப்பைவிடநாக மெனச்சூழும்படிதொடுத்தான்
சரத்தைக்காமன்
தனக்கலப்பையியற்றுவையேற் பிழைத்திடுநும்பேதையிந்தத்
தடவைதானே. ௬௯௧.

செம்பாகக்கவியமக மகிழிருதயாலயமற் சிங்கமேவேள்
வம்பாகக்கவிரிதழி மனமுருகிமயல்பெருகி வாடக்கோடி
யம்பாகக்கவினழியு மாறுதினந்தொடுத்தனனிங்கையோபால[யே.
னம்பாகக்கவிர்சிவனா ணெனவெறுத்தாட்குன்புயத்தார் நல்குவா

கனக்கமலையனமுலைக்கோ கனக்கமலையனமுலைக்கோ
காதன்வேனா
தனக்கணையும்பொருந்தினமுந் தனக்கணையும்பொருந்திலனீ
தயைசெய்வினை
வனத்திதயாலயன்பாற்க வனத்திதயாலயன்குணமும்
வழுத்தித்தார்பெற்
றெனக்குமுதவாய்கொல்சகி யெனக்குமுதவாய்மலர்ந்தா
ளென்செய்வாளே. ௬௯௨.

அங்கங்கங்கணங்குமறைந் தாலும்விடான்வேளதுவு
மன்றித்திங்கள்
அங்கங்கங்கணமுமக லாதிறைக்கும்போதுபொறு
ளையாவொன்றூ
அங்கங்கங்கணமுறப்போர் புரிதுரையேநான்கிலிடை
யாகச்சொல்லும்
அங்கங்கங்கணங்கவிஞர் தமக்குதவுமாவிதயா
லயசிம்மேறே. ௧௩௪.

அம்பரம்பம்பரந்தமரஞ் சிதமிவளுக்கிடைமூலைகா ரளகம்பாரை
அம்பரம்பம்பரந்தமரமரிவதுபோலிவண்மனத்தையரிவார்கற்பின்
அம்பரம்பம்பரந்தமர பினுக்கிசையக்கடந்திலளை யணைவாயையா
அம்பரம்பம்பரந்தமர மெழுமதிக்குமாவிதயா லயசிம்மேறே.

அஞ்சங்கஞ்சம்பந்தங் கொங்கைசெங்கைநடைநிகர்சொல்
லரிவைநெஞ்சம்
அஞ்சங்கஞ்சம்பந்த மாரனையோமிகத்தொடுத்தா
னணைபூகத்தார்
அஞ்சங்கஞ்சம்பந்தங் கங்கையரிபூருறவின்
றூற்றார்கோட்டின்
அஞ்சங்கஞ்சம்பந்தங் கொளுங்கிளுவைவாழிதயா
லயசிம்மேறே. ௧௩௬.

கடுத்தலுத்தரிடத்தனந்தங் கவியுரைத்துக்கேட்கிலுனைக்
கண்டிக்காது
விடுத்தலுத்தரீயமுதற் றருங்கொடையென்றகலெனச்சொல்
வீணர்தம்மை
யடுத்தலுத்தவருத்தமெலாந் தீர்ந்திடக்கண்பார்த்திடுவா
யடையாருக்குங்
கொடுத்தலுத்தமருக்கழகென் றருளிருதயாலசற்
குணபூமானே. ௧௩௭.

திருப்பரமாதருக்கரமா லெனுமிதயாலயதுரையைச்
சேவித்தென்பெண்
ணுருப்பரமாதருக்கமைவே ளெனுந்தியங்குந்தயங்குமய
லுறுமீதன்றி
யிருப்பரமாதருக்கனமோ டியற்றும்விழியெனத்தவர்சொல்
லிவளோயிந்தத்
தெருப்பரமாதருக்கம்வைத்து முத்துதல்போயேசுவரொன்
செய்குவேனே. கஙஅ.

அருமருத்துப்பைநிதம்பத் தாள்சுரமாய்வருந்துவதா
லனப்பாலேயா
வருமருத்துப்பையகற்றென் றூரதுபோலன்னையுஞ்செய்
வாளேயன்றி
யொருமருத்துப்பையல்புரி மாயமெனக்கண்டிலர்தா
ருதவிவாய்மு
திருமருத்துப்பையனையாட் சேரிருதயாலயபூ
சிதபூமானே. கஙகூ.

செஞ்சராசனந்திரண்டா யிரங்கணைவேள்பூட்டியமர்
செய்யவிண்டு
மஞ்சராசனத்தினிய முகவனிதைமிகமயலாய்
வளர்க்குங்காக்கைக்
குஞ்சராசனத்தில்விடு மாவினியென்றேங்குமயோ
கூடிச்சேர்சீர்
மிஞ்சராசனத்திலகும் வீரையிதயாலயபூ
வேந்தர்கோவே. கசய.

இன்னளிஞசனமார ளிக்குவிலேமிக்குவளைத்
தெய்யுமம்பாற்
பொன்னளிஞசனமாத ரிருவளையுங்கல்விசெல்வப்
பொருளினாலே

அன்னனிருசனமாகொண் டாளிவளைவிலக்கியிட
லாமோசேர்வாய்
சொன்னனிருசனமாவ னுறுமிதயாலயசுகுண
சுகபூமானே. கசக
தனந்தங்கப்பந்தனைய தையனுன்றன்மையனிறற்
சுகிமார்தம்மைச்
சினந்தங்கப்பந்தனைய ருந்தாதுநொந்தனள்சேர்
சிலைவேட்காலஞ்
சனந்தங்கப்பந்தனைய மாப்புரிவீரைப்பதியிற்
சகலகோவும்
அனந்தங்கப்பந்தனைய ரொடுற்றுதவப்பெறுமிதயா
லயபூமானே. கசஉ

## வேறு.

கணக்காவலரும்பணியன்மது கரமுங்கரும்புங்கொடுகோடிக்
கணக்காவலரும்பணிலமுறு கடலைமுழக்கித்தொடுத்தான்வேள்
கணக்காவலரும்பணிகுழலெங் கன்னிக்கிரங்கியருள்கழற்காற்
கணக்காவலரும்பணிவீரைக் கருணையிதயாலயதுரையே. கசந
மாகனகவில்லெடுத்த வாகனகனுமவ மானம்பெற்ற [ம்பாங்
மோகனகங்கொண்டுநித முங்கனகம்போற்புடைத்த முலையாட்க
கோகனகம்போடவுநோக்குங்கனகம்பெய்யுமினிக்கூடிச்சேர்வாய்
வாகனகந்தரமகிப வென்னிதயாலயசுமுக வரதமாலே. கசச
தங்கவடங்காதவழித் தாகவடங்கொண்டிரக்குந் தனங்கள்விம்மி
யங்கவடங்காதயர வாகவடக்கயக்கயலோ னடுத்துநித்த
மூங்கவடங்காதலுற்று மோகவடவாக்கினியை மூட்டினானுத்
துங்கவடங்காதவரை வெலுமிதயாலயமகிபா சுகஞ்செய்வாயே.
காகாவென்றிருப்புமனத் தார்ப்புகழிலென்கொடிபோற்
கதறுவாயெற்
காகாவென்றிருப்புவிரைந் தோடென்பாரவரிடம்போ
யலுத்தேன்வச்ர

தேகாவென்றிருப்புனிதா செகவலவாமிகநலவா
சீரார்கையால்
மாகாவென்றிருப்புறுதென் கிளநவைவிதயாலயபூ
மகிபரோறே. கசகூ

## ஆசிரியவிருத்தம்.

படியளந்தும்புரந் திடுவனரியென்றவற்
பாடிநானுறவுமென்னைப்
பாவலவவாவெனது வாழ்வுநீயறியாத
பான்மையென்கேளுமனையாம்
பாவையரிலேதரித் திரிதாறொருத்தியப்
படியார்கலிக்குளேயுற்
பவித்துமேவந்தவளு மற்றையவொருத்தியிப்
பண்பிளலெனதுபாலே
கடிதுற்றவில்வாழ்வெ னும்பெயர்க்காரணங்
காண்கலாமினுமெனுணவோ
கண்டதிலையெனினுநீ கேட்டிருப்பாயொர்சக்
கரமட்டுமுண்டுமஃது
காசானதன்றுனக் கீவதுமன்றுமுற்
காலநான்பாடியுற்றுக்
கனவடியும்வாங்கினேன் முன்னையென்பாலுமோர்
கவிவந்ததுண்டதற்கும்
அடியுதவினேனன்றி வேறொன்றுதந்திலே
னரியகம்பொன்றுமுளதே
யன்றியென்கையில்வே றில்லையெனநாடியே
யருமையாய்ப்பாடிவந்தா
யாதலாற்சும்மா வனுப்பலாகாதுபல
மானவடிவாங்குவாங்கென்
றடுத்துவரவுந்திடுக் கிட்டுப்பயந்துவிளா
வாகப்பின்வாங்கவெண்ணித்

துடிதுடித்தோடியே வந்துனதுசமுகந்
துதித்துப்புகன்றுநின்நேன்
றுயருற்றுவாடுமெனை நன்குபேணிக்கருணை
தோன்றப்புரிந்தருளுவாய்
சொற்புலவர்பாடிவரு மற்புதகவிப்பொருள்கள்
சொல்லுமுனறிந்துமகிழுந்
துதிபெருகிவருமிருத யாலயவுலாசஜெய
சுமுகமகராஜதுரையே. கசஎ

## கழிநெடில்விருத்தம்.

மற்கடகரவித்தகமத் தகக்களிற்றிலேறிவெகு மருவார்தங்கள்
பற்கடகரவித்தளமே னடத்துமிதயாலயபூ பாலாநின்னைக்
கற்கடகரவித்தவசில் வரராசைப்பதிக்குவந்துங் காணுதாற்கைப்
பொற்கடகரவித்தசொற்பே ரிதுவரையுங்கொண்டதென்றன்புந்தி
[தானே. கசஅ

பந்தனையடக்கயவ ரவைபுகுநல்லாரெனவேபதைக்குங்கொங்கை
பந்தனையடக்கயம மதனுலுமினமெலியப் படுமோவன்னார்
பந்தனையடக்கயவே ளோடியிடவரவழைத்துப் பாவையாடா
பந்தனையடக்கயமா மகிபவிதயாலயபூ பாலரேறே. கசகூ

மாதிரவியாபார திதனதுமாமியுமிவளே வாசக்கொங்கை
மாதிரவியாபார மடவரலாசொல்லிவளு மணந்துமேவி
மாதிரவியாபார மதியெனவும்புலம்பிநிதம் வருந்தலாமோ
மாதிரவியாபார வாவுமிதயாலயபூ மாவந்தானே. கருய

## முகவூர்
# சுப்பிரமணியக்கவிராயர்
இயற்றியது.

### கழிநெடில்விருத்தம்.

பரசமையங்களகற்றி யரசனகளெனப்புகழும் பதியிற்றோன்றிப்
பரசமையசிங்கமென வருகமிவாயகுரு பரனையான்றந்
பரசமையமீதருள்வா னெனப்பன்னூலருள்புரிந்த படிபார்யாரும்
பரசமையங்கடந்தபசுஞ் சிவாலயசம் பனமூமானே. கருக

எவ்விதப்பாவாயினுந்தேர் வல்லவனீயெனத்துறைசை
யிருக்குங்கோமான்
செவ்விதப்பாவாயினுமன் பியற்றுமவன்றிரமையெனத்
தினமுஞ்செப்பு
மவ்விதப்பாவாயினுமாத் தற்கடங்காதாம்புலவ
ரமைக்குமொற்றில்
கவ்விதப்பாவாயினுமுஞ் சீர்செவிதயாலயசிங்
காரவேளே. கருஉ

திருந்தவணங்காதனுயர் சோலைபுல்லர்மேற்பாடிச்
சென்றுவாடி
யிருந்தவணங்காதலுண்மை யெனத்தெளியாப்புலவீர்நல்
விழையார்க்கன்றி
வருந்தவணங்காதலுத்தர் நாணவருள்வான்கலியா
மம்மர்நம்மைப்
பொருந்தவணங்காதலுடன் சொல்வமிதயாலயமா
புனிதன்சீரே. கருங

மாதனங்கையாரவளி வழங்கிதயாலயமதனை
மயில்வந்தாணன்
னீதனங்கையாரவளிங் குவந்தனளேகென்பாயே
னிகழ்த்துஞான

மேதனங்கையாரவளி புரிந்தணைவாயெதிருவந்தே
யீந்தாலின்பா
லோதனங்கையாரவளி யுலவுமலையந்திகழ்நா
டுற்றூர்தாமே. கருச

தனத்தனந்தந்தனமெனவம் பலத்தாடுமரன்றிருக்க
தனுக்குவீந்தான்
வனத்தனந்தந்தனவிடைது வண்டுவருந்திடமீற
மலரம்பெய்தான்
சினத்தனந்தந்தனகரத்தால் வெதுப்பதுற்றான்சோமனென்ன
செய்வாணல்லோ
சினத்தனந்தந்தனமெனச்சொ லிருதயாலயமதனை
வினியாள்வாயே. கருரு

இருகுவடுவாயாதிங் கிவைபோலென்றுரைதனம்பார்த்
தினிதாந்தாயர்
பெருகுவடுவாயிருந்த தெனமறைத்தஞ்சுகங்கேன்ற
பிழையென்றுன்பா
லுருகுவடுவாள்பாலப் பாலுன்பால்வேண்டவந்தே
னுவந்தாள்கொண்மூச்
சொருகுவடுவாய்பொழில்சூழ் வீரையிதயாலயவுத்
துங்கவேளே. கருசு

இடங்கணிக்குட்படுத்தாத யானையைப்போலிருளெனும்வல்
விபஞ்செய்யுஞ்சங்
கடங்கணிக்குந்தரமலவா மூருவிலியும்பெருவலியாற்
கணைவிட்டானுன்
படங்கணிக்குவலையமன்னர் பணிமதனைமிகவிரும்பிப்
பார்க்குமிந்த
விடங்கணிக்குமொழிமாதை யணையிதயாலயவதிக
விரைவிற்றனே. கருஎ

கண்டகலங்கானுமுலை விமக்கசந்தாள்கரிந்ததலங்
கரிக்கமெய்யிற்
கண்டகலங்காவியந்தங் கவளையொன்னார்ச்செயித்துயர்வா
கையினைச்சூடுங்
கண்டகலங்காமனமா விருதயாலயமுதனுட்
கலந்தபோரிற்
கண்டகலங்காபுரிக்கா வலவின்றைக்கேகெனுமங்
களபூமானே. ௧௫௮

உரத்தணிகண்டுறுமொழியா ளிருமுலையைவாயமுத
முண்பார்மேலாந்
தரத்தணிகண்டுணரறிவா கரவிருதயாலயமா
தருமாமாரன்
சரத்தணிகண்டயிலவொட்டா திவள்வனப்பையானுரைத்துத்
தான்றேர்வாயோ
கரத்தணிகண்டுவந்திடக்கஞ் சனமெதற்கையாவியந்து
கலந்தாள்வாயே. ௧௫௯

காவியமகத்தியமாச் சொலவிழியாண்மேற்காமன்
கணைவாராமற்
காவியமகத்தியலிந் திரற்குமிசையாள்வருமுன்
கண்பார்த்தாலங்
காவியமகத்தியம்புங் கவிகளின்மாப்பிரியம்வைத்த
கன்றுதொன்னூற்
காவியமகத்தியன்போற் கற்றவிதயாலயமங்
களகோமானே. ௧௬௰

தனிக்கவிகைப்படைமுதலாப் பலபடையாவகுத்தரக்கர்
தமைவென்றானை
யுனிக்கவிகையுறுமனத்தாற் பணியிதயாலயமதனு
வுலகந்தன்னி

லினிக்கவிகையுற்றவருன் போலிலையென்றுன்சமூகத்
தினிதாயானுங்
கனிக்கவிகைக்கொண்டுநின்னைக் காணவந்தேன்மிகவுமனங்
கனிந்தாள்வாயே. கசுக

கவியமகமாவறிவில் லார்தமைப்பாடுதற்குருத்துக்
கவியாம்வேங்கை
கவியமகமார்சனிபோல் வரினுமினியெமைக்காப்பாய்
களபஞ்சேர்வா
கவியமகமால்பின்வந்தா லெனப்புகழ்சுந்தரமுடையாய்
கனிந்தன்பாகக்
கவியமகமாவுரைப்போர்க் கருளுமிதயாலயசங்
கக்கோமானே. கசுஉ

---

## திருமலைநாயக்கன்புதுக்குடி
# திருக்கமலக்கவிராயர்
இயற்றியது.

## கட்டளை.

கலக்கங்கோடியங் காக்கும்படிமதன்
கணைவிடக்கட்கடை கான்றதுண்டுமே
கலக்கங்கோடியங் காக்குயில்காமமாங்
கடற்குள்கைக்கலத் தின்புறக்கூடுமங்
கலக்கங்கோடியங் காக்குலஞ்சாய்தரக்
கவருங்கிருஷ்ண தியானகெம்பீரவி
கலக்கங்கோடியங் காக்கும்வைவேற்படைக்
காவலாஇருத யாலயபாண்டியனே. கசுந

கண்டலாதரு மாவிதுநேர்முகக்
கன்னிசொல்குழல் காதலித்துன்கொலுக்
கண்டலாதரு மாவிதுன்பேர்கிலாள்
கலந்துசேரொந்தை காயாதமுந்தைவாட்
கண்டலாதரு மாவிதுவென்னநீர்க்
கடல்நின்றூற்றெறும் வேலற்கன்பானவா
கண்டலாதரு மாவிதுராபுகழ்க்
காவலாஇருத யாலயபாண்டியனே. கரு௭

கன்னலஞ்சிலைக் காமருந்துங்கணைக்
காயந்தான்மெலிவாளை யிதட்டபால்
கன்னலஞ்சிலைக் காமருவாய்நுகர்
கன்னியென்னுமுன் கைக்கென்பளல்லணைக்
கன்னலஞ்சிலைக் காமருநாட்டுகங்
காணநீட்டிகக்கென் றுண்மயலாற்றுவாய்
கன்னலஞ்சிலைக் காமருமைப்புயக்
காவலாஇருத யாலயபாண்டியனே. கரு௮

கனகமால்வரைக் கேதனவிற்றுநுண்
கலைமருங்குல் வயின்மேருள்வதனங்கோ
கனகமால்வரைக் கேதனதாழியிங்
காரெணைமயி னேங்கிநின்றேநின்றுங்
கனகமால்வரைக் கேதனஞ்செய்தவங்
காண்டுமென்றனள் சேர்கருதார்ச்செறீஇக்
கனகமால்வரைக் கேதனந்தீட்டிய
காவலாஇருத யாலயபாண்டியனே. கருக

கந்தமாதனங் காறுபடர்துருக்
காண்டொறும்பல வாங்கன்னிபூவிலு
கந்தமாதனங் காறுடைத்தென்பருநன்
காதலான்மதி காய்பழுங்கண்ணனே

கந்தமாதனங் காறுகைக்குன்புயக் கண்ணிதந்தருள்
விண்ணுடுகோக்கமுன்
கந்தமாதனங் காறுளப்பாய்விறற் காவலாஇருத
யாலயபாண்டியனே. ககூஎ

காவியங்கம லத்திருமுண்டனு கமமனைத்துந்
தெளிந்தவனுட்டமோ
காவியங்கம லத்திருந்தானையன் கண்ணியாடவர்க்
கென்றுனுன்மோகத்தாற்
காவியங்கம லத்திருடீர்முனிக் கௌசிகன்பினுற்
றோர்தாடகைச்செறாஉங்
காவியங்கம லத்திருமார்புடைக் காவலாஇருத
யாலயபாண்டியனே. ககூஅ

கலங்கலீரொன்று பேசவந்தானுனைக் கலத்தலெண்ணிக்
கருத்தயர்காவிசை
கலங்கலீரொன்று னையுங்கொளீரொனிற் கண்ணிகண்ணியென்
றுளிலம்பாட்டுக்குக்
கலங்கலீரொன்றும் பாவலர்காளெனக் கனகதானஞ்செய்
கற்பகதாருவே
கலங்லீரொன்று போன்மின்மினுக்கிய காவலாஇருத
யாலயபாண்டியனே. ககூகூ

கஞ்சனங் கைக்குமா ராயங்காட்டுமிக் கன்னியர்க்கர
சானுள்கபோலமோ
கஞ்சனங் கைக்குமா ராயிற்பங்கயங் காலுக்கன்றியொவ்
வாமயல்கூர்ந்துநன்
கஞ்சனங் கைக்குமா ராதிருக்கின்றுள் கனகசப்பிரமஞ்
சத்தனை வாயையா
கஞ்சனங் கைக்குமா ராற்றல்காட்டிவெல் காவலாஇருத
யாலயபாண்டியனே. கஎ0

ககனங்கந்துகந் தாக்கும்வைவேலிடை களபமாமுலை
கண்பெற்றகன்னிமோ
ககனங்கந்துகந் தாக்குன்புயத்தினிற் கலந்துசேர்ந்தின்பங்
காணச்செய்வாயொனுர்
ககனங்கந்துகந் தாக்குமுன்னேயவர் கல்லுருக்குக்குப்
பாயங்கையுத்தமாங்
ககனங்கந்துகந் தாக்குயிற்றுந்திறற் காவலாஇருத
யாலயபாண்டியனே. கஎக

கடக்கும்பாசலங் காட்டுபடாமெனக் கச்சுக்காட்டு
மமுதமென்கொங்கைய
கடக்கும்பாசலங் காலணைமானுமென் காதலிக்குன்
கருணைசெய்கல்விதேர்
கடக்கும்பாசலங் கால்திரைவாரிவாயக் கவியைமுன்புசந்
தேகம்விடுத்தறங்
கடக்கும்பாசலங் காதரற்காய்ந்தவிற் காவலாஇருத
யாலயபாண்டியனே. கஎஉ

## வெண்பா.

காதுமது போது காட்டுமுப்பே ரீற்றெழுத்து
மோதுநகை முன்மூன் றெழுத்தென்று—ளேதுகணை
யென்னிடைசெல் லாதுகண்ணி யீந்தனன்பார் தென்னுட்டு
மன்னிருத யாலயபூ மன். கஎங

# புளியங்குடி முத்துவீரக்கவிராயர்

## இயற்றியது.

### கழிநெடில்விருத்தம்.

திருக்கணவன் றிருக்கைநந் திகழ்களம்வின் ணவரமுதஞ்
செஞ்சொலோர்கொம்
பருக்கணவந் தவர்கையில்வேல் பானல்விழி பொற்பிரளை
பருவமேனி
யுருக்கணவ னார்திகழ் வுபரிசுர தத்திலுரு
கச்செய்வாள்சேர்
தருக்கணவ னிதியெனநல் கிருதயா லயபாண்டிய
தமிழ்ச்சிங்கேறே. ௧௭௪

பருவலரை யிருள்குயம்வீ லோதமயில் சாயலயில்
விழியிப்பாவை
யுருவலராங் கணையிறு லெய்யமயல் கொண்டாளொண்
புயத்தாரீவாய்
திருவலரா முகசமுக தென்னாட்டிந் திராவெதிர்த்து
செருவிலோட
மருவலரை வென்றுவென்றி புனையிருதயா லயபாண்டிய
மன்னரேறே. ௧௭௫

நாகனதந் திரண்டேகு நாட்டரச னார்களநல்
விடையிம்மாது
மோகனதந் திரமுணர்ந்துன் மோகமுற்றுண் முல்லையருண்
முகுந்தநாமத்
தேகனதந் திரமலர்த்தா ளேத்துமிந்திரா விரதகெச
மிவுளியென்னும்
வாகனதந் திரபதியே யிருதயா லயபாண்டிய
மன்னரேறே. ௧௭௬

கனலமுது கற்கண்டின் மதுரமொழி யாள்காமன்
கணையாற்கூந்தற்
பினலமுது குறத்தாழப் பெருமயல்கொண் டனள்பிரச
முல்லையீவா
யனலமுதுக் குறையமரற் கவியருள நூறுமக
மாற்றுமிந்திரா
சொனலமுது தமிழுணர்ந்த விருதயா லயபாண்டிய
துரைச்சிங்கமே. கஎஎ

ஈங்குவளைக் கைக்கூட விழைத்தனது வரவுபார்த்
திருந்துநெஞ்சந்
தேங்குவளைக் கைக்குமன்னை சிலைவளைத்தான் மாரனுமென்
செய்வாள்சேர்வாய்
பூங்குவளைக் கையருள்வி லோசனமா மணாளர்கஞ்சம்
பொருந்தஞ்சம்போற்
றூங்குவளைக் கைமுகுந்தற் பணியிதயா லயபாண்டிய
சரசவேளே. கஎஅ

கலைவளர்த்த லாவிரவைக் காய்தலினுல் வீணையினிற்
கனிந்துதோன்று
நிலைமையினுற் றண்ணளியா னிறையமுத நீர்பெறலா
னெடுநீர்சூழ்ந்த
பலவுலகிற் கீர்த்திவெள்ளை பரப்புதலாற் பகைத்தவொன்னார்
பார்விட்டோடச்
சிலைவளைத்த புயனிதயா லயபாண்டியன் குபேரனெனச்
செப்பலாமே. கஎகூ

மாதவள வாரணத்தின் மகவான்போ னீபவனி
வருதல்கண்டு
சூதவள வானமுலைத் துணைபெருக்க விடைசிறுக்கத்
துகிலுஞ்சோர்ந்திப்

போதவளை வாவாகப் புகலுநிதூ தென்றுரைத்தாள்
பொருந்தச்சேர்வாய்
நீதவளை வாதளவப் புயவிதயா லயபாண்டிய
நிருபரேறே. ௧௮௰

சந்தமா வரைநொடியில் வழுங்குவா யென்றேவித்
தாமத்தேர்வ
சந்தமா வரைக்கணையாற் றுக்கமதி சுடவுடலந்
தயங்கிநொந்த
சந்தமா வரைகுழலி யெனமனஞ்சு ழன்றனள்தண்
புயத்தாரீவாய்
சந்தமா வரைத்தமிழ்தே ருளவிதயா லயபாண்டிய
சரசவேளே. ௧௮௧

துரும்பையிடை தலைச்செயிடை துவளவளர்ந் தோங்குதுணை
முலைகடென்னங்
குரும்பையிடைக் கிடைதங்கங் கொடுத்தாலுங் கிடையாதித்
தோகைசேர
விரும்பையிடைச் சியர்கூறை கவர்ந்துகடம் பேறிவிளை
யாடிப்பாம்பின்
கரும்பையிடை நடம்புரிதாள் பணியிதயா லயபாண்டிய
கருணைமாலே. ௧௮௨

கருங்குவளை கொடிமூக்குக் கண்புருவந் துடையரம்பை
கனங்கார்க்கூந்தன்
மருங்குவளை கொடிவதன மதியரும்பு நகைதேன்சொல்
கண்டம்வத்ரஞ்
சுருங்குவளை கொடிறுபடி மக்கலமித் தோகைதனைத்
தோய்தமிழ்க்குப்
பெருங்குவளை கொடியிரதந் தருமிதயா லயபாண்டிய
பிரபலவேந்தே. ௧௮௩

அரங்கவிர தியுமிரதி யாமிவள்பொன் மும்மதத்த
வாணைக்கோடு
தனங்கவிர தினமலரா மோட்டமிரண் டக்கமம்பு
தார்தாசிவ
கனங்கவிர தியர்கலைஞ ராதுலரந் தணர்சரணே
கதியென்றோர்கண்
மனங்கவிர தியின்படியே நல்கிதயா லயபூமா
மன்னரேறே. ௧௮௪

சுருப்பணியே ரிசைபாடித் துளிமதுவுண் முல்லைமலர்
தோய்திண்டோளி
உருப்பணியேந் துலகமெலாந் தாங்கிதயா லயவேந்தா
வுயர்காயாவின்
கருப்பணியேய் திருமேனி நவநீத கிருட்டினர்க்குக்
கனிவாய்ச்செய்யுந்
திருப்பணியே பணியாகப் பூண்டனைநின் சீர்த்தியென்றுஞ்
சிறக்கத்தானே. ௧௮௫

ஈனகரா சலத்தீர்ப்ப மூலமெனக்கூவுமிரு
பிறைநேர்கோட்டுத்
தானகரா சலங்காத்தோர்ப் பணியிதயா லயபாண்டியா
தழைக்கும்வீரா
மாநகரா சலசைவளர் மருமானின் மாலாலெவ்
வனமின்மாறு
ரானகரா சலந்தரவைங் கணைதுளைக்க வருந்தினளின்
றணைகுவாயே. ௧௮௬

சீதவலைக் கொடுவிடத்தைத் தெள்ளமுதை யொக்குமிரு
பார்வைச்செல்வி
யாதவலைக் கொடுவரிபோ லநங்கன்றேர் பாயமன
தயர்ந்தாள்சேர்வாய்

சூதவலைக் கொடுமுடியை வென்றபயோ தரத்தூய
மலரின்மாதைக்
கோதவலைக் கொடுவருவோர்க் கருள்பவரைப் பணிமருதப்
பேந்த்ரகோவே. ௪அ௭

இனத்தானை யானனங்க னெழிற்குதக் கணைதொடுக்க
விரண்டுகும்பத்
தனத்தானை யானவிற் சோரவயர்ந் தாளிவட்குன்
தளபத்தார்தா
வனத்தானை யானனமூழ் கிடவீர்த்த கராவையொளிர்
வளையால்வென்ற
சினத்தானை யானனத்தா னைப்பரவு மருதப்ப
ஜெயசிங்கேறே. ௧அ௮

மனவாத னத்தையொப்பி னிவளொப்பா மற்றையமின்
னார்கண்மாமோ
கனவாத நயமிவளைக் கலந்தறிய லாமணைவாய்
கமலப்பூமே
வனவாத னடிமுடிக்கே யணியெனக்கொண் டிவ்வுலக
மனைத்துந்தோளேந்
தினவாத னஞ்செயனே யிருதயா லயபாண்டிய
ஜெயசிங்கேறே. ௧அ௯

ஏதுருவா மலைத்தனத்தி னாடேகி யென்னுயிரை
யீரச்செய்தான்
றூதுருவா மலைத்தனுவான் றனக்கொடிந்தான்
றையானீசற்றேதாது
போதுருவா மலைத்தரளம் போன்றமுல்லை வாங்கிவா
வெனப்புகன்றாண்
மாதுருவா மலைத்தழுவும் புயவிதயா லயபாண்டிய
மன்னரேறே. ௧௯0

ஏகனக்கா ரிகைநடையு மிவணடைக்கொப் பலவுபரி
யின்பகல்கு
மோகனக்கா ரிகைமொய்ம்பின் முலைகொடுத்து முலையழுந்த
முயங்குவாய்செந்
நாகனக்கா ரிகைபடித்து நாற்கவிபா டியகவிஞர்
நவைதீரப்பொன்
னீகனக்கா ரிகையைவென்ற கொடையிதயா லயபாண்டிய
வெழிற்சிங்கேறே. ௧௬௧

வண்ணப்பா வைக்குமணி யிடைத்துகிலை
யுடுத்துமணற் சோற்றையூட்டி
யுண்ணப்பா வைக்குழந்தா யெனுந்தனங்கொண்
டைக்கனிக்கொப் பாயுமில்லைக்
கண்ணப்பா வைக்குணங்கள் காட்டவில்லைக்
கற்பனைகள் கலந்தசெஞ்சொ
லண்ணப்பா வைக்குமுள மருதப்பேந்
த்ராவிவட்கெ னவிற்றுமாறே. ௧௬௨

பவளவள்ளத் தனைகொணர்ந்த பாலனத்தை
யுண்ணவெண்ணிப் பருஞ்சுண்டைக்கா
யவளவள்ளத் தனைமறந்தா ளதற்குண்மதன்
கணைதொடுத்தா னாவிசோர்ந்து
துவளவள்ளத் தனையவளை பிறைமாலைக்
கயர்ந்தனள்சேர் தூயதாஞ்சங்
கவளவள்ளத் தனைக்கருத்துட் கருதிதயா
லயபாண்டிய கலைவல்லோனே. ௧௬௩

துரும்பரும்பு வனக்குமிழி யிரண்டுமிடை
நாபியிதழ் தொண்டைகோங்கின்
அரும்பரும்பு வனசமுகை யதுவுமொப்பா
மிரண்டுமுலை யவளைக் காமன்

கரும்பரும்பு வனக்கணைகள் கதுவநொந்தாண் மலரணையிற்
கட்டிச்சேர
விரும்பரும்பு வனமூன்றும் புகழிதயா லயபாண்டிய
விசயமாலே. ௧௧௪

பொன்னகம்பன் னிருகையனு யுதம்பறம்பு நாட்டமலை
பொருந்துஞ்சிந்து
வன்னகம்ப னகளமட மாதர்மட லெழுதுமரு
தப்பவேந்தா
பன்னகம்பன் மலர்ப்பாய லெனக்கொண்முகி றுதிராமா
யணத்தைப்பண்பாய்ச்
சொன்னகம்ப னீயதனுற் சொற்பொருள்வேற் றுமையின்றிச்
சொலப்பெற்றுயே. ௧௧௫

வன்னவரம் பைக்கும்வியப் புறுமெழிலாண் மூன்றுபுர
மாளச்செய்த
முன்னவரம் பைக்கடக்க முடியாது தியக்கமுற்றுண்
முல்லைத்தாரீ
சொன்னவரம் பைக்கடவா வரிச்சந்திர வசனுநாற்
றிசையுஞ்சூழ்ந்து
தென்னவரம் பைப்படப்பை செறிவீரை யாளிதயா
லயசிங்கேறே. ௧௧௬

கொல்லனங்கைக் குறடனவாய்க் கோரகையின் சினத்தனறு
காற்குணத்தின்
வில்லனங்கைக் குள்ளொழுக் துப்பறவை போற்சுழல
வெகுண்டானென்னை
மெல்லனங்கைக் குதுசகியே விளம்பென்று வட்கருள்செய்
விரையார்பூவாழ்
நல்லனங்கைக் குடையாளைப் பணியிதயா லயபாண்டிய
ராசரேறே. ௧௧௭

பஞ்சுகந்தரத்தைநிக ரடிமுடியாணின்மயலாற்
பகரிராவொன்
றஞ்சுகந்தரத்தையலா ரலர்தூற்றவாடிமன
மயர்ந்தாள்சேர்வாய்
கிஞ்சுகந்தரத்தையத ரத்துமையாள்பாகனைவேற்
கிளரும்வென்றி
மிஞ்சுகந்தரத்தையரி யைப்பரவுமருதப்ப
வேந்தர்வேந்தே. ககூஅ

சருவரியாமராட்டமோட் டம்வீழ்மாற்றுயர்ந்த
தமனியத்தின்
உருவரியார்சுவர்க்கமா ஞனதாசைகொண்டுளத்தில்
வருந்தவம்பாற்
பொருவரியாமனைதுணைவர் புத்திரர்சித்திரமலர்த்தார்ப்
பொம்மல்மார்பிற்
றிருவரியாயிராமஞ் சிந்திக்குமிருதயா
லயசிங்கேறே. ககூகூ

செக்கருமாலையுந்தீயும் விடமுமெனக்கண்டுமக
டிகைத்துநெஞ்ச
முக்கருமாலைக்கடக்க முடியாதுள்வருந்தினள்சே
ருயர்குலலைத்தா
மக்கருமாலைப்பரவு மன்றுவென்றேத்திமா
னிலவேந்தாமெண்
டிக்கருமாலைக்கிரீடந் தாழ்ந்துபணியிருதயா
லயசிங்கேறே. உ௱

## நடுவெழுத்தலங்காரம்.

திருமகளோர்திசைக்கிறைவன் வன்மீன்சொல்லிதிகழரசன்
மாதிவற்றின்பிரதிநாம
மருவுநடுவெழுத்தாறுஞ் சேர்த்துப்பார்த்துமன்னுநின்பேர்
வாசிமற்றப்பன்னிரண்டில்

இருமையினும்பயனல்க விசாரிதேடுவிருப்புயத்திற்
சூடுதெய்வமந்திரத்தை
அருமையுடன்புனையருந்து கவிஞர்க்கெல்லாமன்னையென
வருந்தென்னாட்டரசரேறே. உ௱க

கமலை-நிருதி-முதலை-செப்பி-பூபதி-கன்னி- இவைகளாம்.

பிரதிநாமங்கள்.

கானவரம்பனையவிழிக் காரிகைமாரன்கணையாற்
கவலுற்றேதா
யானவரம்பனைவான்மிக் கயர்ந்தனள்சேர்வாய்செஞ்சொ
லடருஞ்செய்யின்
ஞானவரம்பனைத்தும்வலை தருமுந்தமலிவீரை
தனைப்புரந்து
வானவரம்பனைமான வறஞ்செயிதயாலயபூ
மன்னரேறே. உ௱உ

ஒருவரையிலாதபுது மதுவனையாடிரண்டிரண்டு மாதமுண்டு
பெருவரையிலாங்கலிக்காய் முலைவிம்பிவிம்பிமணி பெய்கலாப(ண்
மருவரையிலாதரவா யுடுத்ததுகிலுஞ்சோர்ந்தாண் மருவிச்சேர்ப
தருவரையிலாத்திரட்டுஞ் சாமியிதயாலயசங் கிராமமாலை. உ௱௩

கடகரவிகடகயங்காத் தவர்காயவெளிமேற்போங்
கதித்தவோர்ச
கடகரவிசேடரத பதிநேராங்கௌத்துவர்கா
ரெழுவோர்தஞ்சங்
கடகரவிடைநீக்கு கண்ணைப்போற்றிருதயா
லயகாண்டபா
கடகரவிதனினினது காட்சிகண்டார்க்காட்சியாங்
கமலமாதே. உ௱௪

ஆரவிலோதனநடைமா னைகையென்பாரதுவன்றி
யரன்கைமேவும்
பாரவிலோதனமென்பார் பதுமினிமாதிவளைமனப்
பரிவாய்ச்சேர்கு
பேரவிலோதனநிறைவிற் பெரிதிதெனுமாடநிரை
பெறுவிளைக்குள்
வீரவிலோதனநாட்டு புகழிதயாலயபாண்டிய
விஜயமாலை. ௨௱௫

கருந்தாதுகணைமலர்மென் கழையலவன்கழைசிலைநாண்
கள்ளுண்வண்ட
ரிருந்தாதுகணையமத னியற்றுசமர்க்காற்றும
விரவிற்சற்றும்
பொருந்தாதுகணையெனது பூவையணைவாய்புயத்திற்
புனையுந்தாரி
வருந்தாதுகணையமென மலியவெழில்சேருமரு
தப்பமாலை. ௨௱௬

நந்தசந்தசந்தினம்வீட் டினுமாரன்பூங்கணையா னைந்துநைந்து
நொந்தசந்தசந்திவட்கு நோவகலாதனைமீர்நொய் தாம்பூவில்வ
சந்தசந்தசந்திரகுல வழுதியெனப்புகழிதயா லயசங்கிராமன்
கந்தசந்தசந்திலகு கனபுயக்கற்புறின்மகிட்சி காட்டுந்தானே.

கட்டளை.

அங்கராகவனைவாற்பொலிந்திடு மம்பொன்மேருமு
லையாண்மயலினை
லிங்கராகவனைவாரெழிற்பணி யெய்ந்திடாதினைத்
தாளின்றுசேருவாய்
வெங்கராகவனைவுசராதெனை மீட்குவாயெனும்
வேழத்தைக்காத்தரு
டுங்கராகவனைப்பணியுமிதயா லயேந்த்ரசசில
கம்பீரனே.

இந்தராசன காவலினுற்றவென் மாதில்லுக்குளெவ்
வாரொருவெழில்வில்வ
சந்தராசன காகின்மலர்கொடு தான்வந்தேசமர்
செய்தான்கழுவுவை
குந்தராசன காதரவோற்பணி கொள்கையாய்குற்ற
மில்லாதசீவக
சுந்தராசன காசுமுகாவித யாலயேந்த்ர
சுசீலகம்பிரனே. ௨௱அ

அருவராசசி காவலன்மெய்க்கண்ண தாகவேவுகொண்
டாகந்துளைத்தனர்
வெருவராசசி வெந்தழல்போற்சுட வெம்பிறுளவை
வாய்விரிசெஞ்சடை
யொருவராசசி யாற்றரபவென்றவ ருபயபாதநெஞ்
சுள்ளக்துப்போற்றிய
துருவராசசி மாசனவையித யாலயேந்த்ர
சுசீலகம்பிரனே. ௨௱௯

கமலராகவ னப்பணிபூட்டிய கன்னிவன்னிப்
பரியான்கடுந்துதாக்
கமலராகவ ருங்கணையான்மனங் கன்றிறுணன்றீ
ளுள்கலந்தாளுவாய்
கமலராகவ னிபடிகால்வடிவா னவன்கருங்கல்லைப்
பெண்ணுக்குதாட்
கமலராகவ னைப்பணியும்மித யாலயேந்த்ர
சுசீலகம்பிரனே. ௨௱௰

## கலித்துறையமகம்.

பாலைவனத்தையும் நீக்கும்விகங்கப் படர்மயில்வன்
பாலைவனத்தையு நீக்காதுசென்றனள் பத்திவிருப்

பாலைவனத்தையர்ப் போற்றிதயாலய பாண்டியன்வெற்பின்
பாலைவனத்தைக்கண் டேமுலைப்பாலுண் பழுமறந்தே. ௨௧௧

மந்தாநிலங்கதி யாய்வரமால்கொளு மான்மிசைவன்
மந்தாநிலங்களை யாருமென்செய்குவள் வாழ்விளிற்சி
மந்தாநிலங்கள் பதினாலுந்தாங்கும் வரைப்புயதா
மந்தாநிலவு முகவிதயாலய மன்னவனே. ௨௧௨

ஆனையம்பாரியை நேரிதயாலய மன்னவகொம்
பானையம்பாரியி னீவரப்பார்த்தவ னங்கினைவந்
தானையம்பாரிருட் போதேவருத்த வயனும்விதித்
தானையம்பாரி தறிந்தாலுண்டாமின் றணைகுவையே. ௨௧௩

தென்னாட்டரச முனிவர்க்குக்காட்டு சிதர்சிரியிங்
தென்னாட்டரசத் தரைப்பணிவாணனைச் சேர்ந்திடவந்
தென்னாட்டரசல்கு லாள்திருத்தோண்முலை தேங்கண்ணிதா
தென்னாட்டரச புகழிதயாலய சிங்கக்கன்றே. ௨௧௩

தருமாதவளிவ ளாமெனுங்கார்த்தைக்குத் தாயெனும்ப
தருமாதவனி னலவனும்வாட்டத் தளர்ந்தனனீ
தருமாதவனிலப் பேரேவிரும்புந் தழுவுபுகழ்த்
தரும்மாதவம்புரி யும்மிதயாலய தார்மன்னனே. ௨௧௪

கனகம்பராவு திருவுருமாதவன் கையிலுறை
கனகம்பராகள மல்குல்பணைத்துக் கதிர்த்தமுலை
கனகம்பராலி னடைவயின்மாதிவட் காபரிவா
கனகம்பராய்தமி டேரிதயாலய காண்டிபனே. ௨௧௫

பாகரசத்தங் குயினிதம்பங்கவுட் பாவைக்குமை
பாகரசத்த ரெளவருமாரன் பகையைவெல்கிரு
பாகரசத்த மதிளரங்கர்ப்பணி பண்பவிருப்
பாகரசத்தமி டேரிதயாலய பாண்டியனே. ௨௧௬

சந்தானந்தாருனை யாற்சாற்றவேண்டுமென் றேவியென்வ
சந்தானந்தாரும் வருமென்றிருந்தனள் சார்ந்தணைவாய்
சந்தானந்தாரு மெனக்கேட்குந்தியாக சற்கீர்த்திபெறு
சந்தானந்தாருவந் தாளிதயாலய தாரண்ணலே. ௨௧௭

தாதியருந்த னனையருமேதிலர் சந்துசுகந்
தாதியருந்தன மும்விரும்பாள்தொடை தாவல்கவந்
தாதியருந்தடல் வென்றோர்ப்பணிதன தாதிரியந்
தாதியருந்தமி டேரிதயாலய தாரண்ணலே. ௨௧௮

மலையமுனிக்கரும் பேந்திமதனனிம் மாதுமன
மலையமுனிற்கு மலர்தருவாய்மெய் வருத்தமுறு
மலையமுனித்தர்க்கு நீத்தாரைப்போற்றிய வாதமிழின்
மலையமுனிக்கு நிகரிதயாலய மன்னவனே. ௨௧௯

பரிசந்தநற்கவிக் கீயிதயாலய பாண்டியன்வெற்பர்
பரிசந்தனந்தரச் சென்றூர்வந்தாரென வேயவர்கைப்
பரிசந்தநந்தொலிக் கின்றதுபார்மயி லேமனவெப்
பரிசந்தநம்வனை பூணணிவாயிப் பகலுநன்றே. ௨௨௦

மதிகாந்தநாரந் தரக்குளிர்மேடையின் வான்மதியான்
மதிகாந்தநங்கை வருந்தினள்சேர மனதினிற்சம்
மதிகாந்தநாடிய வூசியைப்போன்மண் ணுலகிற்சந்திர
மதிகாந்தனுவுனை யாயிதயாலய மன்னவனே. ௨௨௧

வல்லியந்தாமரை மேற்பாயவன்கரி மேலரிதா
வல்லியந்தாம னடுங்கச்செயும்வழி மாதவன்மா
வல்லியந்தாமரை போற்றிதயாலய மன்வெற்பிவ்
வல்லியந்தாம மூலைவேட்கையால்வர னன்றலவே. ௨௨௨

அனந்தனந்தானல் வடத்தேபுரியச் சுதனருளா
லனந்தனந்தானந் தருமிதயாலய வண்ணல்வெற்பி

லனந்தனந்தான வணைக்கோடுசாயன் மயிலயில்கண்
ணானந்தனந்தான வனல்குறுண்டங்கண் டறிநண்பனே. உஉங

மாவம்புராசி விழியாய்வருவனென் றென்முனஞ்சும்
மாவம்புராசியம் பேசிச்சென்றூர்வந் திலரடியம்
மாவம்புராசிறு காற்பகைக்கென் செய்வன் வன்னிப்பரி
மாவம்புராசி மதனிதயாலய மன்வெற்பிலே. உஉச

அருந்தவருந்தத் தெவுட்டாவமுதிவ ளற்புருவ
வருந்தவருந்தக் கணைதைத்துமீண்டன ராபலதே
வருந்தவரும்புக ழும்மிதயாலய வண்ணல்வெற்ப
வருந்தவரும்பொறி யைந்தையுமேவென் றடர்த்தவரோ. உஉரு

கரும்பையங்காவிர தத்தேறிவந்தெதிர்த் தானழற்செக்
கரும்பையங்காட்டி யலர்ந்தவந்தாரிலைக் காதலர்நோக்
கரும்பையங்காவிரி வாரிதயாலய சன்னன்சோனி
கரும்பையங்கான்ம லரும்மெனக்கேளினிக் காரிகையே. உஉசு

பனிக்காகவலத் தருமிதயாலய பாண்டியன்வெற்பர்
பனிக்காகவல மதுபார்வருவன்வல் லென்றுசென்றூர்
பனிக்காகவல விடந்தந்தனர்பர னென்றறிந்தும்
பனிக்காகவலத் தலைப்பெறச்செய்தனர் பண்புநன்றே. உஉஎ

கந்தருவப்பெண் டெரிமயின்மேன்மல ராங்கணைமு
கந்தருவப்படி வத்தான்பொழிந்தனன் காத்தருள்வாய்
கந்தருவப்பது மைக்கருள்கண்ணன் மருகர்செந்திற்
கந்தருவப்பப் பணியிதயாலய காண்டிபனே. உஉஅ

திருவீணைமாநகர் வேந்திதயாலய தீரன்வரைத்
திருவீணைமாதஞ் சுமந்தேனைவிட்டொரு செல்வன்பின்ன
திருவீணைமாவுட ஞானும்போற்செல்லத் தெப்பதியாந்
திருவீணைமாற்கத் தெதிர்காணிலெற்கின்று செப்புநரோ. உஉகூ

பொன்னிக்குமன்னிக ரும்பிதயாலய பூபதியே
பொன்னிக்குமன்னிய மாக்குழூடன்மொழிப் பொன்னைக்கரும்
பொன்னிக்குமன்னிடம் போழ்ந்தெனப்பூங்கணை யாற்பிளக்கப்
பொன்னிக்குமன்னிய பாணியன்போர்தவிர் போந்தின்றைக்கே.

தந்தரவாவி யனையார்நகைக்கத் தடங்கணின்முத்
தந்தரவாவி யலைத்துரும்பாகினள் சார்ந்தணையோர்
தந்தரவாவி யவாய்சிவகாமிபொற் றாள்பணிசு
தந்தரவாவி யமானிதயாலய தார்மன்னனே. ௨௩௧

வாதாயனங்கனல் தந்தெனவான்மதி காந்திடவோ
வாதாயனங்கனி தந்தாலுமுண்கிலண் மாதணைய
வாதாயனங்கள் செறிசித்ரமாநதி யாயெழிலின்
வாதாயனங்களை வெல்லிதயாலய மன்னவனே. ௨௩௨

இனனந்தலையின்முத் தினெழிலாற்றித யாலயவே
ளினனந்தலைநமக் கெய்தாமலெய்துவ ரெய்திலரோ
வினனந்தலைவிடி யத்தோன்றிடான்மயி லேகமலத்
தினனந்தலையி லெழுதும்வினைப்பய னென்செய்துமே. ௨௩௩

கற்புடைக்குங்கன வெற்பாகுங்கையிற் றிகிரியினோங்
கற்புடைக்குங்கதிர் மெய்மறைத்தோர்க்கன்பன் கன்னியர்நோக்
கற்புடைக்குங்கவின் சேரிதயாலய கன்னன்மொய்ம்பிற்
கற்புடைக்குங்கற்பை யென்றுற்பவனியைக் காண்கிலனே. ௨௩௪

வளரிக்கொடிய விடவிழியார்வசைக் காற்றலளி
வளரிக்கொடியக் கயம்போலவாயினள் வந்தணைவாய்
வளரிக்கொடிய மதிபோன்முத்தீனுந் தென்னாட்டுமன்னா
வளரிக்கொடியர சேயிதயாலய மன்னவனே. ௨௩௫

புங்கவராகவர் தென்றலந்தேர்மிசைப் போந்துமலர்ப்
புங்கவராகவஞ் செய்தார்நலிந்திடக் கொங்கைபொருப்

புங்கவராக வளர்ந்தனபூவைக்குப் பொன்னைப்புனை
புங்கவராகவர்ப் போற்றிதயாலய பூபதியே. ௨௩௬

மஞ்சரிகோவை மலர்க்குழல்கண்ணிதண் மானணிதா
மஞ்சரிகோவை மணிவடஞ்சோர வருந்தினள்சேர்
மஞ்சரிகோவை யுலாமடல்பாடி வருகவிக்கு
மஞ்சரிகோவைய நல்கிதயாலய மன்னவனே. ௨௩௭

கோபாலனந்தம் புரிவோன்குறைதவிர் கொண்டல்வண்ண
கோபாலனந்தமர் கையாவென்றேத்திப்பொன் கோமுடிக்குக்
கோபாலனந்தந் தரமாட்டியநவ நீதகிருட்ண
கோபாலனந்தந் துரையிதயாலய கொற்றவனே. ௨௩௮

கந்தரமாவனை காதுவனைகண் குவளைவிண்ணுக்
கந்தரமாவனை யாவிவளைக்கனி வாயணைசு
கந்தரமாவனை தாரிதயாலய கன்னகுல்லைக்
கந்தரமாவனை யுண்டோர்சுதன்கைக் கணைகடிந்தே. ௨௩௯

கருமாவணித்திலம் வேற்கண்கவினகை யாமெனப்ப
கருமாவணியிடை யாள்கனலாகக் கதித்தெழுசெக்
கருமாவணிமணி யோசையும்வாட்டக்கற் பாருளர்ந்த
கருமாவணிய லருளிதயாலய காண்டிபனே. ௨௪௰

பஞ்சவனக்கவிச் சங்கத்தைக்காத்திலன் பஞ்சத்தின்முன்
பஞ்சவனக்கன நீர்ந்தாய்கவிஞர்க்குப் பாரிப்பிர
பஞ்சவனக்கனம் போற்கொடுத்தேபொற் பராகஞ்செறி
பஞ்சவனக்கணை வேளிதயாலய பாண்டியனே. ௨௪௧

ஒருங்குலகத்துக்கு மீறுதுவெம்பரி யூர்நகுலா
பெருங்குலகத்துக்கு ளாளிதயாலய நேயகடற்
பெருங்குலகத்துக்குந் தென்றற்கும்வாடுமென் பேதைமகண்
மருங்குலகத்துக் குடையுறவின்றி வருந்தினளே. ௨௪௨

இருமாதனஞ்சய வட்டனையானை யெதிர்த்துமதன்
பொருமாதனஞ்சய னத்தையுநீத்துப் புலம்பிமன
தொருமாதனஞ்சய லார்வசைக்காற்றில ளோங்குமுல்லை
மருமாதனஞ்சய னேரிதயாலய மன்னவனே. உசங

நாரிகைக்குஞ்சரத் தானூர்ப்பெயர்லைவத்து நாடிமதன்
பூரிகைக்குஞ்சரத் துக்கும்வருந்திநின் பொற்புயத்தின்
ளூரிகைக்குஞ்சர தத்தூதுசெல்லென் றனள்சரசக்
காரிகைக்குஞ்சர மூரிதயாலய காண்டிபனே. உசச

வெம்பத்தனையனைக் கந்தனைவேழ முகத்தனைச்சூ
டம்பத்தனையனை யைப்பொரும்வேள்சமர்க் கஞ்சினள்சேர்
கும்பத்தனையனை யாதுசிவவடி வாய்க்குறுகுங்
கம்பத்தனையனைப் போற்றிதயாலய காண்டிபனே. உசரு

சகராசர்போற்றும் புகழிதயாலய தார்மன்னனை
மகராசனென்பதற் கையமுண்டோமலர்க் கற்பகத்தாற்
றகையானவச்சிர மானகையான்மஞ்சு தாங்குதலா
லகலாதுதேவர்கள் சூழுதலானிச மானதுவே. உசசா

ஈசன்செயவிரண் டங்கத்துக்கொப்பிலை யென்றுரைக்கும்
வாசந்தருங்குழ லாளிதயாலயன் மால்படைத்தாள்
ஆசங்கதியறி யாதன்னைமாரவ் வரன்சலனம்
வீசுங்கதிநட னத்தையொறுப்பதென் வீண்செயலே. உசஎ

## வெண்பா.

வீரையி னிலுற்றுற வசீதமிசை வாய்ப்பொருந்திப்
பாரதமே னாட்டுபுகழ்ப் பான்மையால்— நேரார்
பணியிருத யாலயபூ பாலனே மாலாய்த்
துணிவுடனே சொல்லத் தகும். உசஅ

## கலித்துறை.

மலையமுனிக்கரும் பேர்நிலவந்தான்மதன் மாதுமன
மலையமுனிற்கு மடவாருமேச வருத்தமுறு
மலையமுனிப்புணர் காந்தமெனமணப் பாய்தமிழ்க்கு
மலையமுனிக்கு நிகரிதயாலய மன்னவனே. ௨௪௯

கருங்கற்பனைநிக ராய்க்கல்வியீகை கனவினிலுஞ்
சுருங்கற்பனைப்ரபு வென்றுசொல்லித்துதிக் கும்புலவீ
ரருங்கற்பனைத்தமி ழாய்மருதப்பமன் னர்ப்புகழ்ந்தாற்
பெருங்கற்பனைவில்செல் வப்பேறுஞ்சீரும்பெற் றுய்குவிரே. ௨௫௦

மாதனங்கந்தரஞ் சட்டகம்வாள்குரு ளாகுமித்த
மாதனங்கந்தர வக்கோவைவேய்ந்திலண் மாதரினம்
மாதனங்கந்தர மாதர்நகைக்க வருந்தினள்சிம்
மாதனங்கந்த ரருளாற்பெறுமரு தப்பமன்னே. ௨௫௧

தேனகராவி சரிக்குங்கருங்குழற் றேமொழியின்
மேனகராவி சனந்தரவேள்பொர வெள்கினள்சேர்
வானகராவி சயந்தருவள்ளல்பின் வாங்கநல்குந்
தானகராவி சயாவிதயாலய தார்மன்னனே. ௨௫௨

கஞ்சத்திருக்கு மரிதனையாளுட் கவலையுற
வஞ்சத்திருக்கு மதன்புரிந்தான்சமர் மாற்றரவோர்
தஞ்சத்திருக்கு முடிவானவன்றண் ணருள்விழியா
மஞ்சத்திருக்கு மணிநாதர்ப்போற்றித யாலயனே. ௨௫௩

முருந்தாதரிக்கு முலையரும்பாவெனு மூரன்பின்கண்
பொருந்தாதரிக்கு திரையான்சனர்க்கஞ்சிப் பூந்தொடைதா
கருந்தாதரிக்குணம் பெற்றுமெனச்செங் கறைகலக்கப்
பருந்தாதரிக்கும்வை வேலிதயாலய பாண்டியனே. ௨௫௪

## கழிநெடில்விருத்தம்.

நச்சிப்பாடலமலரும் புனைந்திடாள்கற்பின்மிசை
நாட்டம்வைத்தே
யிச்சிப்பாடலத்தின்மிசை கூடலிழைத்துப்பார்ப்பா
ளிவளைச்சேர்சொன்
மெச்சிப்பாடலங்கார கவிக்குநல்குவிதரணவிண்
மீதிற்பாயு
மச்சிப்பாடலநடவு நகுலமருதப்பேந்த்ர
வரசரேறே. ௨௫௫

கருப்படவினையமதன்கைக் கொளக்கலசமுனிவனென்றுங்
கலந்துவாழும்
பொருப்படவிமாருதமும் புலிபோலவரப்பூவை
போல்வாழுந்தன்
விருப்படவிராதமயன் மேவினள்சேர்ந்தணைவாய்மெய்
வேந்தர்வேந்தா
வுருப்படவியப்புநிறை சமுகமருதப்பேந்த்ர
வுசிதமாலே. ௨௫௬

கல்விச்சாலைப்பெயரோ கம்பர்வளர்நகர்ப்பெயர்கண்
ணிப்பேர்மூன்றிற்
சொல்லுற்றநடுவெழுத்தைப் பார்த்துநல்குமுன்பினெழுத்
தைத்தொகுத்து
மல்லுற்றபுயத்தில்வனை நினைமருவாரைப்பொருது
கொள்வாயென்றுஞ்
செல்லுற்றதாரையெனத் தருமிதயாலயபாண்டிய
செயசிங்கேறே. ௨௫௭

மாதவசந்தனையடைந்தாண் மாதராலிதற்குமா
றகத்தானிப்
போதவசந்தனையொறுக்கப் பொருந்திஞர்பூவையன்னார்
போதமென்னும்

யாதவசந்ததியானென் றுதித்தவர்யாணர்த்தாளி
ஷியாதுவைத்தோய்
சீதவசந்தத்தேரோ னிகர்மருதப்பேந்த்ரதிருத்
தாரீவாயே. ௨ரு௮

அம்பரவணைத்துலவு மயில்விழியாளதிரசம்பா
லனம்வெறுப்பா
யும்பரவணைக்கடலோ சையுங்குயிலோசையும்வருத்த
வுழன்றுள்சேர்வாய்
நம்பரவணைத்திறுக நளினிதழுவியநாதா
வென்றுசென்னி
பம்பரவணைத்துயில்வோர்ப் போற்றுமருதப்பபாண்
டியசிங்கேறே. ௨ருகூ

உனக்காவியந்துறைக்க வேண்டுமக்காவில்வேடன்
கணையோரைந்தில்
வனக்காவியன்றிமற்றதெலாந்தொடுத்தானுற்றேன்மால்
வளருநீள்சந்
தனக்காவியங்குழகி றணைக்கண்டுமயிலகவு
வீரைதன்னி
லெனக்காவியன்னதுரை யிருதயாலயவேள்பா
லியம்புவாயே. ௨௬௰

தகரரவின்மணிமுடியைத் தாக்குசிகிவாகனர்தண்
கடலார்செந்தில்
நகரரவிநயபதத்தர் நன்னுதற்கணெய்தியமுந்
நான்குசெங்கைக்
குகரரவிந்தத்தாளைக் கும்பிட்டுநம்புமரு
தப்பகோவை
மகரரவியுதிக்குநாட் காணில்வடபுலத்தரசன்
வாழ்வுண்டாமே. ௨௬௧

சீரமணியமுதநல்கு மவ்வீனையிற்சிறப்பிவ் வீனையென்று
வீரமணியணிமார்பர் வசிக்கவவர்திருவடியை வியந்துபோற்று
மாரமணியமுகசுக விருதயாலயவேந்தா வஞ்சிவேந்தற்
காரமணிந்தருமைசெய்தாய் நெல்லைநகரொங்குமகிழ் வாகத்தானே

பூரளந்தமாதவரீ ரிடத்துமுறுவதனுற்பைஞ்
சோலைசூழுங்
கேரளந்தன்மமூஞ்சரியாய்க் கிடைத்தலினுல்வஞ்சிமன்னர்க்
கிணையாய்ச்செல்வச்
சீரளந்தத்திருமாது நிறைசமுகாதேவேந்த்ர
செல்வம்பெற்று
நீரளந்தமேகநிகர் தருமிதயாலயபாண்டிய
நிருபரோறே. உசுரு

## சின்னிகுளம்

# அண்ணாமலைக்கவிராயர்

இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

வண்டமரம்பனந்தாராவினிலுளைக்கமதிதகிக்கவரவேவீழும்
வண்டமரம்பனந்தாராவுலவுகடத்தெடுத்துவந்தான்வந்தானேவீ
வண்டமரம்பனந்தாராறுவெர்செய்யக்குழந்தைவாடிறுள்சேர்
வண்டமரம்பனந்தாரா னென்னுமிதயாலயபூ மன்னரோறே. உசுச

சக்கமூலைக்கத்திகைக்குஞ் சரமருப்புகாணமுறுஞ்
சாற்றுள்வண்ணச்
மூலைக்கத்திகைக்குள் வைத்தறுத்தாற்போலுடலுட்
டாவியேவ

சந்தமூலைக்கத்திகைக்குஞ் சந்தனத்தைக்கண்டுகெஞ்சுந்
தருவாயின்று
சந்தமூலைக்கத்திகைக்குத் தரவிருதயாலயவித்
தாரமாலே. உ௬௫

மருத்துவசந்தனத்தனத்து மடந்தைகொண்டகாமவெந்நோய்
மடங்காதந்தோ
மருத்துவசந்தனத்தனந்து நமுவுமன்னையூருறைக்கும்
வசையாந்தீக்கோர்
மருத்துவசந்தனத்தனத்து யிலைப்புரியாதனதிதம்ப
மானுஞ்சேர்வாய்
மருத்துவசந்தனத்தனத்துங் குழலியரின்புறுமிதயா
லயவல்லோனே. உ௬௬

தசரதராமாவிசையா வருபரியாய்சுறுமரக
தமணியாற்செய்
தசரதராமாவிசையா கன்னவிதயாலயவித்
தாராதீரா
தசரதராமாவிசையா தனமெனச்சோர்வாட்குனது
தார்தந்தாற்சித்
தசரதராமாவிசையார் தண்ணளினங்கண்ணளினந்
தருஞ்சொற்றேனே. உ௬௭

குடத்தனத்தைப்புதைத்துமறந் தறிந்தவர்போற்பெற்றவிந்தக்
குமரிமாம
குடத்தனத்தைக்குறித்தனங்க னனந்தவம்புசினந்தவம்பு
கொண்டின்றெய்யக்
குடத்தனத்தைநிகர்களத்தார் வையமெலிந்தாடளவு
கொடுத்தாள்கைக்குக்
குடத்தனத்தைமருவுமரு மாவிருதயாலயகு
குணபூமானே. உ௬அ

தத்தைக்குஞ்சிக்குநிகர் மொழிமடந்தைமுலையிலங்க
தனம்பையோமெத்
தத்தைக்குஞ்சிக்குவதெப் போதுமுல்லைப்போதெனும்ப
சலையாலங்க
தத்தைக்குஞ்சிக்குமுடித் தம்பலஞ்சேரம்பலநித்
தத்திலேபா
தத்தைக்குஞ்சிக்குமன்மின் றன்னுருக்கொண்டாளிதயா
லயசற்கோவே. ௨௬௬

காயாவாகாயமதிக் கொன்னலரையேற்றுவில்லா
கவபுவிச்ச
காயாவாகாயமதிற் கிளுவையிதயாலயதுங்
காவேளம்பு
காயாவாகாயமதி கம்படவென்றேதநல்லார்
கரும்புவேப்பங்
காயாவாகாயமதி கதிராவென்றுருகுவளென்
கன்னிதானே. ௨௬௭

மகரசங்கவருமுரச மாமதனன்போர்தொடுக்க
மாலைநூறு
மகரசங்கவருநிசிதப் பெருங்கணம்போலக்குழுமி
வரத்தான்கண்ட
மகரசங்கவருக்கமெலாஞ் சரியநவிந்தாளணைசொல்
வாணர்செய்ய
மகரசங்கவருமதுர வசனவிதயாலயபூ
மன்னரேறே. ௨௬௮

அசந்தடியாமலிவளக வாகுலந்தீராதெனவே
யனைமார்பேசி
யசந்தடியாலம்புலியாம் வெம்புலியான்மதிமயங்கி
யனமருந்தா

தசந்தடியாமம்புயமு நடைதளரவுடைநெகிழ
வஞ்சித்தானை
யசந்தடியானைச்சொலச்சொன் ஞளிருதயாலயத
யாளமாலே. உஎஉ

கொடியானமருங்குமட வார்நடவார்தூதிரவிற்
கூறவேளாங்
கொடியானமருங்குயிலோ சையுமிகவாடினள்களிப்புக்
கொண்டாளேற்று
கொடியானமருங்குவடன் றெடுத்தவிராவணனைவென்ற
கொண்டற்கன்பு
கொடியானமருங்குடனே புரியுமிதயாலயசு
குணபூமானே. உஎந

அனந்தங்கவரிவளைய விருதயாலயபதிநின்
னணியுலாக்கண்
டனந்தங்கவரிவளையி குளைகிளைதன்கிளைவெருப்பா
ளாடையுக்கத்
தனந்தங்கவரிவளையோ நிற்குதிலையென்பளிவ
ளல்குன்மைக்கண்
ணனந்தங்கவரிவளைக்கா தம்பிகைகோனணையுணவென்
றறையலாமே. உஎசு

தண்டையிலங்குஞ்சரம்பைங் கிளிமழலைப்பூவைவெறுத்
தாளேவாழைத்
தண்டையிலங்குஞ்சரம்பை துடைகண்முலைகடிதடந்துத்
தந்தானிம்பத்
தண்டையிலங்குஞ்சரம்பை நரலைவிட்டோர்முளைபொரமா
தாவுந்தன்சொற்
றண்டையிலங்குஞ்சரம்பை யெப்படியாமணையிதயா
லயசற்கோவே. உஎரு

கறுவிசையாகம்பாகும் பால்வரினுமணைவதற்குக்
கழலாளேச
கறுவிசையாகம்பாகும் பாயசமுநுகராமற்
கரையவேமோ
கறுவிசையாகம்பாகும் பாவெடுத்துத்தொடுத்தடுத்துக்
கடுப்பானின்றுள்
கறுவிசையாகம்பாகும் பாநமிதயாலயசிங்
காரமாலே. உஎசு

சந்தனஞ்சவாதுயரத் தினகரக்கன்றூட்கணிந்தா டாரைக்காம்ப
சந்தனஞ்சவாதுயரத் தினகரத்தோலுரித்தவர்பா தத்துட்பட்டுச்
சந்தனஞ்சவாதுயரத் தினகரனுவதெனையென்பா டந்தானேவ
சந்தனஞ்சவாதுயரத் தினகரத்தூதாவிதயா லயசற்கோவே. உஎஎ

கண்டனந்தங்கமலைமுடிக் காகாதென்றேருணவாங்
கதிர்செய்நீலக்
கண்டனந்தங்கமலைநறு முத்திருளப்பன்மருவார்
கரியகூந்தல்
கண்டனந்தங்கமலைவடி வாமிவட்சேர்வாயுயர்சொக்
கத்தொன்றுரைக்
கண்டனந்தங்கமலைவிளைத் தேற்றுமிதயாலயசிங்
காரமாலே. உஎஅ

அரும்புவனமேற்குமிழி கல்செயுஞ்செவ்வந்திமதி
யழல்போற்கோங்கி
னரும்புவனமேற்குமிழி சிமிழிவைநேர்முலைசுமந்துய்
யாமருங்கே
யரும்புவனமேற்குமிழி தண்மதுவோதியைப்புணர்வோ
ரவுணன்பாற்போ
யரும்புவனமேற்குமிழி வற்றவிதயாலயத
யாளமாலே. உஎகூ

கழுகாரியம்பெருகுங் கந்தரங்கந்தரங்குழலாங் ககனமெல்லாங்
கழுகாரியுண்டபரன் கையுடுக்கையவிடையுடுக் கைசோர்ந்தாடுங்
கழுகாரிநடாரா யணிபாடுதலைமறந்தாள் காவம்போரு
கழுகாரிபுதனைவெல்லுந் திறலிருதயாலயசிங் காரமாலே. உஅய

சங்கிடக்கையமகரந்தீர் தாமரைநாயகனைவென்று தாவெனுங்க
சங்கிடக்கையமகரவங் கசமாரனம்பெயச்சித் தத்திலேயச்
சங்கிடக்கையமகரவா தோங்கிமிகவேநழுவிச் சார்ந்ததேவா
சங்கிடக்கையமகரசந் தெரியுமிதயாலயவித் தாரமாலே. உஅக

தரக்கருவமானவன்பஞ் சானனமாமவனிவர்வா தத்தேரூர்மா
தரக்கருவமானவந்தி யிந்துசிந்துநொந்துவிழத் தாக்கவேவு
தரக்கருவமானவனோன் பாற்றரித்துப்பெற்றமின்ப தறுமிராக்க
தரக்கருவமானவமாய் வென்றவிதயாலயவித் தாரமாலே. உஅஉ

கனவிரதஞ்செய்துபெற்ற தாயுமொருபகையானாள்
கண்டலேதுங்
கனவிரதந்தருதனுசு செங்கரும்புகொங்கரும்பு
கதிரநீலக்
கனவிரதந்திகழுவரி முரசெனக்கொண்டாற்குடைந்தாள்
கனிதனங்கண்
கனவிரதங்கடிதடஞ்சொற் கண்டிருதயாலயசிங்
காரமாலே. உஅங

தவஞ்சிவனைநோக்கியநே கதினமிவணிருந்துபயந்
தவனசப்பா
தவஞ்சிவனைமுலைப்பொறையா லிடைதளரமாரனெய்தான்
றன்கைநீங்கா
தவஞ்சிவனையார்தடுப்பார் தண்பொதிகைத்தென்றல்வந்து
தாவியேமோ
தவஞ்சிவனையுடையிழந்தா ளணையிருதயாலயவித்
தாரமாலே. உஅச

தகரவளைவுறுகுழல்வைத் தகரவளைசரிசரியத்
தாயராம்பா
தகரவளைமோதிவையத் தகரவளைத்தடமறந்தந்
தரச்செலானெந்
தகரவளைப்பாம்பெனவிற் றகரவளைத்தெய்மதற்கெய்த்
தாள்சேர்வாய்நீ
தகரவளையுண்டுசுவே தகரவளையேந்திதயா
லயசற்கோவே. உஅரு

மாதுளங்கனித்தனத்த னத்தமதனேவுகின்ற வாளிபாய
மாதுளங்கனித்தனத்த னத்தவல்விலாளனென்பள் வாடியேசு
மாதுளங்கனித்தனத்த னத்தமொத்தகுழலியர்கள் வையமேய்வி
மாதுளங்கனித்தனத்த னத்தமுகுத்தாளிதயா லயவல்லோனே.

மலையமலைக்கும்பாவை வென்றுபுரந்தவன்மதலை வாளியாம்பூ
மலையமலைக்கும்பாவை பூவைமுதவியாவையுமே மறக்குமாக
மலையமலைக்கும்பாவைக் கண்டவுடன்வாய்புதைத்து வாடுவாடென்
மலையமலைக்கும்பாவை கைநதிமாறுவிதயா லயவல்லோனே. உஅஎ

அனந்தவனந்தவத்தருமங் கலவிருதயாலயனே யாதடைந்தான்
அனந்தவனந்தவத்தருமங் கலவிருதயாலயனே யாதஞ்சென்றோர்க்
கனந்தவனந்தவத்தருமங் கலவிருதயாலயனே யாதரியாள்
அனந்தவனந்தவத்தருமங் கலவிருதயாலயனே யாதமானே. உஅஅ

அம்பலவாவம்பலவா வெனமொழிவாளனுதினமு
மறுகாற்கிடக்
கும்பலவாவம்பலவா தாற்கிளையோன்சேய்விடவிற்
குனிக்கும்போது
வெம்பலவாவம்பலவா பெண்பழிநீசெய்வதென்பாண்
மின்கணைப்பா
தம்பலவாவம்பலவா மின்சொலிதயாலயமுத்
தமிழ்ச்சிங்கேறே. உஅகூ

அக்கோகனகவடுக்கண் பணையூற்றுவ்வாயிதயா
லயனுமற்பு
தக்கோகனகவடுக்கன் மொய்ம்பின்மயல்கொண்டவன்பாற்
சார்ந்திராவிற்
கொக்கோகனகவடுக்கண் மாதியற்றிவளை மதியக்
குழவிபோற்கொங்
கைக்கோசனகவடுக்கண் மன்னவந்தாளெனிவிதற்கென்
கழறுவேனே. உகம

நந்தவனத்திருப்படலை நிகர்மனவேளம்புகொய்து நண்ணவேனித்
தந்தவனத்திருப்படலை விந்யிதுவோவென்படுன்பந் தாயாராலே
யிந்தவனத்திருப்படலை யாவரசுஞ்சொலமுடியாதிணங்கியாள்வாய்
கந்தவனத்திருப்படலை யணியுமிதயாலயசிங் காரமாலே. உகக

சுருப்புக்கும்பிச்சிக்குந் தளவின்முகைநகைநகிலத்
துணைக்குமேருப்
பொருப்புக்கும்பிச்சிக்குந் தளவின்மலரம்புபொரும்
போர்க்குஞ்சங்க
விருப்புக்கும்பிச்சிக்குந் தளவினுதன்மாதருக்கு
மெலிகின்றாளசேர்
மருப்புக்கும்பிச்சிக்குந் தளவிருதயாலயபூ மன்னரோறே. உகஉ

கனதனந்தந்தமருமந்த கனிக்குமலைமுத்தமுது
கண்கிரீவ
முனதனந்தந்தமருமந்த வாநிலகுந்நிதலைபொன்று
முவட்குன்மீதே
மனதனந்தந்தமருமந்த வளியுமிகலென்றுணாநீ
மானேயார்க்குந்
தனதனந்தந்தமருமந்த விருதயாலயனெனும்வித்
தாரவேட்கே. உகங

கடிப்பனகக்குஞ்சரச மானமயலாண்மருங்குல்
கடிதடந்தான்
றடிப்பனகக்குஞ்சரச மானசெப்பிற்குந்துயர்செய்
தனங்கடேன்பால்
குடிப்பனகக்குஞ்சரச மானமதவேளளித்துக்
கொல்வமென்றே
துடிப்பனகக்குஞ்சரச மானவிதயாலயவித்
துவசிங்கேறே. ௨௧௪

ஊற்றுமலைக்கராளு மிருதயாலயமகிப
னுனைச்சேர்வான்மேல்
பாற்றுமலைப்பாரமுதே யினியுனையென்செயுங்களைச்சா
பத்தையேந்தி
நேற்றுமலையாற்றுமதன் பூங்கணையுமாங்குயிலு
நெருப்பாந்தென்றற்
காற்றுமலையுங்கலையுஞ் சருவரியுமனையர்செய்சங்
கடமுந்தானே. ௨௧௫

சுரும்பாலுந்தொடையலணி யிருதயாலயன்பவனித்
தோற்றங்கண்டு
பெரும்பாலுமயலாகிப் பிறர்முகங்கண்டறியாவென்
பேதைகாமன்
கரும்பாலுமரும்பாலுங் கலையாலுமலையாலுங்
கலங்கியேத
யிரும்பாலும்பாயசமுங் கசக்குமென்றுளிந்தலச்சைக்
கென்சொல்வேனே. ௨௧௬

காரிகைக்கும்பந்தனமைக் காரிகைக்குமிணைநயனங்
கமலமேவு
காரிகைக்குமிவள்வடிவக் காரிகைக்குமிஞ்சுமயல்
கொண்டாள்கண்டாள்

காரிகைக்குஞ்சசிகொழுநா காரிகைக்குமிகுகொடைத்துங்
காநன்னூற்குக்
காரிகைக்குப்பொருளுணர்ந்தோர்க் கருள்செயிதயாலயசிங்
காரமாலே. உ௬எ

கரத்துவண்டுமிடையுடையுங் கழன்றுருண்டுவிழமருண்டு
கலங்கியேம
கரத்துவண்டுவசமதவேள் கழைகுழையவாங்கியிரு
கனதனச்சி
கரத்துவண்டுபடியும்வண்டு கோடியெய்யப்பழிமொழியைக்
கன்னிமார்ப
கரத்துவண்டுவாடுகின்று ளணையிருதயாலயசிங்
காரமாலே. உ௬அ

மாரசரந்தைத்துருவ மதிகனலவாதுசொல்லி வையவேதாய் [ந்த
மாரசரம்போலிருப்பாள் மயல்புனைவாளியல்புனைவாள் வாய்திற
மாரசரஞ்சிதவசன மொன்றுமூரையாண்மனது வந்தாள்வாகு
மாரசரவணபவனை நிகரிருதயாலயபூ மன்னரேறே. உ௬௯

சுமாதங்கியிருக்கையிலே யெழுவள்பின்னும்விழுகுவளந்
தோயானீரைஞ்
சுமாதங்கிலேசமின்றித் தாங்கியிருந்தீன்றுவளர்த்
துத்தானேகொஞ்
சுமாதங்கிப்புழுவெனவே துடிப்பளிதுதீரரக்கர்
தொகையைப்பைசா
சுமாதங்கிமகிழுவென்ற திறலிருதயாலயவுத்
துங்கமாலே. ௨எ0

இலக்காரம்பலவருந்தும் படியிடையிற்சுற்றவொன்று
மிராவாஞ்செம்மெய்
யிலக்காரம்பலவருந்தும் படிகவனவிடைமணியா
லெய்த்தாளெண்ணும்

இலக்காரம்பலவருந்தும் படியிடையரிடையடைந்தோ
னினிகருங்கு
யிலக்காரம்பலவருந்தும் படிசொலக்கேளாளிதயா
லயவென்கோவே. ௩௱௧

இருவாட்சிகரவடஞ்சூ டகமயக்கந்தீரபனை
யெற்றுபார்வை
இருவாட்சிகரவடங்கா மழைபதனைத்துடயனமாந்
தினிமஞ்சத்தே
இருவாட்சிகரவடவெற் பாமுலையைமூடெனினு
மெண்ணுள்செய்வாய்
இருவாட்சிகரவடந்தீ ரெங்களிதயாலயக
ரோந்த்ரமாலே. ௩௱௨

படவரவையொத்தநிதம் பத்தியராம்படையுடன்சம்
பாரியேக
படவரவையுற்றுநின்று மதுரவிலைவாங்கிவிடும்
பகழிமெய்யிற்
படவரவைமுகநுதலம் பசிவசங்கரவெனவே
பகர்ந்துதாநெய்ப்
படவரவைமருளும்பின்னை யணையிருதயாலயவிற்
பன்னமாலே. ௩௱௩

சந்தோடமாவனத்தைச் சந்தோடமாவிடுத்துத்
தழைத்தபூமஞ்
சந்தோடவிழுமலர்வா சந்தோடத்தனையும்விட்டத்
தடையிற்கொஞ்
சந்தோடம்பிறந்தனங்க சந்தோடக்கடலொலிக்கெய்த்
தாண்முலைக்கஞ்
சந்தோடங்கத்தழுவி யணையிருதயாலயவித்
தாரமாலே. ௩௱௪

சரிகமபதநியெற்குச் சந்துசொலென்பாண்மதனே
தைக்கமார்பிற்
சரிகமபதனிசமனத் தார்க்கருள்சங்கரவெனுமத்
தந்திநில்லா
சரிகமபதநிதந்த மலையரருத்திடினுமருந்
தாமல்வாடிச்
சரிகமபதநியெனப்பா டுதலைமறந்தாளிதயா
லயசற்கோவே. ௩௱௫

திருக்கஞ்சத்தனத்தையொத்த கடைமடவார்திட்டமற்றுத்
திட்டவட்டத்
திருக்கஞ்சத்தனத்தைதமதன் போதுமட்டும்போதுவிட்டுத்
தெருறப்பகங்க
திருக்கஞ்சத்தனத்தையுற்ற கடலொலிவிண்ணேறெனுஞ்சேர்
இனவராவின்
திருக்கஞ்சத்தனத்தையென்றன் றுடமிதயாலயவ
சீரமாலே. ௩௱௬

சனங்களம்பல்வர்த்தைக்க வதுவுமன்றித்தாயெனும்பா
தகியுமேவி
சனங்களம்பல்கவடமுற்றுத் திட்டவட்டமிட்டமொட்டுத்
தனத்திலங்க
சனங்களம்பல்வேலைவிடுக் கத்தளருமாதுசிவந்
தகபோலங்கஞ்
சனங்களம்பல்வன்னநந்தக் தரளவிதயாலயவித்
தாரமாலே. ௩௱௭

சந்தப்பாகானவசன த்திசையுமாவலற்றுத்
தனதாகம்ப
சந்தப்பாகானவசன த்திலுட்சேர்மானெனவே
தளருமாவ

சந்தப்பாகானவச னத்தியுறைகலாணவெனுஞ்
சந்தப்பாநற்
சந்தப்பாகானவச னத்தியுரையாளிதயா
லயசற்கோவே. ௩௱௮

கணக்கவலேமலையைநிகர் கனதனந்தானுனதாநந்தான்
காற்போராற்க
வினக்கவலேயிடையாது வரியரவங்கேட்டயர்ந்தான்
பின்னுளன்னு
டனக்கவலேச்சர்க்கரையைப் பாயசத்தைப்பாலனத்தைத்
தந்தானுந்தன்
மனக்கவலேதீர்ந்திலள்வந் தாளிருதயாலயபூ
மன்னரேறே. ௩௱௯

இணங்குதட்டுங்கதிரமருப் பனேயவன்வீசையைமுறுக்கி
யெழுந்தான்வெள்பெண்
கணங்குதட்டுங்கதிரமொழிந் திகழ்வரனேமார்பயனுஞ்சங்
கத்தானூட்டி
லணங்குதட்டுங்கதிரவன்போன் மதியமெழுக்கண்டயரு
மரக்கர்கோன்மே
னிணங்குதட்டுங்கதிரம்விட்டன் றட்டவிதயாலயபூ
நிருபரேறே. ௩௱௰

ஆலமரங்கண்மருங்கு லரசமரத்தாவிறந்தோ
ருமிக்கன்னி
போலமரம்மையருளரோ புளியமரஞ்சிறையதுபப்
பூந்தார்வந்தான்
மாலமரநதையிலென்றுள் வாகைமரகதங்குழலே
மானுஞ்சேர்வாய்
சாலமரமேழும்விழ வெய்தவிதயாலயவித்
தாரமாலே. ௩௱௧௧

அருத்தனிலமருமஞ்சம் படவரவல்குனைடயிடை
யத்தம்வேதக்
கருத்தனிலமருமஞ்சம் படகெனமிதந்திடக்கட்
கங்கவிழ்ப்பாண்
முருத்தநிலமருமஞ்சம் படம்பகவுநமூவவும்வந்
துலவச்செய்யிற்
றருத்தனிலமருமஞ்சம் படமெலிவாளணையிதயா
லயசற்கோவே. ௩௧௨

இருகாலும்படிமீதி லொருகாலும்படியாவா
யிழையைக்காகந்
தருகாலும்படிவமிலான் கன்னல்விலைவாங்கிவிடுத்
தசரப்பூவும்
வருகாலும்படிறிசைந்த மாதருஞ்சீறுதணமே
வாரைக்காற்றிற்
சருகாலும்படியலையப் பொருதுமிதயாலயவித்
தாரமாலே. ௩௧௩

அலமருமந்தானிலவுக் கிரவேங்கையோகொடிதா
மரிவைதானோர்
நலமருமந்தாநிலவு வெண்குடையோனித்தமுநெட்
டோர்தநோடம்
பலமருமந்தானிலவுக் கிணையிதழ்மாறனோர்மொழியப்
பயர்தாள்கோலா
கலமருமந்தானிலவுத் துங்கவிதயாலயசிங்
காரமாலே. ௩௧௪

பாகாயமட்டுதவ வேயருந்தாளேயருந்தாள்
பஞ்சாஞ்சிந்தைச்
சேகாயமட்டுமலை யத்துதித்தவந்துவந்து
சீறுமாரன்

ஆகாயமட்டுநிமிர் சோலையெடுத்தம்பெடுத்தங்
கடுத்தானென்று
தோகாயமட்டுவிரி மாலையிதயாலயன்பாற்
சொல்லுவாயே. ௩௧௫

திருப்பாராவாரமதி லுற்பவிக்கும்பேரொலியைச்
செவியாற்கேட்க
விருப்பாராவாரமதி னந்தினமுநந்தினங்க
விழவேநொந்து
நெருப்பாராவாரமதி யென்றுமின்னைநன்னயச்சி
நேகஞ்செய்தாள்
சுருப்பாராவாரமதி காவிருதயாலயவுத்
துங்கவேளே. ௩௧௬

அனுதினங்காயம்புலியோ வடவையினூறுமடங்
காகும்பூவம்
புனுதினங்காயம்புலியூ ருவிவெருவச்செலுமே
பொல்லாதாய்வா
யினுதினங்காயம்புலியா மிவளவுமெப்படிச்சகிப்பே
னிதனைநீபோய்ப்
பனுதினங்காயம்புலியம் புயக்கணிதயாலயவிற்
பன்னவேட்கே. ௩௧௭

வல்லையரும்பம்பரத்தை யலைமுலைபொன்மலைகுலைய
வளரவேவெண்
முல்லையரும்பம்பரத்தை யலையிரவின்முனிவனைத்து
முனியவாயிற்
சொல்லையரும்பம்பரத்தை யலைவானைவென்றகண்ணீர்
துளிக்குந்தோய்வாய்
குல்லையரும்பம்பரத்தை யலைநிகர்மாலெனுமிதயா
லயகோமானே. ௩௧௮

நெருப்பாயவந்திலைக்கு மதிதகிக்குங்குயில்பகைத்து
கேடுமன்று
விருப்பாயவந்நிலைக்குக் கிடைத்தமகப்போற்கிடைத்த
தெனக்கென்றேனும்
விருப்பாயவந்நிலைக்கும் படிவெகுநெட்டேரமொழி
விளநொந்தாளைத்
திருப்பாயவந்நிலைக்கு மாரவிதயாலயவ
ஸிரமாலே. ௩௧௯

மின்னவசந்தப்பாவி யம்புனரிசெயவளைந்து
மின்றூரமபல்
பன்னவசந்தப்பாவி யம்புமுலைமேற்றொடுக்கப்
பணிவாய்த்தேதை
பென்னவசந்தப்பாவி யம்புமாமுகமலங்கி
யிருக்கின்றாள்சேர்
தென்னவசந்தப்பாவி யம்புனருக்கருளிதயா
லயசிங்கேறே. ௩௨௰

வண்ணைச்சந்தம்பாடு மாதேயென்றுரைக்க
மாட்டாள்சொன்னக்
கிண்ணைச்சந்தம்பாடு வடவழகிற்குமொழி
கிள்ளை பூசாள்
திண்ணைச்சந்தம்பாடு தலைமறந்தாளிருளையர்க
டீராரிந்தப்
பெண்ணைச்சந்தம்பாடு பார்ப்பரிதயாலயகெம்
பீரமாலே. ௩௨௧

துந்தமுழக்குஞ்சரகஞ் செறிபொதும்பரடுத்தெடுத்துத்
தொடுக்கநோன்பை
நித்தமுழக்குஞ்சரமா ரன்றனபாரத்திடைப்பு
ளிதக்கஞ்சத்தை

நத்தமுழக்குஞ்சரவம் போலதன்றண்டசைதடத்து
ணண்ணாள்பெண்ணாள்
சத்தமுழக்குஞ்சரத்தை யூருமிதயாலயவித்
தாரமாலை. ௩௨௨

கூரமையக்கந்தரத்தைக்கு முன்பலனாயேவியவன்
கணில்வேந்தானந்
திரமையக்கந்தரத்தைக்கும் போதுமுலைவீங்கவிடை
தேங்கவேமா
தரமையக்கந்தரத்தைக்குந் தளமெனக்கொண்டாடினமுந்
தளர்கின்றனே
புரமையக்கந்தரத்தைக்கு நல்குமிதயாலயவுத்
துங்கமாலை. ௩௨௩

எடுத்தானத்தத்துவசம் புகட்டுபெருவக்கனிமே
லெதிர்த்தேகன்னன்
மடுத்தானத்தத்துவசம் புகட்டடைவயம்புவெள்ளி
மலைப்பொற்கோட்டு
நடுத்தானத்சத்துவசம் புகட்டுனைதீயாலெரிக்க
நைந்தோனஞ்சாக்
கடுத்தானத்தத்துவசம் புகட்டுணைவென்செயுமிதயா
லயகாவேந்தே. ௩௨௪

பொருப்பந்தானதனந்தந் துகிரனையாயென்றுருகிப்
புகலுமுல்லை
மருப்பந்தானதனந்தம் புனைகுழல்சோர்ந்திடமருண்டு
மாணாண்மேனா
சருப்பந்தானதனந்த மென்றுநடித்தன்றுவென்றோன்
றானேயாளாள்
விருப்பந்தானதனந்தங் கவலையிதயாலயவி
வேகமாலை. ௩௨௫

அனங்கனங்காமஞ்சரியையுண் டவனிலப்பேரம்பைவிடுத்
தடலும்போது
மனங்கனக்காமஞ்சரியே தருகிறதாம்வம்பலைய
வளர்ந்திரண்டு
தனங்கனக்காமஞ்சரிப்பூ சியவதனம்வாடினதாங்
கதையறிகென்றே
தினங்கனக்காமஞ்சரியுங் கிளைவையிதயாலயன்பாற்
செப்புவாயே. ௫௨௬

சந்தவனைக்காதுபட வார்பழிபேசுவர்கரும்பு
தாளராசி
சிந்தவனைக்காதமதன் சற்றுமிரான்மாசுணவாய்ச்
சிக்கியேனை
யுந்தவனைக்காதுயர மெவ்வளவுண்டவ்வளவே
யுற்றுளின்று
கந்தவனைக்காதுவனை யாளுமிதயாலயசிங்
காரமாலை. ௫௨௭

வருமாதங்கசந்ததனங் காந்தாரஞ்சுடவனந்தல்
வாவியாடத்
திருமாதங்கசந்ததனங் காந்தாரஞ்சிதரதிக்குத்
திவாவிலேத
கருமாதங்கசந்ததனங் காந்தாரம்பெய்தலெனக்
கழலும்பூத்தோ
ரிருமாதங்கசந்ததனங் காந்தாரந்தேரிதயா
லயவென்கோவே ௫௨௮

தினஞ்சாயாதரங்கிணியி லும்மிவள்கட்புனலதுபோற்
றெருவிற்சிற்றின்
மினஞ்சாயாதரங்கிணித்த னைவிதியைத்தொழுதழற்கண்
விழிக்கநான்செய்

யினஞ்சாயாதரங்கிணிரூ தனநகிலரதிகணவா
வென்னுந்தோய்மோ
கனஞ்சாயாதரங்கிணிதே ரெங்களிதயாலயசிங்
காரமாலே. ௩உக

நடனாராயணியணிவண் டினம்பகர்காவடுத்தெடுத்த
னங்கனங்க
படனாராயணியணிகொங் கையிலெயவம்பின்றுகண்ணுற்
பார்த்தாலென்னே
வடனாராயணியணிவாழ் நடராயாவென்பளென்ற
னைவுதியெல்லா
மடனாராயணியணியா வோதிருதயாலயன்பான்
மருவித்தானே. ௩௩0

சாவேரியம்பையிர வியனமிசையாள்விழிவந்
தசலநேருங்
காவேரியம்பையிர வியனமதியன்றிறென்றற்
காற்றுமாமா
தாவேரியம்பையிர வியனரலைபகைமொழிக்குத்
தருந்தீதாருப்
பூவேரியம்பையிர வியனமிசையாளிதயா
லயபூமானே. ௩௩க

எப்போதுங்காம்போதி வண்டிசைக்குங்குழன்முடியா
ளெழிலார்வேலோ
வப்போதுங்காம்போதி யோவெனுங்கண்டனையிமையா
ளங்கசன்புங்
கப்போதுங்காம்போதி சையும்பகையாம்பட்டதுசங்
கடனங்கன்னிக்
குப்போதுங்காம்போதி சரியவனைந்தாளிதயா
லயகோமானே. ௩௩உ

மோகனஞ்சுமாதவிக்குப் போரியற்றழூரியற்றுன்
முன்புவேதா
வாகனஞ்சுமாதவிக்கும் படிநிதமூந்தூதுவிடு
வாள்கையிற்சங்
கேகனஞ்சுமாதவிக்கும் படர்துடவைப்பூப்பரியா
ளிடையருங்கோ
மாகனஞ்சுமாதவிக்கும் பாலருந்தாளணையிதயா
லயவல்லோனே. கூகூகூ

செருத்தவரும்பஞ்சவனத் தத்தையுமாறுதல்வசனந்
தினமுஞ்சீறிப்
பெருந்தவரும்பஞ்சவனத் தத்தையகோமதனகலம்
பிளக்கவெய்தே
யுருத்தவரும்பஞ்சவனத் தத்தையென்றூடரனுணவோ
வுணவென்றுள்சேர்
வருத்தவரும்பஞ்சவனத் தத்தையடுங்கொடையிதயா
லயவல்லோனே. கூகூச

மொக்குளிரும்படிக்குவியப் பானதிலதத்தையொப்பாண்
முலைகளாரத்
தைக்குளிரும்படிக்குடம்பிற் பூசவெப்பமேதருங்கந்
தாத்திற்காட்டும்
விக்குளிரும்படிக்குமுலைச் செந்தழல்போலிந்தழல
மெலிந்தாள்சேர்வாழ்க்
கைக்குளிரும்படிக்குமியற் புலவீரொன்றருளிதயா
லயகாவேந்தே. கூகூரு

நித்தமனங்கனிக்குவையம் பெனுமாரிபொழிந்துயிரை
நெருக்கவாடி
மெத்தமனங்கனிக்குவையந் தூண்டுசிவனைத்தொழுவாள்
விழுவாளாவின்

றுத்தமனங்கனிக்குவைய சனத்திரெனுசெனத்தினையுந்
தோற்றுளிந்த
வுத்தமனங்கனிக்குவைய தொருபதிதயாலயவு
தாரமாலே. ௩௩௬

மாதவரக்கன்றுபுனேந் தாரணையூண்கடிதடங்கண்
மந்தவாத
மோதவரக்கன்றுடனே சிற்றிடையிற்சுற்றுடையு
முதிர்ந்தநாணு
மேதவரக்கன்றுகின்று ளிவளையிப்போதேயணைந்தாள்
வில்லம்பைத்த
பாதவரக்கன்றுமிய வெய்தவிதயாலயவிற்
பன்னமாலே. ௩௩௭

அரகராசிவசம்பு கன்றுமறியேந்தியத யாளாவென்னுங்
கரகராசிவசம்பு கன்றும்வகைசெயவிழிச்சீர் கண்டாலோது
வரகராசிவசம்பு கன்றுசெறிகைக்குழந்தை வைத்துமாலைச்
சரகராசிவசம்பு கன்றுருகுவாழிதயா லயசற்கோவே. ௩௩௮

விலங்காரக்காவாடா னனையகண்ணுறைப்படையா
வியந்தோரில்வா
யிலங்காரக்காவாடாய் வைத்தவளுமொருபுறங்காத்
திருப்பாளித்தை
யலங்காரக்காவாடா வயல்புடைசூழூற்றுவரை
யரசன்போர்க்குக்
கலங்காரக்காவாடா வெனுமிதயாலயபதிபாற்
கழறுவாயே. ௩௩௯

வெருவாரமாகவன மாவனியாக்கொண்டகழை வில்லார்முல்லை
மருவாரமாகவன மாமடந்தைகாமமெனும் வாதையாலே
யொருவாரமாகவன மாசலமாவுண்டிலள்சே ருலகையாளும்
பெருவாரமாகவன மானுமிதயாலயகம் பீரமாலே. ௩௪௰

அரும்பாயசங்கத்தத் தலைக்கடலுட்பிறந்தஞ்சா
மன்னைமாரோ
வரும்பாயசங்கத்தத் தலையிடறுமுயல்வார்முலை
மருங்கைச்சின்னத்
துரும்பாயசங்கத்தத் தலைச்செயவாடினளிணையச்
சுதனைத்துத்தி
தரும்பாயசங்கத்தத் தலைவவெனப்பணியிதயா
லயசற்கோவே. ௩௪௧

சிவசிவாசம்போக வில்லாததாமரைவ தனங்கண்கைமா
துசிவசிவாசம்போக பாலாவென்றேதுவளாய்த் தொகுதிசெய்யு
நசிவசிவாசம்போக மனையமருங்கினைவிடுத்து நழுவாவண்ண
நிசிவசிவாசம்போகஞ் செய்யவிதயாலயபு னிதகோமானே. ௩௪௨

கோவலவன்பானனிறக் கொற்றவன்றாள்பணியிதயா
லயகோவாம
காவலவன்பானமித முழுதினைச்செய்யாதிருக்கக்
கண்டதாலே
யாவலவன்பானனுக வன்னமன்னமன்னமல
வங்கசன்பூ
பூவலவன்பானதென்ற றென்றலலவென்றுசொலிப்
புலம்புவாளே. ௩௪௩

வனக்கவடியங்கிநிற்குங் காமனையாங்காமனையோ வம்பன்றேயோ
மனக்கவடியங்கிமதி யங்கினரவோசைரச மாராங்கொங்கை
கனக்கவடியங்கிசல யத்தைவிரித்துக்கிடத்தக் கண்படாதுன்
றனக்கவடியங்கிநின்ற ளணையிருதயாலயவித் தாரமாலே. ௩௪௪

தருவடையப்பஞ்சுகந்த மலர்தருவார்க்கருடரும்பித்
தாவெனப்ப
கருவடையப்பஞ்சுகந்த வேண்மகிழ்மைத்துனன்விடுக்குங்
காலைமாலை

வெருவடையப்பஞ்சுகந்த பாதமடவார்பழிக்க
மின்ஞஞெண்ணு
ளொருவடையப்பஞ்சுகந்தந் தணையிருதயாலயனு
மூசிதமாலை. ௩௪௫

திருத்தானவருவியப்புச் சிந்துமந்தமாவிருண்ட
திமிரமூர்தேர்
மருத்தானவருவியப்பு வந்துவந்துபந்துமுலை
வாரைப்பிர
முருத்தானவருவியப்பு முறுவன்மடமாதயர்ந்தாண்
மூத்தகந்தந்தாள்
செருத்தானவருவியப்பு வனத்தில்விழக்கொயுமிதயா
லயசிங்கேறே. ௩௪௬

துவரதாஞ்சிததரளஞ் செறிதசனஞ்சிமிணகிலஞ்
சொல்லுங்கொல்லென்
பவரதாஞ்சிதாரிதங் கியநயனங்கனிமொழியம்
பலத்தினீங்கா
தவரதாஞ்சிதமுகரம் பகவனலஞ்சுடவழிசுந்
தரனென்ந்தா
ணவரதாஞ்சிதகவியுந் தெளியுமிதயாலயநன்
னயகோமானே. ௩௪௭

பங்கசமொட்டங்கழியப் பம்பரநித்தஞ்சுமலப்
பணிக்குங்கொங்கைக்
கிங்கசம்வெட்டும்படிசித் தந்தனின்முற்றுந்துணிவுற்
றிகலாய்நிற்க
வங்கசமட்டம்பதுபட் டம்புலிசுட்டஞ்சரிவிட்
டயர்கின்றாள்சேர்
துங்கசகத்துங்ககனத் துங்கமழ்மெய்ப்புகழிதயா
லயதூயோனே. ௩௪௮

விதுரகவிகடவரிதாள் பணியிருதயாலயபூ
வேந்தாவென்று
மதுரகவிகடமையிசைப் பார்க்கருள்வோன்மாலைதந்தான்
வன்னியாகி
யதுரகவிகடமதனன் போர்க்குமதிக்கலைக்கிடையி
லஞ்சுந்தீர்ந்த
பதுரகவிகடமனைய கடிதடத்தார்க்கொருபொழுதும்
பயப்படேனே. ௩௪௯

தடங்கடந்தனங்களைக்குஞ் சுந்தரமேகந்தரமே
தானைம்பால்கண்
விடங்கடந்தனங்களைக்குப் பாதியளித்தவனுணைவா
வின்பயஞ்சங்
கடங்கடந்தனங்களைக்கும் பனுநினம்புகலநலிந்து
கன்னிநாண
மடங்கடந்தனங்களைக்கும் பிடுவளிதயாலயபூ
மன்னரேறே. ௩௫௰

மைப்படியக்காரமென நாரமுதுத்திடுவெருரி
மாவினிற்ப
துப்படியக்காரமிட்டுச் சுட்டபணியாரமுநஞ்
சுதானென்றேத
விப்படியக்காரவிரா விடியலையேயென்பளென்றென்
விதனமெல்லாஞ்
செப்படியக்காரகசி யத்தொடிசூயாலயவேள்
செவியுட்டானே. ௩௫௧

சுருங்காகப்பார்ப்பதிகஞ் சேர்கடவாமுரசொலியைந்
துவதனத்தான்
நெருங்காகப்பார்ப்பதிமுன் னவன்மகன்போராலயர்ந்து
நிதமுங்கூவிக்

கருங்காகப்பார்ப்பதிகா ரம்புவியவாடியிந்தக்
கன்னிநின்றன்
மருங்காகப்பார்ப்பதினு லணையிருதயாலயபூ
மன்னனோறே. ௧௫௨

சுருப்பாரத்தச்சத்தி யாகுவளையாவெனுங்கட்
டோகைதெற்குப்
பொருப்பாரத்தச்சத்தி னாகிப்பூசலள்செப்
புத்தனத்தே
யருப்பாரத்தச்சத்தி யுந்துளைத்துமறுபுறம்போ
மவன்மன்றத்தே
யிருப்பாரத்தச்சத்தி மேனியொத்தாளணையிதயா
லயவென்கோவே. ௧௫௩

எப்படிப்பால்வருணவனந் தூதியம்பிவருமோவென்
றெண்ணியேயேங்
கிப்படிப்பால்வரிவளையுஞ் சரிவளையோமிளகளவாக்
கிண்டியேபத்
துப்படிப்பால்வற்றவைத்துக் காய்ச்சியளித்தாலுமுண்ணு
துமதுவேடன்
றப்படிப்பால்வாடுவள்கா ணிருதயாலயமகிபா
தழுவுவாயே. ௧௫௪

பொற்றுலமலைச்சாரற் பொடுபுரப்பாரெனப்புலம்பப்
புகைபோலெங்குஞ்
சுற்றுலமலைச்சாரல் செய்தபரஞ்சோதியன்பர்
துதிக்கவாழுங்
குற்றுலமலைச்சாரல் சென்றிருதயாலயசு
குணபூமான்முன்
னுற்றுலமலைச்சாரற் பெருமழைபோற்புலவீர்நமக்
குதவுவானே. ௧௫௫

## கலித்துறை.

பாதாதியாக மெலாங்காணிஞணிப் பதுமையுமப்
பாதாதியாக விவட்கேவல்செய்வள்பெண் பால்குறுகும்
பாதாதியாகல விற்கழையானம்பு பாய்ந்திடில்வெம்
பாதாதியாகந் தருமிதயாலய பாண்டியனே. ௩௱௫௰௬

பையப்படுவாளலர் மீதெனில்வேடன் பகழியென்று
பையப்படுவாளல்கு லேத்திரங்கோடை பருகுமராப்
பையப்படுவாள்குயங் கொண்டவெப்பாறப் படீரக்குழம்
பையப்படுவாள்விரைந் தேயிதயாலய பாண்டியனே. ௩௱௫௰௭

ஆலஞ்சுதரி சனவம்பலாலலைந் தாளனம்பா
லாலஞ்சுதரி சனங்கனமாரனெய் யக்கணைவில்
லாலஞ்சுதரி சனஞ்செய்தரனைக்கண் ணங்குருத்தா
ளாலஞ்சுதரி சனவிதயாலய ஞ்மண்ணலே. ௩௱௫௰௮

சங்கரிக்கோடு நிசாசரர்போலிருள் சாரப்புர
சங்கரிக்கோடுவந் தாற்காமடுக்கனை சத்திக்கக்கஞ்
சங்கரிக்கோடு நிகர்தனியேங்கச் சமாக்கரிவை
சங்கரிக்கோடுவந் தாரிதயாலய தார்மன்னனே. ௩௱௫௰௯

மோகனம்பாடின போதனஞ்சேர்வண் முகாரிநய
மோகனம்பாடி னவில்வாயென்றுன்மொழி யாணகில
மோகனம்பாடினங் கைமார்வைவாரவர் மூர்க்கமன
மோகனம்பாடினந் தோயிதயாலய முல்லைமன்னே. ௩௱௬௰

தசனந்தளவு முலைசிமிழாம்வய தைச்சொலிலோர்
தசனந்தளவு கடற்குடைந்தாளிவள் சாலியச்சித்
தசனந்தளவு படாமாலையுற்றருந் தாயருசி
தசனந்தளவுலைந் தாளிதயாலய சற்குணனே. ௩௱௬௰௧

வாரணங்கோடி சையச்செயுமாமுலை மாதர்கள்வை
வாரணங்கோடி யொழிந்தாலும் வேண்மறு வான்சிவசி
வாரணங்கோடி சரியும்வந்தாள்கவி வாணருக்கு
வாரணங்கோடி தருமிதயாலய மன்னவனே. ௩௬௨

காமனஞ்சாறுலக் கங்கணையேவக் கலங்கியழு
காமனஞ்சாறுத ருங்கழைவேம்பெனக் கான்றுபரு
காமனஞ்சாறுறழ் கண்ணிநைந்தாளடங் கார்க்குமயங்
காமனஞ்சாறுரை யேயிதயாலய காண்டிபனே. ௩௬௩

கம்பனைக்கும்பனைக் கைமுகன்மாமிநி கர்ப்பள்களங்
கம்பனைக்கும்பனை யாட்கிகல்சோரங் கரவெனச்சு
கம்பனைக்கும்பனை யத்தோடளித்த கடவுட்கன்பா
கம்பனைக்கும்பனை நேரிதயாலய காவலனே. ௩௬௪

சங்கப்புலவனை யாக்கெரிமாரன் சஞ்சாளிகம
சங்கப்புலவனை யாமத்திலேங்கிநைந் தாடளங்க
சங்கப்புலவனை மார்பளிப்பாய்முத் தமிழ்மதுனைச்
சங்கப்புலவனை யாளிதயாலய சற்குணனே. ௩௬௫

கச்சோதனத்துப் பொறையாற்பிதிர்ந்தது கஞ்சத்தியோர்
கச்சோதனத்து மிவள்கதிராங்கதிர் காலுமுத்துங்
கச்சோதனத்து நகையால்வென்றோனுண்ட கார்விடம்போற்
கச்சோதனத்துவ வாளிதயாலய காண்டிபனே. ௩௬௬

கசக்குந்தினந்தருக் கோகிலங்கூவக் கடுங்கொலைமிக்
கசக்குந்தினந்தருந் தாயத்தமேந்திப் புகட்டிடும்பால்
கசக்குந்தினந்தரு ணங்கண்டுதோய்குக வைகுந்தஞ்ச
கசகுந்தினந்தருக் கியிதயாலய காவலனே. ௩௬௭

கரும்பையமருந்து வில்லாக்கியம்பனுங் கால்வம்புத
கரும்பையமருந்து நல்கவந்தீரொதற் காவெனப்ப

கரும்பையமருந்து வாயெனத்தாய்சொலிற் காவுரகக்
கரும்பையமருந்துங் காளிதயாலய சாவலனே. ௩௬௮

தாக்கணங்கைக்குத் துயில்பாயலாகுந் தம்பம்பொருந்
தாக்கணங்கைக்குப் பணித்திலம்பூந்திலந் தண்டெண்டமா
தாக்கணங்கைக்கு மெனிலார்கையாரங்க சஞ்சரங்கள்
தாக்கணங்கைக்குழித் தாளிதயாலய சற்குணனே. ௩௬௯

அரும்பாதகிசசத் தோளியர்க்காய்த லழகன்றென்பா
ளரும்பாதகீசக மேசுகென்பாரன்னை யாரணைகோ
தரும்பாதகிசகத் தானையிராம வரவிந்தக்கு
யரும்பாதகிசகஞ் சிறிதயாலய ஐயண்ணலே. ௩௭௰

சந்திரன்காலுங் கனலால்வருந்தித் தயக்கமுற்ற
சந்திரன்மாரன் விடுகணைக்கஞ்சு தறவிருநெஞ்
சந்திரன்பாக நலுமுல்லைமாலை தனையெழிற்பு
சந்திரன்மேரு நிகரிதயாலயன் றந்திடினே. ௩௭௧

தமனியமான முலைமீதிலேதி தலைமிகநி
தமனியமான மடவார்பழிக்கதைக் தாளணையுத்
தமனியமானந் தினைத்தரித்தோன்மலர்த் தாளில்விர
தமனியமான சனையிதயாலய தாட்டிகனே. ௩௭௨

கற்றாளிஞானிக ராவொன்றும்பேசிலள் காளகண்ட
நற்றாளிஞானி விழியல்குலாகு நகிலச்சந்தப்
பொற்றாளிஞானியம் பொன்மேருவாகுறப் புல்லியின்றாள்
சிற்றாளிஞானிகைத் தாளிதயாலய சீபதியே. ௩௭௩

கான்குழலப்பந் தினயக்குவேளெய்யுங் கன்னல்வில்லா
ஞன்குழலப்பத் தினத்தினமேச நவிந்தனள்கண்
மீன்குழலப்பந் தினமுதுகீர்மூலை மேனியெண்ஞாள்
தேன்குழலப்பத் தினவிதயாலய சீபதியே. ௩௭௪

கந்தவம்புத்தன நேர்தேமலார்ந்து கடமெனக்கு
விந்தவம்புத்தன மீதெய்துமாரன் விழைத்தனன்மி
குந்தவம்புத்தன மாதவினுவிக் கொடியுணக்க
சந்தவம்புத்தன மாமிதயாலய தாட்டிகனே. ௩௭௫

செப்பாவிவரம்பு லாவனமாநடை செய்யவிழிக்
கொப்பாவிவரந்த னந்திருவாதன மோதனனுஞ்
சப்பாவிவரம தாவொன்றும்பேசி லளங்கசமூர்க்
கப்பாவிவரனைந் தாளிதயாலய காவலனே. ௩௭௬

பொருமுத்தந்தந்துதை மார்பப்பிடிவிரும் புய்பரனூ
ணருமுத்தந்தந்து விழிநகைநுண்மருங் காமமுத
விருமுத்தந்தந்துட னேயுண்மொதினை மெய்த்துக்கன்னத்
தொருமுத்தந்தந்து புணரிதயாலய வுத்துங்கனே. ௩௭௭

பரும்பாதகரடி போற்றென்றன்மோத வெம்பாவையராம்
பெரும்பாதகரடி யேனைவைதேயிந்தப் பேதைதன்னைக்
கரும்பாதகரடி யென்பார்நின்றூரன்றிக் காமவெங்கோய்
திரும்பாதகரடி னும்மிதயாலய சீபதியே. ௩௭௮

கரும்போதினுங் கடுவிடமீதெனக் காணுவள்வென்
சுரும்போதினு மடவார்பழிக்கச் சுடர்மதியம்
வரும்போதினு கலங்கட்கமாங்கட்கம் வார்த்தனங்கள்
பொரும்போதினுலைந் தாளிதயாலய பூபதியே. ௩௭௯

உத்தமப்பாகருந் தாதுவர்வாய்மொழி யொன்றுஞ்சொல்லா
நித்தமப்பாகருந் தாதுறுந்தார்கொய்து நீடிகறும்
பித்தமப்பாகருந் தாதுவிடாரிவட் பெற்றவட்கோ
சித்தமப்பாகருந் தாதிதயாலய சீபதியே. ௩௮௦

அருப்புரவிக்கை வளைத்தேமகனெய்வ ஞர்க்குஞ்சங்க
விருப்புரவிக்கை மடங்காமதிசுடு மின்னகில

மருப்புரவிக்கை கிழிக்குமுச்சைச்சிர வப்பெயர்கொ
டிருப்புரவிக்கை நிகரிதயாலய சீபதியே. ௩௮௧

ஓதிக்குவிசைய மாமொழியாடன மோங்கிவிம்மி
மோதிக்குவிசையம் போலாயிடையை முறிக்குமின்று
ளாதிக்குவிசையன் பாகர்க்குவீறா யமலருக்கன்
பாதிக்குவிசையஞ் செய்யிதயாலய பாண்டியனே. ௩௮௨

அன்னமென்றாலு தாத்திலுட்சேரு மருங்கரும்போ
சொன்னமென்றாலுங் கசக்குமென்பாளொரு சொல்லுஞ்சொல்
லின்னமென்றாலு விறலணைபன்னகத் தேதனனந் (லாள்
தன்னமென்றாலும் பதவிதயாலய சற்குணனே. ௩௮௩

நிரைத்தனந்தந்தன தங்கைவிட்டோடு நிதம்பணைத்து
வரைத்தனந்தந்தன நுண்ணிடைநோவ வருந்தயிராற்
கரைத்தனந்தந்தனம் வேம்பென்கிறாள்கவி வாணர்க்கிது
முரைத்தனந்தந்தன நல்கிதயாலய வுத்துங்கனே. ௩௮௪

அச்சங்கத்தாரைத் தொனிகாட்டுமாலணை யாநிதம்ப
நச்சங்கத்தாரை பொருந்தாள்பன்னைளென்மி னைளணைகார்
நிச்சங்கத்தாரை வளைகூடவிற்றமிழ் நீடியிருப்
பச்சங்கத்தாரைவைத் தாயிதயாலய பாண்டியனே. ௩௮௫

சொலக்காவிதுவரை யாதழல்கால்வதுந் தோகையர்க்கு
விலக்காவிதுவரை யுந்தானிருப்பது மேலெய்வதுஞ்
சலக்காவிதுவரை மான்மகனேவதுந் தாவுமந்தா
நிலக்காவிதுவரை வாயிதயாலய நீதனுக்கே. ௩௮௬

போதங்கத்தங்கனி வேள்விடுத்தானணை பூவைமூலை
குதங்கந்தங்கஞ் சங்கங்கந்தரங்கிஞ் சுகமிதழ்கார்
காதங்கந்தங்க மெனுங்குழலாழிக ராமடிய
மாதங்கந்தங்கவுய்த் தோயிதயாலய மன்னவனே. ௩௮௭

பொங்கும்புணரி முரசறைந்தேமதன் போதம்பினு
லெங்கும்புணரிவை யாகத்திலாக்க விரவினிற்ப
துங்கும்புணரிகல் கொண்டவிராக்கதர் தொல்லுடலைத்
தங்கும்புணரிக் கிடுமிதயாலய சற்குணனே. ௩௮௮

அம்மாதனத்துப் பொறையையெவ்வாறிடை யாற்றுஞ்சென்ற
தைம்மாதனத்து மிவளிரு தானதுன் னூர்விரும்பி
யிம்மாதனத்து வெறுப்புவைத்தாளனை யேழ்புவிக்குஞ்
சிம்மாதனத்துரை யேயிதயாலய சீபதியே. ௩௮௯

அஞ்சிக்கொடிக்கெட்டுங் கூகையுலாவரை யாமத்தினம்
வஞ்சிக்கொடிக்கெட்டு மட்டினில்வந்தனை மார்வைவர்தே
மிஞ்சிக்கொடிக்கெட்டு ணையுமுண்ணுண்மெத்தை மேலிவளைக்
கொஞ்சிக்கொடிக்கெட்டும் போற்றிதயாலய கோபதியே. ௩௯௰

பூவடுக்கண்டு மணையணையாளம் புதிமுழுங்க
வேவடுக்கண்டுக் குதவுஞ்சொல்லாறெந்து வீழ்வடனத்
தேவடுக்கண்டு மகிழ்வதெப்போதென்ப டேங்குவளப்
பாவடுக்கண்டுயி லாளிதயாலய பாண்டியனே. ௩௯௧

கடுகளவன்னம் புகட்டவொட்டாளிரு கள்ளவிழி
கடுகளவன்னநந் தாகுநின்வாகிற் கனதனமு
கடுகளவன்ன நடைமானைச்சேர்ந்தருள் கம்பத்தனைக்
கடுகளவன்னமெய் யாயிதயாலய காவலனே. ௩௯௨

செழுந்திருக்கச்சுக் குவளையதாநின் செறியெழில்பு
கழுந்திருக்கச்சுக்கு மட்டிடப்பால்பரு காதுயங்கி
விழுந்திருக்கச்சுக்கு நாமுதிக்காத்தனம் வீங்கிமுலை
யெழுந்திருக்கச்சுக்கு மேலிதயாலய விந்திரனே. ௩௯௩

ஊட்டவிடாணத் தனம்பான்மதிசுட வோங்குமுவாத்
தீட்டவிடாணத் தனமீதுவேய்நித்தி லம்பொறிந்தாங்

தூட்டவிடாணத் தனமாதையாளரிச் சூட்டின்மிசை
யாட்டவிடாணத் தனமிதயாலய ஞமண்ணலே. ௩௯௪

அலையின்முழுந்த வணைசெயவீர னளிமுரனு
முலையிலழுத்துந் தடவிதயாலயன் மொய்ம்பதன்றிச்
சிலையில்விழுந்த புருரமின்மாலுக்கிச் சீமையிலே
தலையிலெழுத்தைக் குறைத்திட்டபேனையென் றண்டிப்பதே.

காவியம்பாடும் பொழுதுவைவாள்கஞ்சங் கைநிகரா
காவியம்பாடுவர் வாய்திறந்தோர்மொழி காமனைநீங்
காவியம்பாடுவைப் பாளனத்தோடெங்கள் கன்னிவந்தாள்
காவியம்பாடுநர்க் கீயிதயாலய காவலனே. ௩௯௫

அனைத்தானையுஞ்சரி யுஞ்சரியுஞ்சரி யானமங்கை
யனைத்தானையாக்கொண்ட மாபாவியான வனங்கன்செய்து
யனைத்தானையோசொல்லி முற்றுதுசேர்மதி யைப்பதத்தா
லனைத்தானைப்போற்றிப் பணியிதயாலய ஞமண்ணலே, ௩௯௭

நவ்வியப்பாயசக் காயிழைமாலற நம்மனையா
ருவ்வியப்பாயச மாழ்தரவேகொய்ய வுன்னினர்சேர்ந்
துவ்வியப்பாயசந் தெய்யாமற்பாடிவந் தோர்க்கமுது
திவ்வியப்பாயச நல்கிதயாலய சீபதியே. ௩௯௮

## நிரோட்டம்.

கனகனங்கந்தனை யாக்காரளகந்தண் கண்டனங்கட்
கனகனங்கந்தனை யந்தீர்கனியர் கழறநைந்தாள்
கனகனங்கந்தனை யற்காச்சிதையக் கனத்தினிலி
கனகனங்கந்தனை நேரிதயாலய காரண்ணலே. ௩௯௯

### வெண்பா.

மிக்குவியப் பாகுமுலை மேருமலை நாணுறவி
மிக்குவியப் பாகுமுலை மென்சொலிநெஞ்—சக்குவருத்

தந்தழைத்து வாடினினைத் தாளிருத யாலயவு
வந்தழைத்து வாடியென்றாள் வா. ௪௱

கம்பாகும் பாகுமுஞ கன்னவித யாலயவேள்
கம்பாகும் பாகுமுஞ கன்னிகண்டம்—அம்புவியாற்
கொள்ளச்சம் போகவிரு கொங்கைக் குடங்குழைய
மெள்ளச்சம் போகம் விழை. ௪௱௧

செல்வேலை யென்படுமோ தீரனித யாலயவேள்
வல்வேலை யேபொருத மைவிழியாள்—பல்காலுங்
கீதப்புட் பஞ்சுரமங் கேயியற்றும் பூங்குழலாள்
பாதப்புட் பஞ்சுரத்தின் பால். ௪௱௨

வையனலிந் தென்று வதனமட மாதுவட
வையனலிந் தென்று வதனம்வெம்பி—நையுமெய்தான்
துட்டத் தனத்தையலர் தொட்டிருத யாலயவேள்
வட்டத் தனத்தையலர் வாய். ௪௱௩

நந்தாவான் மாத்தருவா ணுதவித யாலயவா
நந்தாவான் மாத்தருவா ணுிரதம்—வந்தானேன்
கோதையலர்க் கோவணைகக் கோதையலர்க் கோகடலுக்
கோதையலர்க் கோகுயிலுக் கோ. ௪௱௪

நாந்தகஞ்சங் கந்தரிக்கு நாதவித யாலயசேர்
சேந்தகஞ்சங் கந்தரிக்குஞ் சிந்துரங்கை—யேந்துமுலை
வண்டுமண்டு வண்டுவந்து வந்தனின்று சிந்தைநொந்து
பெண்டுமண்டு வண்டுகொண்டாள் பீர். ௪௱௫

அம்புயங்க சங்கமங்கை யங்கணிந்த சம்பகங்கு
யம்புயங்க சங்கமங்கை யங்கணிந்த—வெம்புகின்ற
நத்தத் தனந்தலுற நல்கிருத யாலயமா
தத்தத் தனந்தவெனுந் தார். ௪௱௬

மன்னன் படலையன்பால் வைத்தவித யாலயனு
மன்னன் படலையன்பால் வாங்கினன்றி—மின்னும்பொன்
ஆவனிதந் கூர்நிதலை யால்வம்பிற்று ளச்சமொழி
யாவனிதங் கூர்நிதலை யால். ௪௱௭

ஆகந்த காதகலையை யன்னமன்னுள் கொண்டதுயர்
ஏகந்த காதகலைச்செய் யிற்போமோ—வாகையைநால்
ஆங்கா தனையிர வம்பெய்த யாலயன்றூர்
வாங்கா தனையிர வம். ௪௱௮

மாவிருந்தை யாலைய மன்புயமன் றித்தனம்பீர்
மேவிருக யாலயன்கண் டேவிடுக்கும்—ஏவதெங்கும்
வாயிலாக் காக்கைபெற்றூண் மையறவி ரச்சுகத்தை
வாயிலாக் காக்கைதரு மா. ௪௱௯

அன்னங்கா ளிங்க னடியேன் படுந்துயரை
முன்னங்கா ளிங்கன் முடித்தலைமேற்—பொன்னந்தாள்
வைத்தானு வால்வனையன் மாவிருத யாலயன்பான்
மெய்த்தானு வால்விளம்பு மின். ௪௱௰

சந்தனவ சந்தனம்பே தைக்குவளி பாலனங்க
சந்தனவ சந்தனம்பே தைக்குமமை—யந்தனமாங்
குமபந் தடிக்கமயல் கொண்டிருத யாலயனை
யம்பந் தடிக்கநினை யாள். ௪௱௰௧

சீதவன சந்துவவாள் திட்டியம்பெய் யக்கடமி
லாதவன சந்துவவா ளன்னமன்ன—மாதவனை
நித்தந் தணிந்துதொழு நீதவித யாலயபண்
முத்தந் தணிந்து முகம். ௪௱௰௨

வேளிரதக் காற்றேரசை மென்செவியுட் கேட்டரிக்கண்
ணுளிரதக் காற்றேரசை யும்மருந்தாள்—காளகண்டங்

கூவனைந்தாள் வாய்கசந்தாள் கூடியிந் தயாலயமால்
பூவனைந்தாள் வாய்தனஞ்செப் பு. ௪௧௩

கைத்தாள மாந்தனத்தைக் காமனம்பு தைத்துளக்கக்
கைத்தாள மாந்தனத்தைக் காமலனை—யெய்த்தாளஞ்
சம்படரா மாசகனைச் சாற்றனித யாலயபொற்
சம்படரா மாசகனை தா. ௪௧௪

தினந்தினந்தாய் வையமதி சீறக்கைக் கஞ்சத்
தினந்தினந்தாய் வையமதிற் சேரச்—சனங்களம்பல்
சொல்லக்கண் டேங்குவனைத் தோயிருத யாலயவாள்
அல்லக்கண் டேங்குவனை யாம். ௪௧௫

அங்கஞ் சனங்களம்ப லாங்குரைக்க நொந்தனள்கன்
னங்கஞ் சனங்களம்ப னந்துவெண்முத்—தங்கொங்கை
கற்பாரந் தந்திவனை கன்னமித யாலயநின்
பொற்பாரந் தந்திவனைப் புல். ௪௧௬

சீனி கரும்பருந்தாள் சேலேயிழந் தாள்கறைய
தேனி கரும்பருந்தாட் சிந்துரனேர்—ஆனதனத்
தம்பஞ்சு மெய்தா னனங்கமத வேள்பதன
யம்பஞ்சு மெய்தா னணை. ௪௧௭

நஞ்சாய கந்தரத்தா னட்டத் தழிந்தவன்றி
னஞ்சாய கந்தரத்தா னரியவிற்—றஞ்சாமன்
மஞ்சத் திருக்கின்றாள் வாய்மையித யாலயவாள்
வஞ்சத் திருக்கின்றாள் வாய். ௪௧௮

பழகவினை யங்கணியாள் பாலருந்தா ளுவ்வூர்
பழகவினை யங்கணியாள் பாங்கி—தழையருந்த
இங்களிதை யாலையம்பா லேங்கேலென் றாள்கடந்த
னங்களிதை யாலயமன் று. ௪௧௯

புராதனத்துட் டத்தனத்துப் போர்வேளம் பேசங்
கராதனத்துட் டத்தனத்துக் கைத்தே—வராதனத்துக்
கொப்புனிதம் பத்திரத்தா ளுய்யளித யாலயதா
துப்புனிதம் பத்திரத்தா டோய். ௪௨௰

பூவைக்கும் பாவைக்கும் பொய்தல்புரி வாடுயில்வாள்
பூவைக்கும் பாவைக்கும் பொன்னிணைமேற்—பூவைப்பூ
வொக்கும் படிவந்தா னுற்றவித யாலயர
மிக்கும் படிவந்தாண் மின். ௪௨௧

அருந்தும் பிசுமந்த வங்குழல்சேர் வாளென்
றருந்தும் பிசுமந்த மாகத்—திருந்துகரும்
புங்கசக்கு மென்றுண்மண் போற்றுமித யாலயநின்
புங்கசக்குக் கேற்றவிந்தப் பொன். ௪௨௨

அம்பனைப்பச் சோலையிலே யானகுயில் கூவநித்தி
யம்பனைப்பச் சோலையிலே யன்றிறைற—வெம்புகின்றுண்
மாமுத்த மிட்டொன்று மன்னவித யாலயபூ
மாமுத்த மிட்டொன்று வா. ௪௨௩

கற்பநிரு பாநுவல்வேற் காளையித் யாலயப
கற்பநிரு பாநுவல்வே கத்துடனே—பொற்புமலி
சிந்துதைய மாவதுபோற் றீதுதைய வேவருமா
விந்துதைய லாட்கணீ யே. ௪௨௪

கசப்பா விரதக் கனலென்பா ளேயங்
கசப்பா விரதக் கனற்கால்—பசப்பாகத்
துப்பாய வாடியம்மா துங்கவித யாலயக
துப்பாய வாடியம்மா து. ௪௨௫

சேலைக்கட் டுஞ்சரியச் செய்யசரி யுஞ்சரிய
வேலைக்கட் டுஞ்சரிசெய் விட்டனன்கா—ளைக்கோ

தண்டவிசை யம்பிவளைத் தானிருத யாலயனே
தண்டவிசை யுற்றணைநி தம். ௪௨௬

கபோலக்கண் ணாடியில்வீழ் காதுவளை யாகஞ்
சுபோலக்கண் ணாடியங்கிச் சோர்ந்தாள்—கபாலத்தன்
பாதங்க ணாடிப் பணியுமித யாலயவிப்
போதங்க ணாடிதலை பொன். ௪௨௭

மாரனம்பு கட்டழகி வண்டனத்துட் டைக்கவனை
மாரனம்பு கட்டவெம்பி வாடுகின்றாள்—சாரநம்பு
பாவலரை யாண்டருள்பூ பாலவித யாலயமாற்
றாவலரை மாத்திரைக்கு ளாய். ௪௨௮

அப்பாம் பணைமுகுந்த னன்னவித யாலயன்வி
யப்பாம் பணையறிந்தோ ஞ்ரமின்றி—யிப்போது
வல்லியொத்த மென்முலைக்காய் வாளெடுத்துக் கத்திவிழ
வல்லையத்தை யிருதல்பா வம். ௪௨௯

கும்பத் தநந்திரண்டு கோட்டையுண்டு போனதுபோற்
கும்பத் தநந்திரண்டு கோட்டையிப—மும்பதற
வேவளா வாடுமின்னின் மேவிருத யாலயமால்
ஆவளா வாடுமிடை யாம். ௪௩௰

ஈற்றையலை நீத்ததளர் வின்றித் தளர்வொடுதென்
காற்றையலை நீத்தக் கருங்கடலைத்—தோற்றுசிலை
யன்னவிதை யத்தா யரைக்கண்டு வாடுவள்கா
மன்னவிதை யாலயபூ மா. ௪௩௧

தரக்காம்போ சங்கோ சலசைகளந் தோள்சுந்
தரக்காம்போ சங்கோ சலம்பப்—பரத்துறையு
மாவேந் தரும்பணியும் வள்ளலித யாலயவேட்
கோவேந் தரும்பணிதாக் கும். ௪௩௨

வாதும்பி சகாயா மன்னவித யாலயவாய்
வாதும்பி சகாயா மற்றினந்தீங்—கோதுகின்ற
மங்கையரும் பஞ்சமஞ்ச மண்டுவணஞ் சிந்துவந்தன்
வெங்கையரும் பஞ்சமஞ்ச வே. ௪௩௩

பொற்பவனி யாளுகின்ற பூமணித யாலயவே
ளற்பவனி வந்ததொடிந் நாள்வரையுங்—கற்பரிவைக்
கேகலையு மேகலையுற் றெண்ணிறரஞ் சோருமிடை
மேகலையு மேகலையு மே. ௪௩௪

மச்சாவ தாராபூ மாவிருத யாலயதேங்
கிச்சாவ தாரா கிலுகிலையா—ரச்சோவே
ளம்பாதச் சோடுமங்கை யங்கொங்கை யூடுநிந்தி
யம்பாதச் சோடுபங்கை யம். ௪௩௫

மாராச ராசனத்து மாவிருத யாலயபூ
மாராச ராசனத்து மாதுகளஞ்—சேர்து
வதனந் திருக்குவடு மஞ்சோதி யிந்து
வதனந் திருக்குவடு வாம். ௪௩௬

பரசுரதஞ் செய்யவந்தான் பாணமெய்யா னேவி
பரசுரதஞ் செய்யவந்தான் பாரி—லரசுபுரி
யுஞ்செங்கோன் மானேய னுண்மையித யாலயன்கா
வஞ்செங்கோன் மானேயன் பாய். ௪௩௭

அங்கம்பு ணையத்த னன்பவித யாலயவேள்
அங்கம்பு ணையத்த யங்கவிட்டா—ணங்கைக்
கிழகுமொழி கூந்தலிடை யீர்ந்திதலை பூந்தோள்
பழமலையந் தாதிக்குப் பார். ௪௩௮

செல்வா சமராட்டஞ் செய்யவித யாலயனுஞ்
செல்வா சமராட்டஞ் செய்யவிதம்—அல்லாமோ

கன்றினந்தி னந்தினநா கம்பொருந்திந் தேயவிட்டாள்
கன்றினந்தி னந்தினநா கம். ௪௩௯

மால்வாக னப்பகையூண் வாகனத்தின் மென்றாவிப்
பால்வாக னப்பரன்பின் பாவுதித்தோ—நால்வகையாஞ்
சேனையிலோர் சேனைவந்து சேர்ந்ததித யாலயநீ
தேனையில்வ தொன்றுநல்ல தே. ௪௪௰

கனிகரும்பு துத்தனத்தாள் காமருபூத் தோடு
கனிகரும்பு துத்தனத்தாள் கன்னி—யெனுமிவளைத்
தோணக்கூ டாறுளே துங்கவித யாலயவேள்
பாணக்கூ டாறுளே பார். ௪௪௧

மெத்தமனத் தாகமுற்றுள் மேவிருத யாலயனே
யுத்தமனத் தாகவொளி ரொண்களத்தார்—நத்துறநீ
யிங்கணையா னைப்பவனி யின்புறக்கண் டங்கசனார்
தங்கணையா னைப்பவனி தை. ௪௪௨

## சந்தக்கழிநெடில் விருத்தம்.

தானத்தானத் தானவெனச் சந்தக்கவிதை பாடுதலைத்
தானத்தானத் தானகளத் தையலனங்கன் சமர்செயின்மூத்
தானத்தானத் தானமனைத் தாளாலுதைத்தோ யெனுந்தோய்சந்
தானத்தானத் தானனவித் தாராவிதயா லயபதியே. ௪௪௩

படித்துப்படித்து நின்புகழைப் பாராட்டுவள்வேட் பாதகன்பற்
கடித்துப்படித்துக் கடித்துணரிற் கலக்குஞ்சரத்தாற் கலக்கவிற்பு
குடித்துப்படித்து வதனமின்பால் குடித்துப்படியாட் டந்தும்பை
முடித்துப்படித்துச் சணப்பகையை முடுக்குமிதயா லயபதியே.
படுக்கப்படுக்க வுறக்கம்வரா பரமனியற்றுந் தவத்தினையுந்
தடுக்கப்படுக்க விடுக்கமதன் றனத்துக்கனத்தைப் பொறுத்துமலைத்
திடுக்கப்படுக்க மானினியா ளிளையாதினியா டிரைகரையின்
மடுக்கப்படுக்கத் திகழூற்று மலைவாளிதயா லயபதியே. ௪௪௪

வனத்துக்கனத்து முலையான மதவேள்விடுக்கு மலரோது
னைத்துக்கனத்துக் குவமான நடைக்கந்தரமா னிடையொடியக்
கனத்துக்கனத்தும் படிகுவிந்து கச்சைப்பிதிர்த்துக் கதித்தெழுந்த
தனத்துக்கனத்து வகையாமுத் தமிட்டாளிதயா லயபதியே. ௪௪௬

தெவட்டக்கவட வரைவளைத்த சிவனேயிமையத் தெரிவைமுலைச்
சுவட்டக்கவடம் புரளுரத்திற் றேய்ந்தோமெனவே துதிக்குமயங்
குவட்டக்கவட மாகியவங் கசனூரடுக்குங் காலையுனக்
கிவட்டக்கவட னத்தினைத்தோ யிதயாலயபூ சிதமாலே. ௪௪௭

விலங்கக்கலங்க மனம்படைத்த வில்வேணடுரா வினிலெதிர்த்துக்
கலங்கக்கலங்க வாளிவிடுக் கனிதங்கனிதந் திடினுமுண்ணாள்
துலங்கக்கலங்க வின்முலைமேற் றொடவேநினையா ளிவட்குமதுச்
சலங்கக்கலங்கற் றிருத்தளவைத் தந்தாளிதயா லயபதியே. ௪௪௮

நஞ்சந்தஞ்சந் ததங்கொலையே நாட்டநாட்ட நாட்டமணி
யுஞ்சந்தஞ்சந் திரனுற முலைவாயழல்போல் வெதுப்பநித
முஞ்சந்தஞ்சஞ் செலவிடுக்க முயல்வாளிவட்கு முல்லைதந்தாள்
தஞ்சந்தஞ்ச மெனுமுலகத் தரையாளிதயா லயபதியே. ௪௪௯

அப்புத்தப்பு லரையழித்தோர்க் கருட்டேசிகனால் வெந்தமதன்
உப்புத்தப்பு முழக்கிமுத்த முதிரக்கனலை வளைத்துரக்கந்
தப்புத்தப்பு விடுக்கமனந் தயங்கித்தியங்கி னளிணைக்குத்
துப்புத்தப்பு மிதழியிவட் டோய்வாயிதயா லயபதியே. ௪௫௰

நலசஞ்சலசந் திரமன்றத்தி னடகாய்வதைத்தாண் மதிநடுத்தீர்
*வலசஞ்சலசந் திரனொடிக்குண் மனவேகமுட னடந்தடைந்து
சொலசஞ்சலசந் திரவிலெனத் தோகையெனை நின் பால்விடுத்தாள்
கலசஞ்சலசந் திரநகிலங் கண்பாரிதயா லயபதியே. ௪௫௧

* நடுத்தீர்வலசு. வசு.

அயக்கந்தியக்கந் தரவீர்க்கு மானைமருப்பி ரரிமகன்போர்
முயக்கந்தியக்கந் தரக்குழலி மொழியுஞ்சாலி யாகுமிக
மயக்கந்தியக்கந் தராளமுலை மலைமேல்வெதுப்ப மன்னினள்காண்
நயக்கந்தியக்கந் தரமுருந்து னகையாமிதயா லயபதியே. ௬௪௨

உருத்துமருத்து மிசையேறி யுருவிலான்வந் துலவுமனை
யருத்துமருத்து மெனச்சகிமார்க் கறையவவர்க ளருத்திலரு
வருத்துமருத்துத் தாளெனக்கு மட்டுமெளித்தார் மணிமாலை
திருத்துமருத்து வதனமினைச் சேர்வாயிதயா லயபதியே. ௬௪௩

தருவப்பருவப் பயல்விடுக்குந் தாயேவையத் தலைப்படிலே
வருவப்பருவ மையிலாத மடமாதரசு வகைதரும்பால்
திருவப்பருவர்க் கடல்கடக்கச் செய்தோனுணவோ வெனுமிவளை
மருவப்பருவ மிதுகாணு மிதயாலயனு மன்னவனே. ௬௪௪

அணைக்கவணைக்கப் பரமசுக மளிக்குமுலைக ளிரண்டுமிகப் [வேள்
பணைக்கவணைக்கண் பிணைக்கணுறும் பாவையனந்தல் பண்ணிலள்
கணைக்கவணைக்க வெழுமதிக்குக் கலங்கும்வேடக் கன்னிதனி
தணைக்கவணைக்கண் டுகந்திடுங்கந் தனைநேரிதயா லயபதியே. ௬௪௫

மோகம்போகந் தனைநினைந்து முதிருந்தூது மொழிமினென்றூற்
போகம்போக மெனமடவார் போராடுவரிப் பூவையுடன்
வாகம்போக வடவிழியா மருவிப்புரப்பாய் வயன்முழுது
மேகம்போகஞ் செயுங்கிளைவை வேந்தாவிதயா லயபதியே. ௬௪௬

முந்திக்குந்திக் குந்திமகார் முறைமைமாமன் முனைசெயும்போர்
கந்திக்குந்திக் குந்திமடு வனையார்க்கயரு மிவட்காணில்
வந்திக்குந்திக் குந்திகழு வானுமருவார் தலைகளைப்பேய்
சிந்திக்குந்திக் குந்திநடஞ் செயக்கொய்திதயா லயபதியே. ௬௪௭

மடக்கமடக்கக் காமவிட மடங்காதெழுந்து வரவதனாற்
றடக்கமடக்க வின்புறப்ப தத்தாள்மயங்கித் தவிருடே

கிடக்கமடக்க னிக்கணந் கிளையேகூறு மிலங்கைமன்ம
குடக்கமடக்க திரந்தொடுத்த கோவேயிதயா லயபதியே. ௪௫௮

ஐயப்பைய னந்தனைத்து யரஞ்செய்நடையாள் கண்டயர்ந்து
பையப்பைய னந்தனைத்தும் படியிற்கவிழ்த்துப் பண்டுதுயில்
செய்யப்பைய னந்தனைத்துத் தியமாக்கொழுந்தே வாகினள்சிந்
தையப்பைய னந்தனைத்துத் தழுவாயிதயா லயபதியே. ௪௫௯

திருத்தவருத்த வனைநகிலத் தெரிவைமார்கள் பலகனிதேன்
அருத்தவருத்த வொன்றினையு மருந்தாளாகி யனங்கனம்பாற்
பெருத்தவருத்த மடைந்துடைந்து பிறங்கும்பசலை யாற்பசந்தாள்
செருத்தவருத்த மகுளமிவட் சேர்வா யிதயாலயபதியே. ௪௬௰

பொருந்தவிருந்த சனத்துடனே பொல்லாப்போது வரனையரு
முருந்தவிருந்த சனத்தாட்கு முல்லையளிக்கிற் பயமதுத
விருந்தவிருந்த சனல்வயதா மேவிப்புரப்பாய் விதுரனுளந்
திருந்தவிருந்த சனஞ்செயும்பூ சிதனேயிதயா லயபதியே. ௪௬௧

திருந்துவருந்து வனைநிகர்க்குந் தேனும்பாலுந் தினந்தனியே
யிருந்துவருந்து வனைமுலையாட் கெந்திரும்பகையாந் தாயொனப்
பொருந்துவருந்து வனைவெலிதட் பூவைமாரும் விதுரனிடம்
விருந்துவருந்து வனைநகர வேந்தாவிதயா லயபதியே. ௪௬௨

சுரதசரத நூறெரிந்த தோகைமயங்கித் துட்டர்கண
கரதசரதஞ் செயநகைத்த கடவுள்குளக்க ணூலெரிந்த
விரதசரதந் திரமதவே ளிரவிற்கரவி லெடுத்தெதிர்த்தான்
புரதசரத சுதவீமா பூமாவிதயா லயபதியே. ௪௬௩

கரியக்கரிய விருளாமங் கசனூரடுக்குங் காலைபுர
கரியக்கரிய திருவுருவிற் கலந்தோயெனுங்கொங் கைத்தரளங்
கரியக்கரிய மதிநிலவு காலக்கால மயங்கிடும்புங்
கரியக்கரியம் பரும்புகழா கரனேயிதயா லயபதியே. ௪௬௪

பாட்டிக்காட்டி ரசம்போலப் படித்தலுடனே பாவையைநீ
ராட்டிக்காட்டி வீட்டில்வினை யாடன்மறந்தா ளவள்காமக் (நாண்
கோட்டிக்காட்டின் றலைசிதைக்கக் குறித்தாளனைசேர் கொடுமரா
பூட்டிககாட்டின் மரந்துளைத்த புயலேயிதயா லயபதியே. ௬௫

மனசம்பனச டுதியுடனே மலையானிலத்தே ரினைக்கடவிக்
கனசம்பனசந் திடத்தருவைக் கலர்ந்தான்மதலை கழைவளைத்து
வனசம்பனச வசனிமூலை மலைமேற்றொடுக்க வாடினள்சேர்
தனசம்பனசந் திரவதனத் தானேயிதயா லயபதியே. ௬௬

எருத்துக்கருத்த னுண்டவுண வெனவேதேனைப் பாலயரு
வருத்துக்கருத்த குழலுடனே மனமுஞ்சோர்ந்து மதனூரு
மருத்துக்கருத்த மூலையார்க்கு மயங்கினாள்சொல் வாணர்கவிக்
கருத்துககருத்த மொடுமொடிக்குட் காணுமிதயா லயபதியே.

ஊதங்காத வளைமடியுந் தொடியுங்கழன்று சுழன்றிமைய
மாதங்காத வளைப்புரந்தாள் வானேயென்னு மானினிக்கா
மோதங்காத வளையுலவு முல்லையளித்தாண் முன்புயகற்
போதங்காத வளைமறைத்த புயலேயிதயா லயபதியே. ௬௮

மலைத்துமலைத்து நிமித்தமறி வாளைப்பணிந்து பல்லிசொல்லு
தலைத்துமலைத்துத் தவசனக்கோ தைதானியம்பிப் பலனறியு
நிலைத்துமலைத்து வசமகர நிட்டூரத்தங் கசன்செயலைக்
கலைத்துமலைத்து வதனமின்னைக் கண்பாரிதயா லயபதியே. ௬௯

இருகாமருகா வெனுங்குழலை யிறுகமுடியென் றுன்முடியாள்
பொருகாமருகா நின்றமலர்ப் புதுவாளிதைக்கப் பூவைகண்ணிற்
பெருகாமருகா மல்வரநாண் பிறழ்ந்தாளணைமா யனைச்சனகன்
மருகாமருகா வெனப்பணியும் வரதாவிதயா லயபதியே. ௭௰

## கட்டளை.

இலங்கசத்தலை யெத்தனையோசொய்து
மின்னமுஞ்சுக மில்லையையாமுலை
யிலங்கசத்தலை வன்றெட்டுவிட்டமட்
டேய்ந்தவாளிதைத் தேகிடும்வேப்பந்தை
யிலங்கசத்தலை யொத்துக்கசந்தி
னிக்கும்பாகுமி வட்டுக்கும்பாகுஞ்சை
யிலங்கசத்தலை வாரியிற்பெய்தனை
யிட்டவாவித யாலயபாண்டியனே. ௪௱௧

சொந்தப்பாடகப் பாதகத்தாயர்க்குத்
தூற்றிவைகின்ற சோலியதேசந்து
கந்தப்பாடகப் பாதகப்பாவென்று
கண்ணனைப்புக லுங்காமனனைந்து
முந்தப்பாடகப் பாதகரச்சிறி
முன்னவன்விற்ற னத்தாயெனிற்சொலாள்
சந்தப்பாடகப் பாதகஞ்சத்திருத்
தையல்சேரித யாலயபூமனே. ௪௱௨

கமைந்தனைவந் தானைப்பணிந்தடங்
காதவிந்தத்தைக் காய்ந்தகும்போற்பவன்
அமைந்தனைவந் தானையும்போற்னி
லடுத்தூநின் றுதொ டுத்தான்முராரிதுங்
கமைந்தனைவந் தானையுஞ்செங்கைக
லக்குஞ்சூடக மூங்கழன்றூண்மதஞ்
சமைந்தனைவந் தானைப்பதாகைவித்
தாரனேயித யாலயபூமனே. ௪௱௩

கனிக்குச்சாரங்க சந்திடச்சீனியுங் காச்சுப்பாலுந்து
வர்க்கச்செய் வாசகக்

கனிக்குச்சாரங்க மாகியகூர்விழிக் கன்னிமாருங்க
டும்பகையாகுமோ
கனிக்குச்சாரங்க மங்கையிலேந்திப்ப கழிதொடுக்கக்
கருக்கமுற்றேமனங்
கனிக்குச்சாரங்கங் கொண்டயர்ந்தாளணை காண்டிபாவிந
யாலயபாண்டியனே. ௪௭௪

குடிக்குமாரசங் காரமதாகவே கொப்புளிப்பள்வந்
ங்தயம்புதைக்கவே
படிக்குமாரசங் காரசம்போவென்று பாங்கிமார்கையிற்
றுங்கிமுன்பேநின்று
முடிக்குமாரசங் காரங்கொடுக்கமு டித்திடாளிவள்
மோகத்தைத்தீர்த்திடுட்
கொடிக்குமாரசங் காரம்புயக்கரக் கொண்டலேயிந்
யாலயபாண்டியனே. ௪௭௫

ஆலகாலங் கைரவசேர்விழி யமுதவாய்மடந்
தைக்குத்தனங்கள்வி
சாலகாலங்கை மும்மதமுற்றமா தங்கத்தந்தத்தை
யொத்துப்புடைக்கவேள்
கோலகாலங்கை யாதவில்வாங்கிக்கொ ழிக்கவாடினள்
கோபாலனைத்தம்ப
பாலகாலங்கை மேற்சென்றவாவென்று பணிதல்செய்யிந்
யாலயபாண்டியனே. ௪௭௬

வடக்கடக்கரி நீர்மூலமீதினின் மாலைக்காலத்தி
லாழியினொலெல்லைக்
குடக்கடக்கரி தந்தமைந்தன்றித்திக் கும்பருஞ்சிலை
யைக்குனித்தேவுமே
படக்கடக்கரி தாந்கயர்கொண்டிந்தப் பாவைவாடினள்

பஞ்சணைமேல்வந்தான்
தடக்கடக்கரி யேறிடோத்துவித் தாரணையித
யாலயதீரனே. ௪௭௭

## கழிநெடில்விருத்தம்.

சத்தமலைத் திருப்பரவை மிகவெழுப்பக் கட்டிலுப
தானமெத்தை
மொத்தமலைத் திருப்பரவை விழியருவி நீரெழுந்து
முடுக்கமாரன்
மெத்தமலைத் திருப்பரவை ரவையாக வவன்கணைமின்
மெய்யைக் கொய்யச்
சித்தமலைத் திருப்பரவை யாரிருத யாலயவ
சீர மாலே. ௪௭௮

மாதகர டக்காரா நின்றவன்னம் பின்னுமரு
வருக்கத் தாயாம்
பாதகர டக்காராய் பழிமொழிதூ றலைவரும்
பைவிட் டென்னை
யேதகர டக்காரா வொருசிறுபெண் குழந்தையுனக்
கெதிரா வென்பாள்
சீதகர டக்காரா மும்பலிவர் மருதப்ப
செகபூ மானே. ௪௭௯

பெருங்குவளைத் திருக்குறுவல் வாய்ப்பெயுமா லிடம்பிரியாப்
பிரியன் கொங்கை
நெருங்குவளைத் திருக்குழையார் மதனனித யாலயனிந்
நேரம் வந்தான்
மருங்குவளைத் திருக்குமெழி லம்பரஞ்சோ ராதுமுத்த
மாலை போனீர்
இருங்குவளைத் திருக்குகா தினிப்பாகு மினிப்பாகு
மெனக்குத் தானே. ௪௮௰

மங்களவா னனங்கைபது மங்களவா னனங்கைபது
மைமெய் யேமெய்
தங்கமது திருமேனி தங்கமது திருமேனி
தந்தா னெய்வான்
அங்கடமோ கனதனமே யங்கடமோ கனதனமே
யாரும் பாரோ
துங்கவித யாலயனே துங்கவித யாலயனே
சுகுண மாலே. ௪௮௧

கந்தரம்ப ணிலங்கரிய கந்தரம்ப ணிலங்கரிய
கலாத கூந்தல்
சுந்தரமூர் வசிவடிவே சுந்தரமூர் வசிவடிவே
றுணைக்கண் வாசச்
சந்ததனந் தங்கமலே சந்ததனந் தங்கமலே
தயங்கு வாள்சே
ரந்தரங்க மந்தரங்க னிகரிருத யாலயத
யாள கோவே. ௪௮௨

ஆரவடஞ் சந்திரனே யாரவடஞ் சந்திரனே
யழல்க ரேற்றும்
ஈரமல ரம்பையிலே ஈரமல ரம்பையிலே
யெயக்கொண் டான்வேள்
தீரவிலை மையலிலே தீரவிலை மையலிலே
சென்றின் றுள்வாய்
பாரகலா நிபுணர்களென் பாரகலா மருதப்ப
பாக்ய மாலே. ௪௮௩

தாராமா ராமாகத் தமிழ்துறழுத் தமிழுரைப்பார்
தமக்கு விண்ணாட்
டாராமா ராமாதங் கங்கந்தம் பொங்கந்தங்
கலரோ தென்றற்

ஹேராமா ராமாவின் வடிவிழியார்க் கிருபுயமாத்
திரண்ட மேருப்
பாராமா ராமாசி ரிருதயா லயபதியாம்
பகரக் கேண்மோ. ௬௮௪

தொனிச்சதங்கைப் பதமடந்தை சுந்தரம்பே சுந்தரத்த
தோவேளொடு
செனிச்சதங்கை தானநிற்சந் தேகமில்லை மாந்தளிரோ
சேகப்பொன்னும்
வனிச்சதங்கை யாற்றடுத்தா ளாற்றடுத்தா னென்னையன்றி
வையத்துண்டோ
இனிச்சதங்கை ரவத்தடங்கும் கிளுவையித யாலயந
ரோநத்ரமாலே. ௬௮௫

பவளப்பா சடைக்குவடாம் வில்லிகண்ணுற் றுலைந்துமுய்ந்த
பாவிகாப்புக்
குவளப்பா சடைக்குளெலாம் வளைந்துநுளைந் தெடுத்தவம்புக்
கும்பிறலெய்த்
தவளப்பா சடைக்குமிசர்த் திலகுபெற்று ளிலகுமுலை
தராமையுந்தக்
கவளப்பா சடைக்குசறிந் தணையிருத யாலயசிங்
காரமாலே. ௬௮௬

அனங்கசக்க வடியம்பு கண்களிலூற் றெடுப்பவுக்கத்
தம்பரத்தை
மினங்கசக்க வடியம்பு யத்தினுக்கோர் நொடிக்குள்வர
வேம்பொல்லாத
வனங்கசக்க வடியம்பு டம்புவெம்பும் படிதுளைக்க
மயங்கினள்வா
தனங்கசக்க வடியம்பு சுலுமிதுமெய் மருதப்ப
சாமிமாலே. ௬௮௭

அனந்தங்கச் சிகரமதாற் றெட்டதெட்டு நாளாகு
லடைக்குமான
அனந்தங்கச் சிகரமெனத் தனமிடையை வளைந்துமுறித்
தடரப்பூட்டும்
அனந்தங்கச் சிகரமுன்சே ரமைப்பொழுதிற் கந்தல்கந்த
லாகும்பாராய்
அனந்தங்கச் சிகரமதுத் துழாயணிகர் மருதப்ப
வதியபரோறே. ௪௮௮

## வெண்பா.

துங்கத் திருப்புகழைத் தோயிருத யாலயப
துங்கத் திருப்புகழைத் துட்டமதன்—கொங்கைக்குட்
போதேவ தேவவென்பாள் பொற்புயனே முக்கணுடை
மாதேவ தேவவென்பாள் வா. ௪௮௯

## கழிநெடில் மடக்கு.

கந்தமிகுங் கனதனங்கள் கன்னிகருங் குழலே
கனிவசனங் கந்தரமுங் கன்னிகருங் குழலே
சந்ததமுந் தரளமுமிழ் சங்கங்கந் தரமே
தளிர்மலர்ப் பட்டாலுங்க சங்கங்கந் தரமே
அந்தநகை முலைநகைமை யக்கங்கூர் வாளே
யனுதினநின் மீதினின்ம யக்கங்கூர் வாளே
நந்தலிலா மணியிழைகண் ணுடியணை வாயே
நரேந்த்ரவித யாலயகண் ணுடியணை வாயே. ௪௯௰

மாதுவரும் படியிதழ்மா னேருமித யாலயன்பால்
வலியச் சென்றோர்
மாதுவரும் படியுரைத்தா ளெனவழைத்து வந்தாற்கொம்
மைத்தனம்விம்

மாதுவரும் படியுமம்ப லைத்தொனிகாட் டாதொழுகு
மதுரத்தேனை
மாதுவரும் படிக்கடியெய் மன்மதனார் தன்மதமும்
வாங்குநந்தானே. ௪௬௧

காவியந்த காரளகக் கன்னியரிங் கன்னியராக்
கழிந்தாரம்பு
தூவியந்த காரமெனு மதகரியென் மீதுவரத்
தூண்டிக்காமப்
பாவியந்த காரணபா தகஞ்செயலா மாவென்று
பகர்கின்றுளோர்
ஓவியந்த காரவிசு மிசையணைவாய் மருதப்ப
வுசிதமாலே. ௪௬௨

கொடைத்தாரா ளாவிருத யாலயபூ பதியேவிண்
குலவும் வேரி
யுடைத்தாரா ளாநின்ற நின்புயத்தி லாசைவைத்த
வொருத்திக்கன்னம்
படைத்தாரா ளாவென்று தன்னருமைத் தாயர்கண்ணுற்
பார்த்துப்பூத்துச்
சடைத்தாரா ளாயிரம்பேர் சந்தனச்சே றப்பியப்பித்
தவித்திட்டாரே. ௪௬௩

தடராமா தங்கமிவ ரிவர்விடுக்க வெடுத்தசர
சங்க மேருத்
திடராமா தங்கமதற் காற்றுவதா சிறுகனிக்குத்
தெய்வ மேவிப்
படராமா தங்கடலை விதியிதுவா வென்றனைமார்
பதற லாமா
அடராமா தங்கவளை தங்கவளை மருதப்ப
வதிபனோறே. ௪௬௪

சித்திக்கும் பாயசங்கும் பணியெனக்கொண் மருதப்ப
தீரன் வாரான்
பத்திக்கும் பாயசங்க டங்தொலையா தடிசகிகொப்
பளமே லாக
எத்திக்கும் பாயசந்தி ரன்கிரண நன்கிரண
மியற்றும் பாலுஞ்
சத்திக்கும் பாயசமுஞ் சத்திக்கும் பாயசமுந்
தலைக்கொள் ளாதே. சகரு

இகலசனங் கைக்குறைவு பெறப்புரிந்தோ னுண்டவன்ன
மென்ன வோரப்
பகலசனங் கைக்குமவ ளுளம்பதைக்குங் களம்புதைக்கும்
பர்வை யோடு
சகலசனங் கைக்குமன்றி லன்றிலிங்கோ விக்குமிரு
தனங்க ளாகி
யகலசனங் கைக்குமிகப் புடைக்குமித யாலயமா
லணையா நாளே. சகசு

தரளவடங் கச்சிவற்றைத் தகர்த்துமுகங் கறுத்தெழுந்து
தாரா தாரத்
திரளவடங் கச்சிகரத் திணைக்கடுகு புரிந்துதிசை
செறிந்தண் டச்சு
வரளவடங் கச்சிவந்து பருத்தமுலைச் சுமைக்கொடிந்து
மலர்ப்பாய் வீழ்ந்து
புரளவடங் கச்சிரதிக் காக்குமித யாலயவற்
புதபூ மானே. சகஎ

விலங்குவளைத் திருக்கையும்விட் டெனமுனிரா விராவேழு
வேளம் பெய்யக்
கலங்குவளைத் திருக்கையுகழ் பெருக்குததி முருக்குததி
கவலை யாற்று

யிலங்குவளைத் திருக்கையிமை யிமையமென்று ளிமையனங்கை
யிமையத் தாலே
துலங்குவளைத் திருக்கைதொட்டுத் தழுவிருத யாலயவுத்
துங்க மாலே. ௪௬௮

தனிச்சரச மருந்துமத ஞகமத காகமிடை
தனங்கண் பூந்தோள்
பனிச்சரச மருந்துவரம் புயமுகந்தா னயமுகந்தான்
படைநாட் டங்க
வனிச்சரச மருந்துகடாய் மார்கொடுத்துங் காமவெந்நோய்
மடங்கக் காணு
தினிச்சரச மருந்துகிலா ளினிச்சரச மருந்துகினித்
தியற்று வாயே. ௪௬௯

துரும்பாவிக் கொடியாதாழ் வடமுலைதாங் கிடையெனுமென்
றேகை யிந்தக்
கரும்பாவிக் கொடியாதா ரத்துவளர் குயில்குயில்சொற்
கனலா வென்பள்
திரும்பாவிக் கொடியாதா னதுமயங்கி மருதப்ப
தீரனே வல்
விரும்பாவிக் கொடியாதா கணைபொழிவேள் கரமரமா
வெனச்சொல் வாளே. ௪௭௦

செம்முருக்கம் பூரணவேல் தரமிருந யனமிந்தத்
தெரிவை கண்டத்
தம்முருக்கம் பூரணறு கக்கரமே யங்கசனம்
பஞ்சு மஞ்சும்
வெம்முருக்கம் பூரணம்ப விடிநொடியா கக்குமுறும்
விரும்பிச் சந்த
தம்முருக்கம் பூரணமா வைத்தணைவாய் மருதப்ப
தளசிங் கேறே. ௪௭௧

குருக்குடைவா ளைச்சங்கங் குலவுமுரா சிணைமுழக்கக்
குத்திக் குத்தித்
திருக்குடைவா ளைச்சங்க டம்புரியங் கசன்பிடித்துத்
தினமுஞ் செய்ய
மருக்குடைவா ளைச்சங்க மஞ்செய்மஞ்செய் திடுங்கமுகு
வரைமுப் பண்ணைச்
செருக்குடைவா ளைச்சங்கம் பாய்கிருவை மருதப்ப
ஜெயசிங் கேறே. ௫௱௨

சனங்களம்பல் வந்துரைக்க வதுவுமன்றித் தாயெனும்பா
தகியு மேவி
சனங்களம்பல் கவடமுற்றுத் திட்டவட்ட மிட்டமொட்டித்
தனத்து டங்க
சனங்களம்பல் வேளைவிடுக் கத்தளரு மாதுசிவந்
தகபோ லங்கஞ்
சனங்களம்பல் வன்னநந்தந் தரளமித யாலயவித்
தார மாலே. ௫௱௩

## சீட்டுக்கவி.

### கழிநெடில்விருத்தம்.

பெருந்தமரக் கோடுதிகழ் வாவியிடைக் குழைவனையும்
பெயர்ந்து சீறித்
திருந்தமரக் கோடுமெழி லாய்மடவார் படியவவர்
சேலை வாரிக்
குருந்தமரக் கோடுறவைத் தானையொன்று ரங்கமிசைக்
கொடிக ளோடு
பருந்தமரக் கோடுசிலைப் பார்த்தனுக்கோர் வலவனெனும்
பண்பி னானே. ௫௱௪

குரகதவ னத்தானை வகைத்தருவு ளான்குறிஞ்சிக்
கொடிச்சி மேற்கொள்
விரகதவ னத்தானை யொருவன்மகன் றுணைமருகா
வியந்து ளானை
கரகதவ னத்தானை மருப்பொசித்தா னைக்கமலக்
கண்ணி னானை
மரகதவ னத்தானை வனப்பிலகுந் திருமறுவார்
மார்பி னானை. ௫௱௫

பசுவாசப் பணிசூழும்வேய்ங் குழலானை யெப்பொழுதும்
பாதம் போற்றி
விசுவாசப் பணிவிடைசெ யடியவர்கட் குயிரானை
வெய்ய தீயொத்
தசுவாசப் பணிமருளத் தாண்டவஞ்செய் பதயுகளத்
தானைச் சுற்றும்
வசுவாசப் பணிலகராம் புயகருணா சரவதுல
வரதன் றன்னை. ௫௱௬

நகப்பகட்டு நெடுந்தடந்தோட் கருநிறவெள் வாய்க்கடையர்
நடாத்து மோர்கொள்
நுகப்பகட்டுப் பெருங்குழுவின் கவையடிபட் டுடைந்திடுவி
ஞேத மாந்தூ
யகப்பகட்டுட் டிரடரள மதிநிலவு தரப்பகற்போ
தாம்பல் பூத்து
மிகப்பகட்டு மெழில்வளஞ்சேர் வீரைநகர்ச் சினகரங்கொள்
விமல வாழ்வை. ௫௱௭

இந்தக்கா லம்புனையும் பரம்பரனை யுங்கணியா
தெதிர்த்து வந்த
அந்தக்கா லன்புரிக்கு ளகப்படுத்தா தராமுடிமே
லாடி நின்ற

சந்தக்கா லம்புயத்தைத் தனதடியார்க் கருளுகின்ற
தயையு ளானை
யெந்தக்கா லமுநினைந்து துதிபுகலு நயகுணமே
யிசைந்த மேலோய். ௫௱௮

கனகவடு பலநிமிர்த்து மரகதப்பச் சிலையுயிர்த்துக்
கடற்கு ளேதங்
கினகவடு செறிமாவை யிரண்டுதுணி படப்பொருகாங்
கேயன் வேலும்
பனகவடு விடமுநிகர் விழிமடவா ரொடுகலவி
பண்ணும் போது
நனகவடுப் படுதலல்லா லணுவளவும் வடுப்படுதே
னண்ணிடா தோய். ௫௱௯

விரும்பருந்துந் துமிமுழங்கச் சமரகளத் தெதிர்த்தவரை
வெய்ய பேயுங்
கரும்பருந்து நெடியசிறைக் கழுகினமு விருந்தருந்திக்
களிக்குமாறு
பொரும்பருந்துங் கப்புயத்தின் புகழ்கசிந்து வார்ந்தொழுகும்
புதுமை யென்னச்
சுரும்பருந்துங் கோமளவித் தாரபரி மளதளவத்
தொங்கல் பூண்டோய். ௫௱௰

கற்பகலா வணியநறுஞ் சோலையநு பஞ்சமுறக்
ககன வாற்றிற்
பற்பகலா வெழிவிமலைப் பானுடலங் கருகிமிகப்
பயங்கொண் டோடப்
பொற்பகலா நற்பகவச் செழுஞ்சுரபி கன்றுறவே
புரிந்த கையாய்
அற்பகலா மதிநுதன்மா மயில்கள்விளை யாடுமலை
யணையமார்பா. ௫௱௧௧

ககனவிலும் பரிவிரிக்குங் கதிர்களென நவமணிக
ளகலந் தான்றூ
சுகனவிலுந் தியசொனகி ரீடதரா வதிகரசந்
துளிக்க வேய
மகனவிலுந் தமிழ்ப்புலமைப் பாவலரை யெப்பொழுது
மகிழ்ந்து மேவி
யகனவிலு மறவாம லருளுதவி யாண்டருளு
மருமை யாளா. ௫௧௨

அன்னாட்டை யெனப்பணிமேற் றன்னாட்டைப் புரிந்தரிய
வமரி னூடு
வின்னாட்டை வரைப்புரந்த திருநெடுமா லருட்டுணையால்
வெய்ய தெவ்வாந்
துன்னாட்டை யறப்பொருந்த கொடும்புலியே யென்னாட்டச்
சோலை தோறுந்
தென்னாட்டைச் சுரும்புலவு தென்னாட்டைப் பொன்னாட்டிற்
சிறப்ப வாள்வோய். ௫௧௩

துன்னுமரு வாரஞ்சத் திரமுறுத லாவிரதத்
துரோணத் தானை
மன்னுசெய சத்தியங்கைக் கொண்டிருத்த லான்மயிலூர்
வரத வேளை
நன்னயஞ்சே ரமுதவச னப்புலவர் சூழ்தலினு
னன்மை சார்ந்த
பொன்னுலக நன்னகர்வா ழைந்தருவா லிந்திரனைப்
பொருவு நல்லோய். ௫௧௪

வாசமன்ன வரும்பணிகொள் பொழிற்கிளுவை நகர்புரக்கு
மகிபா மின்பா
காசமன்ன வரும்பணிதோய் கனகவரைத் தடமார்பா
கவிஞர்க் கீந்து

நேசமன்ன வரும்பணிவ ராதுகடைக் கணித்தருளு
நிருபா மிக்க
தேசமன்ன வரும்பணியு மிருதயா லயனெனும்பூ
சிதபூ மானே. ௫௧௫

வணத்திலக வாணுதல்வெண் டரளநகை கனக்கும்ப
வடிவக் கொங்கை
மணத்திலக நாசிமட வார்மதனை வொருவிணைப்பம்
வழுத்தக் கேள்கைக்
கணத்திலகத் தரித்தவருக் கியான்புகன்ற தமிழ்க்குதவுங்
கைமா றாகச்
சுணத்திலக மொன்றுபுரி வித்தனது பெருங்கருணை
சூட்டு வாயே. ௫௧௬

மாகனக முலைக்குமெழிற் றிதலைமட வார்விழிநேர்
வண்டு கிண்டக்
கோகனக முகைக்குலங்கள் முறுக்குடைந்து குமுகுமெனக்
கொட்டுந் தேன்பாய்ந்
தேகனக முகைக்குரும்பைத் தென்னையக்க னலைமிகவுஞ்
செழிப்பச் செய்து
வாகனக முகைக்குமரி நகர்க்குநிழ றருங்கிளைவை
வாசத் தோனே. ௫௧௭

திரக்கையிலா தவளையெனப் பலவளையைச் செயும்புகழூச்
சிதாவொன் றளை
யரக்கையிலா தவளைவளைத் தமர்செயுமே றனையவிசை
யனுக்கன் றவி
கரக்கையிலா தவளைக்கஞ் சக்கரச்சக் கரத்துளிட்ட
கண்ணு வொன்றுந்
தரக்கையிலா தவளைநிதம் புகழ்ந்துழலா தெனைப்புரக்குந்
தயவு ளானே. ௫௧௮

நகமதிக்குந் துயிலெனக்கொண் டவனளின வுந்திவந்தோ
னாவின் மேவுஞ்
சுகமதிக்கு மொழியவள்செந் தமிழ்விரும்பிக் காத்திருக்குந்
தோற்றம் போலச்
செகமதிக்கும் விலைக்கடங்காப் பெருவயிர மணிக்குழைக
டிகழுங் கன்னா
முகமதிக்குட் டதும்பமுதந் திரண்டிரண்டாய் வழிவதைநேர்
முல்லைத் தோளா. ௫௧௯

சினக்கவசந் தனஞ்சம்பு வனஞ்சம்பு நுகர்ந்தசம்பு
சிலைபோற் கொங்கை
கனக்கவசந் தாகமுந்தந் தாகவெந்தா கஞ்செயுந்தென்
காலால் வேங்கை
தினக்கவசம் போன்மனது பதைபதைக்க வேழையர்தஞ்
சிறந்த வாவி
தனக்கவசம் வருமெனாத் தினக்கவசத் தான்மறைக்கத்
தருமார் பானே. ௫௨௰

பொங்கஞ்ச மானவொண்புட் டொகுதியின்கட் படைக்கிடமாப்
பொலியா நின்ற
செங்கஞ்ச மானமக்கொப் பதுநிறத்தி லென்றதனைச்
செயிக்கக் கூடற்
சங்கஞ்ச மானமெனச் செறிபுலவோர் மதுரகவிச்
சாரங் கண்டு
தங்கஞ்ச மானுமதாத் தந்துதந்து மிகச்சிவந்த
தடங்கை யானே. ௫௨௧

சங்கதிரு மணியலைசூழ் வேலையிடம் வேலையிட்டோன்
றனைநேர் வெற்றிப்
பொங்கதிரு மணிராச ரறிந்துதொழும் போதவர்கம்
புனையு மோலிச்

செங்கதிரு மணிவரக்கூ சுழும்பலமா மணிகளையுந்
திகழ்மா ணிக்கத்
துங்கதிரு மணியாக்கு மற்புதஞ்சேர் செங்கமலத்
துணைத்தா ளானே. ௫௨௨

மீனூறு வசக்கிடையா மெல்லியலார் பகலிரா
வேழ மாரன்
மூனூறு படாதெழுந்து வந்தனனென் றுரைத்திடுஞ்சுந்
தரரு பாசெந்
தேனூறு வசனவித யாலயபூ பதியெனத்திற்
செலவுக் காக
வேனூறு ருபாயு மெனக்களிப்பாய் மனக்களிப்பாய்
விரும்பித் தானே. ௫௨௩

சருவரிச்சந் திரகலைக்கு வளைத்திருக்கும் புள்ளில்வளை
தமிழோர் கொண்ட
வெருவரிச்சந் திரகலைக்கு வளைத்திருக்கு மையன்சகனார்
மேவு சீர்போற்
றருவரிச்சந் திரகலைக்கு வளைத்திருக்குங் கனியெனச்செய்
தாளா சங்க
திருவரிச்சந் திரகலைக்கு வளைத்திருக்கு மரியொடணை
செங்கண் மாலே. ௫௨௪

பிரமரசங் கக்கந்தக் கவினளினத் தாரையணி
பிரமன் மாதே
வரமரசங் கக்கந்தக் கவினளினத் தாரையடி
மழுவா னஞ்சக்
கிரமரசங் கக்கந்தக் கவினளினத் தாரையுய்த்தோன்
கிளர்தோள் வாழ்த்தும்
பரமரசங் கக்கந்தக் கவினளினத் தாரைபெய்கம்
பனுக்கொப் பானே. ௫௨௫

பெரிசையிலங் கூற்றுவனைப் பதியவிடுத் தவற்கொர்மகட்
பெற்று ளூர்தோய்
வரிசையிலங் கூற்றுவனைப் பதியனபொற் கோபுரங்கள்
வலிய மாச
மரிசையிலங் கூற்றுவனைப் பதினகர்தஞ் செலுத்துபொறி
வைத்த சித்ரப்
புரிசையிலங் கூற்றுவனைப் பதியிடைச்செங் கோனடத்தற்
புதப்பூ மானே. ௫௨௬

இருகரும்பா ரப்பகட்டுத் தோடசனஞ் சோடசனந்
திடாத் தணிந்து
பொருகரும்பா ரப்பகட்டுக் கைவதனங் கண்டுவந்தான்
பொருமென் பார்க்கு
முருகரும்பா ரப்பகட்டு வவ்வளிகள் செவ்வழிசெய்
முல்லைத் தாரா
பெருகரும்பா ரப்பகட்டு முழுகினுஞ்சொன் மொழிதவறாப்
பெருமை யானே. ௫௨௭

தெலுங்கவிக்கு நிகர்துலுக்குக் கன்னடமா ரியம்வரைசித்
திரத்தின் சென்னி
குலுங்கவிக்குங் கசக்கமது ரிதத்தமிழு ணர்ந்துபச்சைக்
கோடைத் தேர்முன்
செலுங்கவிக்குந் தெரிவரிய கலைபயின்ற செவியிடையான்
றெரியா தேபு
கலுங்கவிக்கு தலைமொழியும் வினவியனு தினமகிழுங்
கருணை யானே. ௫௨௮

பொன்னகத்துக் குப்பணவன் வன்கையிலைக் கும்பணைத்த
புயவி சால
மன்னகத்துக் குப்பணவு மணிபலவின் மணியெனவில்
வழங்குந் தெய்வப்

பன்னகத்துக் குப்பணைப்பா ரம்பொறுத்த மருதப்ப
பாண்டிய கோவே
யென்னகத்துக் குப்பணாந்தந் திடக்கருணை முழுதினும்மைத்
திரக்ஷிப் பாயே. ௫௨௯

பொன்னகத்துக் கேதனமோப் பாம்பொறியை வெளவியவன்
புல்லின் காய்க்கொத்
தன்னகத்துக் கேதனதங் கையிற்பிடித்த தனுவளைத்தங்
கனுப்பி னானைத்
தன்னகத்துக் கே *தனமுங் களைகணின்றி வருந்தியபாஞ்
சாலிக் கும்பைப்
பன்னகத்துக் கேதனபூ பாலனுக்குங் கனகபடம்
பண்ணி னானை. ௫௩௰

* தனமென்பது தன்னம்.

வருகும்ப வளவும்விழி யிமையாது பாற்குரவை
மதனத் தூற்ற
ஒருகும்ப வளவமிழ்துண் டிடவளித்துத் தான்சிறிது
முண்ணா தானை
யிருகும்ப வளமுலையோ டதிலெழும்பொ னிதழமிழ்திற்
கேக்கங் கொண்டு
பருகும்ப வளத்தானைக் காப்பவரைப் பண்பின்முரல்
பண்பி னானை. ௫௩௧

சேற்றுவி யிடைப்பகட்டுப் பகட்டுழக்கால் வெருண்டவரா
றென்னம் பொங்கர்
மேற்றுவிப் பழஞ்சிதறி முகில்புரைத்துத் துளியொழுக்கி
விண்மேற் போகி

*கூற்றுவி முடித்தவன்சேய் விடுதடியோ வெனமருட்சி
கொள்ளு மாறு
தோற்றுவி வண்டிரும்பும் வீரைநகர் நாரணனைத்
துதிக்கின் றேனே. ௫௬௨

* கூற்றுவிமுடித்தவன்சேய்—உக்கிரவழுதி.

என்புதைய வுருவாகத் திருப்பதிக திருப்பதிக
மியம்பி னோற்குந்
துன்புதைய வுருபந்து பெறச்செய்கொங்கைப் பரவையெனுந்
தோகை யூடி
லன்புதைய லெனதுகொண்ட தொண்டனுக்கும் வேண்டியபொ
னளித்த மாதே
வன்புதைய லெமக்குமகிழ்ந் துதவியது போற்புவிய
வதரித் தோனே. ௫௬௩

முப்பழுக்க மதுரமுற மூியவிசைநா டகமென்ன
மொழியுஞ் செங்கல்
விப்பழுக்கந் தனிற்கம்பன் சிரக்கம்பஞ் செயவுணர்ந்த
மேலோ னே †தே
யுப்பழுக்கஞ் சுழலவரு காளியொடு கூளிகளு
முவப்ப வொன்னார்
குப்பழுக்கந் துணித்துநெய்யுட் குளித்துறையிற் குடிபுகும்வாட்
குடங்கை யானே. ௫௬௪

† தேயுப்பழு—அக்கம்.

சேட்டுக்கா வலவமுறப் பாடுகவி ராயருஞ்
செயுள்போ லென்புன்
பாட்டுக்கா வலவசியங் கொண்டருளும் பெருந்தையா
பரவப் பூத்த
கோட்டுக்கா வலவனுக்கு மகரந்த மலர்க்குடங்கை
கொடுபூ சுந்தென்
னட்டுக்கா வலவனெனு மிருதயா லயபதியா
நவிலக் கேண்மோ. ௫௬௫

ஓராரசை யங்களிரண் டெடுத்தனநட் டனத்தரம்பை
யோர்விண் ணுட்ட
மராராசைக் கமலயின்னூர் தம்புருடர் கிம்புருடர்
வரஞ்சேர் தாப
தராரசை வசித்தாந்தப் பழம்பொருளே யெனுந்துதியு
ததிவாய் போர்ப்ப
வராரசை யெனப்பெயர்பூண் டெழுபுவிக்குஞ் செழும்புகழ்க்க
வசஞ்செ யூரில். ௫௩௬

மாமதியா னனைமைந்து படைத்தமணை வாளன்முன
மனத்தூ டின்பக்
காமதியா னனமீதற் றியோகியற்றி னெனுமப
கையுட் கொண்டு
கோமதியா னனங்கைதனித் திருந்துதவம் புரிந்தந்தக்
கொண்கன் றன்னைத்
தாமதியா னனயமொடு தனைத்தேடி வரப்புரிவித்
தகவி றாவில். ௫௩௭

பன்மலரைப் புறங்கண்டாய் தனுவெடுத்துத் தனுக்கரும்பைப்
பற்று றும
லன்மலராம் பாலருக்கு வருமதனு நீபுரிசா
றதனிற் புன்னை
நின்மலரைத் தொழுவருவார்க் கமரர்பதந் தருபவன்போ
னிலத்துப் பூவாப்
பொன்மலரா யின்னரம்பைக் கனியொடுவிண் வழியளிக்கும்
போது தன்னில். ௫௩௮

நிற்கண்டு களிகூர்ந்து துறைசையிற்சுப் பிரமணிய
நிமலன் மேற்செய்
கற்கண்டு கசக்குமது ரிதக்கவிசொற் றுனதுசிரக்
கம்பத் தாளெஞ்

சிற்கண்டு பேரின்பத் தொடுவிடைபெற் றணிவிடங்கத்
திரள்கள் சூன்மங்
குற்கண்டு வண்டடைசையு மணிமாடச் சென்னிநகர்க்
குப்போம் பின்னர். ௫௩௯

ஆதி*யிலக் கணப்படியே யுதித்திரண்டிற் கடங்காத்துன்
பாக்கி மூன்றை
மேதினியிற் பலவிதமாச் செலவுசெயு மாறுபுரி
வித்த நாவிற்
பாதியினு வியான்பட்ட பாடுசொல முடியாது
பஞ்ச மென்ப
தேதுமில்லை யோதுமில்லை யிகந்துதெரு வுலவுதற்கு
மேது வில்லை. ௫௪0

*இலக்கணம்ஐந்து—எழுத்து-சொல்-பொருள்-யாப்பு-அலங்காரம். எழுத்தின்படி பிறந்து, சொல்லுக் கடங்காத்துன்பாக்கிப் பொருட்செலவுசெய்து, நாவிற்பாதி அரையாப்பு. பஞ்சமென்பது அலங்காரம்.

பற்பலபண் டிதர்புரிந்த வைத்தியத்தாற் பத்தியத்தாற்
படிவஞ் சாலத்
துற்பலமுற் றெய்த்ததிது தீர்ந்துசுகம் பிறந்தபின்புன்
சுமுகங் காண
நற்பலவின் முட்கனியி னுட்கனியி னுருவருவி
நளிர்கா லோடி
யுற்பலமென் மலர்த்தடங்க ணிறைத்திடுதென் வீரைநகர்க்
குறுவன் மாதோ. ௫௪௧

கத்தினத்து மதரரிக்கட் கடைசியராங் கடைசியர்தங்
கண்டங் கண்ட
பத்தினத்துக் குலங்களெல்லாம் பயந்துதிரை பயந்ததெனப்
பணைதோ றீன்ற

முத்தினத்து *நிலவுபொன்னேச் சிறைபுரிவீ ரைப்பதிக்குன்
மூகங்கா ணப்பத்
துத்தினத்து வருவலெனுஞ் சொல்விதனைற் பிழைத்ததுகாண்
டுரைப்பூ மானே. ௫௪௨

* நிலவுபொன்னேச் சிறைபுரி = தாமரையை மூடச்செய்கின்ற.

கவிசாரம் பெறநினேந்தென் வருத்தமெலா நினையாது
கனிவி னேடுன்
செவிசார வேண்டுமென்ற பேராசை யாலிவணுஞ்
செய்தேன் வெண்பூத்
தவிசார வடனுணே யிதற்கெதிர்நின் கரவிகிதந்
தாரா யேலெற்
குவிசாரந் தவிராது தரிற்பரமா னந்தசுகங்
கூடுந் தானே. ௫௪௩

பூரிக்கும் பங்கயத்தி னிருமருப்புக் கொத்ததனம்
புடைய மோட்டுப்
பூரிக்கும் பங்கயத்தி னிருமருப்புக் கொத்ததனம்
புடைய மோட்டும்
வாரிக்குந் தமரமுற்று வாவியின்பாற் பின்னமின்னுர்
மருங்குற் றுனே
வாரிக்குந் தமரமுற்று வாவியின்பாற் பின்னமின்னுர்
மருங்குற் றுனே. ௫௪௪

அருப்புக்கொத்து-அரும்புக்கொத்து, அதனம்புடை-மிக இடங்கொண்ட, அமோட்டு-அந்தவுன்னதமான, பூரிக்கும்பம்-பொற்குடம், கயத்தினிருமருப்புக்கு ஒத்த தனம், புடையம்ஓட்டும்-பக்கத்திற் சலத்தைச் செலுத்தும், வாரிக்குந்தமரமுற்றுவாவியின் பால் - ஸ்நானம்பண்ணு மடவார் மூலே பணேப்பு அமழுங்கால் சலங்கரையேறிப் புரளுமென்பது தோன்ற, தனம்புடையமோட்டு—

வாரிக்குத் தமரமுற்று வாவியின்பாலென்றது—பின்ன—மின் ஆர் மருங்குல்த்தானை—வாரிக்—குந்தமரம் உற்று—பின்னம்—மின்னார் மருங்கு உற்றானை.

அன்றானை யலறுமுன்னி யன்றானை யலறுநிறத்
தாரை யூக்க
கொன்றானை விளங்கனின்று கொன்றானை விளங்கனிக்காக்
குணிலாக் கொண்ட
கன்றானை யிருக்கைமுன்பு கன்றானை யிருக்கைவெண்பாற்
கடலினானைப்
பொன்றானை யிடையானைப் பொன்றானை யிடையானைப்
புரந்துள் ளானை. ௫௪௫

நீண்டவிராப் பசுமிலையி னீண்டபணை யெனக்கடையி
னிலவு வானைப்
பூண்டவிரா முலைத்திருவை யெண்கலத்தி லிசைத்தானைப்
பொரவெம் போர்க்கு
மூண்டவிரா தனுக்குறையு முனைவேலு மளித்தானை
முனமே னட்டை
யாண்டவிரா சனமகன்றோர் மாவினுக்குச் சருக்கரையென்
றாயி னானை. ௫௪௬

முத்தளிக்குஞ் சங்கநிரை தவழ்ந்தேருஞ் செழுங்கமுகு
மோகன் கைத்தா
னத்தளிக்குஞ் சங்கரன்வா மாம்பகமீ தோங்குறச்செந்
நளின மொட்டிற்
கத்தளிக்குஞ் சங்கமர்ந்து காலாறல் வருமெறத்தேன்
காலாறப் போய்த்
தத்தளிக்குஞ் சங்கவயல் வீராநகர் முகுந்தனையா
தரிக்கின் றேனே. ௫௪௭

வரைத்தனுப்பு னிதனடுக்க ணிடுக்கணுறத் தகித்துமுயிர்
மாயா மாரன்
றிரைத்தனுப்பு முரசொலிப்பச் செங்கணழல் சொலிப்பவிடு
சிலையே தைத்த
புரைத்தனுப்பு குந்துதென்றற் புலியாவி கொளுமுன்மின்னார்
போம்போம் போமென்
றுரைத்தனுப்பு மளிகளெல்லா மொருங்கேவந் தலறுமுல்லை
யொளிர்தா ரானே. ௫௪௮

ஒலிக்கூட்டங் கடைகிடந்து பயந்தகருங் கொடியனைமி
ன்னைசை யேவி
னலிக்கூட்ட மெனத்துறந்த சினக்காமன் றனக்காவ
னல்குங் கோலா
செவிக்கூட்ட முதமிதுவோ வெனப்பகவ வதிமதுரச்
செய்யுள் பாடுங்
கவிக்கூட்ட மேட்டினிடைப் புதைத்தபொருட் கஞ்சனமாங்
கருத்தி னானே. ௫௪௯

ஒலி-ஓவ்வி-சம்மதப்பட்டு. ஓசையேவினலிக்கூட்டமென
-கூட்டமாட்டோமென.

கூற்றுவரைப் பதின்மடங்கு கொலைத்தொழிலாற் றாழ்த்திருகட்
குசேசயத்தின்
மேற்றுவரைப் பதித்தனைய வதனவித ழார்நடுஞ்செய்
மேடை மேல்வான்
ஆற்றுவரைப் பதிவுலவு மனமினமென் றுறச்சிலம்பங்
கலம்பா நின்ற
ஊற்றுவரைப் பதிபுரக்கு மிருதயா லயபதியொன்
றுரைப்பக் கேண்மோ. ௫௫௰

தருவாழி மயவர்பிரான் றனையனைய சுகபோக
சப்ப ரைன்
வெருவாழி கடந்தேற நீயருளோர் சுபநிருபம்
விரிதேர்க் கொற்றைக்
குருவாழி ரவிகுலரா கவதூத னசோகவனக்
கொடிக்கன் றீந்த
திருவாழி யெனினுமது சிறப்பிலதேல் வேறுவமை
செப்பற் பாற்றே. ௫௧

நன்னிருப குலதிலக நராதிபசற் குணதரவென்
றொரு மின்பின்
முன்னிருப கவானுனக்குக் கிருபைசெய்வா னெனும்வாழ்த்து
மொழிக ளாட்டி
யன்னிருபத் தூனதுபங்கை யக்கரந்தீட் டக்கரங்க
டயர்ச்சி யெல்லாம்
பன்னிருப கலுமுளைக்கப் பரந்தவிருள் பரந்ததுபோற்
பரந்த தாலோ. ௫௨

புவியாதி பதியேதென் பொதிகைவளாத் தமிழ்முழுதும்
புகுந்து நின்ற
செவியாதி காந்தமெலாஞ் செறிந்தபுக ழாகரநின்
செங்கை யால்யான்
றவியாதி துசமயத்தி லருணிருபத் திலகுறுமஞ்
சனங்கண் டென்வெய்
யவியாதி வெவ்விடம திவ்விடம்விட் டெவ்விடமோ
வடைந்த மன்றே. ௫௩

மன்னைகப் படிப்பகடு மதன்சிலையோ டிமுடியே
வாய்வாய் மேய்ந்து
புன்னைகப் பொதும்பர்நறு நிழற்றுறுங்கண் வளர்வழுதிப்
புகழ்நா டாளு

நின்னுகப் பேரளியா லெற்கருட னிருபம்வந்து
நிலவ லாலே
யென்னுகப் பிணிமுழுதுந் தகர்ந்தறப்பெற் றனன்பரம
வின்பந் தானே. ௫௫௪

கப்புஅடிப்பகடு மதன்சிலையோடுஅடி-முடியே வாய்மேய்ந்து காம
ன்முதற்கணையுங் கடைக்கணையுமுண்டு, எற்கு அருள்தன்நிருபமெ
ன்றுஞ் சிலேடையாக்கி, என்னுகப்பிணி என்னோடுசம்பந்தித்த
நாகபாசக்கட்டுஅற என்றும் என்ஆகப்பிணி யென்றுங்கூட்டுக.

ஈரமென்றே டாங்கனித்தே னிழியவளர் வயற்கழைவெண்
ணிபங்கை வாங்கி
ஆரமென்றே யுமிழ்ந்திரத நுகர்கிளுவைக் கதிபநின்கை
யக்க ரங்கா
ணேரமென்றே கம்பொனுயிர் நினக்களிக்க நினைத்துமவை
நினைவை யீந்தென்
சாரமென்றே மாந்தலல்லாற் கைம்மாறென் றறிந்திலன்யான்
றருதற் கம்மா. ௫௫௫

திருமுகந்தங் கவரவரோ செலப்புரியும் பெருங்கொடையா
திகாந்தஞ் சென்று
*திருமுகந்த களபமணி மணிமார்ப பொன்னிலமுந்
திகழும் பைங்க
திருமுகந்த நின்கருணைத் திருமுகங்கண் டனையமகிழ்
திளைப்ப வெற்குத்
திருமுகந்தந் தாலினிமே னிகழ்வனவும் விண்ணப்பஞ்
செய்கு வேனே. ௫௫௬

* திருமுகந்தகளப-திரும்புகிற.

## வெண்பா.

கனகனக ராங்கிடந்த காமரகழ் சூழுங்
கனகனக ராங்கிளுவை காக்குங்—கனகந்

தவளத் தளவனியிற் சஞ்சரிகம் பணபண்
டவளத் தளவணிநீ தா. ௫௫௭

## கழிநெடில்விருத்தம்.

என்பணிய கலக்கடவு ளிடத்தினின்முத் தமிழுமுணா
ரியற்கும் பன்கம்
பன்புணியத் தகுங்கேள்வி படைத்தவித யாலயபூ
பாலா மாலாய்
முன்பணிய வினையாலோர் பிணியாறு திங்களிற்போய்
முடிந்த தப்பால்
வன்பணிய சுரமிரண்டு மாதமிருந் துறுத்தியதால்
வருந்தி னேனால். ௫௫௮

நத்தருண திபதியிலே சுபதினத்தி லமரர்மத
னம்பண் போது
பித்தருண வந்தவிடம் போலெழுந்த சுரமமிழ்தின்
பெட்ப தாகிற்
றித்தருணத் திகசுகம்பி றந்ததுபொன் மாளிகைமுன்
பிலங்கு முத்தின்
கொத்தருண புரவியிந்த்ர புரவியெனப் புரிவீரைக்
குணபூ மானே. ௫௫௯

முருக்கவிழா நின்றமலர் கருக்குமித முரம்பையரின்
முன்றிற் பாவித்
தருக்கவிழா மதுப்பிலிற்றும் வீராநகர்க் கராமகுட
சயன மாறன்
பெருக்கவிழாச் சிறப்பினையு நீகவிக்குப் புரிசிரக்கம்
பிதமும் யான்பார்த்
திருக்கவிழாத் திருக்கருணை புரிகுவனேற் றடையறவுந்
தெய்து வேனே. ௫௬௰

தாரணிக்க மருந்துமருந் தெனக்கயவர்ப் பாடாதென்
றனைக்காத் தாய்பாங்
காரணிக்க மருந்துங்க வரமளித்தா னட்பினுட
னுக மும்பெற்
றேரணிக்க மருந்துறந்த புதுமதவே ளேநுகர்ந்த
தெல்லா நன்றாய்ச்
சீரணிக்க மருந்துசிறி துளதெனில தனுப்பும்வண்ணஞ்
செய்விப் பாயே. ௫௯௧

## வெண்பா.

பெற்றகுறும் புத்திரரைப் பேணுவதல் லாதவர்பா
லுற்றகுறும் புத்திரத்தை யுன்னிலர்போற்—கொற்றமுல்லைக்
கோதைப்பா ராதாண்டுங் கொய்யுளேயா யென்றுமென்றன்
கோதைப்பா ராதாண்டு கொள். ௫௯௨

---

மலையடிக்குறிச்சியிலிருந்து திருநெல்வேலியில் வந்திருக்கும்

# முத்துசுவாமிப்புலவர்

இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

பொருப்பவள வாயமலை புடைப்பநின்மேன் மாலானுள்
புனிதக் கஞ்சத்
திருப்பவள வாயவெழி லிவள்போற்கண் டறியேனீ
யிணங்கிச் சேர்கந்
தருப்பவள வாயமுத கவித்திறத்தோர் மனமகிழத்
தருப்போ னல்கும்
விருப்பவள வாயமகந் திரிபுதெளி மருதப்ப
விவேக மாலே. ௫௯௩

மனதிரும்பா வலதிவண்மேற் கோபமா விவளிற்கா
வதமா வாரா
தெனதிரும்பா வலவலரால் வேள்பொருதற் கினிச்சகியா
ளிணங்கிச் சேர்வாய்
கனதிரும்பா வலமருன்றாட் கண்ணரசர் குவித்திறைஞ்சக்
கண்டோய் மிக்க
தனதிரும்பா வலர்முதலோர்க் கருளிதயா லயசுகுண
சரச மாலே. ௫௬௪

நன்றுவரு தடம்புவிழி நங்கையுங்கை வாளிபொரா
தைந்திந் தைக்கண்
டென்றுவரு தடம்புரியா திற்குளொழித் திடுமெனையென்
றிரங்கி ஞள்சேர்
அன்றுவரு தடம்புனேயி லான்பெயர்ச்சே தாற்றியிரா
வணனைப் போரில்
வென்றுவரு தடம்புயரா மாவிருத யாலயநல்
விவேக மாலே. ௫௬௫

திருக்குவலே யாசுரிகை யாவெனுமா னினியெதிரே
திருக்கால் வந்து
நெருக்குவலே யாசுகத்தா வினிவிடே னெனப்பயந்து
நின்ருளின்ருண்
மருக்குவலே யாதரபூ தரபுயநா வலர்க்கினிய
வாசை யம்போ
ருக்குவலே யாபீட மருப்பொடித்த மருதப்ப
வுசித மாலே. ௫௬௬

சுந்தரமா ராமார்ந்தோன் சடைப்பிறைவி லோதநுதற்
கன்னி காயத்
திந்தரமா ராமாலே யெல்வையிற்றீப் போலுதித்தா
லென்செய் வாள்சேர்

சுந்தரமா ராமானு மாரீசற் றெலைத்தரக்கர்
சுற்ற மாற்ற
வந்தரமா ராமாதிண் புயவிருத யாலயகல்
வசன மாலே. ருகூஎ

## கட்டளை.

இராதனங்க மேனுங்குழலக்கர வேயுமல்குலி
யைமாதுன் காதலாற்
பிராதனங்கன் மிசைகூறிவாவென்று பிதற்றிநாளின்
றிதத்தொடு சேருவாய்
புராதனங்கண்டு பாவாணர்கூறும்பாப் பொருட்கண்டைந்தருப்
போனல்கு வள்ளலே
விராதனங்கம் படிவீழுமாய்த்திட்ட வேலைமாவித
யாலய வீமனே. ருகூஅ

மானிகும்பலே மாணியகூந்தலாண் மாரன்கேளிக்
கிரதியைப் போற்பிர
தானிகும்பலே யம்மிடுகொங்கையா டன்னேச்சேரிந்
த்ரசித்தாங் கொடுங்கர
வோனிகும்பலே யாகத்தைத்துண்டித்தே யுயிரைத்தக்கணத்
தக்கணத் தேற்றியே
மேனிகும்பலே யாகத்தைமாற்றிய வீரனேயித
யாலய தீரனே. ருகூகூ

அரக்குவாவினுக் கொப்பாம்விழிவயி னணங்குபூத்த
சுணங்கிள மாமுலே
சரக்குவாவினுக் காவமென்னுமதன் றன்செலுத்தத்
தளர்ந்தா ளணேயொரா
விரக்குவாவிருஞ் சென்னியனுகிய விலக்குவன் றனைக்
கொண்டேகிக் கிஷ்கிந்தைக்
குரக்குவாலி யுடல்சாய்த்தராகவா கோமளாவித
யாலய பூமனே. ருஎ0

வெலங்கைப்பாதகர்த் திம்மட்டுப்பாலொடு மிசையென்றனு
மிசையா ளழகணீர்
கலங்கைப்பாதகற் றுங்கமலத்தினுள் காதநீரக்
கலந்தணை வாய்கழ
றுலங்கைப்பாத கமலத்தினுற்கலைத் தோகையாக்கித்
தொடுகடற் சேதுசெய்
திலங்கைப்பாதக ராவணனைக்கொன்ற விராகவாவித
யாலய பூமனே. ௫௭௧

---

இடைசெவல்

## பழனியாண்டிக்கவிராயர்

என்று பேர் விளங்கிய

# இராமானுஜகவிராயர்

இயற்றியது.

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மூன்னூற்று மலைத்தலைவா கறக்குழியுட் பொருதகண்ணு
மூடர் மீது
சொன்னூற்று மலைத்தலைவான் விடாதுகவி ஞாக்காத்த
சுகுணு வோங்குந்
தென்னூற்று மலைத்தலைவா விருதயா லயவுனையே
சேராப் பெண்கள்
மன்னூற்று மலைத்தலைவாய்ந் தெழுமணிபோன் றும்புனலை
மார்பிற் றனே. ௫௭௨

பொருவளரிக் கொடியகும்ப கருணைமாய்த் தவனென்ற
புனத்து மேய
வருவளரிக் கொடியவினற் பயஞ்செய்வள்ளிக் கணவனென
வந்த வீரன்

இருவளரிக் கொடியதிப னிருதயா லயன்றெடைய
லீந்தா லின்றே
யொருவளரிக் கொடியமதப் பயல்கரமு னொறுங்கவடித்
தோட்டு வேனே. ௫௭௩

தண்டவலக் கரவிம னிருதயா லயமகிபன்
சயிலத் தோளிற்
கொண்டவலர் மாலைவரு மளவுமத னலர்மாலை
கொடிதா மூரார்
விண்டவலர் மிகவலரு நமனையுமோர் நமனையொக்கு
மின்கா ணீவிர்
ர்டவலம் பொறிகடலை தருகினும்வேப் பங்காயிற்
கசக்குந் தானே. ௫௭௪

ஒக்கவனி மூலபல மரஞ்சாயக் கொடுமரம்வாங்
கொருகோ வைப்பொன்
மிக்கவனிக் காக்குமித யாலயகற் பகத்திடமென்
மிளிர்வஞ் சிக்கா
தக்கவனி யாநடந்த தூதுவளை யினமும்வரக்
காணோ மத்தி
தக்கவனி மாவரசு செவ்வந்தி யினிவருத்துஞ்
சகிக்கொண் ணாதே. ௫௭௫

அஞ்சம்பா ணிசியினடை யுளையளகத் தார்மயலா
மாழிக் கேயோர்
அஞ்சம்பா ணிகர்த்தவித யாலயன்மா லிகைகொணர்ந்தா
னுத லாறும்
அஞ்சம்பா னிலாக்கவிகை சுருக்கியின்று ணிறக்கிமூர
சடக்கிப் போபோ
அஞ்சம்பா நின்றனையே னிமிடமொன்றி லாக்கினைக்கா
ளாவாய் நீயே. ௫௭௬

விரும்புவனத் தருக்கமைய நவரதமா விசையவிரு
மென்பூ வுற்றேன்
றரும்புவனத் தருக்கமைய நவரதமா விசையவிரு
தயால யேந்த்ரா
அரும்புவனத் தருக்கமைய நவரதமா விசையவிரு
ளளகி நோங்கா
மிரும்புவனத் தருக்கமைய நவரதமா விசையவிருந்
தெய்தோ ணாலே. ௫௭௭

விருதையா லயமருதப் பால்வளர்தென் னாட்டரசன்
வித்தையாய்ந்த
இருதையா லயமருதப் பாதிபன்மா விகைகொணர்ந்தா
விஜயான் வெல்வேன்
கருதையா லயமருதப் பாதவஞ்சாய்த் தோனருளுங்
காம னோடே
ஒருதையா லயமருதப் பாநுகரு ணிருதர்பல
ருறினுந் தானே. ௫௭௮

தோற்றுமலைப் பிறைநீக்கும் பனியினைவெஞ் சுடர்நீக்குந்
தொழுவோர்க் கோசை
யாற்றுமலைக் கிணையான எழுபவத்தை வினையரி
யகற்று மவ்வா
றாற்றுமலைத் திறலிதயா லயனெனுங்கோன் புவிமீதி
லுரைக்கும் பஞ்சக்
கூற்றுமலைத் தொடும்வண்ண மகற்றியருள் செயுங்கவிதை
கூறு வோர்க்கே. ௫௭௯

## கட்டளைக்கலித்துறை.

இருவாதிரைசெறி யிண்டேனைச்சேர்ந்தனை யென்றுமின்னாள்
வெருவாதிரையுநின் சீருருணாங்கர் வெளிப்படுங்காற்

திருவாதிரையன் றெழும்வினைக்கண்ணனைச் சேவிக்குமோர்
அருவாதிரையெறி வேலிதயாலய சுந்தரனே. ௫௮௦

வாகாவென்றுனிட வொன்றுமைவென்ற வலியவளை
வாகாவென்றுமயி லேந்தியவாமிக வாவுமொரு
வாகாவென்றுருஞ் சொலச்செம்பொன்வாரி வழங்குதிரு
வாகாவென்றுழ்கலி நீக்கிதயாலய மன்னவனே. ௫௮௧

சவிகாட்டும்வேற்கை யிதயாலயவுனைச் சார்ந்துதமிழ்க்
கவிகாட்டும்வாணர்கள் காத்திரங்காத்திரங் காட்டுஞ்செவி
செவிகாட்டுஞ்சேகரஞ் சேகரங்காட்டுஞ்செவ் வாய்கடல்சூழ்
புவிகாட்டுமெண்டிக் கினுங்காட்டுமுன்றன் புகழினையே. ௫௮௨

இரக்கம்பனிமொழி கல்வியில்லார்களை யேத்தியன்னோர்
தரக்கம்பமாகர வாகனம்யாம்பெறி னுந்தருவோர்
கரக்கம்பன்வினை யிதயாலயனங் கவியைமெய்த்துச்
சிரக்கம்பஞ்செய்யப் பெறற்கிணையோசொலுந் தேர்ந்தவரே.

## நேரிசை வெண்பா.

கரக முலையையொன்று கவ்விடுமவ் வொன்று
கரக நனிவிழக் காயித் — துரக
உணவிரத னாலே யுணவிரத முற்றாள்
வணர்விலித யாலயபூ மா. ௫௮௪

## கலித்துறை.

வசனம்பரவை யழுதொக்குமாது மகரவன்று
வச்னம்பரவை யயிற்போலத்தைப்ப மருவினளா
வசனம்பரவையன் றுட்டியமாலன்ப் மாசில்வித்து
வசனம்பரவைய னேயிதயாலய மன்னவனே. ௫௮௫

திரிபாயசமருந் தாளோருகமெனுஞ் செப்பொரிராத்
திரிபாயன்மீதி லுறங்காமலுள்ளந் திகைத்திருந்தாள்
திரிபாயமுத கவிபாடுவோர்க்குச் சிறந்தகராத்
திரிபாயடற்பரி யீயிதயாலய சீவகனே. ௫௮௬

இரும்புத்தகட்டு மணிபாஞ்சன்மார்க்க மிலாதவர்மே
லரும்புத்தமுதென நாஞ்சொலும்பாக்க ளரன்முனியாக்
கரும்புத்தவரித யாலயன்மேற்சொல் கவியெவரும்
விரும்புத்தமதிறப் பொற்றகட்டுடு மிளிர்மணியே. ௫௮௭

## கட்டளைக்கலிப்பா.

சித்திரக்கவிர் மென்பூவிதழிமேற்
சீறியாசுக மாசுகமானவா
சித்திரக்கவி கைச்சோமமாரவேள்
சிந்தினன்வெய்ய புல்லைப்பாடினே
சித்திரக்கவி டாதுகவிஞரைச்
செல்வராக்கி யவரோதுசெந்தமிழ்ச்
சித்திரக்கவி மாலிகைசூடிய
திண்புயாவித யாலயமன்னனே. ௫௮௮

## கழிநெடில்விருத்தம்.

கவியமக லாதழலைத் தவளநகைப் பவளவிதழ்க்
கன்னி மேற்றுக்
கவியமக ராலையத்தான் பகழிதொடா மற்கலந்தார்
கருதார்க் குத்தும்
கவியமகப் பனையமைத்துக் கௌடநெறி யுறத்தாய
கலைவ லோர்சொல்
கவியமகம் பகுத்துரைசெய் யிருதயா லயமகிபா
கருணை மாலே. ௫௮௯

தக்கசினை நாவலின்ற காரணத்தாற் பரதகண்டஞ்
சம்புத் தீவா
மிக்கபெயர் பெற்றதுபோ விந்தயா லயமகிபன்
வீரை யூர்க்கண்
முக்கியசுந் தரவிலா சந்தனையுண் டாக்கியநாண்
முதலா யன்றோ
தெக்கணமும் பெற்றதச்சுந் தரத்திரிசொல் லாகியதென்
றிசைப்பே ரொன்றே. ௫௯௰

சுந்தரம் - அழகு. தென் - அழகு.

தெக்கணமும் என விரிந்த உம்மையால் தெய்வஸ்தலங்கள் புண்ணியநதி நதங்கள் சர்வ யோக்கியமான திராவிடபாஷை முதலானவைகளுக்குத் தென் என்னுஞ்சொல் அடைமொழியா யமைந்து வரும் என்பதைத் தழுவினமை காண்க.

உதாரணம் :—தென்னரங்கம்.
தென் மதுரை.
தென் காவேரி.
தென் குமரி.
தென் கலை.
தென் மொழி.

சதுரவித யாலயஸ்ரீ யருள்கிருத குளபாய
சம்பார் மீது
பதுமினிய தரமாமென் பதுமினிய தரமன்று
பாரக் கூர்ம
முதுகுறுமந் தரஞ்சுழல முதுகுரவர் கடையமுத
மமுத மென்பார்
அதுலவமே லசுழம்பொருந்தா ததுலமுள தெனத்தெளிவா
யறைய லாமே. ௫௯௧

## கட்டளைக்கலித்துறை.

சோம்பாயசவு விடாய்பசிதீர்காத் தும்மினென்று
காம்பாயசந்தனு சேந்திரயாலய காமனருள்
தேம்பாயசத்தைப் புலவருண்டேத்திய சீரதிந்தே
தாம்பாயசத்து நஞ்சமேவற்புலவர்க்குந் தானுற்றதே. ௫௬௨

## விருத்தம்.

இருவருடன் முன்னுதித்த வெனதுதந்தை தானுமிப்போ
தேக ஞகி
யொருவருடங் குளிர்சுரத்தில் வருந்திமகா ஒளஷதத்தா
லுஜ்ஜீ வித்தான்
திருவருடங் கனையனுக்கே யென்னையன்றிச் சேயிலைவந்
திலனிவ் வாற்றுற்
றருவருட நிகர்கையித யாலயனே யினிவருவேன்
றடையி லாதே. ௫௬௩

## வெண்பா.

ஐயவித யாலயவின் ஞரமுதர் கைக்குநிம்ப
நெய்பினையே தாமருந்த நேர்ந்தானுஞ்—செய்யவர்கள்
பாரிற் பணவிருப்பாற் பாடார் பிறரையுன்றன்
பேரிற் கவியுரைத்த பின். ௫௬௪

அழகாபுரம் தருமபுத்திரன் கவிராயர் தௌஹித்ரன்

# சங்கரலிங்கத்தேவர்

இயற்றியது.

## கட்டளை.

தந்திக்கந்தரங் கம்மிடைசொற்குழற்
றையலாண்மயல் தீரநின்பூந்தொடை
தந்திக்கந்தரத் தோளணைத்தின்புறத்
தழுவவேண்டுதி மிக்கசற்கீர்த்திநி
தந்திக்கந்தர மெங்கும்பிரகாசிக்குஞ்
சகலவித்வசம் பன்னகராவடர்
தந்திக்கந்தர நீங்கிடக்காத்தமால்
தாள்வணங்கித யாலயபாண்டியனே. ௫௯௫

அம்பரந்தனின் மூன்றுயின்றுந்திரு
வமரர்க்காயிடர் தீர்த்துந்தமணியத்
தம்பரந்தனை யேபுனைமாயவ
னடிபணிந்த மனோகரனேதிக
ழம்பரந்தனின் வாழுடுவின்குழாத்
தண்ணலிந்து குலத்திறைபோற்புவி
யம்பரந்தடந் தோளினிற்றாங்கிய
வரசனேயித யாலயபாண்டியனே. ௫௯௬

தந்தரங்கம் மிடைவிழிவார்குழற்
றையலாளுந்தன் மீதினிலேமிகுந்
தந்தரங்கப் பிரியமுற்றுளவ
டன்னிடத்தினின் வந்துவின்மாரனி
தந்தரங்கத் தொனிபுரிந்தைங்கணை
தாவவேதொடுத் தானணைவாயருள்
தந்தரங்கந் தனில்வளர்மாலிரு
தாள்வணங்கித யாலயபாண்டியனே. ௫௯௭

கண்டனந்தந் தரங்கத்திலன்னமு
நல்குகாவல வென்றுகவிஞர்கள்
கண்டனந்தந் தரங்களிப்பாய்ப்புகழ்
காவலாரி திகர்கனம்பெற்றவா
கண்டனந்தந் தரங்குஞ்சொலைடையிடை
கண்குழற்பங் கயப்பொன்மஞ்ஞைன்மார்க்
கண்டனந்தந் தரங்கக்கடவுளைப்
போற்றுமான்மரு தப்பகம்பிரனே. ௫௬௮

தடங்கடங்கம் புயர்தனங்கந்தரந்
தசனம்வெண்டர ளந்திகட்கொவ்வையு
தடங்கடங்கம் புனிதமெய்வாசகஞ்
சடலமின்மயல் கொண்டேனைக்காயுஞ்சி
தடங்கடங்கம் புலியேயென்சாமிதான்
றருவன்மாலிகை யென்றுருவந்தனை
தடங்கடம்புயத் தாள்வளரம்புய
சமுகதியாக மருதப்பதாமனே. ௫௬௯

பந்தத்தந்த வளவாந்தனமிடைப்
பாவைமாரன் பகழியினுன்மன
நொந்தத்தந்த வளவனைசோர்ந்தனை
நோக்கியேமய லாகினள்சேர்த்தனை
முந்தத்தந்த வளந்தரும்வள்ளலு
மோகிக்கத்தருந் தியாகமுதிர்ந்தநாற்
றந்தத்தந்த வளவாரணுசெய
நாமனேயித யாலயபூமனே. ௬௱

வல்லப்பம்பர மாந்தனமம்பக
மாதுமீது மிகுமணஞ்சேர்மலர்
மெல்லப்பம்பர மன்மேல்விடுமதன்
வீம்புசெய்து பொருதான்மின்னோர்வகை

சொல்லப்பம்பரம் போற்சுழன்றுள்வெகு
சொந்தமாயணை வாயடலார்களை
வெல்லப்பம்பரத் தாற்செயும்வேல்தொடு
வேந்தனையிதயாலயசாந்தனை. ௯௱௧

## கழிநெடில்விருத்தம்.

தனங்கலங்கா வெனுமளக முயர்வேற்கண் ணிலகியநற்
றையன் மேன்மா
ரனங்கலங்கா ரத்தொடுவந் தலர்க்கணைகள் தொடுத்தடுத்தங்
கடுபோர் செய்யத்
தினங்கலங்கல் புரிந்துனையே சிறந்துகல விகள்புரியத்
தியங்கு வாட்கு
மனங்கலங்கா திருக்கவருள் புரியிருத யாலயகோ
வசிய மாலே. ௯௱௨

கனகநக மெனுநகில மனநடைபூங் குழற்றிகழுங்
கன்னி பான்மோ
கனகநக ராவாரி முழுக்கிவந்து சமர்புரிந்தான்
கனிந்து நல்ல
கனகநக ராமதியுங் குளிர்ந்திடச்சே ரியாவருக்குங்
கரத்தா லீயுங்
கனகநகந் தத்தளவப் புயவிருத யாலயசிங்
கார மாலே. ௯௱௩

## வண்டானம்

# முத்துசுவாமி ஐயர்

இயற்றியது.

### கழிநெடில்விருத்தம்.

தருமஞ்சத் தியநீதி தவறாமல் வளர்த்தருள்வித்
தகசீர் மேவுந்
துருமஞ்சத் தியந்தரத்தைத் தொடுவினைப் பதிக்கதிபா
துன்ன லார்யா
வருமஞ்சத் தியங்கிடப்போர் புரியும்வித யாலயநல்
வசன மாலே
திருமஞ்சத் தியம்புமித்த மடமானை மணமகிழ்ந்து
சேருவாயே. ௩௱௪

புரசமரம் புரிந்தவன்சன் னைலிருந்த வனங்கன்மலர்ப்
புங்கத் தாலே
பிரசமர நிகர்த்தமொழி விழிமாது நின்மீதிற்
பெருமால் கொண்டாள்
சரசமர தனமிறைந்த வணைவிளிற் செய் தணைந்திடுவாய்
தரணி யாரும்
அரசமர பேழும்விழ வெய்தவித யாலயநல்
லருள்செய் மாலே. ௩௱௫

கரும்பனங்கன் றிடச்செய்யும் விழிநடையிம் மாதுமுலைத்
துணைக ளின்மேற்
கரும்பனங்கன் றுதமலர்க் கணையெய்ய மிகவுமவை
கனத்த லாலே

இரும்பனங்கந் திசையான்றன் ஊர்போலு மிடைசாங்கா
டெய்த்தான் சேர்வாய்
விரும்பனங்க னரம்புலவர்க் கருளுமித யாலயநல்
விநோதக மாலை. ௬௱௬

பிருந்தவளக் கவின்மாட விசாகக ராயரக்கன்
மேனாட் கொள்ளப்
புருந்தவளக் கவிகையிற்கு டாபணிதந் திடவதனைப்
பூரித் தேற்ற
முருந்தவளக் கவியப்ப வொண்ணுச்செல் வாமுனரி
மாதி னுக்குந்
தருந்தவளக் கவின்மாதைச் சப்ரமஞ்ச மிசைகூடித்
தழுவு வாயே. ௬௱௭

மெய்ப்பணில வுவரிபொழி யிசற்காட்டம் வாய்ந்திலங்கு
மின்னுண் மேற்பா
யப்பணில வுவரிமுர சான்றோடுக்கும் உணையதனு
லனுதி னப்ப
ணிப்பணில வுவரிலன லென்பளித யாலயசேர்
நீசே ராமற்
கைப்பணில வுவரிசெய வவட்கிலக்கா ருணையன்றிக்
கருணை மாலே. ௬௱௮

கற்பகமு மலரடையக் கருமுகிலு மிடியாரக்
கவினோர் சங்கும்
அற்பசலும் பயமேவிப் புலம்புவன சமும்பங்க
மடைந்து நிற்பத்
தற்பகருங் கவினருக்கு வரையாது கொடுத்தருளுந்
தகுதி யுள்ளாய்
நற்பகவற் போற்றுமித யாலயவென் வேட்டவினை
நடத்து வாயே. ௬௱௯

# சொக்கம்பட்டி
# சீனித்தேவர்

இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

வசந்தப்பா தகன்றனுவின் சாயகத்தான் மாதுமனம்
வருந்து மேனி
பசந்தப்பா வார்சகிப்பா ரிந்தமய லெனப்பகர்ந்தாள்
பரிவாய்ச் சேர்வா
யுசந்தப்பால் விளாந்துயர்சா லியின்வளஞ்சேர் தென்னாட்டி
னுசித வேந்தா
நிசந்தப்பா துரைபகரு மிருதயா லயபாண்டிய
நிருப னேறே. ௧௱௰

அனகரஞ்சேய் தனக்குரிய மாதுலனா யவதரித்திவ்
வகிலங் காப்பான்
சினகரஞ்சேண் வரைதுலங்கப் புதுக்கியவ னருள்பெற்றுத்
தேவர் காவாய்க்
கனகரங்கொண் டிருநிதியங் கற்றவர்க ளகமகிழக்
கங்குல் நீக்குந்
தினகரன்சேய் நாளும்வகை கொடுக்குமரு தப்பமன்னா
திறற்சிங் கேறே.. ௧௱௧௧

மஞ்சதா ரைகள்போல வரிவிழிநீ ரிறைப்பமதன்
வாளி தைத்து
நஞ்சதா ரைகள்வழியே சிறுவளிசென் றேவருத்த
நந்த வில்லாப்
பஞ்சதா ரைகள்பலம்பா யசமுண்ணாள் பரிவாய்ச்சேர்
பாருக் கெல்லாந்
தஞ்சதா ரைகள்சூழு மதிவதனா மருதப்ப
தளசிங் கேறே. ௧௱௧௨

அருணனிலந் தனஞ்சயனுக் கருளிரத மூர்ந்திரணை
களத்தி லன்று
வருணன்மகன் விடுபடையின் வலிதெரிந்தே தனதுதிரு
வயங்கு மார்பின்
திருணமென வேற்றளித்தோ னருள்பெற்று யுனதுதிருச்
சரணென் றோர்க்குக்
கருணனுந்தா னனும்வகை கொடுக்குமரு தப்பமன்னு
கருணை மாலே. ௬௧௩

கருங்குவளை மதிபதுமங் கண்முகங்கைக் கனிக்கனங்கன்
கணைக டைத்து
மருங்குவளை மதிகலைக ளகன்றமிர்தங் கசந்துமன
வுருத்தத் தான்மீ
வுருங்குவளை புகுவரவ மெனவசந்தங் கிரங்கினணீ
வுரித்தாய்ச் சேர்வா
யிருங்குவளை விலாதுசெங்கோ னடத்துமரு தப்பமன்னு
விறைவ ரேறே. ௬௧௪

செங்குவலை யங்களிலே சிறந்ததென்னாட் டரசாவுன்
செவ்வி கண்டென்
னங்குவலை யங்கண்மட மாதுமிக வயர்ந்தமிர்த
மன்னந் தீந்தேன்
றங்குவலை யங்கனக வளங்கண்டா லேசுகிருள்
தயவாய்ச் சேர்பேர்
பொங்குவலை யங்கள்புயந் தங்குமரு தப்பமன்னு
பொருந ரேறே. ௬௧௫

இந்தவளைக் கானளின முகநெடுங்கா துகையெனமெய்
யிலங்கென் கன்னி
நந்தவளைக் காமதிசே ரிரவின்மலர் வாளிமத
னேவ நைந்து

சிந்தவளைக் கார்கரங்கொண் டேவணிக ளாயினன்சீ
மானே நீதான்
வந்தவளைக் காவணுஞ்சே ரிருதயா லயமன்று
வாகை மாலே. ௬௬௬

கற்றவையா கியவஞ்சக் காரிகைமந் தரையுரையின்
கருத்த ழிந்த
சிற்றவையி னுரையினிதாய்ச் சிரசேற்றுச் சிறப்படையச்
சிறிய தம்பி
பெற்றவையம் பரமாகக் கொடுத்துவனம் புக்கவன்பே
ரருளைக் கொண்ட
கொற்றவைவேல் பொருந்துமரு தப்பமன்று குணமுடைய
குமார ரேறே. ௬௬௭

பாகனமா ரபிநயவித் தாரமொடு கீர்த்தனநற்
பாக மான
மோகனமா ரபிசொலெனின் மோகனமா லாற்றமென
மொழிந்து வன்னி
வாகனமா ரபிரியமா கியபதிவந் தாலென்செய்
வாயென் பாளக்
காகனமா ரபினலன்றுட் பணியுமரு தப்பமன்று
வணேகு வாயே. ௬௬௮

---

வாசுதேவநல்லூர்

## பழனியாண்டிப்புலவர்

இயற்றியது.

### கட்டளை.

மந்தமாவிர விந்துதனிக்குடை
மாரனுக்குடை வாளையெவ்வேளையுஞ்
சொந்தமாகத் துணர்ப்பொன்னணையணைத்
துத்துவர்ச்செவ்வி தழ்த்தேன்பருகுவா

யந்தமாலை நிகர்த்தகிலத்திணை
யன்பினீடு புரக்கும்புரந்தரா
சந்தமாவளஞ் சேர்விரையம்பதி
தழைக்கவாழ்மரு தப்பகுபேரனே. கூகக

## கழிநெடில்விருத்தம்.

நாத்துவச னந்தனைநல் லாயருந்தந் தாயருந்த
நல்கினுனு
நீத்துவச னந்தனைய கண்டபின்னுள் கொண்டமய
னீங்கா ணியாள்
சேத்துவச னந்தனைமெய்ச் சீர்பெறமெச் சிப்பணியுஞ்
சீதா பூமி
காத்துவச னந்தனைத்தே னெனச்சொன்மரு தப்பசெஞ்சொற்
கருணை மாலே. கூஉய

கந்தரங்கம் பாநிகருங் கருங்கூந்தல் கண்டங்கண்
டேனு மானு
ளந்தரங்கம் பாருனையல் லாதறியா ளாதரியா
ளணைவாய் வைத்தே
மூந்தரங்கம் பாதமதிக் கூர்மைமூதி யோர்துதிகண்
மொய்க்க வாழ்வு
வந்தரங்கம் பால்வளர்மா லொப்புமரு தப்பமன்னு
வரச ரோறே. கூஉக

## வெண்பா.

உள்ள மூவந்துலக முள்ளப் பெருங்கருணை
வள்ளலென வந்தமரு தப்பனெங்கோன்—விள்ளு
பனுவ லிரதம் பருகுவார் செல்வ
மனுவருயர் வானவரா வார். கூஉஉ

ஏற்றுமலை வேலாப மென்னத் திரிபுலவீ
ரூற்று மலைக்கொ ருதரம்வரின்—மாற்றுமலை
வெல்லாமெல் லாமருதப் பேந்திரனே பூந்தனையின்
வல்லா னெனவுதவு வான். கூ௨௩

## கல்போது

## புன்னைவனக்கவிராயர்

இயற்றியது

### கழிநெடில்விருத்தம்.

கலைக்கடக்கந் தனமெனு மெனதுமகள் கொடியமதன்
கடுக்கும் பேரி
கலைக்கடக்க முடியாதென் றநுதினமும் புலம்புகிறாள்
கண்பா ராயா
கலைக்கடக்க முடைமைக்குப் பெரியனிவ னென்றுணருங்
கமகா ரூழிக்
கலைக்கடக்க னிறுநடத்து மிருதயா லயபாண்டிய
கவிச்சிங் கேறே. கூ௨௪

இருமுலையா னையைத்துளைத்தான் மன்மதன்பூஞ் சரத்தாலே
யிதனு லென்னு
யிருமுலையார் மெழுகாயிற் றினியணைவாய் புலவீர்கா
ளிங்கே வாரு
மிருமுலையாச் செல்வமுமக் கீவேனென் றருள்புரியு
மிணையில் வள்ளா
லிருமுலையா ரப்புயனே யிருதயா லயபாண்டிய
வெழிற்சிங் கேறே. கூ௨௫

## வாசுதேவநல்லூர்க்
# கந்தசாமிப் புலவர்
### இயற்றியது.

### கட்டளை.

வாரணத்தந்த மாமுலை தென்றலான்
மட்டிலாமற் புடைத்துப் பிதிர்ந்தற்ற
வாரணத்தந்த ளத்தொரு சேனையான்
வாளியாலு மயங்கிமெய் யாயர்போல்
வாரணத்தந்த போனக நீத்துமன்
மாலைதேவை யெனச்சொல்லு வாள்தென்ன
வாரணத்தந்த வாணனைக் காய்ந்தவேன்
மன்னவாவித யாலய கன்னனே. (சுஉக)

சந்துகாலத்தி லேகிமன் பாலின்று
சாற்றென்றுண்மத னற்பயந்தே னுங்க
சந்துகாலங்க ளுற்பதக் குண்டுகைச்
சங்குமேகலை யுஞ்சரிந் தங்கைய
சந்துகாலசந் தல்லனுற் றுள்திகழ்
சப்பமஞ்சத் தணைந்தாண் மலர்ப்பிர
சந்துகாலனி பாடுந்தென் வீரைமா
றன்னைப்போற்றித யாலய மன்னனே. (சுஉஎ)

கும்பமாதங்க மாதந்த மாமெனக்
கூறுகொங்கைகள் வார்பிதி ரப்புடைக்
கும்பமாதலைக் கண்ணுதிக் குஞ்சுடர்
கோடியென்னக் குலாமதி காயவாய்க்
கும்பமாதள ரோன்மன்ன றுரின்று
கொணர்துமென்னினுந் தேர்கிலள் சேர்கலைக்.

கும்பமாதவ னோர்புகழ் வீரைக்
குபேரனேயித யாலய மாரனே. (௬௨௮)

ஆரமார்ந்தளி ராம்பன்மெய் யாண்மத
னம்பினுன் மெலிந்தன்னை நின் ஞல்வயி
ருரமார்ந்தளி யென்னிலுண் ணுதயர்ந்
தங்கனைந்தக னொந்தனள் தாமுலை
யாரமார்ந்தளி துன்னிய கார்நிறத்
தத்தாண்டமெ லாமுண் டுமிழ்ந்தவா
யாரமார்ந்தளி சென்றுநின் றேத்துமெய்
யன்பனேயித யாலய கும்பனே. (௬௨௯)

அரந்தரங்கட் களத்திருத் தென்றலா
லங்குயம்புடைக் கக்கச்சி லேசிறி
யாந்தரங்கண் டதின்வழித் தாய்மத
னுசுகந்தொட வச்சமுற் றுள்கனு
யாந்தரங்க மெறிந்தொலி செய்யும்வே
லைப்பணுமகு டப்பணி துஞ்சுபா
யாந்தரங்கத் துறையருள் வாரிதி
யானமாலித யாலய பூமனே. (௬௩௰)

சரியக்காரமெ யத்தன்வில் லேமுலைத்
தையல்பைங்கிளி சோன்சுட மேகலை
சரியக்காதள வோடுகட் பாங்கியுஞ்
சாமலன்னமு மென்னிலி தென்னவா
சரியக்காதனி யேதுய ருற்றிடஞ்
சற்படும்பொழு தென்னும்வந் தாள்விண்குஞ்
சரியக்காதல னேரித யாலய
சக்கரேசுர னேதமிழ்ச் சிங்கமே. (௬௩௧)

சாசந்தான மளவின்றி வேள்செலுத்
தச்செவ்வேலையுந் தாக்குக ணுள்சாா

சாசந்தானவை யெல்லா முருகிடச்
சாற்றுகீதமுஞ் தான்மறந் தாள்கா
சரசந்தானந் தொறும்புரிந் தார்மலர்ச்
சப்ரமஞ்சத் தணையடி யார்க்கவ
சாசந்தானடந் தோனருள் சேர்முலைத்
தாமனேயித யாலய பூமனே. (௬௩௨)

புத்தனம்பட ராடிக் கதுப்பினுள்
பூங்குயிற்றொனி காதுறப் பாரசெப்
புத்தனம்பணைத் தஞ்சிடத் தோழிபொற்
பூணணிந்திட வாவெனி லென்னவம்
புத்தனம்பண்ணி றற்சகி யேனடி
போடியென்றனள் சேர்பொய்ப்பொன் மானைத்த
புத்தனம்பணிப் பாயனைச் சந்ததம்
போற்றுமாலித யாலய பூமனே. (௬௩௩)

கட்டுப்பாலரும் பாஞ்சொல் விதழ்பண்டி
கச்சுப்பூண்முலை யாளுண வந்தியிற்
பிட்டுப்பால ருருத்தெரிந் தோன்கணை
பெய்யமேகலை பைந்தொடி சோரவோர்
சொட்டுப்பாலருந் தாமனைந் தேமனஞ்
சுழன்றுவாடினள் சேர்ந்தணை வாயணை
எட்டுப்பாலருங் காக்குங் குவைப்புயத்
தேந்தியாளித யாலய வேந்தனே. (௬௩௪)

கைக்கக்காதினுக் குக்காந்தள் வள்ளையாங்
கன்னியைச்சுவைக் கற்கண்டு சேர்ந்தபா
கைக்கக்காதிருந் துண்டுணனின் மான்மகன்
கைக்குறுங்கணை யானைந்து நிம்பமாக்
கைக்கக்காதின மென்றுரைத் தாண்முலைக்
கண்ணிதந்தணைந் தாள்கஞ்ச மாமன்ப

கைக்கக்காதிசை யேதியி னல்வென்ற
கண்ணார்ப்போற்றித யாலய மன்னனே. (கூடுரு)

வசனம்பாலனந் தாமரை யாநடை
வத்திரத்திரு மங்கைய ருபவங்
கசனம்பாலனந் தாலத்தி லிட்டுணக்
கைக்கெனப்புகன் றுளுரித் தானபா
விசனம்பாலனந் தான்புரி யாரணை
மீதிருந்தணை வாயொளிர் கூவிரந்
தசனம்பாலனந் தாவென மாயனைத்
தாழந்துபோற்றித யாலய வேந்தனே. (கூடுசு)

## கழிநெடில் விருத்தம்.

ஆரணக ராவிசையா மருதப்பா தவனிகர்கு
யத்தா ளுக்கம்
மாரணக ராவிசையா மருதப்பா தவனிலவால்
வாடி னுண்மந்
தாரணக ராவிசையா மருதப்பா தவனிபிடத்
திடந்தோய் தண்குறற்
காரணக ராவிசையா மருதப்பா தவனிறையங்
கலைவல் லோனே. (கூடுஎ)

தாதனந்தா னைகள்பசுமைத் தாதனந்தா கங்காளம்வேள்
சரத்தாற் கோவிந்
தாதனந்தா னெந்திசைவோ தாதனந்தாய் மாசருத்தி
லுஞ்சற் றேமாந்
தாதனந்தா மம்புனையா தாதனந்தா வெனும்வணப்பா
சாற்று திப்போ
தாதனந்தா ரமரினிற்பிந் தாதனந்தா செய்யிதயா
லயசற் கோவே. (கூடுஅ)

காரவசந்தப் பாதகரி யைப்புரந்தோன் மலையனவிக்
கன்னி மேற்சங்
காரவசந்தப் பாவிமலர்க் கணைதொடுத்து வலையினிற்பட்
டுழல்கான் மாணி
காரவசந்தப் பாநயனத் தானுக்கு மணவாய்கற்
பகதா ரன்ன
காரவசந்தப் பாபுயா புகழிருத யாலயகம்
பீர மாலே. (௬௩௯)

விந்தந்த னந்தனந்தா வாமினிடை யாண்மெலிய
வில்வாங் கிச்சி
னந்தந்த னந்தனந்தா னயகனலாப் பாணமெய்ய
நயமா கத்தா
தந்தந்த னந்தனந்தா வெனும்வணப்பா யிசையள்மனை
தனக்குக் கற்ப
கந்தந்த னந்தனந்தா வென்றுகண்ணற் பணியிதயா
லயகா வேந்தே. (௬௪௰)

கயக்கும்ப மாமுலைபா ணுகரொளிற்கைக் கெனுமணை தேன்
கலந்த தீம்பால்
கயக்கும்ப மாதுறிவே னென்றுவைவ ளுசிதகன்னிக்
கணைத்து டன்பங்
கயக்கும்ப மானதடத் தாடல்செயா தணைகலையிற்
கமண்ட லச்செங்
கயக்கும்ப மாதவனோர் புகழிருத யாலயகம்
பீர வேளே. (௬௪௧)

மத்தகரா வனவிபக்கோ டனதனப்பொற் பேதைமதன்
வரிற்கங் கஞ்சே
தித்தகரா வனையநத் தாலினநோக் காயெனுமாய்
தினம்பிரார்த்தித்

ஆந்தகரா வனவணங்குக் குப்பலியீ வாளணைவாய்
ஆகள்க டர்ந்த
விந்தகரா வனவியவேண் டியவையுத வும்மிசயா
லயமே லோனே. (சசஉ)

கருப்பவள வானனசெங் கரணிருத யாலயவேள்
கண்ணி வந்தால்
மருப்பவள வாயிரதி மதனநின்ப தாதியெல்லாம்
வந்த வாறே
திருப்பவள வாசுகமு மாவமதிற் சேர்நடவென்
றேசெங் கஞ்சத்
திருப்பவள வாவெழில்கூ ரொன்னயிற்கட் பேதைசொலு
வேனென் றாளே. (கூசங)

தொடுத்தவளை யுண்டவன்சேய் தொடுகணையா லெய்த்துநடு
விற்சொன் னத்தூ
சுடுத்தவளை தொடநழுவி யுளமயக்காற் புலம்பியையோ
சிவனே யென்று
படுத்தவளை மதியங்காய்ந் தெழுசிறுகாற் புலிபாயப்
பணிவாய்ப் பட்ட
மடுத்தவளை யாகினள்சேர்ந் தணையிருத யாலயபூ
மன்ன ரேறே. (கூசச)

பாலனமாற் றக்குயிலாள் தவளமதி யனலாலற்
பகட்டோ னெய்யம்
பாலனமாந் தாளயிலை முனிவரிக்கண் டியிலாள்சேர்
பாங்கார் வாமப்
பாலனமா நடைவிழியம் பிகையைவைத்த பாமருதற்
பார்வை தந்த
பாலனமா துலனடியைப் பணியிருத யாலயபாண்
டியசிங் கேறே. (கூசரு)

தினமலைக்கும் போதயனை யகளகண்ட மிசைகேட்டுத்
தெரிவை மெத்த
மனமலைக்கும் போதயனை யரதிகமா கப்பழிப்பர்
மருவி யாள்வாய்
மினமலைக்கும் போதயனை யற்குமிகப் பணிதல்செய்வி
வேகா நன்சந்
தனமலைக்கும் போதயனை யனவிதயா லயபாண்டிய
தமிழ்ச்சிங் கேறே. (௯௪௬)

தந்தானந் தேனுணிடை யகடுகள நயனமுறுந்
தைய னின்றார்
வந்தானந் தேனுருவி லானமர்க்கென் றுள்பொருத்த
மான லக்கி
னந்தானந் தேனுறத ரம்பருகி யணைவதற்கு
நண்ணு வாய்விண்
சந்தானந் தேனுவன காவிருத யாலயவித்
தார மாலே. (௯௪௭)

சங்கனைக்குந் திரமதியாங் களவதனப் பெண்ணணியான்
சமரா லேயென்
னங்கனைக்குந் திரவைவைத்தி ராகமிசைப் பதுமறந்த
தணைவாய் வெண்மா
தங்கனைக்குந் திரவியினுக் கின்றவனை யனையசெல்வா
தருந்தி யாகா
கங்கனைக்குந் திரள்பொழிலார் வீரையித யாலயசிங்
கார மாலே. (௯௪௮)

கஞ்சமனத் தாதிரையான் வின்முகங்க ளந்தனமாங்
கன்னி யிந்த
வஞ்சமனத் தாதியரா சொலுவர்சந்தென் றுனைநினைந்தே
மயங்கு வாள்சேர்

நெஞ்சமனத் தாதிசைகோ கனகமின்னை வேய்ந்தநவ
நீதா செஞ்சூட்
டஞ்சமனத் தாதிதியென் றஞ்சலிசெய் மருதப்ப
வாச ரேறே. (௯௪௯)

இக்கருந்து வாரவிக்கை தொடெனில்வரா ளுன்மயலா
லினிமேற் றந்தைக்
கொக்கருந்து வாரமர்க்கென் னுதன்வந்தா ளெனப்புலம்பிக்
கொளுவா ளேயோத
திக்கருந்து வாரகைக்க திபனடியைப் பரவுமன்பா
சினத்த மும்ம
தக்கருந்து வாரமுறுங் கைக்கயநா டாத்துமரு
தப்ப கோவே. (௯௫௰)

வந்தயில மாவெனவட் டியசுவைப்பா லைக்கொடுக்கின்
பதமா யிவ்வேப்
பந்தயில மானைத்தந் தாயெனவே சுவளலர்ந்த
பசுஞ்ச ரோசச்
சொந்தயில மாமகன்போர்க் கஞ்சிலைந்து வாடுவதாற்
றுவள் மருங்குல்
தந்தயில மான்கணணை வாயிருத யாலயவித்
தார மாலே. (௯௫௧)

திருக்கையிலே சரியிடுவா னெனிலணியாக் கணியிதழி
திருக்கி ரண்டு
முருக்கையிலே சரியனங்க னமர்புரிய வாடினள்தா
ருதவு வாய்த
னிருக்கையிலே சரிதலக்கொள் வதெனவிடுத் தோனமிழ்ந்த
விருத்துங் காளச்
சருக்கையிலே சரினடியைப் பாவிருத யாலயவித்
தார மாலே. (௯௫௨)

## கட்டளை.

குக்கிக்கக்கிவை வேலனையாயனங் கொஞ்சமாவ
தருந்தென் றருத்தினும்
விக்கிக்கக்கியி தென்னதந்தாயடி வீணியென்றுநின்
வேட்கையி னல்விழி
சொக்கிக்கக்கிசந் தானுயிர்வந்தது தோளலங்க
லளித்தருள் வாய்கிளிக்
கொக்கிக்கக்கிரு தோர்சதனுக்கிணை கூறுமாலித
யாலய தீரனே. (௬௫௩)

## கலித்துறை

அரசக்கரிவையம் பூத்தோர்க்குரைத்த தலையல்கம்வாண்
முரசக்கரிவைய னுகவத்தாலதி மோகமுற்றுச்
சரசக்கரிவை யயர்ந்தாள்தயைசெய் சரணடையார்
சிரசக்கரிவை யயில்வேண்மருதப்ப சீபதியே. (௬௫௪)

கருங்கடத்தந்திருப் பூண்முலையீர்சந்து கந்துரையா
திருங்கடத்தந்திரு வுள்ளமெலாமறிந் தும்மெனும்யா
வருங்கடத்தந்நிண் புயத்தார்வருமெனி னும்மயங்கும்
பொருங்கடத்தந்தி நடாத்திதயாலய பூபதியே. (௬௫௫)

## கழிநெடில் விருத்தம்.

அம்பாத ராகவன நடையுளவென் கன்னிகைநின்
னைசை யாற்றிக்
கம்பாத ராகவன மாபசிய சுகமெனக்கொண்
டமர்செய் யைம்போ
தம்பாத ராகவன லம்பகத்தா லினநோக்கென்
றறையுஞ் சேர்னா
யம்பாத ராகவன ரோந்திரமா மருதப்ப
வரச ரேறே. (௬௫௬)

வந்தனஞ்சந் ததகாச்சாந் திவையையுண்பூ செனிற்பதிபான்
மனமகிழ்ந்து
வந்தனஞ்சந் ததாகலா மற்செலுங்கொ லெனத்தெருக்கால்
வாடிநிற்கும்
வந்தனஞ்சந் ததனுணவாஞ் சாலியிந்த மங்கையணை
வாய்மா லுக்கு
வந்தனஞ்சந் ததம்புரியுந் துங்கவித யாலயபூ
மன்ன ரேறே. (௬௫எ)

## கலித்துறை.

கருவானனைய வரும்பைங்கதிரள கம்முகம்வேள்
செருவானனையவிழ் தார்புனை பூணணி சீக்கிரமன்
வருவானனையய ரேலெனினுஞ்சம் மதித்திலள்சேர்
தருவானனைய காத்திதயாலய தாட்டிகனே. (௬௫அ)

சக்கரமானகி லம்பண்டியங்கனை தானனங்க
சக்கரமான விழிபொருந்தாது தண்மீனத்துவ
சக்கரமான மதனெலென்றுளணி தாபதினெண்
சக்கரமானடி போற்றிதயாலய சற்குணனே. (௬௫௯)

மாலைவந்திக்கு மதியானனமங்கை வாகினிக்கு
மாலைவந்திக்கு மரியிடத்தேதொட வாடினள்தா
மாலைவந்திக்குமுன் மண்சுமந்தோனை வனசவிழி
மாலைவந்திக்குமன் பாவிதயாலய மன்னவனே. (௬௬௰)

வாமதனம்புடைத் தேதுயிலாமங்கை மேற்சிவசி
வாமதனம்பு தொடவலைமானென வாடினட
வாமதனம்புரி சொன்னடைபூண்கந்த ரம்மருவ
வாமதனம்பும் பலைப்புரந்தோய்மரு தப்பமன்னே. (௬௬௧)

அலருந்ததியலை யோதையினுலஞ்சு மங்கனையைப்
பலருந்ததியிதென் றேயம்பலோதுவர் பண்புறுகற்
பிலருந்ததியழ கிற்சசிதாரருள் பேணிநந்த
னிலருந்ததியுணு மாலிதயாலய விந்திரனே. (௬௬௨)

தகனத்தனைய விதித்தானெனத்தளர் வாள்வளையொத்
தகனத்தனையணி பூணெனிலுந்தரி யாண்மதப்பா
தகனத்தனைகணை யுந்தொடவாடின டாரருள்வித்
தகனத்தனைப்பணி மாலிதயாலய தாட்டிகனே. (௬௬௩)

## கழிநெடில் விருத்தம்.

சிலைக்கு மலைக்குந் தாநுதற்கட் டெரிவை மதியின்
றீக்கொழுந் தால்
மலைக்கு மலைக்கும் பியெனவுடை யோனே வால்வா
டுவ ளாக்கர்
தலைக்கு மலைக்கு றனினமெடுத் தாட வறுத்தோன்
றுள் பணிவோய்
கலைக்கு மலைக்கும் பனையனைய விதயா லயபாண்
டிய கனனே. (௬௬௪)

## வெண்பா.

மாரனம்பு கட்குயிலாண் மார்பினிற்றா வத்தினமாய்
மாரனம்பு கட்டினும்வாங் காதயர்ந்தாற்—றீரும்வகை
நம்மையித யாலயமன் னன்னணிவந் தாலலது
அம்மைதனைக் கோறல்பழி யாம். (௬௬௫)

## கழிநெடில் விருத்தம்.

உருத்தனங்க வானாம்பை வானாம்பைங் குழல்விழி றா
லுக்க மாரந்

திருத்தனங்க வாயிமைமையோ டிமைபொருந்தா வண்ணமணைத்
தென்னு கத்து
மருத்தனங்க வாளிமிக வருத்தநைந்தா ளிணையாவின்
மத்த கத்தி
னிருத்தனங்க வாவளையுண் டோனருள்சேர் மருதப்ப
நிருப ரேறே. (௬௬௬)

கைச்சங்க ராவணனை வென்றிடங்க ணாத்திரிசக்
காத்தை யேவி
நைச்சங்க ராசலத்தை ரக்ஷணைசெய் தோய்சகத்திர
நாம னேவெண்
மைச்சங்க ராமவெனத் துதிசெயித யாலயபூ
மன்னன் காக்ஷி.
தைச்சங்க ராந்தியினிற் கண்டுகொண்டே னெனதுகலி
தவிரத் தானே. (௬௬௭)

## கலித்துறை.

நன்னாட்டையாசுக நேர்மொழியாணவி லாதயராப்
பன்னாட்டையாசுக மாரன்றொடவிரும் பாளனஞ்சேர்
கொன்னாட்டையாசுக டாவயில்வேற்கைக் குகனருள்சேர்
தென்னாட்டையாசுக பூமாமருதப்ப சீபதியே. (௬௬௮)

வாடாமலரைங் கணையாயுனதமர் மாலெனக்குத்
தூடாமலரை விளக்குமின்னாடந் தோற்கவென்னைக்
கூடாமலரைக் கணமும்பொறாளின்றென் கோவெனுந்தென்
னாடாமலரை யடக்கிதயாலய நற்குணனே. (௬௬௯)

செருத்தத்தையாரம்ப னேகந்தொடக்கன்னி தேங்கிமன்றி
னிருத்தத்தையாரம்ப நேர்விழிபாகவென் னெஞ்சிலுள்ள
வருத்தத்தையாரம் பதிபாலறைகுவ ரொன்னும்வஞ்சக்
கருத்தத்தையாரம்பல் சொல்வார்மருதப்ப காண்டிபனே. (௬௭0)

சிவகங்கை ஜமீனைச்சேர்ந்த புலிக்குளம் ஜமீன்தார்

## முத்துக்குமாருத் தேவராவர்கள்

இயற்றியது.

## கழிநெடில் விருத்தம்.

வனந்தாங்கந் தாங்கருங்கண் மடமயிலா ளிருவருமே
மருவி மாறு
தனந்தாங்க மலச்சலசா தமெனநாத் தடநிறஞ்சேர்
சாமி யேசெப்
பினந்தாங்கண் டமைப்பையெனப் பேசிடுமக் காக்கடிதப்
பெற்றி தேர்ந்து
நினந்தாங்க மதினினைந்த நினைவெனதை நிகழ்த்திதயா
லயசி மானே. (௬௭௧)

ஏண்டியக்கா யிருமலுந்தும் மனுமினைப்பு மெனயிழிவா
யேச யேங்கிக்
காண்டியக்கா மனம்புமதிக் கதிர்க்கனலுங் கருக்குதெனுங்
கனியைச் சேர்வாய்
வேண்டியக்கா ரம்புனையும் விமலர்கழற் கன்பவித
ரணமேன் மைச்சீர்
பூண்டியக்கா திபர்பரவும் வீரையித யாலயபூ
பால ரேறே. (௬௭௨)

கருங்கடலை மதியையன்றி லைக்குயிலைக் கடியவருங்
காம வேளென்
மருங்கடலைச் செய்யவரி சிலைவளைத்து மலர்தொடுக்க
மயலா மின்பந்
தருங்கடலை யெடுக்கவிடா தடிக்கடிசங் கடஞ்செயுஞ்சங்
கதியைச் சொல்லு

திருங்கடலை வணுக்கெனச்செப் பினனிதயா லயசுமுக
ஜெயசிம் மேறே. (சுஎங)

பாக்கலக்கந் தமிழ்ப்புலவர்க் கருளுமித யாலயபூ
பால நற்செய்
பாக்கலக்கச் சணிமுலைவாய்ப் பாவைமயற் பாடறியும்
பயனோ ராச்சும்
பாக்கலக்குஞ் செயப்படுந்தந் தந்தையர்மேற் பழிசுமத்திப்
பயத்தி னூற்சு
பாக்கலக்க ணிருகுத்துப் பரிதபிக்கும் பரிந்தணைபார்த்
திபர்க ளேறே. (சுஎச)

பொருந்துமட மயின்மலர்ப்பூங் கணைமதனன் பூசல்செயப்
புகுந்து பூட்டி
வருந்துமட மயிலைமலர்க் குழலிவளை வருத்தமதி
மயங்கி வாடித்
திருந்துமட மயில்பாதே சிகளெனவே திரிந்தலையச்
செய்தாய் தேரோன்
றிருந்துமட மயிலினமு மினல்புரியுங் கலவிதயா
லயசிம் மேறே. (சுஎரு)

உருப்பவள வயிரமுத்த முருட்டுதிரை யருவிகொழித்
தொதுக்குந் தென்றற்
பொருப்பவள வயற்புடைசூழ் வீரையித யாலயபூ
பால போரிற்
றிருப்பவள விறந்தெழுந்த சேனையொடுஞ் செருநர்முகஞ்
சிதைக்குந் தீரா
விருப்பவள வாவென்று மீதிலதை விரித்துரைப்பாய்
விபுத ரேறே. (சுஎசு)

கருங்கடித மெனச்செயுங்கண் ணியர்க்காசே யவன்மேற்கொள்
காதல் நல்ல

மருங்கடிதப் பிதமிலையா லெனவுமன மயங்குமட
மாது தேறப்
பெருங்கடிதந் தலைபிரச மலர்ப்பிணையன் மார்பணைத்துப்
பின்னு மென்பால்
வருங்கடித மதனின்மகிழ் வாவும்வளாந் திடுவையென
மதிப்பர் மாதோ. (௬௭௭)

## கலித்துறை.

முக்குறுணிக்கரிப் பின்றோன்றல்பாலன் முலையுழிச்செம்
முக்குறுணிக்கிளை யெங்கட்செய்யான்முன் முரணினர்தோ
முக்குறுணிந்திட்ட மேலோனில்யாம்பெற முன்னுதிரா
முக்குறுணிக்கே தனமருதப்ப முழுமன்னனே. (௬௭௮)

---

சொக்கம்பட்டி

## செம்புலிப் பெரியசாமித் தேவர்

இயற்றியது.

## கழிநெடில் விருத்தம்.

திருமலைக்கு மாரனம்பால் வளைக்குமுலை நடைகளமாச்
செப்ப லாகுந்
திருமலைக்கு மாரனம்பால் நயந்துரைத்துப் புகட்டினுமோர்
திவலை வேண்டாள்
திருமலைக்கு மாரனம்பால் மன்னவனை வரச்செயென்றுள்
திகைப்பா ளை
திருமலைக்கு மாரனம்பால்ச் செயும்போர்க்கும் மருதப்ப
ஜெயசிங் கேறே. (௬௭௯)

அனங்கசக்கா னதி லுமம்பு தொட்டாய்நீ யடுத்தடுத்தே
யனைமா ளூட்டும்

அனங்கசக்கா யாசமதாய் வருகுதென்பள் நீவிரைந்தங்
கவள்பால் வந்து
தனங்கசக்கா விடில்விரக மதுதணியாண் மனதுவந்து
தழுவிச் சேர்வாய்
தனங்கசக்கா நிகராக வித்துவர்க்கி மருதப்ப
தமிழ்க்கோ மானே. (௬அ0)

முகவூர்ச்

## சுப்பிரமணியக் கவிராயர்

இயற்றியது.

### கழிநெடில் விருத்தம்.

புரகாசம் போகமுயிர்க் குதவவுமை யொடுகலந்த
பூத நாதா
அரகாசம் போவெனத்தென் கூடலா திமைப்பணிவா
மணியார் கிள்ளைத்
துரகாசம் போதரவூர் குகற்கிணையா யிடுகுமிடை
துடி நேர் வார்க்கு
விரகாசம் போதனயந் தருளிதயா லயன்சேம
மேவத் தானே. (௬அ௧)

மருதமரப் பசுங்கிளியஞ் சுகமேனு நிகருவாயா
வசனத் தாண்மேற்
பொருதமரப் பெய்குவன்வே ளெங்களித யாலயசம்
போகா வன்னேன்
விருதமாக் கொடியைவெல்லும் விழியினம்பு பொழிகுவணீ
விரும்பி னுலவ்
வொருதமரக் கடற்குமதி லுதிக்குமதன் குடைக்குமச்ச
மொழியுந் தானே. (௬அ௨)

கனிவாயா துரைக்கினுங்கேட் டருளிதயா லயசுமுக
கன்னு தேவன்
முனிவாயா துடன்றனங்க ஞனவன்செய் விதமெவித
மொழிவேன் மாவிற்
பணிவாயா துடன்பார்க்கி லொருநூலாம் பாவைநிதம்
பவளந் தேன்சொ
லினிவாயா துலகிலிவள் போலணைவாய் பேரின்ப
மெய்துந் தானே. (௯௮௩)

மாதங்கக் கும்பாவைச் சினந்தெறிவா ளிதஞ்சொலியாம்
வாயி லூட்டுஞ்
சாதங்கக் கும்பாவை மையல்கொண்ட தறிந்துபே
தையர்கள் கவ்வை
யேதங்கக் கும்பாவை கிப்பழிப்பார் வாதாவி
யினையுட் கொண்டே
காதங்கக் கும்பாவை வேவிதயா லயவினைக்
கலந்தாள் வாயே. (௯௮௪)

அஞ்சுகமா கவிராசொல் லதரமெனுங் கனிநினைக்கண்
டடைமோ கத்தா
லஞ்சுகமா கவிராப்போ துறங்காது வருந்துகின்றா
ளணைவாய் தேர்க
யஞ்சுகமா கவிராசர்க் குயர்பரிசா யளித்திடுவா
யாக்க ரெல்லா
மஞ்சுகமா கவிராம னோரிருத யாலயபூ
வாச ரேறே. (௯௮௫)

அகத்தியமா தவன்போலு மிருதயா லயநினையே
யணைதற் கெண்ணும்
அகத்தியமா தவனமடங் காதெனும்பன் னீரும்வெந்நீ
ராய தென்னும்

அகத்தியமா தவளவுதுன் படையாமற் காவிவட்கொப்
பாகார் மின்னார்
அகத்தியமா தவனையுற வோங்கினுங்கற் பகத்தைநிக
ரார்சொல் வாரோ. (கூஅசா)

பாம்பலவா வியங்குநினைப் பற்றன்மின்னார் பாவமெனப்
பகர்வ ணின்வா
யாம்பலவா வியமதியா ளம்மதிநோக் கியுமிவள்கண்
ணம் புயங்கள்
கூம்பலவா வியதருளிக் காத்தியெனிற் பேரின்பங்
கூடுங் கண்டாய்
தேம்பலவா வியணிசெய்யும் வீணாயித யாலயாஞ்
சிதகோ மானே. (கூஅஎ)

அமையம்பா ராதரிக்குங் குடையுடனீ செயும்போருக்
கடுத்து நீவந்
தமையம்பா ராளுநம்மன் னற்கினமுந் தெரியாது
தனித்தார் பாற்செல்
லுமையம்பா ராமுழுவ தும்பொருவா யுனதுதிற
முணர்வோங் கற்றோர்
சமையம்பா ராமலென்றும் வரச்செயித யாலயன்பாற்
சாருங் காலே. (கூஅஅ)

விரும்புலவாக் கிழிகண்டார் போனீனைக்கண் டெதிரழைக்க
விரைவா கப்போ
தரும்புலவா துரையேயென் றேதுமா திதையறிவஞ்
சகத்தா ரந்தா
யரும்புலவா ரும்படைமன் னவன்யாரென் றிடிப்பாடிப்
பாரொன் றார்கள்
கரும்புலவா வுறப்போர்செ யிருதயா லயவிச்சங்
கடந்திர்ப் பாயே. (கூஅகூ)

கச்சாரங் கனதனத்தாண் மோகசுரங் கண்டுயர்பூங்
கட்டின் மீது
வைச்சாரங் கனம்வதியா தோடுவளா டுவளிதென்ன
மாய மென்றிஞ்
சிச்சாரங் கனகவளத் தீந்துமினந் தீரவில்லைச்
செகத்தைக் காக்கு
மச்சாரங் கனடிநிதம் பணியிதயா லயவினிவந்
தருள்செய் வாயே. (சுசுய)

முகவூர்

# மீனாக்ஷிசுந்தரக்கவிராயர்

இயற்றியது.

## கழிநெடில் விருத்தம்.

தங்கத்தம் புருவொடுநீ கிளைவையித யாலயவுத்
தமபூ மான்மா
தங்கத்தம் புருகூதன் போல்வருங்காற் சதியோடு
பதமும் பாடித்
தங்கத்தம் புருடரொலாம் வியக்கவுளாத் திடின்மகளே
தாரீ வாணித்
தங்கத்தம் புருவமுரா சனுமுனக்கஞ் சலிபயந்தெத்
தனைசெய் வானே. (சுசுக)

சுரும்பருவ மானமெனத் துணைநயனஞ் செவிமலரிற்
றோய்ந்து மாறி
வரும்பருவ மானவள்கோ மானைவிரும் புவதுமொரு
வழக்கே முல்லை

யரும்பருவ மானமதன் கோடியெடுத் தோடிவந்தா
னந்தோ கப்பந்
தரும்பருவ மானமன்னர் பணியிருத யாலயவுன்
றயைசெய் வாயே. (௬௬௨)

சந்தத்தந் திரதமுலை யல்குலமை யுங்கனியே
தமிழ்வா ணர்க்கு
வந்தத்தந் திரமாகத் தருமிருத யாலயபூ
மானைக் கூடா
திந்தத்தந் திரமாநீ யேய்ப்பசமு கோதனம்வைத்
திருந்து மெய்போ
தூந்தத்தந் திரணமுமீ யாதலுத்தர் போலிருந்தென்
சுகமுற் றுயே. (௬௬௩)

கலவினயம் பாரிரதி போற்புரிவாள் நடமியற்றிக்
கைகண் ணுற்செய்
வலவினயம் பார்முழுதும் வசப்படுத்து மிவளைமதன்
மயக்கக் காயும்
நிலவினயம் பாரவிடுத் தாளணைய மகமுமோர்
நிமிடத் துக்குட்
சொலவினயம் பாரதிக்கு மேலெணித யாலயவுத்
துங்க கோவே. (௬௬௪)

மோசமத னுலுமதி யாலுமிக வாடுவது
முறையோ தெய்வ
நேசமத னுயருங் கிளைவயித யாலயநன்
னீதி மான்பால்
வாசமத னுபெரி யோரறிய வேசொலிநீ
வலியச் சேர்பின்

பாசமத னுலுமொரு கைகொளிரு ளிபம்புரிதுன்
பமும்போ மாதே. (௬௬௫)

# வேம்பத்தூர்

# சர்க்கரைப்பாரதி

இயற்றியது.

## கட்டளை.

வாசியாதவ ருன்சமு கத்தினில் வந்தடுப்ப தரிதடுத்
தாற் பச்சை
வாசியாதவர் காந்திமுன் பங்கய மாமெனக் கல்வி
வாய்விரிந் தாலிலை
வாசியாதவ னைப்புரக் குங்கணு மாதவாபொன்
மகிளுமகானுபா
வாசியாதவ போதவெனத்துதி மருதப் பேந்திர
வெனப்பா வனைவனோ. (௬௬௬)

## கழிநெடில் விருத்தம்.

மாதரங்க மாவெனச்சொல் மாவேகப் பரிப்பவனி
வருதல் கண்டு
மாதரங்க மாதுறங்க மனமின்றி யனமின்றி
வாடினுள் பூ
மாதரங்க மாகினுவை மருதப்பேந் திரவொன்னுர்
மடங்கச் செய்சிம்
மாதரங்க மாகிர்வாண் மனங்களிக்கச் சேர்வையெங்கண்
மன்னரேறே. (௬௬௭)

விடங்கடங்கா வெனப்புகலும் விழிதனக்கூந் தற்குமரி
மேற்கா மன்போர்
தொடங்கடங்கா மர்ச்சரந்திர்த் தாளிவளைக் கருதலர்க
டொகையா மாம
குடங்கடங்கா விதந்தேய்க்குங் கழற்காலா வீரைநகர்க்
குமுறு வீரை
மடங்கடங்கா முரசமதிர் முன்றின்மரு தப்பேந்திர
மன்ன ரேறே. (௬௯அ)

---

சின்னிகுளம்

## அண்ணாமலைக் கவிராயர்

இயற்றியது.

### கழிநெடில் விருத்தம்.

வெல்லப்பா காபாலா வெனுமதுர மொழியாளிவ்
வேளை வேளைக்
கொல்லப்பா காபாலா குடப்புரக்கப் பருங்குவட்டைக்
குடையாக் கொண்ட
புல்லப்பா காபாலா யுதாவெனக்க தறுவளையா
புதுச்சந் தோயா
மல்லப்பா காபாலா மாமருதப் பேந்திரபூ
மன்ன ரேறே. (௬௯௯)

தடிக்கலகம் பிடிக்குறமு நடைமடந்தை யொடுபுரிசித்
தசன்மெய் சோரும்
படிக்கலகம் பிடிக்குதல்போற் பன்மலர்தைத் துருவவிட்டான்
பருங்கொங் கைவ
ருடிக்கலகம் பிடிக்குரவின் முழங்கிவுளி மீதேறி
யொன்னார் சென்னி

வெடிக்கலகம் பிடிக்குநகு லாவிருத யாலயவி
வேக மாலே. (௭௩)

பாயிரந்த ரங்கசங்க மஞ்சரிபு முரசாயார்ப்
பரித்த லாற்பூ
வேயிரந்த ரங்கசங்க மஞ்சரிதாள் பணிமருதப்
பேந்திரன் பாற்செவ்
வாயிரந்த ரங்கசங்க மஞ்சரியாப் புரிந்துனிதழ்
மருந்துள் ளேதந்
தாயிரந்த ரங்கசங்க மஞ்சரிந கிலநெருடி
யணையென் பீரே. (௭௩௧)

பரும்போதாக் குஞ்சினமே வீரையித யாலயன்பாற்
படர்ந்தோர் மின்னுட்
கரும்போதாக் குஞ்சினமே வியகுயிலட் டுளோக்கும்விழி
யலையு காந்தப்
பெரும்போதாக் குஞ்சினமே கலைமருங்கு லாவெனக்கம்
பிக்கச் செஞ்செக்
கரும்போதாக் குஞ்சினமே கனத்தவிற்போற் கனத்தெழுங்கொங்
கையென் பீரே. (௭௩௨)

கிம்புருட ராகமங்கொண் டேத்துகின்ற நவநீத
கிருஷ்ண தாசன்
செம்புருட ராகவணி யானிருத யாலயன்முச்
செகத்தி லெங்கெங்
கும்புருட ராகவுதித் தவர்க்குயர்ந்தான் மயல்கொளெனைக்
கொல்வ தால்வே
ளம்புருட ராகனலக் கண்டிறக்கப் பண்டிறக்கு
மம்மெதற் றுமே. (௭௩௩)

கழைக்காக்கா மாதாகந் தவாகனவா கனநலமா
கணைநி லாத்தீ

மழைக்காக்கா மாதாக மெனத்தெரிந்துந் தொடுத்தலென்பாள்
வாய்க்குப் பான்மூ
கிழைக்காக்கா மாதாக வடியாளு ளேயமரர்
கிளைக ளெல்லாம்
பிழைக்காக்கா மாதாகத் தொடுபடெனத் தொடுமருதப்
பேந்திர மாலே. (௭௱௪)

சத்துருவா மாராமா சுகந்தவுட லோடுறையான்
றளவா லன்றி
மித்துருவா மாராமா சுகந்தகப்பூட் டிரதனின்று
விடுநின் பூமெய்
தைத்துருவா மாராமா சுகந்தனை யொத் தோடுகின்ற
தடாவென் பாடங்
கத்துருவா மாராமா சுகந்தபுயா மருதப்ப
கனபூ மானே. (௭௱௫)

பண்டுதாக் கருத்தியொடும் பணியகடம் பணியபதம்
பாவு சீலா
பிண்டுதாக் கருத்தியையர் பிழைத்தனனொன் றிடச்சிலைகை
பிடித்தா யாரம்
வண்டுதாக் கருத்திரண்டு மிழுங்கினுவை மருதப்ப
மன்பொற் சோட்டுத்
துண்டுதாக் கருத்திரக்கஞ் செய்யெனது விசித்திரக்கந்
துலங்கத் தானே. (௭௱௬)

அளிக்காப்பக் குவந்ததிபன் கணையுருங்கா வீரைநகர்க்
காசே துய்ய
வெளிக்காப்பக் குவந்திகம் பான்பதி யானநம்மை
விருப்பத் தாய்போ
லுளிக்காப்பக் குவந்ததிவ்ய குணவிருத யாலயமா
யோக நீதா

புளிக்காப்பக் குவந்தநியி லலகுமநி தமதிலுறப்
புரிந்து தானே. (௭௱௭)

மருங்கருணைக் கந்தரக்கந் தான்றடியன் றார்மகனை
மருதப் பேந்திரா
விருங்கருணைக் கந்தரமான் சுந்தரமான் மார்பினன்கா
வின்கா லாண்ட
பிருங்கருணைக் கந்தரக்க டலையெனவே விடுத்தவர்தாள்
பிரியா தாய்நு
கருங்கருணைக் கந்தரசம் விழைந்தனன தருளொருநிங்
கட்குத் தானே. (௭௱௮)

சேற்றாருங் கமடமதொப் பாம்புறவங் கிரிசந்
திரகிரியே யிளமுலைவஞ் சிவகிரிநூன் மருங்கு
போற்றுமெழி லூர்க்காடு பிடித்தடக்கை நிகராம்
புணராச்சங் கடம்பூர்வப் புலனைமயக் குதென்றாள்
வேற்றுமுகம் பாராப்பெண் மணியாச்சி வருமே
விறற்சிங்கம் பட்டினிமே வினும்புல்விரும் புறுமோ
வூற்றுவனை முன்படைத்த வூற்றுவனா மகிபா
வுயர்மருதப் பேந்திரனு முலகதுராந் தானே. (௭௱௯)

அதியாக வசந்தான மதசாரஞ்செய் பொழிற்கிளைவைக் கதிபாவாரம்
பொதியாக வசந்தான மதகசல மருப்பொசித்தான் போரின்முன்ன
குதியாக வசந்தான மதகாது கோறலெனக் குறித்தாய்மேரு
நிதியாக வசந்தான மதங்கநவி னின்றிநன்றாய் நிலவத்தானே. (௭௱௰)

பாரார்முன் னெழிற்கிரதி யென்பரிநா ளிவளென்
பாணியணி யாளனங்கார்த் திகைக்குமருத் தினில்வேள்
வேராவா ரோகணிக்கப் பயந்தனள்சந் தந்தி
மிருகசீ ரிடப்புறத்து விழிதுடிக்கு ததனாற்
றீராதி னையுங்கடலோட்*டங்குவர்வெம் பழிச்சொற்
செப்புனர்பூ சம்பூசம் பூவெனிற்சீ றுதென்

ரானாலும் பணியுமின்பாற் சொன்மருதப் பேந்திரா
வாயிலிய மகமெவையு மறிதாவல் லானே. (எஎக)

## வெண்பா.

கற்பூரத் தங்கக் கவின்றனங்கன் னன்மொழியி
கற்பூரத் தங்கக் கவின்றனங்கன்—விற்பால்வைத்
தேவிமயக் காதலிலே யிரதர்விதை யாலயமீ
மேவிமயக் காதலிமன் வில். (எஎஉ)

எட்டு வயலதனை யீவீரா ணத்திடைமின்
குட்டுவயல் செய்துகறைக் குட்டனைக்கும்—விட்டுவையல்
வண்ணு வெனப்பாவால் வாழ்த்துமரு தப்புமலர்க்
கண்ணு வெனப்பாவா கா. (எஎங)

சென்னினக ராமருப்பைத் தீர்க்கிலா னைப்பாசு
துன்னினக ராமருப்பைந் தும்பையவென்—றின்னியல்செய்
பாலன் பதியாம்வைப் பாமருதப் பேந்திரவதின்
பாலன் பதியாம்வைப் பாம். (எஎச)

தாமந்த ராசலச மானபுயா வீரமுல்லைத்
தாமந்த ராசலச மானகா—மாமஞ்சின்
மன்னவரா லாணங்கை வாசமரு மாவினவி
யென்னவரா லாணங்கை யில். (எஎரு)

காணமுடி யாதனமாங் காயவளக் கண்ணனுநட்
காணமுடி யாதனமாங் காயவள—வூணுமுணுள்
பொற்பொதியச் சந்தள்ளிப் பூசண்மரு தப்பபுல்ல
விற்பொதியச் சந்தள்ளி யே. (எஎசா)

தீங்கருப்பம் பாகுமஞ்சுந் தித்திக்குஞ் சொற்கனங்கன்
தீங்கருப்பம் பாகுமஞ்சுந் தித்திக்கு—மோங்குவிண்ணு

மேமலையா கக்குவித்தான் மீட்டுமித யாலயவொப்
பாமலையா கக்குவித்தான் பால். (௭௬௭)

கற்கண்டைச் சேலைநிகர் காட்டு மொழிவிழிசெம்
பொற்கண்டைச் சேலைப் புறத்துருவல்—குற்கண்டை
வந்தபரு மந்தரியாள் மாமருதப் பாதனமா
வந்தபரு மந்தரியாள் வாய். (௭௬௮)

தாழைக்கட் கக்காமன் றன்சாம்பா யாமன்மழை
மாழைக்கட் கக்காமன் மையன்மிகு—மேழைக்குச்
சம்போக லாபந்தாள் சாராமல் வீணாமன்று
சம்போக லாபந்தா தா. (௭௬௯)

என்கருப்புக் கட்டி யிலாத்தவத்தால் வந்தபெண்ணே
யென்கருப்புக் கட்டி யிலாவவிலை—நன்கருப்பு
வாகம் படர்ந்ததுமெய் மாமருதப் பேந்திரதுரை
மோகம் படர்ந்தவித மோ. (௭௭௰)

திரண்டதெல்லாங் கொங்கைச் சிறுமின் கிடந்து
புரண்டதெல்லாங் கொங்கைமுல்லைப் போதை—யிரண்டுவரிக்
கண்காணத் தானையா காமன்மரு தப்பவிடைக்
கண்காணத் தானையா கா. (௭௭௧)

கந்தனைப்போற் றுணைவெல்லக் கட்டியிலங் குந்துமுத
கந்தனைப்போற் றுணைவெல்லக் கட்டியிலங்—குந்துணைக்கால்
வைகும்பா ரக்கழலா மன்மருதப் பாசரிசெய்
வைகும்பா ரக்கழலா மல். (௭௭௨)

என்னத்தைச் செப்பலா மேர்முலைக்கே சத்திவிடுத்
தன்னத்தை யேழ்மெய்வர்க்கத் தாறைந்து—பன்னத்தா
ணின்பா லனுப்பினு ளேமருதப் பாதெறும்பொ
ணின்பா லனுப்பினு ளே. (௭௭௩)

ஆலிங்க னந்தந்தா ளண்ணலித யாலயமா
லாலிங்க னந்தந்தா ளார்ந்ததன்றி—மேல்வதிந்த
தின்றுசெப்பச் சொன்னவளை யேந்துமணி மேகலையென்
றின்றுசெப்பச் சொன்னவளை யே. (எஉச)

சேரனகர் தென்னனகர் செய்யவுள்ளச் சென்னிநகர்
காரனகட் கூந்தன்மின்னார் கண்மொழிய—வாரநகர்
சக்குறக்கந் தீர்க்குமல்விற் றக்கமரு தப்பவொன்னார்
பக்குறக்கந் தீர்க்குமல்லி பா. (எஉரு)

காமிகத்தி யக்கமின்னாள் காமனித யாலயபூ
மாமிகத்தி யக்கமின்னாள் வைத்தனள்காண்—பூமிபுண்ணான்
சாரஞ்சத் திப்பாகத் தானருந்த னத்திலன்ன
சாரஞ்சத் திப்பாகத் தான். (எஉசு)

சிங்கிக்க வைச்சிங்குச் சிற்றாவா நுண்ணிடையைச்
சங்கிக்க வைச்சிங்குத் தண்முலையை—மங்கைக்குப்
பாரஞ்செய் தானவனி பாமருதப் பேந்திரவிதி
யோரஞ்செய் தானவன்பின் னோன். (எஉஎ)

செவ்வற்குளம்

## கந்தசாமிப்புலவர்

இயற்றியது.

## கழிநெடில்விருத்தம்.

நத்துவச னத்தையன்மீ னத்துவச னத்திரத்தா
னலிவுற் றேமி
கத்துவச னத்தைவிரும் பாபெிலா ளதனை
கருணை செய்யத்

தத்துவச னத்தையணி சேதானைப் பணிந்திடுவித்
தார வென்றும்
வித்துவச னத்தைநனி புரக்குமித யாலயவி
வேக மாலே. (எ௨அ)

சாரசனத்திற் சலதாத்திற் சிறந்தநுதற் குந்தளநி
தம்ப மாகுஞ்
சாரசனத்தின் பனமுறுவிற் பனமிகுகற் பனமயலாற்
றயங்குந் தாய்வஞ்
சாரசனத்தி னொடுகூடி யம்பனுனைத் தார்விளைத்தார்
தந்தாண் மாரா
சாரசனத்தின் காத்தானைப் பணியிருத யாலயவு
தார மாலே. (எ௨௯)

அசந்தருந்த தியுநாளுங் கற்புடையாட் குக்கோடி
யாண்டா மோர்தி
வசந்தருந்த தியனமின்பா யசந்தேன்பா விளைவகள்பிசு
மந்தம் போலக்
கசந்தருந்த மனதிசையாள் கருணைபுரி வாய்பனிநீர்
கலந்தி டுங்கந்
தசந்தருந்த வவுமருமம் புனையிருத யாலயவித்
தார மாலே. (எ௩0)

இருநகிலங் கனகவரை யெழிலுதாங் கனகவரை
யேயாற் பன்னங்
குருள்களங்கண் பிரமாஞ்சங் குதிரைநடை பிரமாஞ்சங்
கொண்ட மின்னாள்
தருாசபா கருந்தாது தாயர்மனங் கருந்தாது
தார்தந் தாள்வாய்
திருவளரு மருதப்ப திக்குநிகர் மருதப்ப
சீல மாலே. (எ௩க

கடுக்கரும்ப னகங்கவர்ந்து முமிழ்ந்ததனு லலவாரீ
காய்ந்தா யென்றுண்
முடிக்கரும்ப னகவுடன்மேற் பாயமதன் சமர்புரிந்தான்
முதிர்தாய் மார்வாய்த்
துடிக்கரும்ப னகநகிலந் துடியிடைமா பிடிநடையின்
சுவைசே ரிந்த
நடிக்கரும்ப னகனிவயர் மொழிமான்சேர் மருதப்ப
னினை மாலே. (௭௰௨)

சின்னமருத் துங்ககன மன்னுகதிர்ச் சந்திரனுஞ்
சிறந்த வைந்து
வன்னமருந் துங்கமலர்ச் சரத்தானும் வருத்துவதால்
வாடி யந்தோ
இன்னமருத் துங்கனியை யினியாளே யினியாளே
யினியா ளையா
மின்னமருத் துங்கவைவே லிருதயா லயவதிஸி
வேக மாலே. (௭௰௩)

கச்சாரங் கனதனத்திற் றெருடுத்தனன்வேள் புதியமலர்க்
கதிரம் மெய்யா
கச்சாரங் கனயனமீ ததிகபயந் தோன்றுமின்னாள்
கனியா லன்னங்
கச்சாரங் கனவினிலும் பெற்றதெனக் கண்டனள்சேர்
கவிதை யாந்துங்
கச்சாரங் கனமடுத்து மகிழிருத யாலயசிங்
கார மாலே. (௭௰௪)

தவளவளைக் கந்தரமா தவளவளைக் கந்தரமான்
றனைய ளும்வேள்
கவனகதி ரம்புலிமா கவனகதி ரம்புலிமா
கதிர்போற் காய

அவனியா யத்தைதங்கா யவனியா யத்தைதங்கா
யாற்றே னென்றே
துவசனமா ராள்சேர்வித் துவசனமார் மருதப்ப
துரைச்சிங் கேறே. (எஙரு)

தனங்கலசந் திரவியமெய் யானதுய்ய செய்யவனோர்
தைய ருய்மார்
மனங்கலசந் திரவினிலு முறங்காது கணைதொடுத்தான்
மதவே ளையா
தினங்கலசந் திரகசிய மாகமுத்து நவமணிகள்
சிறந்த தான
மினங்கலசந் திரதிலக மார்பமரு தப்பநல்வி
வேக மாலே. (எஙசு)

இரும்பாரா வாரமுர சடித்துமதிக் கவிகைபிடித்
தென்மேற் பூசல்
கரும்பாரா வாரம்பஞ் செயிற்சகிப்பே னுசிறிய
கன்னி யென்ற
யரும்பாரா வாரமின்றி யலர்தூற்று மங்கைமா
ரதிகிட் டோர்
சுரும்பாரா வாரமிய மாகவணை மருதப்ப
துரைச்சிங் கேறே. (எஙஎ)

கோலனவி லோசனமாங் கோலனவி லோசனமாங்
குயில்பல் லோதி
மாலதிக மாகவன்று மாலதிக மாகவன்று
வளையே செய்தான்
ஆலமருந் துங்கனையே யாலமருந் துங்கனையே
யகமா ரன்கோ
பாலனித மருள்புரிபூ பாலனித யாலயவிற்
பனசேர் வாயே. (எஙஅ)

மருங்கலச ரங்கொடுதல் வஞ்சமதா வெனப்புலம்பி
வாட லாலே
பருங்கலசந் தரமான புளகமுலை மாதிரண்டு
பார்வை தன்னில்
வருங்கலச விலங்கருணை புரிந்தணைவாய் சுவையமுதம்
வைத் திருக்கும்
இருங்கலசங் கொணர்கருட வாகனனைப் பணிமருதப்
பேந்திர மாலே. (எஙக)

பங்கயமா முகமிதழ்விம் பங்கயமா நுதிக்கைதுடை
பருத்த கொங்கை
தங்கமலை யிலகியசந் தங்கமலை யானமின்னு
டாயர் கூடித்
துங்கவள நிறைத்தனம்வைத் துங்கவளங் கொள்ளாது
சோர்ந்தாள் சேர்ந்தாள்
சங்கவிதை யுணர்ந்தபிர சங்கவித யாலயவு
தார கோவே. (எசய)

செழுங்காமா மாகமழை போலிடைவி டாதுகணை
செலுத்த னிற்கும்
ஒழுங்காமா மாவசைசொல் லூர்மூட வுலைமூடி
யுளதோ வென்றாள்
கொழுங்காமா மானகுழன் மடமாது நின்வரவு
குறித்துக் கையாற்
றொழுங்காமா மார்பிதயா லயநயவ சனதேக
சுகபூ மானே. (எசக)

போதஞ்சப் பிரமணிய காத்தேந்தும் வேட்கயர்ச்சி
பொருந்தத் தானப்
போதஞ்சப் பிரமனென விதித்தானோ வெனத்தினமும்
புலம்பி யிந்த

மாதஞ்சப் பிரமாநேர் குழல்சோரக் காயுமுழு
மதிதி ரண்டோர்
மாதஞ்சப் பிரமஞ்சத் திருத்தியணை மருதப்ப
மகிழ்கோ மானே. (எசஉ)

## கலித்துறை.

மதியம்பதங்க னிகர்சுடவஞ்சக மாரன்மலர்
நுதியம்பதங்கனை மேற்படமால்கொண்டு நொந்தனள்சேர்
நிதியம்பதங்கவிக் கிய்வோய்செய்யாட்கு நிலமகட்கும்
பதியம்பதங்கரு தும்மிதயாலய பாண்டியனே. (எசங)

நிசந்தசந்தானனத் தின்வயதாடக நேருடம்பு
பசந்தசந்தானய னம்பொருந்தாது பறம்பினிற்கந்
தசந்தசந்தான தப்பாதுதப்பாதுபொற் றூருள்வில்
வசந்தசந்தான துரையிதயாலய மன்னவனே. (எசச)

சுருபத்திரண்முலை மின்னுளையைந்து சுமனசத்தம்
பருபத்திரமுற வெய்வதனுனின்கண் பார்த்தருள்வாய்
ஒருபத்திரத னருள்ராகவனை யுயர்ந்தநன்மை
தருபத்திரச மொடுதுதிசெய்மரு தப்பமன்னே. (எசரு)

துவரையவரையைப் பாகலைமாகலைச் சுந்தரஞ்சேர்
தவரையனைய விதழ்தோள்சொல்லோதி தனநுதறுங்
கவரையரசெனு மின்னயர்ந்தாளருள் கண்ணிநம்பி
னவரையனுதினங் காவிதயாலய நன்முகிலே. (எசசு)

திளையத்தனையன மாவதுண்ணுமன் மதிச்சடைச்சி
வளையத்தனையன யிற்கண்டுஞ்சாமலிம் மானனிமி
களையத்தனையம்புந் தொட்டான்மதனருள் கண்ணிசங்கம்
புனையத்தனையடி போற்றிதயாலய பூபதியே. (எசஎ)

கருணாகரமள கங்களங்கண்மின் கணைதொடமோ
கருணாகரள மெனநினைத்தாளருள் கண்ணியாக்
கருணாகரமரி ராகவற்போற்றுதுங் காவதிக
கருணாகரசு குணவிதயாலய காவலனே. (௭௪௮)

பிட்டுங்கற்கண்டுங் கலந்துதவிற்பிசு மந்தத்திற்கு
மட்டுங்கற்கண்டுவர் மாமுலைதோளிதழ் மான்விரகப்
பட்டுங்கற்கண்டு பயங்கொளுஞ்சேர்ந்தருள் பங்கயச்செங்
கட்டுங்கற்கண்டு பாவிதயாலய காண்டிபனே. (௭௪௯)

துட்டத்தனத்தனங் கன்கனல்வில்வனைத் துத்திரண்ட
வட்டத்தனத்தன மீதலரோவிட வந்துநின்ற
தட்டத்தனத்தன கண்பொருந்தாது தழுவுபத்தர்க்
கிட்டத்தனத்த னருள்சேர்மருதப்ப விந்திரனே. (௭௫௰)

மதியமலைக்கும் படிதகிக்கச்செய்ய வாரிதியென்
பதியமலைக்கும் பதும்பியுற்றேன்பொரப் பாவைக்குமித்
ததியமலைக்கும் பகையானதுதொடை தந்தருள்வாய்
பொதியமலைக்கும்ப னேரிதயாலய பூபதியே. (௭௫௧)

## வெண்பா.

கோதைமதி காயநின்மேற் கொண்டமய லானதற்குப்
பேதைமதி யாயர்விரும் பித்திரண்டு—வாதுபுரி
சத்துருவை வெல்லுமரு தப்பமன்னா பூதலமே
சத்துருவை யீர்த்தனர்வெய் தாய். (௭௫௨)

கப்பருத்த மானகிரி வங்கடமி ஞானநன்று
கப்பருத்த மானகிலக் கண்ணகமி—கப்பதித்து
முத்தமிட்ட மைத்தணைதார் மொய்ம்பிருத யாலயனே
முத்தமிட்ட மைத்தகமு கா. (௭௫௩)

மதுரகரும் பன்னமொழி வாய்குமுதந் துண்டம்
விதுரகரும் பன்னவொண்ணு மெய்யா—ளதிமயலாய்ப்
பாலமலை யாராள்கண் பாரிருந யாலயபூ
பாலமலை யாமணிமார் பா. (௭௫௪)

## கலித்துறை.

தருபாகரச மெனும்பார்த்தன்மாவிர தங்கடவி
வருபாகரதர வேய்ங்குழலாமொழி மாதணைவாய்
நிருபாகரமிசை யள்ளிக்கவிக்கு நிதியுதவு
கிருபாகரசுகு ணவிதயாலய கீர்த்திமன்னே. (௭௫௫)

போனகங்கைக்கு தெனமயலாகிப் புலம்புமின்னாள்
தானகங்கைக்குமைக் குங்கடலோசை சகித்திலள்சேர்
மானகங்கைக்குயில் வாழ்சடையானை வணங்கிடும்பூ
பானகங்கைக்குடை யாய்க்கொண்மருதப்ப பாண்டியனே. (௭௫௬)

## கழிநெடில் விருத்தம்.

அகத்திகைக்கும் விரகசமர் வேண்மலர்ப்பா ணங்கண்மயி
லங்க மீது
புகத்திகைக்கும் பாங்கியொரு கவளமனம் புசியெனினும்
போடிநீபா
தகத்திகைக்கு தெனுங்கண்மிகுந் தகத்திகைக்கு விரும்புமையா
தயைநீ செய்வாய்
மிகத்திகைக்குத் திசைபரவும் புகழிதயா லயகுணவி
வேக மாலே. (௭௫௭)

அகலசன னங்கடவிர்த் தடியரைக்கா பான்றமுறக்கண்
ணலெ ரிந்தோன்
இகலசன மும்புசியா வணங்புரிந்தா னுகையினு
லிந்த மாது

வகலசன கிலமடந்தை மிகமெலிந்தா ளினிமையொடு
மருவி யாள்வாய்
சகலசன வுபகார தயாவிருத யாலயவு
தார மாலே. (எ௫௭)

நத்திக்கும் பம்பதியுந் தித்திக்கு மொழிவதன
நயமாங் கொங்கை
யத்திக்கும் பம்பவள வதரியிட நீலமன்றி
யந்த நான்கு
பத்திக்கும் பம்பனந்தந் தொடுத்தனன்சேர் பகைவர்விழப்
பாஞ்ச சன்னிய
மெத்திக்கும் பம்பமெனத் தொனிமாலைப் பணிமருதப்
பேந்திர மாலே. (எ௫௮)

இரும்புதனை யனங்கனந்த வெம்மைதாச் சந்ததங்கு
யிற்கள் கூவக்
கரும்புதனை யனங்கனந்தக் காத்தெடுத்து நனிவளைக்கக்
கண்ணாற் குந்தி
யரும்புதனை யனங்கனந்தக் கிளியையுன்னு நினையணைவா
னையோ வைவாள்
விரும்புதனை யனங்கனந்த மிழ்க்குதவு மருதப்ப
விசய மாலே. (எ௫௯)

## இலஞ்சி
## விசுவகுல
# சுப்பிரமணியப் புலவர்
## இயற்றியது.
## கழிநெடில்விருத்தம்.

கருந்திருக்கு மணிவாரி சைவலமால் குரலுதரக்
கனியின் றந்த
முருந்திருக்கு மணிவாரி சைவலமால் முலைக்கமதன்
முலைக்கோ நாளும்
பொருந்திருக்கு மணிவாரி சைவலமால் மிகும்வினைப்
பூமா புல்கு
மருந்திருக்கு மணிவாரி சைவலமால் பணிமருதப்
பேந்திர மாலே. (௭௬௧)

மந்தாரங்கண் டனந்தனிய முறைநடையம் பகந்குவளை
மலரா மோதி
கந்தாரங்கண் டனந்தனிய னல்வருந்து மதசாத்தாற்
கன்னி வாலை
அந்தரங்கண் டனந்தனிய விருந்துறங்கா தணையிலணை
யச்சுதா மெய்ச்
சுந்தாரங்கண் டனந்தனியம் பினுமுடியா மருதப்ப
சுமுகமாலே. (௭௬௨)

தந்தரியா னம்பாலித் தினமருங்கம் பகமுளையாந்
தையலாணித்
தந்தரியா னம்பாலித் தினமழைத்து வரவுளைக்குந்
தகைமின் றனும்
வந்தரியா னம்பாலித் தினமயங்கா மன்மதுவார்
மாலை யீந்து

வந்தரியா னம்பாலித் தினமகிழ வணைமருதப்
பேந்திர மாலே. (எசுக)

இக்கனிசம் பூரணமா மதிவிருந்தா சுகமேவு
மிரவி னூரும்
இக்கனிசம் பூரணமா மதியினைநொந் தலரணையி
லிமை நாடாதே
சக்கனிசம் பூரணமா மதிகற்பா மருந்ததிக்குந்
தகையி லேமிச்
சக்கனிசம் பூரணமா மதித்தணையி லணைமருதப்
பேந்திர மாலே. (எசுச)

தம்பம்ப ரந்தனந்தா மான்மதந்தோ யைம்பால்விண்
டகைமின் னணி
தம்பம்ப ரந்தனந்தா மான்மதுவி னல்மதவேள்
சரத்தால் மால்வந்
தம்பம்ப ரந்தனந்தா மான்மணிக்கட் கனிதனைச்சேர்
தனதா யானுந்
தம்பம்ப ரந்தனந்தா மான்மருதப் பேந்திரனே
தமிழ்ச்சிங் கேறே. (எசுரு)

முருக்காவிந் தமதுவரி நிறைக்குமணி வீரைமன்னு
முகுந்தா நின்மேன்
முருக்காவிந் தமதுவரி தணிதம்ப முகமடந்தை
மோகித் தாண்முந்
தருக்காவிந் தமதுவரி விவள்சகிக்கு மாமதனன்
சாஞ்சேர் கற்ப
தருக்காவிந் தமதுவரி தனைப்பணியு மருதப்ப
தமிழ்ச்சிங் கேறே. (எசுசு)

பெருங்கலையான் மாதங்கம் பார்நிறைந்த மதியெனப்பேர்
பெற்றான் முன்னால்

வருங்கலையான் மாதங்கம் பாகமலன் பாற்கலையு
மகிழ்ந்தே பெற்றார்
கருங்கலையான் மாதங்கம் பாவையதாக் கியசிரா
கவனீ யென்றுந்
தருங்கலையான் மாதங்கம் பாரிதயா லயமருதப்
பேந்திரமாலே. (எசுஎ)

கரைக்கணனந் தனைத்தமயொன் றுபசரித்துக் குரண்டமலர்க்
கமலத் தேந்தி
யிரைக்கணனந் தனைத்தாளந் தருபணைசூழ் வீரையில்வாழ்ந்
திசைபெற் றோங்கு
துரைக்கணனந் தனைத்தமிழ்க்கும் பனைச்சிவணுங் கல்விமிகுஞ்
சமுகா வென்று
மரைக்கணனந் தனைத்தனையற் பணியிதயா லயமருதப்
பேந்திர மாலே. (எசுஅ)

கருமுனிக்குப் பயந்தருமைப் பிடிகயஞ்சேர் மலையம்வளர்
கடலை முன்னு
கருமுனிக்கு நிகர்கலையாய் மணிவீரை வாழுமன்னு
கருணை கூர்ந்து
தருமுனிக்கு வலயமகிழ் சமுகமதி லெனதுகவி
சரிபார் கோவேந்
தருமுனிக்கு ஞதிசயம் புகழிதயா லயமருதப்
பேந்திர மாலே. (எசுகூ)

அரவிந்த மலரியல்கு லானனமா வோதிகணு
மணங்கின் மேல்வேள்
அரவிந்த மலரினையே வமையனுற்று டனையணைவா
யகளங் காபூ
தாவிந்த மலரியார்சொல் வீடணு வெனவுரைத்தோய்
தமியேற் குன்று

தாவிந்த மலரிடங்காத் தருளிதயா லயமருதப்
பேந்திர மாலே. (எஎ0)

நடிக்கமலே வாரியிடைக் கொடியுருவைத் தேடுதல்போல்
நாள்க டோறுங்
கொடுக்கமலே வாரிடத்தென் கவியுரைத்துன் சமுகமதற்
குவந்தேன் காயான்
உடுக்கமலே வாரிநல்கு மமுதூற்று மலைத்துறையே
உசிதந் தாமா
மடுக்கமலே வாரிசமு காவிதயா லயமருதப்
பேந்திர மாலே. (எஎக)

மருதப்ப துரைசுகமா மலர்பரியே வதிர்முரசு
வாரிக் காமன்
மருதப்ப துரையாத வனசமுக வனிதையின்மேல்
வந்து வந்து
மருதப்ப துரைங்கனவா ரிலகு சொற்கந் தனைத்துருவு
மகிழ்வாய்ச் சேரு
மருதப்ப துரைவிசயா நவநீத கிருஷ்ணர் பதம்
வாழ்ந்து வோனே. (எஎஉ)

வண்டானந் தாமரையா விழியுதாங் கிரீவகனி
மயல்வேள் வந்து
வண்டானந் தாமரையா ரடிக்குரமா வடிவணங்கை
மருவா யெற்கு
வண்டானந் தாமரையார் கலையாச கலமுநல்கு
மகிழ்ந்தெந் நாளும்
வண்டானந் தாமரையார் வீரைநகர் வாழ்மருதப்
பேந்திர மாலே. (எஎங)

திருகுவளை யயிலரியைப் பணிமனனின் மிசைமயலாந்
திருவ ளுடன்

முருகுவளை சரியவன மருந்தாது வருந்துவட்கு
முலைத்தார் நல்காய்
குருகுவளை பெருமணியைத் தன்கருவென் றடையுறுசெங்
குமுதப் போது
மருகுவளை மிகுபணைவீ ழையிலிதயா லயமருதப்
பேந்த்ரமாலே. (எஎச)

## புளியங்குடி
# முத்துவீரக் கவிராயர்
## இயற்றியது.

### வெண்பா.

பொன்மருவு செல்வம் பொருந்துமித யாலயவேள்
தென்மருவு காசிக்குச் சென்றுவந்த—தன்மையெல்லாம்
வாணியாற் செப்புதற்கு மங்கலத்துக் கெல்லாமுற்
காணியா மைங்கரன்றாள் காப்பு.

### கலிவெண்பா.

பூமாது நாமாது போர்விசய மாதுபுவிக்
கோமாது சேர்ந்துவள ருங்கோமான் காமாது
சேரும் புரந்தான்போற் செல்வம் படைத்தேழு
பாரும் புரந்தரன்பா தம்பணிவோன் காரனைய
வண்ணத்தான் வீரை மருவுநவ நீதகிருஷ்ண
திண்ணத்தான் சித்தந் தினமகிழ வண்ணமணித்
தேருந் திருப்பணியுஞ் செய்ய மணிப்பணியும்
ஆருந் திருக்கற்ற தாமென்ன ஆரும்
விசய மகுடமுதல் வெள்ளியினுற் சோதி
யிசையவீ ழாவா கனமுந் திசைபுகழச்

செய்துபா லாழியெனத் தெப்பமியற் றிச்சிறப்பா
யெய்துதிரு நாளு மியற்றியே துய்ய
மனத்தன்பாய் முக்காலம் வந்தனை செய் தேத்துங்
கனத்தன்பாய் மாநகுலன் காணிற் றனக்குவமை
யானவக ரத்தீச னம்மைசிவ காமிக்கு
மேனவின்ற வண்ண மெலாநடத்து ஞானவான்
செந்திநகர்ச் செவ்வேட்குந் தெண்முத் துதவுகின்ற
சந்திதரு சாலிநகர்ச் சம்புவுக்கு மெந்தை
யருட்பாவ நாசருக்கு மம்மையுல காட்கும்
விருப்பமுறு கட்டளையு மேருப் பொருப்புவில்லார்
தென்காசி யூரில்வளர் தேவர்விசு வேசருக்கும்
அன்பான தேவியுல காம்பிகைக்கு மின்பான
தெப்பத் திருநாளுந் தென்கயிலைக் குற்றாலத்
தப்பனுக்கு மம்மைக்குங் கட்டளையு மெய்ப்புவியும்
போற்றும் வராசைப் பொன்னு வுடைப்பனைக்கும்
ஏற்றிவிவ ரீசர்சங்க ரேசுரர்க்குந் தோற்றமிகும்
ஆடித் திருநா ளணிமண் டபச்சிறப்பும்
நீடித்த கட்டளையு நெய்விளக்குங் கூடலின்மின்
பிட்டளையுங் கையார்க்கும் பேதைமீ னம்பிகைக்குங்
கட்டளையுஞ் சிரங்கக் கண்ணனுக்குக் கட்டளையுந்
தொன்றுதொட்டு நாளுந் துலங்கவைத்துப் போற்றிவிணி
னென்றுதொட்டு லாவு மெழிற்சோலை துன்றுவள
வீரை நகரில் விளங்கன்ன சத்திரமுப்
பாருலகு முண்ணும் படிக்கமைத்தோன் ஏருலவு
புண்ணியமெ லாமோ ருருவாய்ப் புகுந்தன்ன
கண்ணியவான் கல்வியெல்லாங் கற்றறிந்தோன் றண்ணமுத

வாக்குக் கரிச்சந்த்ரன் வன்மைக் குயர்வீமன்
காக்குந் தொழிலுக்குக் காகுத்தன் தாக்கும்
அமருக்கு வாளபிம னன்னநல்கி யாளத்
தமருக்கெல் லாந்தா யனையான் குமாரப்
பருவத்தான் சீவகன்பாஞ் சாலனெனக் கொண்ட
உருவத்தா னும்ப ருலகத் தருவைத்த
அம்போ ருகக்கையா னுக்ரமித்து வந்தவொன்னார்
தம்போருக வெல்லுந் தாட்டீகன் நம்பி
அடைந்தவரைக் காக்கு மகளங்கன் வேலை
கடைந்தவரை யைக்கடுக்குந் தோளான் மிடைந்த
கனமுலையார் கண்வண்டு காதலிக்கும் பூந்தேன்
வனமுலையா ரம்புனைந்த மார்பன் றினமும்
வளரிக் கொடியாமல் வாங்குசிலை மாரன்
வளரிக் கொடிபிடித்த வள்ளல் இளநிலா
வானனத்தா னத்தா னருளுஞ் சுதன்கமல
வானனத்தா னத்தான் வலுமையான் கானிலுயர்
விண்டையங்கோட் டைப்பொருத வெம்முலையா ராசைகொளுங்
குண்டையங் கோட்டைக் குலவேந்தன் செண்டைவட
மேருவரை யிற்பொறித்து வேலாலிம் மேதினியைச்
சாருவரை வற்றத் தடிந்துவிண்ணின் ஊர்புரக்கும்
இந்த்ராணி கேள்வன் முடியைவளை யாலிகலித்
தந்த்ராணி யாற்செயித்த தார்வழுதி யெந்த
வளமும் பொருந்தவள ரூற்றுமலை மன்னன்
தளதந்த்ரஞ் சூழ்ந்த சபையான் குளமுந்தேன்
கற்கண்டு மென்னக் கனிந்தவச னன்வழியிற்
கற்கண்டு பெண்ணுக்குங் காவிஞன் நற்கொண்டல்
நாடுங் கொடைபா னவநீத கிருஷ்ணதுரை
தேடுந் தவப்பேற்றின் செல்வமென நாடாளப்

பெற்ற விதயா லயமருதப் பேந்த்ரதுரை
கொற்றவர்சிங் கேறு குணரத்னம்      நற்றவர்கள்

கூடுஞ் சமுகத்திற் கூடவிருந் தெண்ணிவின்னோர்
தேடும் வடகாசிச் சிவகங்கை      யாடச்

சுகாமிய மாகச் சுபானுவரு டத்தின்
மகரமதி யின்வழிக்கொண் டேகித்      தகைமைபெறு

தென்மதுரைச் சொக்கேசர் தேவிமீ னம்பிகையை
நன்மதுர வாக்கா னவின்றேத்தித்      தொன்மைத்

திரிசிராப் பள்ளிச் சிவபெருமான் றனைத்
துரிசிரா நாவாற் றுதித்துக்      கரிசறுசீர்

மேனைக்காஞ் சேயாய் விளங்குமகி லாண்டவள்சேர்
ஆனைக்கா வீச னடிபோற்றி      யேனைத்

திருவரங்கத் தெம்பெருமான் செங்கமலத் தாளைப்
பெருவரங்கள் வேண்டியன்பாய்ப் பேணிப்      பெருமையிலாப்

பொய்யாற்றை நீக்கிநல்ல புண்ணியவாற் றைக்கொடுக்கு
மையாற்றை யன்றனன் பாய்ப்போற்றித்      தையல்சிவ

காமி மலையுங் கடாமுகனை வென்றவள்சேய்
சாமி மலைக்கந்தன் றாள்பரவிக்      காமித்

திருக்குடந்தை யாய்ப்பாவு மெந்தைபிரான் றன்னைத்
திருக்குடந்தை யிற்சேவித் தேத்தி      விருப்பாம்

நடைமருத வேலியுநந் தாவனமுஞ் சூழு
மிடைமருதய் யன்று ளிறைஞ்சிக்      கடகமணிக்

கேயூரத் தோளுமையாள் கேள்வருறை யத்தவஞ்செய்
மாயூரஞ் சென்றுவழி பாடியற்றிப்      பாய்திரையா

ராழியின்மேற் றோணியுட னன்றுமிதந் தாரைச்சீ
காழியினிற் சென்று கனிந்தேத்திச்      சூழவந்திங்

இன்னம் பலதரப்வந் தேத்தவருள் வாயென்று
பொன்னம் பலத்திற் புகுந்துபணிந் தன்னமலி
சென்னை நகரிற் றிருவொற்றி யூரொழும்பின்
மின்னைவரக் கண்ட வியன்மயிலை நன்னாத்
திருவான்மி யூரினையுஞ் சேவித்தெந் நாளு
மொருவாத வன்பா யுருகிப் பெருவாற்
சங்குளூ ருந்தடமுஞ் சாலிவய லுஞ்சூழும்
வெங்குளூர் மார்க்கம் விரைந்தேகிச் சங்கநிதி
பொய்தரா வுள்ளத்துப் போச னபாபுதுவைக்
கைதரா பாகத் தணிநகரிற் செய்கின்ற
பட்டாபி டேகம் பரிவாகப் பார்த்தப்பால்
இட்டா ளுடன்கூடி யேகியே கட்டான
கம்பா யிரங்கோடி கர்ச்சிக்குந் தண்கடல்சூழ்
வெம்பாயி மாநகரில் மேவியுயர் கம்பீரச்
செல்வரையு மங்குள்ள சித்திரங்க ளும்பார்த்துக்
கல்வரையு நாடுங் கடந்துபோய் நல்வழிசேர்
சொர்க்கத்தா ரெல்லாருஞ் சூழ்ந்துநோக் கும்வளஞ்சேர்
கர்க்கத்தா வுக்கேகிக் கண்டுவியந் தர்க்கர்குல
மன்னர் கதியடைய வான்றவத்தாற் கொண்டுவந்தோன்
றன்னுடைய பேரிட்ட தண்கங்கை யன்னையுறை
காசியினிற் சென்றந்தக் கங்கைநா மஸ்துதிகள்
பேசி யினிப்பிறவா முத்திநல்கு மீசனுனைச்
சென்னியின்மேற் கொண்டானேற் றேவியுன் றன்பெருமை
யுன்னி யெவரா லுரைக்கலா மென்னப்
பாவிமகப் பேறருள்வா யென்று பணிந்து
விரவியவன் பாய்விதியாற் றோய்ந்து கரையில்வந்து
நித்திய கன்மங்க ணெறியாய் முடித்துப்பின்
சித்திதரு கங்கைசிர கத்தேந்தி அத்தியுரி

போர்த்த விசுவேசர் புனிதமுறு மாலயத்துட்
கூர்த்தவன்பாய்ச் சென்று மனங்குவிந்து சீர்த்துதிகள்
செய்து திருமுடியைத் திவ்யகங்கை யாலாட்டிக்
கொய்தவில்வ மக்ஷதைகள் கொண்டேத்தி யெய்துபல
னத்தனையும் வேண்டிவிசா லாக்ஷியன்ன பூர்ணியையுஞ்
சித்த முகந்து தெரிசனைசெய் துத்தமியே
யென்றுபாவி யிசையும் வரமெல்லாங் கேட்
டன்றுமுத லங்குசில நாளமர்ந்து நன்றிபுரி
அன்னை நிதி யும்பிதிர்க ளாங்குவந் தேற்றுக்கொள்ள
முன்னைத் தவப்பேற்றி னான்முடித்துத் தென்முகமாய்
எனனாட்டை யுங்கடந்திங் கிந்திரனாட் டைப்பொருவுந்
தன்னாடு தென்னாட்டி னிற்சார்ந்து பொன்மருவு
சீமையெல்லாந் தன்னிடத்திற் சேர்த்துவைக்குஞ் செல்விமுலை
யாமெனும் வீமை யலங்கரித்து வீரக்
கவிகை நிழற்றக் கனகமணி வேய்ந்த
சிவிகையின்மே லேறியுலாச் செய்து நவியனைய
கண்ணார்க ளோடிவந்து கண்டுதொழக் கண்டமதன்
றண்ணார்பூ வம்பு தனைத்தொடுக்க வண்ணவரி
நாணைக் கருப்புவிலி னாட்டுமுன மேமடமெய்
நாணைக் கடிந்தாசை நாணினுட்பட் டியாணர்
முலையாருஞ் செந்தழலாய் முத்தம் பொரிய
முலையார மேன்மோக முற்றுச் சிலமாதர்
பூவா டையிலிந்த்ரன் போலவரக் கண்டு வண்ணப்
பூவா டையையிடையிற் போக்கினார் ஏவான
பார்வைக்கு மையெழுதும் பைந்தொடியா ரீரேழு
பார்வைக்குந் திண்புயத்தைப் பார்த்துநின்று சோரத்தக்

கன்று மனநடைகூர் காற்சிலம்புஞ் சோர்ந்துவிழக்
கன்றுமன மாகிநின்று காதலித்தா ரின்று
பவளவாய்த் தேனுண்டு பாய்மதயா னைக்கும்
பவளவாய் மீறிப் பருத்துக் குவவு
முலைக்கண் சுவைத்தெழில்வாய் முத்தமிட்டு முன்ன
முலைக்க ணமர்முகுந்தன் சேய்போல் நலத்தவிசுங்
காமஞ் சரியுமிட்ட கட்டிலின்மேற் கூடிரதி
காமஞ் சரியாகக் காட்டாதே நாமென்ன
செய்வோ மெனமயங்கிச் செங்கை குவித்துவர
வைவேல் விழிக்கணிகை மாதரார் பையமலர்ப்
பாதம் பெயர்த்துப் பாதநூ விற்பகரும்
பேதம் பெயராமற் பேருலகின் மீதலத்து
மின்னு வலது மிளிர்கொடியா வென்றுசொல
நன்னுக ரீக நடம்புரிய மன்னுமிசைத்
தம்புருயாழ் வீணை தனிற்காந் தருவர்களும்
தும்புருவும் வெட்கித் துணுக்கமுறச் சொம்புபெறும்
பாடகர்கள் பாடிவரப் பைந்தமிழ்ப்பா வாணரெல்லாம்
கூடிக் கவிபாடிக் கொண்டாட நீடு புகழ்
வந்தியர்கள் கூற வரிசை வரிசையாய்த்
தந்திரிமார் மந்திரிமார் சார்ந்துவர முந்தும்
அரிக்காரர் கைப்பிரம்பா லாண்மே லாளாக
நெருக்கி யெங்கு நின்றசனத்தின் பெருக்கை
ஒதுக்கிவர வொட்டகைமே லோங்கலென வோங்கி
மதிப்பிளவை யன்ன மணிக்கோட்டுத் துதிக்கைப்
பெருவா ரணத்தின்மிசைப் பேரியொலி விண்ணின்
வருமா முகிலிடியை மான வெருவிக்கீழ்ப்

பாதாளத் துள்ளுறையும் பாந்தளின மச்சமுற
மீதானத் துள்ளயிய மும்மெலிய நாத

முகவீணை நாதசுர யோகத் தவினெஞ்
சகமகிழுந் தாளமத்த ளங்கள் சுகமாக

வாரியமு தந்தொனிக்க வாமுரலிக்க வாங்காவும்
பூரியெக்கா ளம்புணரி போன்முழங்க மேருநிகர்

அம்பாரி மேல்வைத் தநேக வரைக்கூட்ட
மும்பாரின் மோதி நடந்ததெனக் கம்பமத

மாதங்கம் பாகர்வாய்ப் பாஷைவழி யிற்செல்லக்
காதங் கணைத்திற் கடந்தேகி ஓதுகதி

ஐந்தையும் பின்னாக்கி யமரர்பதி வாகனமாய்
வந்தவுச்சை வச்சிரவ மாமென்னச் சிந்துபைகோ

அச்சிமுத லானவன்பத் தாறுதே சத்திலுள்ள
மெச்சுபரி செண்டில் விரைந்துவரப் பிச்ச

மூரக ருடனணிக்கு மூற்றமிகு செய்ய
வீரகருட கேதனமால் வேண்டுந் திரமிகுத்த

பத்தவதா ரத்திலொன்றாய்ப் பன்னுமீ னக்கொடியுஞ்
சத்தபுர வித்தேர் தடவிவர மத்தாப்புந்

தீவர்த்தியும் வானத் திங்களுஞ் செங்கதிரும்
ஆவலுட னணைந்த மானவுரு மேவியொளி

காட்டுதலால் ராப்பகலாங் காலமிலா தேசமது
நாட்டையொப்பா மென்றும் பாரோர்நாடப் பூட்டுசிலைப்

போர்விசையா ராச புரந்தரா பொங்குதிரைப்
பாருலகெ லாம்புரக்கும் பார்த்திபா கோரமிகு

சத்ருகுள கண்டனை சன்மார்க்கா சற்குணை
மித்ரு பரிபால விதட்சணிகா சுத்தாண

வீரா மார்க்கண்டா விவேகா வகளங்கா
னேரார் திறையளக்கு நீள்சமுகா வாரார்

தனத்தார் மடலெழுது சாமுத்திரியரூபா
கனத்தாரை போலுதவு கையா தனத்தாலென்

றுடாவி னுச்சியினின் றும்பரத்தாமர்
தாடொழுது செங்கோ றழைத்தோங்கி நீடுகவி

சாற்றும் புலவர் தமிழ்ச்சங்க பீடமெனும்
ஊற்றுமலை வேந்தா வுபேந்திரா வாற்றன்மிகு

சீவலவா தென்னாட்டுச் சிங்கநவ நீதகிருஷ்ண
காவலவன் பெற்றெடுத்த கண்மணியே கோவே

அபயமென வந்தடைந்தார்க் காதரவு செய்யு
முபயகு லோத்துங்க வுசிதா சுபமா

மதயானை வேந்தர்குழாம் வந்துவந்து போற்று
மிதயா லயமருதப் பேந்திரா சதுதளப்பூ

மின்னார்க ளெண்மர்களு மேவிவளர் வெற்றிபெறு
கன்னுலென் றேகட்டி யங்கூற அந்நேரம்

வாலைப் பருவமின்னார் மாமணித்தா லத்தினன்னீ
ராலத்தி சுற்ற வகமகிழ்ந்து கோலச்—

சிவிகைதனி னின்றிறங்கித் தென்னவன்போற் கொற்றக்
கவிகைநிழற் றக்கை லாகின்மேல் அவிரொளிசேர்

பஞ்சவர்ண லஸ்தர்களும் பாரக்கு ளொப்புமன்னர்
விஞ்சு மெழில்காட்டும் வியன்படமு மிஞ்சுநிலைக்

கண்ணா டியுமந்தக் கண்ணாடி யாற்கதவும்
வண்ணமணி மேசைமலர்ப் பாயல்விரித் தெண்ணிலவாய்

வாய்ந்ததந்தக் கட்டில்களும் வர்ணத்துக் காயிரமா
யேய்ந்தநாற் காலிகள்பீ ரோவினமும் வேய்ந்தமெத்தை

மேலிட்ட சோபாவும் வெம்பாயி வங்காளங்
கோலப்ப னாப்பட் டணங்கொழுப்பு — நாலுதிக்கு
முள்ள பொருளு முயர்சீமைச் சாமானு
மெள்ளிடவும் வேறே யிடமின்றி — விள்ளுடலீ
னாயிரங் கணித்திரனோ ராயிரநாட் பார்த்தாலும்
நேயமிக வெங்கு நிறைத்துவைத்துத் — தூயரத்தினக்
கம்பளங்க ளொன்பான் கதிர்மணிபோ லேவிளங்க
விம்ப ருலகத்தின் திரன்சுதன்மை — தம்பெயரை
ரங்கவி லாசமென நாட்டிவந்த தாமென்ன
எங்குந் துதிவிலா சத்தினிடைச் — சிங்க
மணியாச னத்திருந்து வண்டமிழோர் வாழ்த்த
வெணின்மா மறையோர்க ளேத்தி — விணினமுத
கும்பமென வேபூர்ண கும்பங்கை யிற்கொடுத்திவ்
வம்புவியில் வாழ்வாயென் றாசிசொல — நம்புசன
ரெல்லார்க்குங் கட்கருணை யீந்துதாம் பூலநல்கிச்
செல்வமிகு மானுக்குட் சென்றிருந்து — சொல்வாயந்த
எங்கள் துரையிருந யாலயபூ பாலனிசை
மங்களம்பெற் றானென்றும் வாழியவே.

கலிவெண்பா முற்றிற்று.

# தனிப்பாடற்றிரட்டு

முற்றிற்று

# பிழை திருத்தம்.

௧-வது பக்கமுதல் ௰௩-வது பக்கம்வரை ஆறிடத்திற் கழி நெடிலென்று தந்நகரம் போட வேண்டுவதற்கு றன்னகரம் போட்டிருப்பது பிழை.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨௨ | ௭௧ | ௭ | கிழுவை | கிளுவை |
| ௩௩ | ௱௰௧ | ௨ | பொரும்போர் | பெரும்போர் |
| ௪௯ | ௱௬௯ | ௭ | கலங்லீ | கலங்சலீ |
| ௫௬ | ௱௯௨ | ௭ | லண்ணப்பா | ணண்ணப்பா |
| ௬௪ | ௨௨௮ | ௧ | கந்தருவப்பெண் | சந்தருவப்பண் |
| ௬௮ | ௨௫௪ | ௨ | சனர்க்கஞ்சி | சமர்க்சஞ்சி |
| ௭௩ | ௨௬௯ | ௨ | தனம்பை | சனம்பை |
| ௭௪ | ௨௭௪ | ௩ | வெருப்பா | வெறுப்பா |
| ௭௪ | ௨௭௪ | ௭ | கோனஊண | கோனணி |
| ௭௫ | ௨௭௯ | ௫ | புணர்வோ | புணரோ |
| ௭௭ | ௨௮௮ | ௩ | யாதரியாள் | யாதரிய்யாள் |
| ௭௯ | ௨௯௪ | ௬ | சொல்வபென்றே | கொல்வனென்றே |
| ௮௧ | ௩௦௨ | ௩ | துடயன | துடையன |
| ௮௧ | ௩௦௩ | ௨ | பாரியேக | பரரியேக |
| ௮௨ | ௩௦௫ | ௩ | சரிகமபதனி | சரிகமபதநி |
| ௮௪ | ௩௪௪ | ௩ | நெட்டேர் | நெட்டேர |
| ௮௬ | ௩௨௰ | ௫ | யம்புமா | யம்புயமா |
| ௮௭ | ௩௨௩ | ௨ | வேந்தா | வெந்தா |
| ௯௰ | ௩௩௩ | ௫ | பூப்பரி | பூப்பறி |
| ௯௨ | ௩௪௪ | ௨ | மாராங்சொங்கை | மாருங்கொங்கை |
| ௯௫ | ௩௫௪ | ௬ | துமது | துமத |
| ௱௪ | ௪௦௮ | ௩ | வம்பெய்த | வம்பெயித |
| ௱௫ | ௪௧௬ | ௩ | கன்னமித | சன்னவித |
| ௱௫ | ௪௧௯ | ௩ | கடந்த | குடர்த |
| ௱௯ | ௪௪௪ | ௩ | யாட்டந | யாடடந |
| ௱௰௫ | ௪௭௪ | ௬ | கதக்க | கலக்க |

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௱௨௧ | ௪௯௬ | ௫ | லன்றிலிங்கோ | லன்றிலுங்கோ |
| ௱௨௫ | ௫௧௧ | ௩ | வெழிலி | வெழிலி |
| ௱௩௨ | ௫௩௩ | ௩ | ஓருபர்து | ஓறுபர்து |
| ௱௩௯ | ௫௪௫ | ௨ | யூக்க | யூகக் |
| ௱௩௯ | ௫௪௭ | ௧ | தேருஞ் | தேறுஞ் |
| ௱௪௰ | ௫௫௭ | ௩ | தளயணி | தளவணி |
| ௱௪௰ | ௫௫௭ | ௩ | பணைபன் | பண்பன் |
| ௱௫௨ | ௫௯௯ | ௨ | திகட்கொவ்வை | திகழ்கொவ்வை |
| ௱௮௧ | ௬௯௬ | ௬ | மகிருநம் | மகிழும் |
| ௱௮௪ | ௭0௭ | ௧ | கணையுருங்கா | கணையுறுங்கா |
| ௱௯௭ | ௭௬௧ | ௭ | மால்பணி | மாற்பணி |
| ௨0௭ | ... | ௨௧ | லாளாகக் | லாளாக |